FORMULA HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

தாய் வீடு
THAIVEEDU செப்ரெம்பர் 2010 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



# கப்பல் அரசியல்

## நீங்கள் அதன் மேல் நிற்கிறீர்கள்

படம்: Reuters

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடயங்களுக்குமான பத்திரிகை


"MAKING YOUR DREAM HOME COME TRUE"
HOMELIFE HIGHER STANDARDS
மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6
Phone: 416-298-3200 Fax: 416-298-3440
Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com
Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com
Steeles/Brimley
$349,000
3+1 Bedrooms, 3 Washrooms Beautiful Well Maintained Home Oak Staircase, Hardwood Floorings, Bsmt W/Kitchen Rec.Rm Steps To Schools.
Middlefield/Denison
SOLD
$359,000
Sold for $369,000
Keele/Major Mackenzie
$465,000
4 Bedrooms, 3 Washrooms Family Oriented Neighbourhood, Like New! Upgraded Glass On Front Doors! California Shutters Throughout! close to all amenities.
Denison/Brimley
$359,900
3+1 Bedrooms, 3 Washrooms Great Location!!!Ideal For First Time Buyers,Walking Distance To All Amenities, Lots Of Upgrades, Shed in Backyard
Birchmount/Ellesmere
SOLD
$349,900
4 Bedrooms, 3 Washrooms,Quiet Neighbourhood, Eat-In Kitchen Walk-Out To Large DeckCloseTo Ttc, Highway, Shopping, School, Library&Church. 2-Yr Old Roof.
Mccowan/Steeles
$369,000
3 Bedrooms, 2 Washrooms Desirable Neighbourhood, East Facing Front Entrance,Formal Dining Room, Separate Family Room On Upr Floor Move-In Cnd
Markham/Steeles
$399,900
3 Bedrooms, 3 Washrooms Location! Location! Location! *Ready To Move In* In Desirable Area, All Brick 2 Story Home Close to all amenities and more.
14th/Box Grove By Pass
$424,900
3 Bedrooms, 2 Washrooms, Almost 2000 Sq Feet Of Gorgeous Living Space! An End Unit Just Like A Semi-Detached! High Demand Markham Location!
Mccowan/Denison
$435,000
4+2 Bedrooms, 4 Washrooms 4 Car Parking Spaces, Newer Roof, Well Kept Home. 2 Bdrm Bsmnt Apartment with sep Ent Near To School, Transit, Park .
Chinguacousy/Sandalwood
$341,250
3 Bedrooms, 3 Washrooms Detatched House. Prime Location! Open To Above Foyer, Gleaming Parquet Flr In Living & Dine Floor, Fin Bsmt & An Extra Br & Rec!.
Bramelea/Sandalwood
$342,900
4 Bedrooms, 3 Washrooms High Demand Area. Fin Bsmt With Wet Bar+Large Windows. Gorgeous Lrg Deck With Gazebo Close To Trinity Mall & Hwy.
James Potter / Williams Park
$344,900
3 Bedrooms, 3 Washrooms Mattamy Built, East Side Location. Beautiful Semi, 4Pc Ensuite in Mstr Bdrm Close To Hwy Shopping, Go stat & more.
Hwy 10 / Bovaird
$344,900
3+2 Bedrooms, 3 Washrooms Semi In Sought After Location, Oak Spiral Staircase. Master Has Ensuite & His & Her Closets, Upstairs Hallway Hrdwd Flr.
William Parkway /Mclaughlin
$344,900
3 + 1 Bedrooms, 3 Washrooms Beautiful & Immaculate home Lots Of Upgrades. Lrg Mstr Bdrm With W/I Closet & Ensuite, Close To Hwy, School & Transit.
Neilson / Morning Side / Finch
$439,900
4 Bedrooms, 3 Washrooms All Brick Two Storey Detached Family Home*Immaculately Kept* Hardwood Floors In Lr+Dr*Grand Foyer*Large Front Porch*.
Meadowvale/Sheppard
$449,000
4 Bedrooms, 3 Washrooms Spacious Family Home Built By Chiavatti! Loaded With Recent Upg,SS Appliances,Roof (2001). Steps to the Ttc & all Amenities.
Markham / Steeles
$456,800
4 Bedrooms, 3 Washrooms 5 Years Old House, On the Rouge, Backs Onto A Ravine, Close To 401, Schools And Golf Course, 5 Pc Master Ens. With Jaquzi.
Neilson / Finch
$473,900
4+2 Bedrooms, 4 Washrooms Nicely Located Next to School & Park, Move In Condition, Close to all Amenities, Large Eat In Kitchen & Full Bsmt Appartment.
Morningside / Finch Ave E.
$474,900
4 + 3 Bedrooms, 3 Washrooms Spacious Brick Home With 2 Bdrs Sep Laundry for Bsmt, W/O to backyard, New Hardwood & Laminate Floors, Prof Landscape.
Kennedy / Eglinton
$429,500
4 Bedrooms, 3 Washrooms Spectacular 2 Storey End-Unit, 'Pacifica' Model, 4 Pc Ensuite With Oval Tub,One Minute to Hwy 403, 410 & 401 & more.
www.Homelifetoday.com
Thinking of a career change?
Or just starting out in Real Estate?
HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU
Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com
VN Financial Service
Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

தாய்
வீடு
THAIVEEDU HOME & LIVING

## அகதிகள் மீதான அவதூறுகள்

கனடிய அரசியல்வாதிகள், இலங்கை அரசின் ஏவலர்கள் எனப் பலரினதும் ஊடகங்களினதும் வசைகளுக்கும் பொறுப்பற்ற பேச்சுக்களுக்கும் மத்தியில், உயிரைப் பணயம் வைத்து மூன்று மாத பயங்கரமான கடற்பயணத்தின் பின் 492 நமது உடன் பிறப்புக்கள் எம்.வீ சண் சீ கப்பல் மூலம் வந்தடைந்துள்ளனர்.

ஆண்டு தோறும் கனடாவில் ஏறத்தாழ 30,000 அகதிக் கோரிக்கைகள் பரிசீலிக்கப் படுகின்றன, ஓர் அகதிக் கப்பல் கனடியர்களின் பொறுமையைச் சோதித்து விட்டதா?

ஒரு பல்லினக் குடிவரவாளர் நாட்டில் நம்மவர்கள் குடியேறி இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்த நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், பண்பாடு என்று எல்லாத் துறைகளிலும் நமது பங்கை நாம் செய்து வருகின்றோம்.

நாங்களும் நம் சொந்த மண்ணில் வாழ முடியாமல் வழி தேடி வந்தவர்களே.

நம் சொந்தங்களை வரவேற்போம். வாழ்க்கையைத் தேடி அலைந்து வந்தவர்களின் மண் இது. இந்த மண்ணில் நம்பிக்கையோடும் கௌரவத்தோடும் பண்போடும் வாழ அவர்களுக்கு உதவுவோம். இன ஒடுக்குமுறைகளிலிருந்து தப்பி வரும் நம் உறவுகளை நம்மோடு இணைத்துக் கொண்டு மேலும் விரிவாகவும் ஆழமாகவும் இந்த நாட்டுக்கு வளம் சேர்க்க உழைப்போம்.

கனடியப் பொது நீரோட்டத்தில் எம்மை இணைத்துக்கொண்ட நாம், இங்குள்ள மருத்துவமனைகளுக்கு, பொதுச் சேவை நிறுவனங்களுக்கு என அமைப்புக்களாகவும் தனிப்பட்ட முறையிலும் பலவழிகளில் பலவிதமான அன்பளிப்புகளையும் சேவைகளையும் வழங்கியிருக்கின்றோம். அந்தவகையில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண மருத்துவமனைகளுக்கோ குடிவரவு சார்ந்த இலாபநோக்கற்ற நிறுவனங்களுக்கோ, நாம் அமைப்புக்களாகவோ தனியாட்களாகவோ செய்யும் நன்கொடைகளும் உதவிகளும் எதிர் காலத்திலும் நம்மவர்கள் யாரேனும் தஞ்சம்கோரி இங்கு வருவார்களேயாயின் இது போன்ற கெடுபிடிகள், அவதூறுகள் எமைநோக்கி வருவதையேனும் தணிக்கலாம்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

அட்டைப் படம்: Reuters

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி), கருணா (கனடா).

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல், பிரணவன்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

ரொறன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

தமிழ் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவதற்கும்
www.inayam.net

# கப்பல் அரசியல்...




மாதக்கணக்கில் தென்கிழக்காசியக் கடற்பரப்பில் அலைந்தும் பின்னர் அமைதிப்பெருங்கடலிற் பயணித்தும் ஓகஸ்ட் நடுப்பகுதியில் கனடாவை வந்தடைந்தது எம்.வீ.சண் சீ. அரசியல்வாதிகளின் அரசியலைப் பார்த்துப் பழகிப்போயிருந்தோருக்கு, கனடியத் தேசிய ஊடகங்களின் கப்பல் அரசியல் புதினமாயிருந்தது.




## இனிமையான நச்சு
- சிவாஜினி பாலராஜன்

**வாசனைப் பொருட்களில் இருக்கும் இரசாயனக்கலவைகள் உடலில் பாரதூரமான விளைவுகளையும் எங்கள் மத்திய நரம்பு மண்டலத்துடன் சம்பந்தப்பட்ட நோய்களையும் உண்டாக்குகின்றன.**




## தீ விபத்தைத் தவிர்க்க
- செந்தூரன் புனிதவேல்

**நாங்கள் கவனமாகவும் பொறுப்புடனும் நடப்போமேயானால் பெரும்பாலான தீ விபத்துக்கள் தவிர்க்கப்படக்கூடியவையே**




## செல்வம் தருமா இன்பம்?
- புஷ்பா கனகரட்ணம்

பொருளாதார மேம்பாடோ, தொழில் ரீதியான வெற்றியோ, வாழ்க்கையின் மேலோட்டமான சந்தோசம் தான். அர்த்தமுள்ள செயல்பாடுகளும், ஆழமான உறவுகளுமே அந்த சந்தோசத்தை நீடிக்கவும் பலப்படுத்தவும் உதவும்.




## பருவகாலமும் எரி உலைப் பராமரிப்பும்
- ராமன் செல்லையா

வெப்பப்படுத்துவதற்குரிய பருவ காலம் தொடங்குவதற்கு முன் வருடாந்திர எரி உலைப் பராமரிப்பு மேற் கொள்வது சிறந்த தீர்வு. பழுது வருவதற்கு முன்னரே செய்யப்படும் பராமரிப்பு செலவுகளை மிச்சப்படுத்தும்.

வாசலில் சண்டை... வீட்டுக்குள் நிம்மதியில்லை
அ. கணபதி 04

எங்கள் வீட்டிலும் பிரச்சினை உண்டா?
வேலா சுப்ரமணியம் 07

போதை மருந்துகளின் பழக்கதோசம்
கந்தையா செந்தில்நாதன் 09

குளிருது... குளிருது... வீட்டுச் சந்தை குளிருது
கருணா கோபாலபிள்ளை 11

பல்கலாச்சாரத்தில் கலாச்சார எல்லைகளை...
கந்தையா பரநிருபசிங்கம் 28

எச்சரிக்கை: தொலைபேசி ஊடாக மோசம் செய்யும்...
சேரலாதன் செல்லையா 31

பாகுபாட்டிற்கு உட்பட்டால்...
சிவ பஞ்சலிங்கம் 32

பாலியல் வன்முறை
மஞ்சுளா ராஜலிங்கம் 34

Moistஐ கட்டுப்படுத்தும் வழிமுறைகள்
பிரபா சின்னா 42

பங்குச்சந்தை - சராசரியும் கவனிப்பும்
கண்ணன் காங்கேசு 44

நீங்கள் ஒரு தொழிலாளியா?..
என். மிலான் 46

சுற்றுலாவும் திட்டமிடலும்
திரு மகேசன் 55

இரசாயன மாசினைக் குறைப்பது எப்படி?
ஜெறாட் றட்ணராஜா 56

பாரதியின் பார்வையில் பெண்
சிவவதனி பிரபாகரன் 58

கற்றல் திறன் குறைந்த தன்மைகள்
ஜீவா திசைராஜா 60

கவனிக்கப்படவேண்டிய Ball Joint
அதீசன் சர்வானந்தன் 61

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# வாசலில் சண்டை... வீட்டுக்குள் நிம்மதியில்லை

- அ. கணபதிப்பிள்ளை -

வரலாற்றுக் காலம் முதல் தென்னாசியாவின் வாசலாக இருந்து வந்தநாடு ஆப்கானிஸ்தான். தென்னாசியாவினுள் பல்வேறு இனத்தினரின் வருகைக்கும் படையெடுப்புக்களுக்கும் வழி திறந்துவிட்ட தலைவாசல் தான் இந்தநாடு. இது தென்பகுதியில் திராவிடர் கலாச்சாரத்தினதும் அவர்களது வாழ்க்கையின் எச்ச சொச்சங்களையும் மண்ணுட் புதைத்துவைத்துக் கொண்டிருக்கிறது. மத்திய ஆசியப் பகுதியிலிருந்து வந்த ஆரிய சமூகத்தினரையும் அவர்களது மொழி கலாசாரப் பாரம்பரியங்களையும் உள்ளே இழுத்து தென்னாசியக் கலாசாரத்துக்குப் புதிய வடிவம் கொடுத்தற்கு இந்த வாசல் தான் துணைபுரிந்தது. தென்னாசியாவை நோக்கிவந்த படையெடுப்புக்களும் போர் நடவடிக்கைகளும் ஆப்கானிஸ்தானில் வந்து நிறுத்தப்படுவதனை வரலாறு எடுத்துக் காட்டியது. ஆப்கானிஸ்தானின் மலை அரண்களும் சிறிய கணவாய்களும் படைகளைத் தடுக்கும் இயற்கை அரணாக இருந்துள்ளன. தென்னாசியாவின் கலாசாரம் மேற்குலகுக்கு எடுத்துச் செல்லுவதற்கும். இந்தப் பாதை உதவிபுரிந்திருக்கிறது. தென்னாசியாவின் காப்பரணாக இந்நாடு இருந்துவந்த பொழுதிலும் நீண்ட காலமாகத் தடுப்பு வலயமாகவே இருந்து வந்துள்ளது. வல்லரசுகளின் போர் விருப்பங்களுக்கு ஈடுகொடுப்பதுடன் வல்லரசுகளின் ஆதிக்கத்தினைத் தென்னாசியாவினுள் எடுத்து வருவதற்கும் இந்தச் சிறிய நாட்டின் இடவமைவும் அதன் வரலாற்றுப் பாரம்பரியமும் முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கின்றன.

வல்லரசுகளின் எல்லைகளில் அமைந்திருத்தல், மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் பட்டு வீதியில் இடம்பெற்றிருப்பது ஆகிய ஆப்கானிஸ்தானின் புவியியல் கேந்திரம் இந்நாட்டின் போருக்கும் சமாதானத்துக்குமான பங்களிப்பினைக்குறிப்பிட்டு நிற்கின்றன. நிலத்தினால் சூழப்பட்ட இந்த நாடு நோப்பாளம், காஸ்மீரம், பூட்டான், திபெத் போன்ற எல்லை பேணும் நாடுகளின் போராபத்தினை அனுபவித்து வந்திருந்த பொழுதிலும்கூட இந்நாட்டின் முக்கியத்துவத்தை இன்று உலகநாடுகள் உணரத்தொடங்கிவிட்டன. பலதடவைகளில் இலக்குவைத்துக் தாக்குதலுக்குட்பட்டிருந்த இந்தநாடு யார் பகைவர் யார் நண்பர் என்று தெரியாமற் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தான் ஒரு இஸ்லாமியக் குடியரசாக இருந்துவருகிறது. பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளினாற் சூழப்பட்டு இருப்பதுடன் அவற்றின் தார்மிக ஆதரவினைப் பெற்றிருப்பதும் அரசியலில் எதிரிகளின் பலம் ஓங்கிவிடாதவாறும் பல்வேறு தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்பான பிறதேசமாக இந்நாடு காணப்படுகிறது.

சோவியத் ரஷ்யாவின் பாகமாக இருந்து தனிக் குடியரசுகளாயிருந்த ரேக்மெனிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், ராஸிகிஸ்தான் போன்றவையும் பாகிஸ்தான், ஈரான், சீனா, இந்தியா (பமிர் முடிச்சில் காஸ்மீரத்தின் ஊடாக தெடர்பு படுகிறது.) ஆகிய நாடுகளின் எல்லையிலும் இருப்பதுடன் இந்தியா, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளின் போக்குவரத்துப்பாதையினால் இணைவு பெற்ற நாடாகவும் இருந்து வருகிறது.

காபுல் ஆற்றங்கரை நாகரிகம் 15 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ஆண்டு காலப் பழமை வாய்ந்தது. வெங்கலக் கால சிந்து வெளி நாகரிகத்தின் மேகர் பகுதியை உள்ளடக்கிய கச்சி சமவெளியின் நகராக்க நாகரிகத்தைக் கொண்டிருந்தது. இந்தோ ஆரியர்களது கி.மு 1000 ஆண்டளவிலிருந்த வேதகால நாகரிகத்தின் சுவடுகளும் இங்கு இருந்தன. இருக்குவேகாலத்துக்கு முன்னர் கி.மு 5000 முதல்7000 ஆண்டுகளில் விவசாய நாகரிகம் செழிக்தொங்கிய பகுதியாகவும் இது இருந்தது. காலநிலை மாற்றத்தின் முன்னர் இப்பகுதி மனிதவாழ்க்கைக்கு ஏற்ற சூழலுடன் இருந்ததாகக் கருதப்படுகிறது. இன்று கண்டகார் எனது சொல்லப்படும் பகுதி இந்திய வரலாற்றிலும் இதிகாச காலத்திலும் காந்தாரம் என்று அழைக்கப்பட்டுவதாக இருந்தது.

பாகிஸ்தானின் தென் எல்லையாக இருக்கின்ற பலுஸிஸ்தான் மாகாணம் சிந்து நதி நாகரிகத்தின் தெற்கு நோக்கிய இடப் பெயர்வுப் பிரதேசமாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் இருப்பான விவசாயத்திலீடுபட்டிருந்தமையையும் நகராக்க செயற்பாடுகளினுட் தம்மை ஈடுபடுத்தியிருந்தமையினையும் கொண்டு அந்தச் சமூகம் நாடோடி மந்தை வளர்ப்புடன் தொடர்புடையதாயிருந்த முன்னைய சமூகத்திலிருந்து வேறு பட்டதாகக் கொள்ளப்படுவது வழக்கம். இருப்பினும் இரண்டு விதமான பயிர்ச் செய்கை அமைப்பும் ஒரே காலப் பகுதியில் நிகழ்வதற்கு இயற்கையில் காலநிலை ஏற்படுத்தும் மாற்றங்களின் விளைவு காரணமாயிருப்பதனையும் காணமுடிகிறது. ஒரே இன மக்களே இவ்விரண்டு விதமான பயிர்ச் செய்கை முறைகளையும் மேற்கொண்டிருக்கலாம் என்பதனால் ஆரியர் திராவிடர் என்ற பேதம் அக்காலத்திலிருக்க வாய்பில்லாமலிருந்திருக்கலாம் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய வகுப்பினர் ஆரியர் என்ற தனிப்பிரிவு வாதத்தினை ஏற்றுக் கொள்ளுவதில்லை.

> “ அமெரிக்காவின் போர் வெற்றியானது
> புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தக்கூடும்
> என்று பயந்த தென்னாசிய நாடுகள்
> இலங்கையில் தனியான தமிழீழம்
> உருவாகுவதை விரும்பியிருக்கவில்லை. ”

மத்தியாசியாவிலிருந்து வந்தவர்கள் ஆப்கானிஸ்தானூடாகச் சிந்துநிதி கங்கை நதிகளைக் கடந்து இந்தியக் கிழக்குக்கரையோரத்திலிருந்து வாடைக் காற்றின் உதவியுடன் இலங்கை வந்தார்கள் என்றும் அவர்கள் ஆரியர்கள் என்றும் சிந்து நதிமுதல் இந்திய மேற்குக் கரைவழியே மலபார்ப்பகுதியூடாக இலங்கை வந்தவர்கள் திரவிடர்கள் என்றும் கூறப்படுவது, மக்களின் புலம் பெயர்வுத் தன்மையை வெளிக்காட்டியிருந்தாலும் இனத் தூய்மையினை வெளியிடத் தவறிவிட்டது.

இது சிந்துவெளி நாகரிக மக்களின் இடப் பெயர்வு போலவும் அல்லது புராதன கால மக்கள் இடப்பெயர்வினை வெளிப்படுத்தும் மாதிரி வடிவமாகவும் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் ஆரியம் திராவிடம் என்பது மொழி வழிச் சமூக அமைப்பா அல்லது பௌதிக உடலியல் இனவழிச் சமூக அமைப்பா என்ற சிக்கலுக்குள் மானிட வியலாளர்களை உள்வாங்கிய ஆய்வானது தொடர்ந்து கொண்டேபோகிறது. தோலின் நிறத்தை வைத்து ஆரிய திராவிட வேறுபாடுகளைத் தீர்மானிக்க முயலுவதும் குழுக்களின் கலாசார விழுமியங்கள் கிரிகை முறைகள் வணங்கும் கடவுளர்கள் ஆகியவற்றினடிப்படையிலான பாகுபடுத்தும் முறைகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கை வரையிலான இனச் சுத்தக் கோரிக்கைக்கு விளக்கமளிப்பதாக இருக்கவில்லை.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் ஊடாக வந்த கலாச்சாரம் தான் தெற்கு வரை பரந்தது என்றோ ஆப்கானிஸ்தானில் வசித்த மக்கள் முழுதாகத் தெற்கு நோக்கி நகர்ந்தார்களென்றோ துணிவது மிகவும் கடினமாக இருக்கிறது.

மத்தியாசியப் பகுதியிலிருந்து வந்த மக்களும் மேற்காசியாவிலிருந்து மக்களும் ஆப்கானிஸ்தானைப் படியாகப் பயன்படுத்தினார்களா அல்லது அங்கு வாழ்ந்த மக்களைக் கலைத்து விட்டுக் குடியேறியிருந்தார்களா அல்லது அவர்களுடன் இணைந்து விட்டார்களா என்று கண்டுபடிப்பது கடினமாயினும் அன்று உருவாக்கப்பட்ட ஆரிய திராவிட இனத்துவம் இன்று இலங்கை போன்ற நாடுகளின் அரசியலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பதனைக் காணமுடிகிறது.

இதிகாச காலத்தில் இராமாயணத்தின் எல்லையானது பரதன் ஆட்சி செய்த காந்தாரப் பகுதியையும் இராமனின் கங்கை நதிப் பகுதியையும் இராவணனின் இலங்கையினையும் இணைத்து ஒரே தேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தியது. பின்னர் வந்த மகாபாரத காலத்திலும் சகுனி காந்தாரி ஆகியோரது பிறப்புடன் தொடர்புடைய காந்தாரத்தையும் காந்தாரியின் வாரிசான கௌரவர்களையும் கங்கைக் கரையின் பாண்டவர்களையும் தென்பகுதியின் கிருஷ்ணனையும் இணைத்து உருவாக்கப்பட்ட ஒற்றுமை இலக்கியமாக மகாபாரதம் அமைந்திருந்தது. இந்தக் கதைகளின் வாசலாகவும் திருப்பு முனையாகவும் இருந்தது காந்தாரதேசம் எனப்பட்ட ஆப்கானிஸ்தான் தான். இந்த நுளைவாயில் தென்னாசியாவின் சமுக கலாசார அரசியல் முழுமையையும் மாற்றும் சக்தி பெற்றதாக அமைந்திருந்ததைக் காணமுடிந்தது.

கி.பி 3வது நூற்றாண்டின் கிரேக்கர் படையெடுப்பாயமைந்த அலெக்சாந்தரது படையெடுப்பும் தொடர்ந்த மௌரியர்களது ஆட்சியும் 1219ல் மங்கேஸியர்களின் படையெடுப்பாயமைந்த கெங்கிஸ்கானின் படையெடுப்பும் இஸ்லாமியர்களது படையெடுப்பும் பஸ்தூன் பழங்குடியினரின் ஊடுருவுதல்களும் ஆப்கானிஸ்தான் என்ற நுளைவாயிலினைப் பலமாகத் தாக்கியிருந்தன. அவற்றின் ஊடகக் கசிந்த அவர்களது நாகரிக அம்சங்கள் தென்னாசியா முழுவதும் பரவியிருந்தன.

ஆப்கானிஸ்தானின் சமகால அரசியல் வரலாறு 18ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பிப்பதாகவே கூறப்படுவது வழக்கம். 1709ல் உருவான கொடாகி அரசவம்சத்தின் ஆட்சியும் 1747 முதல் அகமாத் ஸா துர்ரானியின் துர்ரானியப் பேரரசின் ஆட்சியும் தொடர்ந்த பிரித்தானிய ஆப்கான் போரும் புடம்போட்டதனால் ஏனைய தென்னாசிய நாடுகளைப் போலன்றி 1919ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ல் ஆப்கானிஸ்தான் சுதந்திரமடைந்தது. அதனைத் தொடர்ந்து தலைவாசல் என்ற நிலையிலிருந்து தடுப்புவலயம் என்ற நிலையை உருவாக்கியிருந்தது.

19ம் நூற்றாண்டில் பிரித்தானியர்களும் 20ம் நூற்றாண்டில் ரஷ்சியர்களும் 21ம் நூற்றாண்-

6ம் பக்கம் பார்க்க...



# கப்பல் அரசியல்



**கந்தசாமி கங்காதரன்**

‘எம்.வீ. சண் சீ’ கப்பலில் கனடா நோக்கி அகதிகள் வருகின்றார்கள் என்றதும் அதிக பரபரப்புக்குள்ளாகின கனடியச் செய்தி ஊடகங்கள். அரசியல்வாதிகளும் தம் எண்ணப்படியெல்லாம் பேசித் தம் பொறுப்பற்ற குணத்தை வெளிச்சம் போட்டனர். இலங்கை அரசு சார்பு ஊடகங்களும் சிங்கப்பூரிலிருக்கும், ‘சர்வதேச பயங்கரவாத நிபுணர்’ ரொஹான் குணரத்னவும் அவிழ்த்துவிட்ட புளுகுகளை, நனைத்துச் சுமந்தன கனடிய ஊடகங்கள். இப்போது அகதிகள் தொடர்பான கட்டுக்கதைகள் பெருமளவிற் குறைந்துவிட்டன. பெரும்பாலான கனடியத் தேசிய ஊடகங்களும் அகதிகள் விடயத்தில் அனுதாபப் போக்கைக் காண்பிக்கத் தொடங்கியுள்ளன.

வந்திறங்கிய அகதிகள் தொடர்பில் பல்வேறு தமிழ் அமைப்புக்களும்கூட கரிசனை கொண்டு செயலாற்றுகின்றன.

கடந்த ஒக்டோபரில் ‘ஓஷன் லேடி’ கப்பல் வந்த போதும் கனடியத் தமிழர் பேரவை பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது. அந்த 76 பேரில் பெரும்பாலானோர். இப்போது ரொறன்ரோ பெரும்பாகத்திலேதான் வாழ்கின்றனர்.

சண் சீ கப்பல் வந்தடைந்தபோது, Toronto Star ஓஷன் லேடியில் வந்தவர்களுள் சிலரைச் சந்தித்து, ‘அவர்கள் ஏன் கனடா வர வேண்டியிருந்தது?’ ‘ரொறன்ரோவில் அவர்களின் வாழ்க்கை எவ்வாறுள்ளது?’ போன்ற விடயங்களைப் பிரசுரித்திருந்தது.

சண் சீ கப்பலில் வந்தோர் எப்படியிருக்கின்றனர்?

‘சிலருக்குக் காச நோய்’ என்றும் ‘ஆபத்தான நோய்கள் கப்பலில் பரவியிருக்கின்றன’ என்றும் முதலில் பரப்பப்பட்ட வதந்திகளை எல்லாம் பொய்த்துப்போயின. மிகச் சிலரைத் தவிர ஏனைய அனைவரும் நல்ல உடனலத்துடனேயே இருந்திருக்கின்றனர். மருத்துவம் சிலருக்குத் தேவைப்பட்டிருக்கின்றது.

380 ஆண்களும் 63 பெண்களும் 49 இளவயதினருமாக 492 பேர். குழந்தைகளோடு வந்த பெண்கள் ஓரிடத்திலும் ஏனைய பெண்கள் வேறிடத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிறுவன் தந்தையுடன் வந்திருப்பதாகவும், தந்தையும் மகனும் வெவ்வேறிடங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. குழந்தைகளோடு வந்த பெண்களோடு தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்ட மகனும் தங்கவைக்கப்பட்டுள்ளார். தந்தை நியமித்த ஒரு பெண், அந்தச் சிறுவனின் பாதுகாவலராக உள்ளார். இவற்றைச் சாத்தியப்படுத்திவர் அகதிகளுக்கு உதவி புரியும் தமிழ் அமைப்பொன்றின் சட்ட ஆலோசகர். வந்திருக்கும் 49 இளையோரில் 6 பேர் தாய், தந்தையின்றிப் பயணித்திருக்கின்றனர். துணையாக உறவினர் யாருமில்லாத அந்த 6 பேருக்கும் கூடவந்த ஏனையோர் தான் இப்போதுள்ள உறவுகள்.

இந்த 492 பேரும் நடத்தப்படும் முறை, அவர்களின் சட்டபூர்வமான உரிமைகள் வழங்கப்படுகின்றனவா? அவர்களது அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றனவா? போன்றவற்றை இந்த அகதிகளின் நிலை தொடர்பில் கரிசனை கொண்டுள்ள சட்டத்தரணிகள் கண்டறிந்து திருப்தியடைந்துள்ளனர். கனடியச் செஞ்சிலுவைச் சங்கமும் இந்த முகாம்களுக்குச் சென்று நிலைமைகளைக் கண்காணிக்கின்றது.

> “‘எம்.வீ. சண் சீ’ கப்பல் பற்றி அரசியல்வாதிகளும் சிங்கப்பூரிலிருக்கும் சர்வதேச பயங்கரவாத நிபுணரும் அவிழ்த்துவிட்ட புளுகுகளை எல்லாம் நனைத்துச் சுமந்தன கனடிய ஊடகங்கள்.”

கனடியத் தமிழர் பேரவையினால், குடிவரவு அகதிகள் தொடர்பான உண்மைகள், அவர்களின் உரிமைகள் போன்றவையும் தடுப்புக் காவலில் உள்ளோருக்கான உதவிக் குறிப்புக்களும் தமிழில் அச்சிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்க இந்த உதவிக் குறிப்புக்கள் உறுதுணையாக இருக்கும்.

கப்பலில் வந்தோர் தொடர்பிலான தகவல்கள் கனடாவிலும் ஏனைய நாடுகளிலும் வாழும் உறவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களும் இதில் பெரும் பங்காற்றியுள்ளன. ஆனால் எதிர்பாராத வகையில் பயணத்தின் போது 37 வயதான ஆண் ஒருவர் உயிர் நீத்த செய்தி கவலை கொள்ள வைக்கின்றது. உயிர்காக்கும் நோக்கில் தொடங்கிய பயணம் அவரின் உயிர் போன பயணமானதற்கு யாரைத்தான் நோக முடியும்?

கப்பலில் வந்தோரினால் கனடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்... சமூக நலக் கொடுப்பனவுகளில் அவர்கள் தங்கியிருக்கப்போவதால் மக்கள் வரிப்பணம் வீணாகின்றது... மருத்துவச் செலவுகள், இன்ன பிற செலவுகள் என்று ஆளாளுக்கு ஒரு பட்டியல் போட்டு சராசரிக் கனடியனைச் சில அரசியல்வாதிகளும் உசுப்பி விடுகின்றனர். சில ஊடகங்களும் துணை போகின்றன.

பெரும்பாலானோர் தடுப்புக்காவலிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஒன்ராறியோவில் குடியேறும் போது ஒன்ராறியோ சட்ட உதவிப் பிரிவுக்கு (Legal Aid Ontario ) 22 மில்லியன் டொலர் செலவாகுமென்று Toronto Sun ஒரு கண்டு பிடிப்பை வெளியிட்டது. (Toronto Sun, Aug 18, 2010) ‘இது ஆதாரமற்றசெய்தி. மிகைப்படுத்தப்பட்ட தொகை, இந்தத் தொகை அகதிகள், குடிவரவாளர்களுக்கான Legal Aid Ontario இன் ஓர் ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகையிலும் மிக அதிகம். கடைசியாக ஓர் ஆண்டுக்கு 14.8 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை www.legalaid.on.ca இணையத் தளத்தில் பார்க்கலாம். உங்கள் கதையிலுள்ள தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்று எமக்கு அறியத்தரமுடியுமா?’ என்று Legal Aid Ontarioஇன் தொடர்பாடல், ஊடகத் தொடர்புப் பிரிவுப் பதில் முகாமையாளர் Toronto Sun இடம் கேட்டிருந்தார் (Toronto Sun Aug 24, 2010).

‘சமூக நலக் கொடுப்பனவு, மருத்துவச் செலவு, மொழிபெயர்ப்பாளர் ஊதியம், நீதிமன்றச் செலவுகள் எல்லாவற்றையும் உள்ளடக்கித்தான் இந்த 22 மில்லியன் டொலர் கணக்கு; சட்ட உதவித் தொகை மட்டும் அல்ல’ என்று பின்வாங்கி தவறுக்கு வருந்தியது Toronto Sun. “கப்பல் வந்து கொண்டிருக்கும் போதே பயங்கரவாதிகளும் குற்றவாளிகளும் கப்பலில் இருக்கின்றார்கள்” என்று அவசர அறிக்கை வாசித்த பழமை பேண் கட்சியினரிடம், அகதிகள் மீது கொஞ்சமாவது கருணை காட்டுமாறும் விபரல் கட்சியினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

கனடியத் தமிழர் பேரவையின் மொன்றியல் அலுவலகத்திற்குச் சென்றிருந்த புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக் லேய்ரன் அவர்கள், “பெண்களும் குழந்தைகளும் முன்னுரிமை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும்” என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

நிறைய மாற்றங்கள் ஊடகங்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ளன. பல்வேறு அமைப்புக்களும், செய்திகளுக்கு தனியாளாக நின்று கொண்டு சிலர் பதிவு செய்யும் பின்னூட்டங்களும் இதில் நிறையப் பங்களிப்புச் செய்துள்ளன. தவறான, சீண்டுகின்ற செய்திகளுக்கு நாம் வழங்கும் பின்னூட்டங்கள் நிறைய மாற்றங்களைக் கொண்டுவரும். கப்பலில் வந்தவர்கள் கனடியச் சட்ட திட்டங்களுக்கமைய விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்படும் வரையில் காத்திருக்காது அவர்கள் நலன் காக்க இவ்வாறான செயற்பாடுகள் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையிலிருந்து ‘அகதிகள்’ ஆக கனடாவுக்கு வந்தவர்களில் முக்கால் பங்கினர் இலங்கை சென்று வந்திருப்பதாக ஓர் இரகசிய அரசாங்க அறிக்கை சொல்வதாக Sun செய்தித்தாள் செய்தி வெளியிட்டது. 50 அகதி விண்ணப்பதாரிகளின் கோப்புக்கள் இந்த ஆய்வுக்காக எடுக்கப்பட்டன. அதில் 31 பேரின் அகதி நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர்களுள் 22 பேர் இலங்கை சென்று திரும்பியுள்ளனர். அப்படிச் சென்று, சிக்கலேதுமின்றித் திரும்பிவர முடியுமாயின் அவர்கள் முன்பு வந்து தஞ்சம் கோரும் போது சொன்னவை ‘பொய்’ என்கின்றது அந்தச் செய்தி. 50 பேரை வைத்துக்கொண்டு 200,000க்கும் மேலுள்ள தமிழர்களின் செயற்பாடுகளைத் தீர்மானிக்க முடியாது என்பது ஒரு வாதம்.

இலங்கை செல்வோர் கனடியக் குடிமக்கள் என்ற கவசத்துடன் செல்லும்போது, ‘ஏன் யாருக்கேனும் பயப்படவேண்டும்?’

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

**தமிழ்ப்பிரியாவின்**
**இரு சிறுகதைத்தொகுதி**
**நூல் வெளியீட்டு விழா**

‘காம்பு ஒடிந்த மலர்’
‘ஒரு நியாயம் விழிக்கின்றது’

**04.09.2010**
**சனிக்கிழமை 4:00 pm.**

**Agincourt Community Centre**
**Midland & Sheppard**
**31, Glen Watford Drive**

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

**கட்டிறான்கியா**
செல்லையா சந்திரசேகரி 14

**உங்கள் வெற்றி உங்கள் கையில்**
சொக்கலிங்கம் பிரபாகரன் 19

**விற்பனைக்குத் தயார் செய்தல்**
எஸ்.கே. பாலேஸ் 24

**மருத்துவக் கேள்வி - பதில்**
இராஜசேகர் ஆத்தியப்பன் 26

**காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்**
சக்திவேல் 40

**முகப் பராமரிப்பும் சந்தேக நிவர்த்தியும்**
சசி நரேன் 48

**அரைகுறை அறிவு ஆபத்தானது**
ராகுலன் 50

**உங்களுக்குத் தெரியுமா?**
ஜி.ஃப்றி மீராசாஹிப் 59

**பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்**
முருகேசு பாக்கியநாதன் 63

**மனிதனால் உருவாக்கப்படும் ஓசை**
பொன் குலேந்திரன் 71

**விளங்கு தமிழை வளர்த்த வித்துவான் வேந்தனார்**
வி. கந்தவனம் 75

**சாட்சி சொன்ன சரிந்த வேலி**
குரு அரவிந்தன் 76

**பேச்சுப் பல்லக்கு**
சி.சண்முகநாதன் 77

**பொய்கள்**
என்.கே.மகாலிங்கம் 79

**குயிலே குயிலே, கூவும் குயிலே**
உதயணன் 80

**கண்ணும் ஆடேல்ல... கையும் ஆடேல்ல...**
கௌரி சதானந்தன் 81

**பரிதவிக்கும் கப்பல் அகதிகளும்...**
நிமால் நாகராஜா 82

**கோடியில் மீன் அரிவாளுக்குப் பக்கத்தில்...**
பொ. கனகசபாபதி 83

**பேசப்படாத பாரதி கவிதை**
கே.எஸ். பாலச்சந்திரன் 86

**டையோனிசஸ் கடவுள் வழிபாடு**
ஞானம் லேம்பட் 91

**காலம் அழியேல்**
குமார் புனிதவேல் 92

**நீங்கள் அதன்மேல் நிற்கிறீர்கள்**
அ. முத்துலிங்கம் 95

**இரவில் வரவேண்டாம்**
வி. கந்தவனம் 96

**க. பாலேந்திரா - ஒரு நாடக இயக்கம்**
ப. ஸ்ரீஸ்கந்தன் 98

**கலைஞர் ஏ. ரகுநாதன்**
கே.எஸ். பாலச்சந்திரன் 101

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**
சிறீதரன் துரைராஜா 102

# வாசலில் சண்டை...

4ம் பக்கத் தொடர்ச்சி...

டில் அமெரிக்கர்களும் போரிடும் பிரதேசமாக ஆப்கானிஸ்தான் மாறியிருந்தமை தென்னாசிய அரசியலில் புதியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

1839 முதல் 1878 வரையான காலப்பகுதி பிரித்தானியர்களது ஆக்கிரமிப்புப் போருக்கு ஆப்கான் ஈடுகொடுத்தது. 1973 முதல் 1978 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட பெரிய சார் புரட்சி இடதுசாரிகளின் உருவாக்கத்தை ஆப்கானிஸ்தானில் ஏற்படுத்தியது அதனைத் தொடர்ந்து சோவியத் ரஷ்யா 1979ல் ஆப்கானிஸ்தாலினுள் புகுந்து கொண்டது. அடுத்த பத்தாண்டு காலப்பகுதி போர்ப் பரீட்சைக் காலப் பகுதியாக மாற்றம் பெற்றது. அறுபதுகளில் இந்திய சோவியத் உடன்படிக்கைகளும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாகிஸ்தான் பங்களதேஸ் பிரிவும் இந்திய மேலாண்மையில் ரஷ்யாவின் பங்கினைக்காட்டியது ஆப்கானிஸ்தான் ஊடாக ரஷ்யாவின் ஊடுருவல் இந்தியாவுக்கு ஒரு பலத்தைக் கொடுத்திருந்தது. 1979களின் ஜிம்மி காட்டரது அமெரிக்க நிர்வாகம் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஏ ஊடாக ஆப்பான் முகாஜுதீன்களுக்கு உதவி வழங்கத் தொடங்கியது. இது ஒரு மறைமுகமான வல்லரசுப் பலப் பரீட்சையாக இருந்தது. இதுவே பாகிஸ்தானின் ஆயுதப்போரியல் வளர்ச்சிக்கு வழியேற்படுத்திக் கொடுத்தது.

அமெரிக்காவின் ரஷ்யவுக்குஎதிரான உதவிவழங்கும் நடவடிக்கைகள் பாகிஸ்தானைப் பலப்படுத்தியது மாத்திரமன்றி தலிபான்களுடனான அமெரிக்கப் போரில் அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தத்தக்கதாக ஐ.எஸ்.ஏயின் பலம் இருந்ததாக விக்கிலீக்கின் ஆதாரக்கசிவுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

பாகிஸ்தானின் ஆயுத வளர்ச்சியுடன், சீனாவும் பாகிஸ்தானும் இந்திய ரஷ்யக் கூட்டுக் கெதிரானதொரு கூட்டாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. இந்தியாவின் தென்னாசிய அரசியல் நடவடிக்கைளில் பாகிஸ்தானின் வளர்ச்சி புதியதொரு அணுகுமுறைக்கு வழிவகுத்தது. அமெரிக்காவின் போர் வெற்றியானது தென்னாசியாவின் அரசியல் வரலாற்றில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும் என்று பயந்த தென்னாசிய நாடுகள் இலங்கையில் தனியான தமிழீழம் உருவாகுவதை விரும்பியிருக்கவில்லை 2001 செப்ரம்பரில் அமெரிக்கப்படைகளின் வருகையுடன் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் இந்தியாவின் திட்டங்களும் முனைப்புப் பெற்றிருந்தன.

அமெரிக்கா மேற்கொண்ட தலிபான்களுக்களுக்கு எதிரான போர் வெற்றி பெறுவதனை விட தென்னாசிய ஒருமைப்பாட்டையே இந்தியா விரும்பியிருந்தது. தலிபான்களுடனான உறவினைப் பாகிஸ்தான் பேணுவதன் மூலம் இஸ்லாமிய அரசுகளில் ஆதாரவைப் பெறுவதனைப் பாகிஸ்தான் நேக்கமாகக் கொண்டிருந்தது.

தனியாக இஸ்லாமிய நாடுகளின் ஆதரவு பாகிஸ்தானையோ ஆப்கானிஸ்தானையோ காப்பாற்றப் போதுமானதாயில்லை என்ற நிலைமை உருவாகிவந்த வேளையில் சீனா, இந்தியா, இரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கூட்டு இலங்கையினை மையமாகக் கொண்டு ஏற்பட்டது இந்தக் கூட்டு இலங்கை அரசினை விடுதலைப் புலிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக ஏற்பட்டது என்று கூறுவது முற்றிலும் ஏற்கமுடியாதது அதேவேளை விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் பயங்கரவாதத்தை அழிக்கலாம் என்று சொல்லப்பட்ட அடிப்படை நோக்கத்துக்கும் புறம்பானது.

வளர்ந்து வரும் அமெரிக்காவின் செல்வாக்கு தென்ஆசிய நாடுகளில் வேரூன்றி விடக்கூடாது என்றதோரு அக்கறையும் அதன்மூலம் அமெரிக்க ஆதரவு சக்திகளை அழிப்பதும் அதன்ஒருபாகமாயமைந்த நேசநாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கும் வழியேற்படும் என்ற கரிசனையில் ஒவ்வொரு பகுதியினரும் ஈடுபட்டதன் விளைவுதான் விடுதலைப் புலிகளின் அழிவு. இந்நிலையில் ஆப்கானிஸ்தானிலிருந்து பயங்கரவாதத்தை அழிக்க முடியுமா என்ற கேள்விக்கும். உண்மையில் ஆப்கானிஸ்தான்தான் பயங்கரவாதத்தின் தோற்றத்தக்குக் காரணமா? அத்தீவிர போராட்டத்தை நீடிக்கச் செய்து கொண்டிருப்பவர்கள் யார்? ஏன் அதனைச் செய்கிறார்கள் என்பதனைக் கண்டறிய வேண்டியது அவசியமாகிறது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

**REAL ESTATE LAW CLERKS**
**LEGAL SECRETARY**

**We are currently seeking Real Estate Law Clerks/Secretary. The successful candidates will be reliable, efficient and committed individuals, with a pleasant demeanor. You will have:**

- Pleasant telephone manners, good interpersonal and organizational skills and neat work habits.
- Experienced in Conveyancer and Teraview with exposure to PCLaw.
- Excellent spoken and written skills in English.
- Experienced computer user with good keyboarding skills.
- Ability to converse in Tamil.

**If you are otherwise qualified except for practice-specific software knowledge, please forward your resume to be considered for junior positions.**

**Salary commensurates with education and experience.**

**Please mail or fax your resume with handwritten cover letter asap to:**

**Yaso Sinnadurai Professional Corp.**
**2100 Ellesmere Road, Suite 202**
**Scarborough ON M1H 3B7**
**Fax: 905-306-1125**

**We thank all applicants. Short-listed candidates will be contacted for an interview within three days after receipt.**

**RBC MORTGAGE SPECIALIST**



- 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
- Switch your mortgage to RBC and save
- We will pay your legal & Switch fees on Switches*
- Builder rate hold up to 18 months
- Cash back options available*
- New Immigrants Programs
- Self-Employed? No income verification*
- Consolidate your debts to one low monthly payment

As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the **time** and **place** that is **convenient** for you.

**Ram Krish**
Mobile Mortgage Specialist
Tel: **416-526-4996**
Email: ram.krish@rbc.com

RBC

* Some conditions apply.



- digi Media -

# எங்கள் வீட்டிலும் பிரச்சினை உண்டா?

## வீடும் விடியலும் - 55



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட ஈரப்பதன் சம்பந்தமான அனுபவரீதியான சில தகவல்கள் பலரையும் போய்ச் சேர்ந்திருக்கின்றது, பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதை பெறப்பட்ட தொலைபேசி அழைப்புகள் மூலமும் கருத்துப் பரிமாற்ற மூலமும் அறியக்கூடியதாக உள்ளது.

கனடிய இயற்கைவளத் திணைக்களத்தின் ஆய்வறிக்கையில் "கனடிய வீடுகளில் இருக்கக்கூடிய அதிகரித்த ஈரப்பதனால் எமது உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுவது மட்டுமன்றி வீட்டின் ஸ்திரத் தன்மைக்கும், மீள் விற்பனைப் பெறுமதிக்கும் பெருத்த கெடுதல் ஏற்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"Moisture Problems in Canadian Housing are detrimental to our health and to the durablity and resale value of our homes"

எனவே கருப்பொருளின் காத்திரம் கருதி மேலும் பல தகவல்கள் இங்குதரப்படுகின்றன.

எங்கள் வீட்டிலும் ஈரப்பதன் பிரச்சினை இருக்கின்றதா? என்பதைக் கண்டறிய பின்வரும் சில கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். பொதுவாக இத்தகைய பிரச்சினைகள் அனேகமான வீடுகளில் இருக்க வாய்ப்பு உண்டு.


- வீட்டில் துர்நாற்றம் அல்லது சக்குமணம் உண்டா? (குறிப்பாக நிலக்கீழ்தளத்தில்).
- பூஞ்சணம் (Mould) அல்லது பங்கஸ் எங்காவது காணப்படுகிறதா?
- யன்னல்களின் கண்ணாடிகளில் நீர்ப்படிவு, அல்லது நீர் உறையும் தன்மை பனிக்காலத்தில் காணப்படுகிறதா?
- முகட்டில் (Attic), நீர்ப்படிமம் ஏற்படுகின்றதா?
- Insulation ஈரமாக உள்ளதா?
- நிலக் கீழ்த் தளத்தில் வெள்ளம் ஓடுவது போல் உள்ளதா?

அதிகரித்த ஈரப்பதனின் கேட்டினால் பின்வரும் தடயங்கள் உண்டா?

- உக்கிய மரங்கள்.
- மெதுமெதுப்பான சுவர் (Drywall).
- நிலை குலைந்த வெளிப்புறம் (Siding).
- கற்சுவர்களில் பொருக்குகள் சிராம்புகள் (Spalling).
- குளிர்காலத்தல் ஈரப்பதனின் அளவு அடிக்கடி 55% வீதத்திற்கு மேற்செல்கிறதா?

இத்தகைய வினாக்களில் ஏதாவது ஆம் என்ற பதிலைத் தருமானால் உங்கள் வீட்டிலும் பிரச்சினை உள்ளது என்பதே அர்த்தமாகும்.

மேலும் அதிகரித்த ஈரப்பதனின் தடயங்களை வீட்டின் முக்கிய பல்வேறு பகுதிகளிலும் கண்டு கொள்ளலாம் என்பதைப் பின்வரும் படம் விளக்குகின்றது.




1 முகட்டில் (Attic) காணப்படும் பூஞ்சணம் (Mould) அல்லது நீர்ப்படிமம்.
2 குளியலறையில் பூஞ்சணம்.
3 கதவு நிலைகளில் நீர்ப்படிமம்/உறைபனி.
4 நிலக்கீழ் தளத்தில் சுவர்களில் ஈரலிப்புத் தன்மை/பூஞ்சணம்.
5 நிலக்கீழ் தளத்தில் தண்ணீர்.
6 தளபாடங்களுக்குப் பின்னாலும், தேக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்குப் பின்னாலும் பூஞ்சணம்.
7 யன்னல் நிலைகளில் உறைபனி.
8 வண்ணப்பூச்சுகள் (Paint) உரிதல், வெளிப்பக்க சுவர்கள் அல்லது Sidings பழுதடைதல்.
9 மூலைகளில் பூஞ்சணம் படிதல்.
10 யன்னல்களுக்கு கீழுள்ள சுவர் அல்லது நிலம் ஈரலிப்பாக இருத்தல்.
11 யன்னல் கண்ணாடிகளில் நீர்படிதல்.
12 Closetல் பூஞ்சணம் பிடித்தல்.
13 உட்கூரை (ceiling) தொய்தல் அல்லது தண்ணீர் கறைபடிதல் (அனேக வீடுகளில் தண்ணீர்க் குழாய்களில் வியர்வை ஏற்பட்டு உட்கூரையில் சிந்தி, பின்னர் கறையகப் படிந்து இருப்பதை அவதானிக்க முடியும்)

### குறிப்பிட்ட சில வீடுகளில் மட்டும் இத்தகை ஈரப்பதன் அதிகரித்து காணப்படுவதற்கான காரணம் என்ன?

இதற்கு முக்கிய காரணம் எமது வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களுமே என அறுதியிட்டுக் கூறமுடியும். கனடிய தேசிய ஆராய்ச்சி மையம் வெளியிட்ட அறிக்கையில் சராசரியாக நால்வர் வசிக்கும் ஒரு வீட்டில் நாளாந்தம் 7-12 லீற்றர் வரையான தண்ணீர் அவர்களால் உருவாக்கப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பான்மையான வேற்றின மக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வை வைத்துப் பார்க்கும் போது எம்மவர்களது பழக்கவழக்கத்தினாலும், வாழ்க்கைமுறையினாலும் நாளாந்தம் உருவாக்கப்படும் நீரின் அளவு மேலும் அதிகமாகவே இருக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

கீழ் வரும் அட்டவணையின் மூலம் ஒரு வீட்டில் நாளாந்தம் உருவாக்கப்படும் நீரின் அல்லது ஈரப்பதனின் அளவை விபரிக்கலாம்.
(ஆதாரம்:- National Research Council Canada)

| ஈரப்பதனுக்கான மூலம் | லீற்றர்/ நாளுக்கு |
|---|---|
| நிலத்தை நீரால் துவட்டுதல் | 1.09 |
| உடுப்பு காயவிடுதல் | 11.97 |
| உடுப்பு தோய்த்தல் | 1.96 |
| சமைத்தல்* | .92 |
| சமைத்தல் (Gaz அடுப்பு)* | 2.16 |
| குளித்தல்* | .28 |
| பாத்திரம் கழுவல் | .45 |
| தனிமனித உள்ளீடு (ஒருவருக்கு)* | .18 |
| வீட்டுச் செடி, பூங்கன்று (ஒன்றுக்கு) | .02 |

கனடிய இயற்கை வளநிலையத்தின் தரவுகளின் படி இத்தயை ஈரப்பதனின் உற்பத்தி மேலும் அதிக அளவினதாகக் கணிக்கப்பட்டுள்ளது.
(ஆதாரம்:-National Resource Canada)

| ஈரப்பதனுக்கான மூலம் | லீற்றர்/ வாரத்திற்கு |
|---|---|
| வசிப்பவர்கள் (நால்வர்) | 30-40 |
| உலர்வடையும் கட்டிடமூலப் பொருட்கள் | 25-35 |
| கோடைகாலத்தில் உள்ளெடுக்கும் ஈரப்பதனின் அளவு | 20-40 |
| சமைத்தல், குளித்தல் கழுவல் | 15-20 |
| துணிகாயவிடல் | 10-20 |
| நீச்சல் அறை, வீட்டுச் செடி, மீன் தொட்டி, Green House, Hot Tubs | மேலதிகம் |

மேற்கண்ட ஆய்வுகள் யாவும் எமது வாழ்க்கை முறைக்கேற்ப எவ்வாறு ஒவ்வொரு வீடுகளிலும் பல்வேறு அளவுகளில் ஈரப்பதன் உற்பத்தியாகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றன.

* சமைத்தல், குளித்தல், தோய்த்தல், காயவிடல், கூட்டுக்குடும்பம் என்பவை எமக்குக் கைவந்த கலை. மேற்கண்ட தரவுகளை நீங்கள் எத்தனை மடங்கால் பெருக்கிப் பார்த்து உங்கள் வீட்டு ஈரப்பதன் உற்பத்தியை கண்டு கொள்ளவேண்டும். என்பதை உங்களிடமே விட்டு விடுகிறேன்.

மழையில்லாமலும் வெள்ளம் வரும் என்பதும், எல்லா வீடுகளிலும் பிரச்சினைகள் உள்ளன என்பதும் இக்கட்டுரை மூலமும் கடந்த மாதக் கட்டுரை மூலமும் தெளிவாக்கப்பட்டுள்ளது. எனவே வீட்டுரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தங்களது வீட்டின் ஈரப்பதன் அளவை அறிந்து உரிய நேரத்தில் தகுந்த மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது. ஈரப்பதனைக் கட்டுப்படுத்தும் முறை பற்றி கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்டதால் இங்கு தவிர்த்துக் கொள்கிறேன். பின்வரும் 5 அம்சங்களைத் தாரக மந்திரமாகக் கொண்டு நலமுடனும், வளமுடனும் மகிழ்வுடனும் வாழ்வோமாக!

- Check the Moisture level weekly.
- Keep the air circulating.
- Get rid of Mould
- maintain healthy Live
- Keep your house price Increasing

உசாத்துணை:-
National Resource Canada.
National Research Council Canada.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

Home Inspection
✓ Purchase & sale Inspection
✓ Problem solving Inspection
✓ New home - Warranty inspection
Optimal Home Inspection Services
Vela Subramaniam
Certified Home Inspector
Tel: 416-786-0760
416-299-0700
E-Mail:homeinspectorvela@gmail.com


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# To Buy, Sell & Lease Home Business & Investment Properties

முதல் பரிசு BMW 300 SERIES CAR

இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE

மூன்றாம் பரிசு 42" LCD TV

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

## நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?

எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன

## அதிஷ்ட குலுக்கல்

**Sunday 28th, November. 2010 @ GTA Square**

### Shoal Pt / Salem

4 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Great Layouts
Step to everything.
**$369,900**

### McCowan / 401

2+1Bedrooms with 2 Full washroom
Laminate floors , Great Layouts
Step to everything.
**$259,900**

### Markham / Steeles

Fully Finished Unit with 700 SFT
Ready for any Business, Golden opportunity to start your Business
**$1800.00**

### Bellamy / Lawrence

3 Bedroom Detached Bungalow
Walkout Basement, Larger Lot
Step to Everything.....
**$466,800**

### McCowan/Sheppard

4 Bedrooms with 2 Full washroom
2 Yrs New , Great Layouts
Step to everything.
**$448,000**

### Morning/ Hupfield


4 Bedrooms with 1 Full washroom
Hardwood floors , Great Layouts
Step to everything.
**$378,000**

### Markham/Sheppard

Power of sale
**$304,500**

### Morningside / Swells

4 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Finished BSMT
Step to everything.
**$359,000**

### Markham / Finch

3 Bedrooms Fully Renovated
Hardwood floors , Finished BSMT
Step to everything.
**$359,900**

### Markham/Passmore

4 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Great Layouts
Step to everything.
**$419,000**

### Brimley / Steeles

3 Bedrooms with 1 Full washroom
Hardwood floors , Great Layouts
Step to everything.
**$374,999**

### Markham / Elson

3 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Great Layouts
Step to everything.
**$399,000**

### Markham / 14th

4 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Finished BSMT
Step to everything.
**$629,000**

### Markham / Elson

4 Bedrooms with 2 Full washroom
Hardwood floors , Finished BSMT
Step to everything.
**$449,900**


FOR YOUR LISTING
**$ ??????**

## Gnani & Judy REAL ESTATE



HOMELIFE HIGHER STANDARDS

Gnanendran Narasingham
Sales Representative
CELL: 416.937.8090

Judy Gnanendran
Sales Representative
CELL: 416.629.9797

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

OFFICE: 416.321.6969

# போதை மருந்துகளின் பழக்கதோசம்

## (Drug Addiction)

**இதயம் மலர்கிறது - 25**



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

போதைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படும் ஹீரோயின், கஞ்சா, கொகேய்ன் போன்ற மருந்துப் பொருட்கள் வைத்தியர்களால் கடந்த காலங்களில் வேதனையைத் தணிப்பதற்கும், வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தவும், மற்றும் சில காரணங்களிற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தன. காசநோயினால் ஏற்படும் இருமல் நோயைக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குக் கூடப் பாவித்திருந்தார்கள் பதினெட்டாம் நூற்றாண்டுப் பகுதியின் ஆரம்பகாலங்களில் இம்மருந்துகளால் ஏற்படும் ‘பழக்கதோசம்’ பற்றிப் பலர் அறிந்திருக்கவில்லை.

மேலைத்தேச நாடுகளில் ஓய்வுகாலக் கொண்டாட்டங்களில் ஆண்கள் மதுவையும், பெண்கள் இம்மருந்துகளையும் போதைதரும் பதார்த்தங்களாகப் பாவித்தனர். ஏன் நாம் பருகும் Coco-Cola என்ற பானத்தில் 50 mg கோகேய்ன் கலக்கப்பட்டிருந்தது. இதனால் ஏற்படும் பழக்கதோசத்தைக் கண்டுணர்ந்த அரசாங்கங்கள் 1903ல் இருந்து Coco-Colaல் Cocaine சேர்ப்பதைத் தடைசெய்தது. அரசாங்கங்கள் 1920களில் இம்மருந்துகளை Dangerous Drugs Act என்ற சட்டக் கோவையின் கீழ் கொண்டுவந்து சில கட்டுப்பாடுகளை விதித்தது. இச்சட்டம் அமுலாக்கப்பட்ட பின்பு இலகுவாகக் கிடைத்த மருந்துகள் பொது மக்களுக்கு அருமையாகவே, கூடிய விலையில் கிடைத்தன. இச்செயற்பாடு மருந்துகளின் கறுப்புச் சந்தைகளை உருவாக்கியது. இங்கே மக்கள் மருந்துகளை மலிவாகவும், ஒழிவு மறைவாகவும் பெறத்தொடங்கினர்.

மருந்துகளின் பழக்கதோசம் (Drug Addiction) மருந்துகளின் துர்ப்பிரயோகம் (Drug Abuse) போன்ற செயற்பாடுகளை விளங்கிக்கொள்வதற்கு மூளையின் செயற்பாடுகள் பற்றிச் சிறிதளவு தெரிந்திருப்பது நல்லது, அவசியமும் கூட.

### மூளை:

எமது மூளை பல கோடிக்கணக்கான நரம்புக் கலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒரு நரம்புக்கலத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். நடுவில் உள்ளது கலவுடல். அதை அண்டி குறுகிய நரம்பு நார்கள். இக் குறுகிய நார்கள் ஏனைய நரம்புகளில் இருந்து செய்திகளை வாங்கி மத்திய கலவுடலுக்குக் கடத்துகின்றது. மத்திய கலவுடல் நரம்புக் கலத்தின் கட்டுப்பாட்டு மையமாக இருந்து செய்திகளைப் பரிமாற்றுகின்றது. கலவுடலின் மறு அந்தத்தில் ஒரு நீண்ட தனி நரம்பு நார் அமைந்துள்ளது. இது கலவுடலினால் பெறப்பட்ட செய்திகளை ஏனைய நரம்புக்கலங்களின் குறுகிய நார்களிற்குக் கடத்துகின்றது. எல்லா நரம்புக்கலங்களின் வடிவங்கள், அதன் பருமன்கள் என்பன ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

ஒரு கலத்தின் நீண்ட நாரிற்கும், மறு கலங்களின் குறுகிய நார்களிற்கும் இடையே மிகவும் நெருக்கம் காணப்பட்டாலும் அவைகள் செய்திகளைப் பரிமாற்றஞ் செய்யமுடியாது. இதன் சரியான விளக்கம் என்னவென்றால் இரண்டு நரம்புகளின் அந்தங்கள் ஒன்றையொன்று தொடுவது போல் நின்றாலும் செய்திகளைப் பரிமாற்ற மாட்டாதவை. இவ்விரு அந்தங்களிற்கிடையே இரசாயனப்பொருட்கள் சுரக்கப்படும்பொழுது தான் நரம்புக் கலங்களிற்கிடையே செய்திகள் பரிமாற்றமடைகின்றன. நீண்ட நார்களின் அந்தங்கள் அந்தச் சுரப்பை ஏற்படுத்தும் பொழுது, இச்சுரப்புகள் குறுகிய நார்களின் அந்தங்களின் வாங்கிகள் மூலம் பெறப்பட்டு செய்திகள் பரிமாறப்படுகின்றன. இங்கு கடத்தப்படும் செய்திகள் மறு அந்தத்தில் மின் தூண்டலைத் தூண்டிவிடவோ அல்லது நசுக்கிவிடவோ பயன்படுத்தப்படலாம். நரம்பு களிடையே செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் இந்த இரசாயனப் பதார்த்தங்கள் நரம்புகளிடையே தூதுவர்களாகத் தொழிற்படுகின்றன.


இவ்இரசாயனப் பதார்த்தங்களை நரம்புக்கடத்திகள் என்று குறிப்பிடலாம். நரம்புக் கடத்திகள் பலவகைப்படும். ஒவ்வொருவகையும் தனக்குரிய கட்டுப்பாடான தொழிலையே செய்யும். இது எப்படிச் சாத்தியமாகும் என்றால் சுரக்கப்படும் நரம்புக்கடத்திகள் தனக்குரிய வாங்கியுடன் மாத்திரம் சேர்ந்து தொழிற்படும். அதாவது பல திறப்புகள், பூட்டுக்கள் உண்டு, ஒரு திறப்பால் எல்லாத் பூட்டுகளையும் திறக்கமுடியாது. அந்தந்ததிறப்பு அந்தந்தப் பூட்டுகளை மட்டும் திறக்கவல்லது. நரம்புக் கடத்திகளும் (இரசாயனப் பதார்த்தம்), அதை வாங்கிக் கொள்ளும் வாங்கிகளூடாகவே தொழிற்படுகின்றன. ஏனைய வாங்கிகள் அருட்டப்படமாட்டாது. இச்சிறப்பு மிகுந்த ஏற்பாடுகளால் பல்லாயிரக் கணக்கான செய்திப்பரிமாற்றங்கள் எந்தவிதப் பிறழ்வுகளும் இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன.

அடுத்து வரும் விளக்கப்படங்கள் மிகவும் இலகுலாக இச்செய்முறைகளை விளங்க வைக்கும். மேலே கூறப்பட்டவாறு நரம்புக்கடத்திகள் அதற்குரிய சரியான வாங்கிகளுடன் இணையும் பொழுது, அந்த இணைப்பு மற்ற நரம்புக்கலத்தின் குறுகிய நரம்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தி அவை மற்ற நரம்புக் கலத்தின் மையத்தில் விளைவுகளை ஏற்படுத்தும். இப்படியாக மற்றநரம்புக்கலத்தில் ஏற்படுத்தப்பட்ட விளைவுகள் நீண்ட நரம்பின் வழியாகக் கடத்தப்பட்டு அடுத்த நரம்புக் கலத்தை அடைகின்றது. அல்லது செயற்பட வேண்டிய உடற்பாகத்தைத் தூண்டுகிறது. நரம்புக் கடத்திகள் இரு நரம்புகளின் அந்தங்களிடையே சுரந்து நரம்பு இடைவெளியை பாலம் போல் தொடுத்து செய்திகளை கடத்துகின்றன. சுரக்கப்பட்ட நரம்புக் கடத்திகள் தொடர்ந்தும் அங்கேயே இருந்தால் செய்திகள் தொடர்ந்து கடத்தப்படும். இதன் காரணத்தால் உடலியல் தொழிற்பாடு சரியாக நடைபெறாது. அப்படியாயின் உடற் தொழிற்பாடு சரிவர நடைபெற நரம்புக்கடத்திகளுக்கு என்ன நடைபெற வேண்டும், ஒன்றில் இரசாயனப்பதார்தங்களாகிய நரம்புக் கடத்திகள் பிரித்தழிக்கப் பட்டு செயலிழக்க வேண்டும். அல்லது மீண்டும் உறிஞ்சப்பட்டு மறு பாவனைக்காகச் சேர்த்து வைக்கப்படுதல் வேண்டும். பல பொறிமுறைகள் நரம்புக்கலத்தாக்கங்களூடேதான் (ஒவ்வொரு அங்க அசைவுகளும் கூட) ஏற்படுகின்றன. இதை விளக்குவதற்கு பலபல விளக்கங்கள் தேவை.

ஒரு நரம்புக் கலத்தின் நீண்ட நார்கள் கல உடலில் இருந்து செய்திகளை மின்கணத்தாக்கங்கள் மூலமே கடத்துகின்றன. நீண்ட நார்களினூடே மின்சாரம் பாயும் பொழுது குறுக்குச் சுற்றோட்டம் நிகழ்ந்து விடாது மையோலின் கவசம் அந்த நார்களைச் சுற்றி அமைந்திருக்கின்றது. மின் மூலம் கடத்தப்பட்ட செய்தி நீண்ட நரம்பின் அந்தத்தில் இருந்து இரசாயன நரம்புக்கடத்திகளூடே மறு நரம்புக் கலத்தின் குறுகிய நார்களிற்குக் கடத்தப்படுகின்றன. ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டது போல் இச்செய்திப் பரிமாற்றங்கள் மேற்கூறிய முறைகளில் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கோடிக்கணக்கான நரம்புக்கலங்களை தன்னகத்தே கொண்டுள்ள மூளையைப் பல பாகங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பாகங்களும் தத்தமது கடமைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. சமிபாடு, சுவாசம், இதயத்தொழிற்பாடு என்பன நாம் சிந்திக்காமலே நடந்து கொண்டிருக்கின்றன. மூளையில் சுவாசமையம், இருதயமையம், போன்ற பல கட்டுப்பாட்டு மையங்கள் உண்டு. மேலும் பலபல தொழிற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மூளையின் கட்டுப்பாட்டில் எத்தனை எத்தனை செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மிகவும் அளப்பரியன மூளையில் இருந்து கடத்தப் படும் செய்திகள் மண்டையோட்டு நரம்புகள், முண்ணான் போன்ற பல நரம்புகளுடாகச் சென்று பல கருமங்களை ஆற்றிய வண்ணம் இருக்கின்றன.

**தனி நரம்புக்கலம்**




இத்தகைய அரும்பெரும் செயல்களை ஆற்றிக் கொண்டிருக்கும் மூளை மதுவைக்கண்டும், போதை மருந்துகளைக் கண்டும் ஏன் மயங்குகின்றது. இதைச் சற்று விபரமாகக் கவனிப்போம். மருத்துவ ரீதியில் மூளையில் நடை பெறும் எத்தகைய தாக்கங்கள் மயக்கத்தையும், பின்பு பழக்க தோசத்தையும் ஏற்படுத்துகின்றது என்பதை அறிய முதல் ஏன் மக்கள் இவற்றைத் தவறாகப் பாவிக்கின்றார்கள் எனப்பார்ப்போம்.

### அறியாத வயதில் தவறாகச் செல்லுதல்:

பாடசாலைகளில் கற்கும் இளவயதினர் போதை மருந்துகள் விற்கும் நபர்களுடன் பழக்கத்தை ஏற்படுத்தும் பொழுது முதலில் இலவசமாகவோ அல்லது சிறிய விலையில் இளவயதினரிடம் கையளிக்கப்படுகின்றது. ஒருதரம் எடுத்துப் பார்ப்போம் என்று எடுப்பதற்குத் துணிகிறார்கள். இளம் கன்று பயமறியாதது என்பதுபோல் முதல் முறை ஏற்பட்ட போதை மயக்கத்தில் இன்புற்ற அவர்கள் இரண்டாவது, மூன்றாவது முறையும் தொடர்கிறார்கள். விடயம் தெரிந்த புத்தியுள்ள மாணவர்கள் முற்றாகவே போதை மருந்தை நாடமாட்டார்கள். பாடசாலைகளில் இதன் பாரிய விளைவுகள், பின் விளையும் அனர்த்தங்கள் பற்றிக் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. ஒரு தரமாவது போதைதரும் இன்ப மயக்கத்தை அனுபவித்துப் பார்த்து விடுவோம் என்று மனம் அங்கலாய்க்கும் பொழுது சில மாணவர்கள் அதற்கு இரையாகி விடுவதுமுண்டு.

இம் மாணவர்கள் பாடசாலை செல்வதைக் குறைத்துக் கொள்வார்கள். போதை மருந்து வாங்குவதற்காக வேறு சாட்டுதல்களைக் கூறி பெற்றோரிடம் பணம் கேட்பார்கள். பிள்ளை பாடசாலைக்கு வரவில்லை என்று அதிபர் காரியாலயத்தில் இருந்து தகவல் வந்தால் இப் பின்னணியைப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது பெற்றோரின் கடமை. பாடசாலைக்கு பிந்தலாம், ஆனால் போதை மருந்திற்கு ஆளாகிவிட்டால் அது பாரிய பிரச்சினைக் குரியது என்பதை மனதிற்கொள்ளுதல் வேண்டும்.

முதலில் உண்மையை அறிந்து கொள்ளுங்கள். பிள்ளையின் சிநேகிதர்களுடன் பேச்சுக் கொடுங்கள் அல்லது யாராவது அவரது பழக்கவழக்கம் சம்பந்தமாகத் தெரியக்கூடிய ஆசிரியர்கள், அயலவர்களுடன் கதைத்துப் பாருங்கள். உண்மை என்று அறிந்தால் கடுமையான முறையில் எச்சரியுங்கள். பெற்றோர் என்ற முறையில் பிள்ளைகளைத் தண்டிப்பதை விட நல்வழி காட்டுவதே சிறந்தது. பிள்ளையின் நோக்கத்தை அறிந்து அவரைத் திசைதிருப்பும் பின்னணிக் காரணிகளை, அவர் சேர்ந்து திரியும் நண்பர்கள் கூட்டங்களை அவதானித்து நல்ல முறையில் பாதை காட்டுவது பெற்றோரின் கடமை.

கவலைகள், துன்பங்கள், வேலைப்பழுக்கள் அளவு மீறி வருத்தும் பொழுது அவற்றை மறக்க, வேதனையைக் குறைக்க சிறிது, சிறிதாகப் பழகி இறுதியில் அது பழக்கதோசத்தையே ஏற்படுத்தி விடுகிறது. இப்பழக்க தோசத்தை நிவர்த்தி செய்ய மேலும் சிரமத்தை அவர்களது குடும்பங்கள் எதிர்நோக்க வேண்டிவரும்.

மருத்துவ ரீதியில் ‘மர்யுவானா’ என்ற போதை மருந்து சில நோய்களால் ஏற்படும் வேதனைகளைத் தணிப்பதற்காகக் கொடுக்கப்படுகின்றது. Medical Marijuana என்ற இப்போதை மருந்து வைத்தியர்களின் அனுமதியின் பேரில் நீண்ட கால நோயாளிகளும், கடைசித்தறுவாயில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் நோயாளிகளும் தங்களது வேதனையைக் குறைப்பதற்காக மருந்தாகப் பாவிக்கிறார்கள். இவர்களை Licensed Patient என்று கூறுவர்கள். இவர்கள் தமது தேவைக்காக வைத்திருக்கும் பொழுது சட்டத்தின் பிடியில் இருந்து நீங்குகிறார்கள். இந்நோயாளிகள்கூடத் தொடர்ந்து பாவிக்கும் பொழுது பழக்க தோசத்திற்கு ஆளாகிறார்கள். அப்பொழுது அவர்களின் மருந்துப் பிரமாணங்களை வைத்தியர்கள் மாற்றியமைத்துக் கொள்வார்கள்.

மேலும் பல காரணங்களைக் கூறலாம்.

### போதை மருந்துகள் மூளையில் எங்கே எப்படித் தொழிற்படுகின்றன?

20ம் பக்கம் பார்க்க...

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
**Dr. Kandiah Senthilathan**

● Standard First Aid & CPR Level "C" - 2 Days Program ● Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program ● CPR Level "A" - 4 Hours Program (Adult)
● CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant) ● CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**





**Brimley & Denison**
3+1 Bedrooms 4 Washroom



**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




**Morningside & Finch**
4 Bedrooms 3 Washroom




HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor



# எமக்கென்று ஒரு தனிக்குடில்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

RBC Financial Group

Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# குளிருது... குளிருது... வீட்டுச் சந்தை குளிருது

கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -



தாய்வீடு வாசகர்கள் கோடைகால கொண்டாட்டங்களில் திளைத்து சற்று ஆறியிருப்பீர்கள். “Happiness” is a voyage, not a destination. There is no better time to be happy than now” என்று கூறுவார்கள். அதாவது வாழ்க்கையில் எமக்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் மகிழ்ச்சியானதாகவும் மற்றவரை மகிழ்விக்க வல்லதாகவும் மாற்றுவது அவசியம். நாளை பார்க்கலாம் என்று சந்தோசமான தருணங்களை தள்ளிப்போடுவது தவறு.

கடந்த ஜீலை மாதம் அறிமுகமாகி தற்போது எமக்குள் திணிக்கப்பட்ட HST வரி பற்றிய முழு விளக்கத்தினையும் ஜீலை மாதம் வெளியாகிய தாய்வீடு இதழில் பார்த்தோம். இன்று அதன் நிமித்தமும் மற்றும் சந்தை மாற்றங்களின் நிமித்தமும் வீடுசார் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினை அவதானிப்போம்.

ஒன்ராறியோ மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியாவில் HST அறிமுகப்படுத்தப்பட்ட ஒரே மாதத்தில் அதன் விளைவுகள் பெருவாரியாகவும் கண்கூடாகவும் வீடு சந்தையில் காணப்படுகின்றது. வீடு விற்பவர்களும், வீடு வாங்குபவர்களும் எதை செய்தால் லாபம் எதை செய்தால் நட்டம் என்கின்ற குழப்பத்தில் இருக்கின்றனர்.

ஒன்ராறியோ மற்றும் BCயை சேர்ந்த பாதிக்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களின் கருத்தின் பிரகாரம் HST மற்றும் வரி விதிமுறைகள் குறித்த முழுமையான விழிப்புணர்வு இல்லையென்றும். இதனால் வீடு வாங்குவது, விற்பது குறித்து தாங்கள் குழப்பம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஏறக்குறைய 44% வீடு விற்பனை முகவர்களின் கருத்தின் பிரகாரம் வீடு சந்தையின் தற்போதய நிலைக்கு பெரிதும் HSTஇன் அமுலாக்கமே காரணம் என்பதாகும். அதில் 86% வீதமானோர் இவ்வரியானது வீடு வணிகத்தினை பாதிப்பதாக தெரிவித்துள்ளனர். Royal Lepage நிறுவனர் ஒருவரின் கருத்துப்படி HST அமுலாக்கம் வீடு விற்பனைத் துறையில் கணிசமான முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்தது, எதிர்மாறாக குறுகிய காலத்தில் வீடு வாங்குபவரின் மனோ நிலை மற்றும் இலாபத்தினை கணக்கிடும் முறை ஆகியவற்றில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்கிறார்.

மீள்விற்பனையாகும் வீடுகளுக்கு, கொள்வனவாளர்கள் HST முறையின் மூலம் பாதிக்கப்படமாட்டார்கள். இருப்பினும் புதிதாக நிர்மானிக்கப்படும் வீடுகளைப் பொறுத்தவரை இவ் HST ஆனது வீடு வாங்கும் தொகைக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. வீடு கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து ஏனைய சேவைகள் சொத்துப் பரிமாற்றங்கள் கூட பாரிய மாற்றத்தினை கண்டுள்ளது. இதனால் கனடாவின் சொத்து விற்பனைக்களமானது ஓர் மாற்றத்திற்கு தயாராகி வருகின்றது. கனடிய வீடு துறைசார் நிறுவனத்தின் (CREA) கருத்துக் கணிப்பின் பிரகாரம், குறைந்தளவு எண்ணிக்கையில் வீடு பரிமாற்றமானது இவ்வருடத்தில் இடம் பெற்றாலும், எதிர்பார்த்ததை விட விலை அதிகமாகவே காணப்படும் என்பதாகும். தேசிய அளவில் அதாவது கனடா முழுவதுமான வீடு பரிமாற்றங்களின் எண்ணிக்கையானது இவ் வருடத்தில் 459,600 ஆகக் காணப்படும் (MLS). இக் கணக்கீடானது வருடாந்த சாராசரியுடன் ஒப்பிடுக்கையில் 1.2% குறைவானதாகவே காணப்படுகின்றது. இதற்கு அமைவாக இன்றைய வீடு வாங்குபவர்களின் மனோ நிலை மாற்றங்கள் அமைந்துள்ளது. அதாவது திடீரென ஏற்பட்ட விலையுயர்ச்சி, குறைவான வட்டி விகிதம், கடன் வழங்கும் முறைகளில் கட்டுப்பாட்டு மாற்றங்கள் ஆகியவற்றை குறிப்பிடலாம். வீடு விலையுடன் ஒப்பிடுகையில் 3.5% இவ்வருட வளர்ச்சி காணப்படும் என்கிறது ஓர் புள்ளிவிபரம்.

முதன்முறையாக வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கையில் சற்று வேகக் குறைவு காணப்படுகின்றது. இவ்வேகக் குறைவுக்கு காரணமாக குறைந்த மற்றும் நடுத்தர விலைகொண்ட வீடுகள் சராசரி விலைக் கணிப்பிற்கு குறைந்த பங்களிப்பை தருகின்றன. இதனால் சாராசரி சந்தை விலையானது சிறிது ஏற்றத்தைக் கண்டது போல் தோற்றமளிக்கின்றது. இதன் பிரகாரம் 2010ஆம் ஆண்டின் தேசிய சராசரி விலைக்கணிப்பீடாக $331,600 காணப்படுகின்றது.

> “ இப்பொருளாதார தொய்வானது
> ஓர் நாடகத் தன்மை வாய்ந்தது.
> தேவைகளும் அதற்கேற்ற விலைகளும் சிறிது
> ஏற்ற இறக்கங்களைக் கொண்டது.
> ஆகையால், பொருளாதார முன்னேற்றமும்
> பின்னடைவுகளும் அதனை ஒத்ததே. ”

இவ்வருடத்தின் இன்றைய பகுதிகள் (நடுப் பகுதிக்குப் பின்னர்) வீடு வாங்குபவர்களுக்கு நன்மையளிக்க வல்ல பகுதியாக (Buyer’s Market) நிருபிக்கப்பட்டுள்ளது. நிறைந்த தெரிவுகள், சரியான விலை மற்றும் தரமான நுகர்வுகள் என்பது இன்றைய சந்தையின் வரப்பிரசாதம். சந்தேகத்திற்கு இடமின்றி வீடு வாங்குபவர்கள் இந்த வருடம் ஆசுவசப்படுத்தப்பட்ட சந்தையை வரவேற்கத்தான் முற்படுவர் சென்ற ஆண்டில் சந்தையில் ஏற்பட்ட பரபரப்பான மாற்றங்களுக்கு இணையான விற்பனையும் கடும் போட்டியும் இந்த ஆண்டு கனடிய வீட்டு சந்தையில் உண்டு என்றே துறைசார் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் கண்கூடாக காணப்படும் கனடிய வீடுகளின் விலைவீழ்ச்சியானது வீடு வாங்குபவர்களுக்கு மகிழ்ச்சியே.

முற்போக்கான குறைந்த வட்டி விகிதமும் முன்னேறிவரும் தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்களும் வருமான முன்னேற்றங்களும் கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் 17% விலை ஏற்றத்துக்கு காரணமாக அமைந்தது என்கின்றனர் Scotia பொருளியலாளர்கள். இத்தனைக்கும் இது முதல் காலாண்டுக்கான நிலைமை. இந்நிலைமை Sweden, England, மற்றும் Switzerland ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றது. மாறாக அமெரிக்கா மற்றும் France போன்ற நாடுகளில் சற்று மந்தமான பொருளாதார நிலைமையே இன்றும் காணப்படுகின்றது.

கனடாவின் இப்பொருளாதார தொய்வானது ஓர் நாடகத் தன்மை வாய்ந்தது. தேவைகளும் அதற்கேற்ற விலைகளும் சிறிது ஏற்ற இறக்கங்களைக் கொண்டது. ஆகையால் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகள் அதனை ஒத்ததே என்பது பொருளியல் வட்டத்தாரின் இன்னுமோர் கூற்று.

மேற்குறிப்பிட்ட கூற்றினை வலுச்சேர்க்கும் போக்காக அமைந்திருக்கின்றது அண்மையில் CMHC மற்றும் Statistics Canadaவின் அறிக்கைகள். இவர்களின் கருத்துப்படி, திடீரென்ற சந்தை மாற்றத்தாலும் புதிய வரவுகள் அதிகரித்து இருப்பதாலும் இன்றைய காலங்கள் வீடு கொள்வனவாளர்களுக்கு மகிழ்ச்சிகரமானது என்கின்றனர். அது மட்டுமன்றி முதல் தடவையாக கனடாவில் வீடு வாங்குபவர்களுக்காக வளங்கப்பட்டுள்ள சலுகைகள் இன்றைய கொள்வனவாளர்களை தூண்டும் என்பதும் ஓர் கருத்து.

“Rent vs Own” அதாவது வாடகை குடியிருப்புக்களுக்காக நாம் செலவிடும் மாதாந்த தொகைகள் ஒருபோதும் உங்களுக்கான ஓர் முதலீடாக அமையப்போவதில்லை மாறாக உங்கள் தகுதிக்கு ஏற்றாற் போல் பெற்றுக் கொள்ளும் வீடு ஓர் சிறந்த முதலீடு. அதற்கான தருணம் கைகூடியுள்ள வேளைகளில் காற்றுள்ள போதே தூற்றுக்கொள்ள வேண்டும். பொருளியலாளர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கூற்று ஒரு புறமிருக்க அடிப்படை வதிகளான உணவு, உடை, உறையுள் இம்மூன்றில் உறையுள் என்பதும் அத்தியாவசியமானதொன்று. மனிதனுக்கு பசிக்கு உணவு வேண்டும் என்பது இயற்கையின் நியதி. நாம் வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும் பசி என்பது பொதுவானதே. அதே போலதான் இருப்பிடமும். காலங்களும் மனிதர்களும் பணிகளும் பணியிடங்களும் மாறிவரும் நேரங்களில் வீடுகளின் விற்பனை என்பதும் புதுக் கொள்வனவு என்பதும் தவிர்க்க முடியாததொன்று.

தேவைகள் தொடரும் வரை மாற்றங்களும் தவிர்க்க முடியாதது. மாற்றங்களை சாதகமாக பயன்படுத்திக்கொள்வது உங்கள் கைகளிலேயே. ஆகவே உங்கள் தெரிவுகளை தரமானதாக்கிக் கொள்ளுங்கள். Buyer’s Marketஇன் பலாபலன்களை நீங்கள் சாதகமாக்கிக் கொள்ளுங்கள்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

**HELP WANTED**

கதவு மற்றும் ஜன்னல்கள் தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

கருணா
**416 892 7070**
Viewtech Windows & Home Improvements.

**AZ வாகன சாரதிகள் தேவை**

கனடா மற்றும் அமெரிக்காவில் (USA, Canada) கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு அனுபவமுள்ள (Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.

**Tel: 416 749 5392,**
**Fax: 416 749 5087**

**HELP WANTED**

Danforth & Pharmacy சந்திப்பிற்கு அருகாமையிலுள்ள Pizza தயாரிக்கும் நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை.

**416 875 6869**



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Call Me @ 416 616 8751 Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




Markham & Sheppard
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




Dufferin & Rutherford
2-Storey Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Basement Apartment




McClevin & Neilson
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft




Markham & Nashdene
Commerical Condo. Unit
1440 + 900 Sq. Ft Mezzanine
Low Maintenace Fee




Warden & Finch
Condo. Townhouse
3 Bedrooms - 2 Washrooms
Completed Basement w/ walkout




Kennedy & Eglinton
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Luxury Condo. Building

HomeLife
Landmark Realty Inc.,
brokerage
*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS

**If You Buy, Sell Or Invest in any Residential Or Commercial Properties From Us**

## Get a Chance to WIN



First Prize



Second Prize



Third Prize



**SASI CHELVARATNAM**
*Sales Rep*
**416-725-1125**



**RAVI RAVEENDRAN**
*Broker*
**416-817-8479**



**JUSTIN WILLIAM**
*Broker*
**416-803-7344**

**Markham / Steeles $429,900**



Newly Painted 4 Bedrooms 3 Bathroom House Steps To Ttc Shopping & School, Double Door Entry, Double Driveway, Direct Door To Garage, Fully Fenced, New Deck.

**Neilson/Tapscott $229,900**



3 Bedrooms 2 Bathroom House Shows Fantastic * Eat In Kitchen * Large Backyard * Near Schools, Shops, T.T.C, 401 & Medical Centre. Ceremics In Kitchen. Freshly Painted.

**Mccowan/Denison $435,000**



4 + 2 Bedrooms 4 Bathroom House Well Kept Home In A Child Friendly Quiet Neighborhood 2 Bedroom Basement Apartment With A Separate Entrance. Must See. It

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc. Brokerage***
1711 McCown Rd. Suite 206
Scarborough Ont.
**Office: 416-321-6969**

* Independently Owned and Operated ** Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# இனிமையான நச்சு

சிவாஜினி பாலராஜன்



யார் கிட்ட வந்தாலும் ‘கம கம’தான் அதிலும் தற்போதைய இளைஞர்களும் யுவதிகளும் அளவுக்கதிகமாக கம கமக்கின்றனர். அக்குளில் பூசுவதற்கு, உடலில் தெளித்துக் கொள்வதற்கு, சவரம் செய்தபின்னர் பூசிக் கொள்வதற்கு இப்படிப் பலப்பல தேவைகளுக்கு வாசனைப் பொருட்களை அனைவரும் பாவிக்கின்றனர். அதிலும் குறிப்பாக இள வயதினர்கள் மிக மிக அளவுக்கதிகமாக வெவ்வேறு விதமான மணங்களிலும் வகைகளிலும் இவற்றைத் தேடி வாங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நீங்கள் வாசனைப் பொருட்களை நேசிப்பவரா? எங்கள் இனத்தவர்களில் ஓரளவு வயதானவர்களையும் மத்திய தர வயதினரையும் விட ஏனைய இனத்தினர்களும் எமது இளைஞர் யுவதிகளும் இதற்கு நேரத்தையும் பணத்தினையும் அதிகமாகவே செலவிடுகின்றனர். வாசனைத் பொருட்கள் பாவித்ததும் ஒரு புத்துணர்வு, ஒரு சுகந்தமான வாசனை இவை எம்மை உற்சாகமாக்குவதையும் ஒரு இனிய உணர்வினை அளிப்பதையும் மட்டும்தான் எம்மால் உணர முடிகின்றது. ஆனால் இவற்றை விட இவற்றிற்குப் பின்னணியிலும் சில தொழில்களை இவை எமக்குச் செய்கின்றன என்பதனையும் நம்புங்கள். இதமான உணர்வினை தருவதுடன் நின்றுவிடாது பல ஆரோக்கியச் சிக்கல்களையும் தேவையற்ற நோய்களையும் எமக்குத் தெரியாமலேயே எமக்குத் தருகின்றன. இதனால் தான் பலவிதமான சவரக் களி, சவரம் செய்தபின் பூசும் திரவம் மேலும் முகத்திற்கும் உடலுக்கும் பூசும் கழிவகைகள் ஆகியவற்றில் வாசனைப் பொருட்கள் சேர்க்கப் படாதவை கூட விற்பனையாகின்றன. அதுமட்டுமன்றி அலர்ஜி எனப்படும் ஒவ்வாமை உடையவர்கள் வாசனைப் பொருட்கள் சேர்க்கப்படாத பொருட்களைத் தேடி வாங்குவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

பலருக்கு தோல்வியாதிக்குக் காரணம் வாசனைப் பொருட்கள். சிலருக்கு சொறி பட்டை போன்றவை வருவதற்குக் கூட வாசனைப் பொருட்களில் காணப்படும் இரசா-



யனப் பொருட்கள் காரணமாகின்றன. மேலும் சிலருக்கு நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களை இவை தூண்டலாம் அல்லது உருவாக்கலாம். ஆஸ்மா நோயுள்ளவர்கள் பலருக்கு வாசனைப் பொருட்கள் ஆஸ்மாவினைத் தூண்டும் ஒரு தூண்டியாகக் காணப்படுகின்றது. மேலும் இவை மூளையினைத் தாக்குவதாக விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டுக் கண்டுபிடிக்கப் பட்டது. சிலருக்கு தொடர்ந்து தலைவலி, மயக்கத் தன்மை, வாந்தி, கண்ணிலிருந்து நீர்வருதல், ஒரு விடயத்தில் முழுமையாக மனதை ஒரு நிலைப்படுத்த முடியாது போதல் போன்ற பல பிரச்சினைகளை இது உருவாக்கும். வாசனைப் பொருட்களிலுள்ள இரசாயனப் பொருட்கள் தோலினூடு குருதியில் கலந்து உடலின் பல பாகங்களுக்கும் கடத்தப்பட்டு விடுவது தான் இதற்குக் காரணமாகும்.

20ம் நூற்றாண்டு வரையில் மிகவும் சாதாரண மக்களினால் பாவிக்கப்படாது பொருளாதார வசதி மிக்கவர்களினால் ஆடம்பரமாகப் பாவிக்கப்பட்ட வாசனைப் பொருட்கள் இயற்கையாக விலங்குகள் தாவரங்களைப் பாவித்து செய்யப்பட்டு வந்தது. காலப் போக்கில் தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இவை இரசாயனக் கலப்புகளினால் செய்யப்பட்டு அனைவராலும் பாவிக்கப் படக் கூடிய அதே சமயம் அனைவராலும் வாங்கக் கூடிய நிலைக்கு வந்துள்ளது. முதன் முதல் இரசாயனக் கலப்பு வாசனைப் பொருட்கள் நிலக்கரியின் தாரிலிருந்து செய்யப்பட்டது.

> “ வாசனைப் பொருட்களில் இருக்கும் இரசாயனக் கலவைகள் உடலில் பாரதூரமான விளைவுகளையும் எங்கள் மத்திய நரம்பு மண்டலத்துடன் சம்பந்தப்பட்ட நோய்களையும் உண்டாக்குகின்றன.
> எனவே, இவற்றின் பாவனை முற்றாகக் குறைக்கப்படுதல் வேண்டும். ”

தற்போது கழிவுகளிலிருந்து பக்கவிளைவுகளாக வரும் பொருட்களைக் கொண்டு பெருமளவு வாசனைப் பொருட்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மல்லிகை வாசனை வரும் போது அங்கு மல்லிகை மலர் தான் இருக்கும். ஆனால் மல்லிகை மலரே இல்லாதபோது மல்லிகையின் மணத்தினை உருவாக்க எத்தனைவிதமான இரசாயனங்கள் கலப்படமாகின்றன. பொதுவாக 400 – 800 வரையிலான இரசாயனப் பொருட்கள் வாசனைப் பொருட் தயாரிப்புக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன என 1991ல் அமெரிக்காவின் உணவு மருந்துப் பொருட்களின் நிர்வாக அமைப்புக் கண்டறிந்தது. இந்த வாசனைப் பொருட்கள் உடலில் பூசுவன அல்லது தெளிப்பன மட்டுமல்ல. வாசனைப் பொருட்கள் கலந்த மெழுகு வர்த்திகள், வீட்டிற்கு வாசனைக்காக தெளிக்கும் மருந்துகள் வாசத்தினை வெளியிடுவதற்காக வைக்கும் குச்சிகள் fragrance diffuser sticks என்பனவும் இவற்றில் அடங்கும். இவ்வாறு பாவிக்கப்படும் இரசாயனப் பொருட்கள் பொதுவாக பெற்றோலியத்திலிருந்து பெறப்பட்ட உப பொருட்களாகும். இவற்றில் காணப் படும் பொதுவான மூலப் பொருட்களாவன அசற்றோன், எதனோல், போமல்டிகைட், மெதலீன் குளோரைட், எதைல் அசற்றேற், பென்சைல் அற்ககோல் போன்றவை. பொதுவாக வாசனைப் பொருட்களைத் தயாரிப்பவர்கள் என்னென்ன மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கின்றார்கள் என உள்ளதை உள்ளபடியே வெளிவிடுவதில்லை. தொழில் இரகசியம் என்னும் பெயரால் இவை மறைக்கப்படுகின்றன.

அத்துடன் இவ்வாறு பாவிக்கப்படும் பல இரசாயனப் பொருட்கள் மனிதனுக்கு என்னென்ன தீமையினைச் செய்யும் என்று ஆராயப்படாதவை அல்லது கண்டுபிடிக்கப் படாதவை ஆகும்.

செயற்கைமுறையில் தயாரிக்கப்படும் வாசனைப் பொருட்கள் தான் ஆரோக்கியத்திற்கு கெடுதல் செய்யும் என்றும் இயற்கையான மரம், செடி விலங்குகளிலிருந்து தயாரிக்கப் படுபவை ஆரோக்கியத்திற்கு நல்லவை எனவும் நினைத்துவிடக் கூடாது. சில இயற்கை வாசனைப் பொருட்கள் கூட உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியன என ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு இருக்கின்றது. எனவே வாசனைப் பொருட்கள் வாங்கும் போது மிகவும் கவனமாக அவதானிக்க வேண்டும். அதில் Orris root, Patchouli oil , Galbanum, Civet Bergamot, Asafetida என்பவை இருக்கின்றதா எனப் பார்த்து இவை இல்லாவிடின் மாத்திரம் அவற்றை வாங்க வேண்டும். 17 பெயர்பெற்ற தயாரிப்புக்கள் பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்பப் பட்டு அவற்றில் என்னென்ன இரசாயனப் பொருட்கள் இருக்கின்றன என சோதிக்கப்பட்டன. ஆவையாவன

- American Eagle Seventy Seven
- Chanel Coco Mademoiselle
- Britney Spears Curious
- Giorgio Armani Acqua Di Gio
- Old Spice After Hours Body Spray
- Quicksilver
- Calvin Klein Eternity for Men
- Bath & Body Works Japanese Cherry Blossom
- Calvin Klein Eternity (for women)
- Halle by Halle Berry
- Hannah Montana Secret Celebrity
- Victoria’s Secret Dream Angels Heavenly
- Abercrombie & Fitch Fierce
- Jennifer Lopez J. Lo Glow
- AXE Body Spray For Men-Shock
- Clinique Happy Perfume Spray
- Dolce & Gabbana Light Blue

இந்தப் பரிசோதனையில் கிட்டத்தட்ட ஒவ்வொன்றிலும் 14 சரியாக விபரிக்கப்படாத இரசாயனப் பொருட்கள் காணப்படுகின்றன அமெரிக்கன் ஈகிள் 77 என்னும் வாசனைப் பொருளில் 24 இனம் தெரிவிக்கப்படாத இரசாயனப் பொருட்களும் Dolce & Gabbana Light Blue என்பதில் கிட்ட்த்தட்ட 7 இனம் தெரிவிக்கப்படாத இரசாயனப் பொருட்களும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு காணப்பட்ட இரசாயனப் பொருட்களில் சில ‘அலர்ஜி’ என்னும் ஒவ்வாமையினைத் தூண்டுபவையாகவும், சில எங்களது ஓமோன் சுரப்புகளில் குழப்பங்களை உண்டுபண்ணக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. அதாவது கிட்டத்தட்ட 3100 வகையான இரசாயனப் பொருட்களிலிருந்து தயாரிப்பாளர்கள் தெரிவு செய்வதாக விஞ்ஞான அறிக்கை ஒன்று கூறுகின்றது. சில இரசாயனப் பொருட்கள் எங்கள் நரம்பு மண்டலத்தினை பாதிக்கக் கூடியன. அவை hexachlorophene; acetyl-ethyl-tetramethyl-tetralin; zinc-pyridinethione; 2—dinitro-3-methyl-6-tert-butylanisole; 1-Butanol; 2-butanol; tert-Butanol; Isobutanol; t-Butyl Toluene என்பன ஆகும். இவ்வாறான நரம்பு சம்பந்தப்பட்ட சில வியாதிகளாவன Multiple Sclerosis, Parkinson’s, Lupus, and Alzheimer’s ஆகும்.

## எமக்கு கேடு விளைவிக்க்க் கூடிய சில இரசாயனப் பொருட்கள்:

அசற்றோன் – இது பொதுவாக பாத்திரம் கழுவும் சவர்க்காரம், உடுப்புச் சலவை செய்யும் சவர்க்காரம், நகப்பூச்சு நீக்கி, (nail enamel remover), cologne எனப்படும் உடலில் தெளிக்கும் வாசனைத் திரவியம் போன்றவற்றில் காணப்படும். இது வாயினையும் தொண்டைப்பாகத்தினையும் உலரவைக்கும், வாந்தி அல்லது மயக்கம் வருவது போன்ற தன்மையினைக் கொடுக்கும், மிக அதிகமாகும் போது கோமா எனப்படும் அறிவிழக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும்.

பென்சல்டிகைட் - முடிக்கு அடிக்கும் hairspray, சலவைக்குப் பாவிக்கப்படும் வெளிற்றி, சவரத் திற்குப் பாவிக்கப்படும் கிறீம், தலைக்கு பாவிக்கும் சம்பு போன்றவற்றில் காணப்படும். சிலருக்கு இது மூச்சுத் திணறலையும், கண் ணெரிச்சல், தோலில் அரிப்பு போன்றவற்றையும் உருவாக்கும்.

பென்சைல் அசற்றேற், பென்சைல் அற்க்கோல் - perfume, cologne, shampoo, fabric softener, stickup air freshener, dishwashing liquid and detergent, soap, hairspray, bleach, after shave, deodorants போன்றவற்றில் உண்டு.

பொதுவாகப் பார்த்தால் இவ்வாறான இரசாயனப் பொருட்களில் 95% உடலுக்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை உண்டாக்குகின்றன. அத்துடன் புற்று நோய் மற்றும் எங்கள் மத்திய நரம்பு மண்டலத்துடன் சம்பந்தப்பட்ட நோய்களையும் உண்டாக்குகின்றன. எனவே இவற்றின் பாவனை குறைக்கப்படுதல் மிகவும் முக்கியமாகும்.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

ARGENTUM LENDING DIRECT CORPORATION
Reg # 10466
3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7,Scarborough, ON M1P 3G9

வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...
OUR SERVICES:
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Commercial Loan
• Home Equity Mortgage
• Much more...
Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9?
Not to worry We will help you


Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca

# அழகிய பூஞ்செடிகள்

# கட்டிறான்கியா

## (Hydrangea)

வீட்டுத் தோட்டம் - 31



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

கைட்டிறான்கியா (Hydrangea), குடும்பம் கைட்டிறான்கியேசியேயைச் (Family Hydrangeaceae) சார்ந்தது. இக் குடும்பத்தில் 17 வர்க்கங்கள் உள்ளன. இது பல்லாண்டு வாழும் செடியாகும். அலங்காரத்திற்காகவே வெட்டுப்பூக்கள் பயன்படும். செடியின் இலைகளின் எதிர் எதிரே காணும் தோற்றம் பொதுவானவை. மாறுகொண்டு காணும் இலைகளையோ அல்லது தொகுதியாகக் காணும் இலைகளையோ பார்க்கும் தன்மை இல்லாததும், நான்கு புல்லிகள் கொண்ட இருபாலான பூக்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டும் வேறுபடுத்தப்படும் பழம் வில்லையமாகவோ சதையமாகவோ இருக்கும். வித்துக்கள் சதைப்பற்றுள்ள வித்தகவிழையத்தையுடையதாக இருக்கும்.

### பயிரிடுதலும் நோக்கமும்:

செடிகள், வீட்டுத்தோட்டத்தில் கூடுதலாகப் பூக்களுக்காகவே பயிரிடப்படுகின்றன. இவை புதர் செடிகளாகவே காணப்படும். பயிரிடும் பிரியர் வெப்பகால நடுப்பகுதியிலிருந்து இலையுதிர்காலவரை மிகவும் துலக்கமான கொத்துப் பூக்களுக்காக தோட்டத்தை அழகுபடுத்துவர் செடியானது மணற்றரையிலும் கற்பாங்கான தரையிலும் பகுதி நிழலான இடங்களிலும் வளரக்கூடியது. ஓரளவு நிழலானதும் நீர் ஓடக்கூடியதுமான இடத்தைத் தேர்ந்து, செடியை நடவேண்டும். போதிய பசளையுள்ள இடம் செடியின் வளர்ச்சிக்கு ஆதரவாகவிருக்கும். நிலமானது சிறிது அமிலத் தன்மை (pH 4.5-6.5) ஆக இருக்க வேண்டும். அமிலத்தன்மையுள்ள இடத்தில் நீலநிறப்பூக்கள் உடைய செடிகள் நன்றாக வளரும். இலைப்பசளை, பீற்மொஸ், மரப்பட்டைத்தூள், இரும்புச் சத்து உகந்ததாயிருக்கும். பசளையை, வசந்த காலம் மற்றும் இலையுதிர் காலத்திலும் இரு தடவைகள் இரு மாத இடைவெளைகளில் போடவேண்டும்.





### பூக்கள்:

பூக்கள் பல நிறங்களில் காணப்படும். பூக்களின் வடிவத்தைப் பொறுத்து பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன.

- **Mophead:** பந்து வடிவான கொத்துக்களில் பெரிய பூக்கள். இவை பொதுவான இனங்கள்.
- **Lcelap:** தட்டைவடிவான கொத்துக்களில் மென்மையான பூக்கள். பூக்களில் 4 - 5 அல்லிகள் காணப்படும்.
- **Panicle:** குஞ்சம் போன்ற அமைப்பில் பூக்கள். நீளமான உருளை வடிவில் பூக்களைக் கொண்டு காணப்படும். நிழலான இடங்களில் காணப்படும் செடிகள் குறைவான பூக்களைக் கொடுக்கும். ஓரளவு நிழலான இடங்களில் காணப்படும் செடிகள் கூடுதலான பூக்களைக் கொடுக்கும். கூடுதலான நைதரசன் பசளை கிடைக்கும் போது இலைகள் மட்டுமே கூடுதலாகக் காணப்படும். வெப்பகாலங்களில் ஓரளவு கூடுதலாக நீர் அளிக்கவேண்டும்.

### பராமரிப்பு:

குளிர் இடங்களில் வளரும் செடிகள் பாதிக்கப்படுகின்றன. அடர்த்தியான இலைகள், தண்டுகள் கத்தரிக்கப்பட வேண்டும். சீரான நீர் பாய்ச்சுதல் அவசியமாகின்றது. இரசாயன உரம் உபயோகிக்கையில் 10-10-10 விலையுயர்ந்த பசளையை பாவிக்கவும். பொதுவான பூச்சிகள், வண்டுகள், விலங்குகள் போன்றவற்றின் தாக்கம் கட்டுப்படுத்த வேண்டும். நத்தைகள் பொதுவானவை. பூச்சிகொல்லிகள் உபயோகிக்கலாம். பினோனையில், லைம் சல்பேற் உகந்தது.

sekari.s@thaiveedu.comHelvetica

■ ■ ■





### Family Sapotaceae

# இலுப்பை

(Iluppai-Indian Butter tree)

**(Botanical name: Madhuca(Bassia)longifolia:Eng.name: Honey tree)**

குடும்பம் சப்பற்றேசியேயியைச் (Family Sapataceae) சேர்ந்தது. இம்மரம், வடஇலங்கை பூராகவும் வீடுகளில் வளர்க்கப்பட்ட பழமையான மரமாகும். இது கூடுதலாக மத்திய, வட இந்தியா வெப்ப மண்டலங்களில் அநேகமாகக் காணப்படும். இது கூடுதலாக உத்தரப் பிரதேசம், பிகார், கேரளா, ஆந்திரா, ஒறிசா போன்ற இடங்களில் வளர்க்கப்பட்டன. இந்தியாவில் இம்மரம் அதி முக்கியம் வாய்ந்த ஒன்றாகும்.

இலுப்பைப்பூ மிகவும் இனிப்பானது. இதற்குத் தொடர்பான பழமையான வாக்கியம் ஒன்று ஞாபகத்தில் வருகின்றது. “ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை” என்பார்கள். கருப்பஞ்சீனி இல்லாதபோது இலுப்பைப்பூ இனிமையாக இருப்பதால், இதனைப் பயன்படுத்துவார்கள். சாறுள்ள பூக்கள் மரத்திலிருந்து இரவு நேரங்களில் தொகையாக விழுந்துவிடும். காலையில் இவற்றைப் பொறுக்கி எடுத்து சூரியஒழியில் காயவிட்டு உணவுக்காக எடுத்து சந்தையில் விற்பார்கள். இவை நறுமணமுள்ளவை, சுவையானவை. இப்பூக்களை மக்கள் நெடுநாட்கள் பாதுகாத்து வைக்க முடியும். இத்தோடு பூக்கள் ஆயுள்வேத ரீதியில் ‘மதுவா’ எனும் ஒரு பானத்தை செய்வதற்கு பயன்படுத்துவர். இது அந்நாட்டின் பிரபல்யமான மதுபானமாகும். பூக்கள் சிறுநீரக வியாதிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

பழங்கள் இருமல், தொய்வு, வாதம், குருதி தொடர்பான வியாதிகளைக் குணப்படுத்தும். பழம் சதையமாகும். ஓர் பழத்தினுள் நான்கு மண்ணிறமான வித்துக்களைக் கொண்டிருக்கும். மரத்திலிருந்து வருடா வருடம் ஏறக்குறைய 100 முதல் 200 கி.கி வித்துக்கள் கிடைக்கின்றன. வித்துக்களிலிருந்து வடிக்கப்படும் எண்ணெய் ஆயுள்வேத ரீதியில் பிரயோசனமாக உபயோகிக்கப்படும். எண்ணெய் நெய்யாக உறைந்து நீண்ட காலம் பாதுகாப்பாக இருக்கக்கூடியது. மரத்தின் பலகை இரும்புபோல வைரமானது, இலேசாக வேலை செய்யக்கூடியது, நீரில் எவ்வளவு காலமும் வைத்திருக்க முடியும். பழங்குடி மக்கள் மாட்டு வண்டிகளின் நுகங்களுக்கு மரத்தினை எடுப்பார்கள். இலைகள் வீட்டு மிருகங்களுக்கு உணவாகப் பயன்படும். பழுத்த இலைகள் குப்பைகளாக பசளைக்கு எடுக்கப்படும். பட்டை ஆயுள்வேத வைத்தியத்திற்கு பயன்படும்.

VIMBAM - 2010

விம்பம் (லண்டன்)

VIMBAM

6ஆவது சர்வதேச தமிழ்க் குறுந் திரைப்பட விழா-2010

6TH INTERNATIONAL TAMIL SHORT FILM FESTIVAL

21-11-2010, GREENWICH UNIVERSITY AUDITORIUM

UNIVERSITY OF GREENWICH, AVERY HILL ROAD, ELTHAM, LONDON SE9 2UG

DVD வடிவில் பதிவுசெய்து, ஒருவர் எத்தனை படங்களும் போட்டிக்காக அனுப்பிவைக்கலாம்.
20 நிமிடங்களுக்குக் குறைவான படங்கள் வரவேற்கத்தக்கது.

ஒக்ரோபர் 20ஆம் திகதிக்கு முன்னர்

VIMBAM, 4 BURGES ROAD, EASTHAM, LONDON E6 2BH, U.K.

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
போட்டிக்கு அனுப்பும் படங்களுடன் அதில் பங்குகொண்ட தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் ஆகியோரது படங்களையும் அனுப்பிவைக்க மறவாதீர்கள்.

CONTACT: 416-857 6406 - CANADA

01144-7956 490 694, 01144-208 470 7883, 208 471 5636 - LONDON

Sponsored by:
Centre for Community Development

e-mail: vimbam@aol.com
kkrajah2001@aol.com

வீடு நாழிகை டீ.சி வீரகேசரி தீபம் TV



இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்



## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant

### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

Best Rates

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

**Siva Ratnasingam**

Lic: M08002133
Brokerage # 11156

SENIOR MORTGAGE CONSULTANT

2005,2006,2007,2008 Diamond Award Winner

416.520.1214



# Nanthini Singarajah, AMP

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**

- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**

- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

# RAPID SECURITY

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

# New Midwest auto collision

## "Quality & service First"

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com

**Contact Person:**
**Ruban or Shan**





Alphaweb 416-238 7222



www.sesanflooring.com

Sesan Flooring Centre

Hardwood, Laminate, Stairs, Tiles, Natural Stone & Kitchen

உங்கள் அனைத்து
Hardwood, Laminate, Stairs, Tiles, Natural Stones & Kitchen
தேவைகளுக்கு

MORE THAN 20 COLOURS
LAMINATE
8.3mm - from 89¢
12.3mm - from $1.39
15.3mm - from $1.85


EXOTIC WOOD (select & better) from $4.99

CANADIAN MAPLE from $3.97

CANADIAN RED OAK (select & better) from $4.19

MORE THAN 100 DESIGN
MOSAIC
Glass, Crystal, Stone Mixed & Stainless steel from $7.99

எங்கள் காட்சியறைக்கு ஒரு முறை வாருங்கள்...





WE ARE SPECIALIZED IN MOSAIC STONES
Call Us For Your Free Estimate

Tel: 905-554-9199

9909 Highway 48, Unit #10. Markham. L6E 0B7



WE ARE THE OFFICIAL DEALER FOR
Satin Finish | Sunca | COSWICK

EZChoice

Credit Counselling and Financial Services

கடன் தொல்லையா?

என்ன செய்வதென்று தெரியவில்லையா?

சகல கடன்களையும் ஒன்றிணைத்து ஒரு குறைந்த மாதாந்தக் கட்டணமாக மாற்றலாம்

- ✓ தொலைபேசி அழைப்பு தொல்லையை நிறுத்தலாம்
- ✓ சம்பளத்தில் இருந்து பணம் உருவுவதை நிறுத்தலாம்
- ✓ தொடர்ந்து வீடு, கார் போன்றவற்றை வைத்திருக்கலாம்
- ✓ விரைவாக கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்
- ✓ விரைவாக Credit ஐ சரி செய்து கொள்ளலாம்

கடன் தொல்லைகளிலிருந்து
விடுபட்டு புதிய வாழ்வு திரும்ப ஓர்
அரிய சந்தர்ப்பம்

MORTGAGES
Residential / Commercial

- ✓ 1st, 2nd, 3rd Mortgages
- ✓ Refinancing / Equity take-out
- ✓ Line of Credit (Personal & Business)
- ✓ Loan ( Personal & Business)



Ravi Logarajah
Qualified Credit Counsellor

email: info@ezchoicehome.com / www.ezchoicehome.com

Head Office

Mississauga
29 Dundas Street East
905-896-9991
(Hurontario / Dundas)

Scarborough
3852 Finch Ave East
416-896-9991
Kennedy / Finch

Montreal
514-954-9208

Ottawa
613-244-9343


R & S AUTO SALES
TOP QUALITY USED CAR DEALER
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Reposed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
HONDA
TOYOTA
GM-MINI VANS
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8
416-412-3838
416-836-5825


வீடு வாங்கவும், விற்கவும்.......
$657,500
King / Younge
5 Bedrooms, 4 Washrooms
2901 Sqft Luxury Home
$394,900
Coxwell/Gerrard
2+1 Bedrooms, 3 Washrooms
Basement Apt With Sep Entrance
$679,000
Mccowan/Highglen
6+2 Bedrooms, 5 Washrooms
Close To Schools,Public Transit
$1,500
For Lease
Simcoe St/Conlin Rd
6+2 Bedrooms, 5 Washrooms
Close To Schools,Public Transit
$335,000
SOLD
Mavis/Steeles
3+1 Bedrooms, 3 Washrooms
Less Than Two Years Freehold.
$232,900
SOLD
Markham/Sheppard
3 Bedrooms, 2 Washroom
Move-In Condition
$439,000
SOLD
Morningside/Finch
4 Bedrooms, 3 Washrooms
Hardwood Floor In Lr/Dr
கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அனுபவமும், பொறுமையும் உள்ள வாகன
பயிற்சியாளராகவும், வீடு விற்பனை பிரதிநிதியாகவும் கடமையாற்றுகின்றேன்.
PONNIAH (JOE) BALA
Sales Representative
www.ponniahbala.com
Dir: 416-617-9370
REDCARPET.
Royal Realty Ltd.,
Bus: 416.284.5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON.

# உங்கள் வெற்றி உங்கள் கையில்

## தொடர் - 4



சொக்கலிங்கம் பிரபாகரன்

- வீடு விற்பனைப் பிரதிநிதி -

முதலீட்டுக்குத் தேவையான சேமிப்பு நிதியைச் சேகரிக்கும் 6 வழிகளை இதுவரையில் பார்த்தோம். மேலும் சேமிப்புக்கான சில வழிகளாவன:

### கடன் பொறியுள் விழாதிருத்தல்:

கடன் இருந்தால் எவ்வளவு உழைத்தாலும் சேமிக்க முடியாது. ஓட்டைக் குடத்தினுள் நீர் வார்ப்பது போல் சேமிப்பையெல்லாம் இழக்கச் செய்துவிடும்.

கடன் மன நிம்மதியையும் பறித்துவிடும். இதனையே "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என இராமாயணத்தில் இராவணனின் அளவற்ற மனக்கலக்கம் பற்றி ஒரு இடத்தில் கூறப்படுகின்றது.

மேலைத்தேய நாடுகளில் பிரதான வாழ்வியல், உளவியல் சிக்கல்களுக்குக் காரணமாக இருப்பது கடன் என்றால் மிகையில்லை. தாராளமாகக் கைக்குக் கிடைக்கும் கடன் அட்டைகளை 'இழுக்க இழுக்க' இலகுவாகவும் நன்றாகவும் தான் இருக்கும். ஆனால் மாதாந்தம் தவணை முடிவில் வரும் கட்டண அறிவுறுத்தல் கடிதங்கள் (Statements) மாரடைப்பை ஏற்படுத்தாத குறையாக வந்து குவிகையில் தான் நம்மில் பலர் தலையில் கையை வைக்கின்றனர்.

கடன் அட்டைகள் அவசரத் தேவைகளுக்கும் இலகுவான பாவனைக்கும் உகந்தவை. எனினும் அதனை வெறும் பிளாஸ்டிக் அட்டையாக எண்ணாமல் பிளாஸ்டிக் பணமாக ('Plastic Money') எண்ணிப் பாவிக்கப் பழக வேண்டும். கடனட்டைகளால் மூழ்கடிக்கப்பட்ட வாழ்க்கைக் கப்பலில் நம்மில் பலர் பயணித்திருக்கினறனர். ஆரம்ப காலங்களில் கடனட்டைகள் கையிலில்லாத காலங்களில் கடன் சுமை எம்மை வருத்தியதில்லை என்பதையும் கடனட்டைகளை எங்ஙனமெல்லாம் நாம் எம் வசதிக்கு பாவித்துப் பின்னர் துன்பப்பட்டிருக்கின்றோம் என்பதையும் எண்ணிப்பார்த்து வாழ்வின் படிப்பினையாக அநுபவங்களைக் கொண்டு அவதானமாகக் கையாள வேண்டும். கடனட்டைகளை கையிருப்புப் பணம் என எண்ணாமல் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் என எண்ண வேண்டும்.

கடனட்டைச் செலவுக்கான கடனில் Minimum Payment எனப்படும் குறுகிய தொகையையேனும் Statementஇல் குறிப்பிடப்பட்டுள்ள 'due date' எனப்படும் குறித்த திகதிக்குள் கட்டும் வழக்கத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிப்பது அவசியம். இதன் மூலம் உங்களது 'Credit' புள்ளிகள் அதிகரிக்கும். ஏற்கனவே குறிப்பிட்டது போல பொருளாதா வளர்ச்சி சார்ந்த அனைத்து திட்டங்களுக்கும் 'Credit' மிக மிக முக்கியமான விடயமாதலால் Credit புள்ளிகளை அதிக எண்ணிக்கையில் பேணுவதை முதன்மையாகக் கொண்டே எமது நடவடிக்கைகள் இருப்பது அவசியமாகும். எதிர்கால முதலீடுகளுக்கு தேவையான நிதியைத் திரட்டும் தேவைகளுக்கும் Credit அவசியமாகும்.

அவசியமும் அவசரமும் இல்லாத சூழல்களில் கடன் அட்டைப் பாவனைகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். கடன் அட்டைக் கடனை மாத முடிவில் முழுமையாக கட்டுதல் உங்களுக்கு இயலுமாயின் மட்டும் கடனட்டை கொள்வனவு செய்வது நன்று. கடன் அட்டைகளில் வட்டி வீதம் பெரும்பாலும் 13 - 30% அல்லது இன்னும் அதிகமாகலாம். எனவே இத்தகைய வீண் வட்டிச் சுமைகளை சுமக்காதிருங்கள். நாம் வாழ்வில் பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமானால் கடன் அட்டைகளைப் பயன்படுத்தும் தேவைகள், தேவைகளுக்கான செலவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். கடன் பெறுவது இலகு அதைக் கட்டி முடிப்பது கடினம். உங்களால் மாதாந்தம் கட்ட முடிந்த தொகைக்குள் உங்கள் செலவுகளை வரையறுக்கப் பழகுங்கள்.

> " கடன் அட்டைகள் அவசரத் தேவைகளுக்கும்
> இலகுவான பாவனைக்கும் உகந்தவை.
> எனினும்,
> அதனை 'பிளாஸ்டிக்' அட்டையாக எண்ணாமல்
> பணமாக எண்ணிப் பாவிக்கப் பழகவேண்டும். "

கடனட்டை என்றவுடன் பயந்தோடத் தேவையில்லை. உண்மையில் கடனட்டைகள் அத்தியாவசியமானவை. குறைந்தது 2 கடனட்டைகளாவது இருந்து அவற்றைப் பாவித்தால் தான் உங்கள் credit scores அதிகரிக்கும். இந்த credit score ஆனது குறைந்தபட்சம் 2 வருடமாவது சிறப்பாக இருந்தால் தான் வீட்டு அடைமானக் கடன், இதர கடன்கள் போன்றனவற்றிற்கு போகும்பொழுது இலகுவாகக் கடன் கிடைக்கும். எம்மில் சிலருடன் பேசும்போது பெருமையாகக் கூறுவர் 'தம்மிடம் credit card இல்லை' என்று. கடன் அட்டைகள் அல்லது கடன்கள் பெற்று அடைத்த வரலாறு இல்லாதவிடத்து புதிய கடன்கள், அதிகுறைந்த வட்டிக் கடனட்டைகள் என்பன பெறுவது இயலாது போய்விடும். Excellent credit score is next to your breath! வெளிநாடுகளில் உங்கள் மூச்சிற்கு அடுத்ததாக credit scoreஐ எண்ண வேண்டும்.

இனி "தவணை முறையில் கட்டப்படும் நீண்ட காலகக் கடன்கள்" பற்றிப் பார்ப்போம் கண்ணில் பட்டதெல்லாம் இவ்வாறான கடனில் வாங்குவோம் என்னும் பழக்கத்தை முதலில் மாற்ற வேண்டும்.

உதாரணமாக ஒரு வாகனத்தை எடுத்துக் கொண்டால் அதற்காகப் பெற்ற கடனை நாம் கட்டி முடியும் காலத்தில் அதன் பெறுமதியானது அற்றுப் போகலாம் அல்லது குறைந்து போகலாம். எனவே அழியும்/ நிலையில்லாச் சொத்துகளுக்காக இவ்வாறான நீண்ட கால கடன் திட்டத்தில் பணம் பெறுவதனைக் தவிர்க்க வேண்டும். இவ்வாறான கடன்கள் வட்டிக்கும் வட்டி சேர்ப்பதால் அதற்காக நாம் செலவுசெய்யும் பணக் கொள்வனவின் போது ஒரே தடவையில் கொடுத்து வாங்குவதை விட அதிகளவில் இருக்கும். எனவே இயன்றவரை பணத்தைச் சேமித்து இவ்வாறான கொள்வனவுகளை உடன் பணம் கொடுத்து வாங்கிப் பழகுங்கள்.

உதாரணமாக தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்கையில் இவ்வாறான வழமையை கையாளுவதே மிகச் சிறந்த வழியாகும். கார் போன்ற பெரியளவு கொள்வனவு அத்தியாவசியமானதாக படுகின்ற போது இவ்வாறான தவணைக் கட்டணங்களாகவே பெரும் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியலாமெனின் முடிந்தளவு அதிகளவில் சேமிப்பு திட்டம் வகுத்து இத்தகைய கடன்களை விரைவில் அடைத்து விடுவதே மிகச் சிறந்ததாகும். கடனுக்குமேல் கடன் வளர்ப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறான கடன்களைப் பெறுகையில் உங்கள் பாதுகாப்புப் பற்றிச் சிந்திப்பது அவசியம். ஒரு வேளை எமக்கு ஏதாவது நேர்ந்தால், அல்லது எம்மால் கடனைக்கட்ட முடியாத சூழல் உருவானால், அல்லது நாம் உடற் சுகவீனமுற்றால் என்ற அச்சங்கள் வினாக்கள் எழலாம் வாழ்க்கைக் காப்புறுதி திட்டம் ஒன்றை வைத்திருப்பது உங்களுக்கு பாதுகாப்பளிக்க போதுமாக இருக்கும். தேவையில்லாமல் Loan Insurance எடுத்து இன்னும் கடனைக் கூட்ட தேவையில்லை.

இதுவரை சேமிப்பினூடாக செலவைக் குறைத்து வரவைக் கூட்டி பணத்தை சேகரிக்கும் வழிகள் பற்றிப்பார்த்தோம். இவையாவும் அனைவருக்கும் தெரிந்த எளிய பயிற்சி அடிப்படையிலான வழிகள் எனினும் எம்மில் எத்தனை பேர் இவற்றைக் கடைப்பிடிக்கின்றோம் என்பது முக்கியமான வினாவாகும். கொள்கைகளை எதற்காகவும் கைவிடக்கூடாது என்பது பொருளாதார கொள்கைகளுக்கும் பொருந்தும்.

இனி ஆரம்பித்தல் பகுதியில் 'சேமிப்புக்களில் நாமே முதலிடுதல்' என்பது பற்றிப் பார்ப்போம்.

### உங்களுக்கான நிதியை முதலில் ஒதுக்குங்கள்:

"மாதக் கடைசியானால் ஒரு சதம்கூட மிஞ்சுவதில்லை. பிறகு எப்படி எமக்காக நிதியை ஒதுக்குவது?" என்று நீங்கள் புறுபுறுத்தவாறே கேட்பது புரிகிறது. மாதத் தொடக்கத்திலேயே இதர கட்டணங்களைக் கட்ட முன்பாகவே

20ம் பக்கம் பார்க்க...




இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com

# போதை மருந்து...


9ம் பக்கத் தொடர்ச்சி...

மனதில் இயல்பாகவே ஏற்படும் மகிழ்வு, ஆனந்தம் என்பன மிகவும் சக்திவாய்ந்த உயிரியல் விசைகளாகும். எமது வாழ்விற்கு இவை அவசியம். ஒரு இன்பகரமான நிகழ்வை மீட்டுப் பார்க்கும் பொழுது மனம் பூரிப்படைகின்றது. சில சமயங்களில் எமக்குப் பிரியமான உணவு வகைகளைச் சுவை பார்க்கும் பொழுதுகூட சில விசேடமான நரம்புக்கலங்கள் அந்த உணர்வை ஏற்படுத்தி மனதில் உவகையை ஏற்படுத்துகின்றது மிகவும் பிரதானமான இத்தகைய நரம்புக்கலங்கள் மூளைத்தண்டின் மேற்பக்க முற்பகுதியில் அமைந்துள்ளன. இவ்விசேடித்த கலங்கள் Dopamine என்ற கூறப்படும் இரசாயன நரம்புக் கடத்திகளை தமது செய்திப் பரிமாற்றங்களிற்குப் பயன்படுத்துகின்றன. இந்த Dopamine சுரப்பைக் கொண்டுள்ள நரம்புக் கலங்கள் ஆனந்தம், மகிழ்வு போன்ற உணர்வுகளை தமது நரம்பு நார்களினூடாக NUCLEUS ACCUMBENS என்ற மூளையினுள் உள்ள பிறிதொரு பாகத்திற்குக் கடத்துகின்றன. சில நரம்பு நார்கள் மூளையின் முன்மேற்பகுதிக்குள்ளும் ஊடுருவி இந்த மகிழ்வை ஏற்படுத்தும் 'ஆனந்தச் சுற்றை' (Pleasure Circuit) ஏற்படுத்துகின்றது. இது ஒரு சுருக்கமான விளக்கம்.

போதை மருந்துகளால் பாதிக்கப்படும் இடம் இந்த இடம்தான். இயல்பாகவே உள்ள இரசாயன நரம்புக் கடத்திகளின் தொழிற்பாடுகளை மாற்றிவிடுகின்றன. ஹீரோயின், LSD போன்ற போதை மருந்துகள் இயல்பாகவே சுரக்கும் நரம்புக் கடத்திகள் போல் இயங்குவதால் மூளைக்கலங்களால் அவற்றை உணரமுடிவதில்லை. PCP போன்ற மருந்துகள் நரம்புக்கல வாங்கிகளைத் தடை செய்வதால் இயல்பாகக் சுரக்கும் நரம்புக் கடத்திகள் மறு நரம்புக் கலங்களுக்குச் செய்திகளைப் பரிமாற முடியாது. கொகேய்ன் போன்ற மருந்துகள் இயல்பாகவே சுரக்கப்பட்ட நரம்புக் கடத்திகள் மீண்டும் அகத்துறிஞ்சப்படும் பொறி முறையைத் தடுக்கின்றது. மெத்அம்பிற்றமீன் என்ற மருந்து இயல்பாகச் சுரக்கும் நரம்புக் கடத்திகளை கூடுதலாகச் சுரக்கும் படி தூண்டி விடுவதால் சில விளைவுகளை மூளையில் ஏற்படுத்துகின்றது.

> **பொதுமக்கள் வெட்கம் காரணமாக ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதை தவிர்க்கலாம். இவர்களுக்காக சுகாதார அமைச்சு மிகவும் இரகசியமாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் Main Line என்ற தொலை பேசி இலக்கத்தை 1-800-686-7544 ஏற்படுத்தியுள்ளது. இங்கு நீங்கள் உங்கள் பெயர், தொலை பேசி இலக்கம், விலாசம் எதுவுமே கூறத் தேவையில்லை. ஆலோசனைகள் கூறி உங்களைச் செல்ல வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைப்பார்கள்.**

**நரம்புக் கணத்தாக்கங்கள் கடத்தப்படும் முறை**




நீண்டகாலப் போதைப்பொருள் பாவனையின் பொழுது மூளையானது தனது அடிப்படையான இயல்பான செய்முறைகளை மாற்றி அமைத்து விடுகின்றது. இம்மாற்றம் நிகழும் காலம் நபருக்கு நபர் வித்தியாசப் படுவதோடு, பாவிக்கும் மருந்துகளின் தன்மை, அளவுகள் என்பனவற்றிலும் தங்கியிருக்கின்றன. போதை மருந்துகளின் துர்ப்பிரயோகம் இறுதியில் பழக்கதோசத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

ஒவ்வொரு போதை மருந்தும் மனிதனின் மூளையை வெவ்வேறு விதத்தில் தாக்குகின்றது. மறியுவானா (கஞ்சா) என்ற போதைப் பொருளை எடுத்துக் கொண்டால் அது மூளையின் ஞாபக சக்திப் பகுதியைப் பாதித்து ஞாபகசக்திக் குறைபாட்டை ஏற்படுத்தி விடுகிறது. இப்படியாக எந்தந்த மருந்துகள் மூளையின் எந்தெந்தப் பகுதிகளைத்தாக்கி எத்தகையவிளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விபரிக்க நிறைய எழுத வேண்டும். வைத்தியர்கள், மருந்தாளர்கள், தாதிகள் மூலம் அவரவர்கள் அவர்களுக்குரிய தனிப்பட்ட செய்தியைப் பெறுவது சாலவும் பொருந்தும்.

## பழக்கத்தில் உள்ள போதை மருந்துகளின் பெயர்கள்:

- Marijuana – THC (Tetra Hydro Cannabinol)
- Opiates- Morphine, Codeine, Heroin, Opium
- Inhalants- Paint Thinner, Finger Nail Polish Remover, Cigarette Lighter Fluid, Nitorus Oxide, Computure Cleaners, Whipped Cream
- Hallucinogens –LSD (Lysergic Acid), MDMA (Ecstasy)

LSD என்ற போதை மருந்து மூளையில் "Serotonin" என்ற நரம்புக் கடத்தியின் விசேடித்த வாங்கிகளை இறுக இணைந்து விடுவதால் பலபாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றது. Dopamine போல் மூளையின் வேறு பல செயற்பாடுகளுக்கு Serotonin என்ற இயல்பான நரம்புக் கடத்திகள் தேவை. LSD என்ற மருந்து Serotoninஇன் நரம்புக் கடத்தி வாங்கியில் இறுக இணைந்து விடுவதால் வாங்கியானது வழமைக்கு மாறாகக் கூடுதலாகத் தூண்டப்படுகிறது.

MDMA என்ற மருந்து Serotoninஐத் தன்னகத்தே கொண்டுள்ள நரம்புக்கலங்களைக் தாக்கி அழித்து விடுவதால் மாறாட்டம், தூக்கத்தில் குழப்பம், மீண்டும் மருந்து குடிக்க வேண்டும் போல் பேராவல், மனதில் கடும் போராட்டம் என்பனவற்றை ஏற்படுத்தும்.

### Steroids:

Anabolic Steroids – Testosterone: விளையாட்டு வீரர்கள், மல்யுத்த வீரர்கள் தங்கள் உடல் வாகுவை செழிப்பாக்க இதைப் பயன்படுத்து கிறார்கள்.

### Stimulants:

Cocaine, Amphetamines, Crack: இதில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட Opiates என்ற கூட்டத்தில் Morphine, Codeine, Heroin, Opium, Pethidine என்பவை அடங்குகின்றன.

இதில் Morhine என்ற ஊசி மருந்து இருதயத் தாக்கின் பொழுதோ, அல்லது வேறும் கடும் வேதனையை ஏற்படுத்தும் தருணங்களில் வைத்தியர்களால் பாவிக்கப் படுகின்றது.

வைத்தியர்களால் தரப்படும் Tylenol I, II, III போன்ற மருந்து வில்லைகளில் முறையே 10mg, 20mg, 30mg அளவுகளில் Codeine என்ற மருந்து நோய் கொல்லியாகப் பயன்படுகிறது. இதன் காரணத்தால் இம்மருந்துகள் வைத்தியர்களின் துண்டு இன்றி பெறமுடியாது.

Opium என்ற மருந்து பல வருடங்களுக்கு முன்பு Tincture of Opiumஆக வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தும் Creta Preparata Mixtureல் கலக்கப்பட்டு வைத்தியசாலைகளில் கொடுக்கப்பட்டது.

வைத்திய ஆலோசனைப்படி மருந்தாகப் பயன் படுத்தும் பொழுது நல்ல பலன்களைத் தரும் மருந்துகள், அளவு மீறித் துர்ப்பிரயோகம் செய்யும் பொழுது பழக்க தோசத்தையும், உடலில் பாரிய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

# உங்கள் வெற்றி...

19ம் பக்கத் தொடர்ச்சி...

உங்களுக்காக உங்கள் வருமானத்தில் 10% இனை உங்களுக்காக குறிப்பிட்ட சேமிப்பு தொகைக்கு ஒதுக்கி சேர்த்து வாருங்கள்.

இந்த தலைப்பே இக்கட்டுரையின் பிரதான மைய நோக்கமாகும். உங்களைச் சுற்றியுள்ளவர்களை ஒரு முறை நினைத்துப் பாருங்கள். இந்த அடிப்படைக் கொள்கையை பின்பற்றாதவர்கள் பொருளாதார நெருக்கடியில் அல்லலுறுவதைக் காணலாம். பல முதியவர்கள் தமது அந்திமக் காலத்தில் தமக்கென எந்த சேமிப்பும் இன்றி இன்னலுறுவதையும் காணலாம். இவற்றை எண்ணிப்பார்த்து உங்களுக்கென ஒரு தொகையை முதலில் ஒதுக்கும் பழக்கத்தை இன்றே கொண்டு வாருங்கள்.

Statistics Canada எடுத்த புள்ளிவிபரவியல் அடிப்படையில் பல கனடியர்கள் தமக்கான சேமிப்பு தொகையை சேகரிக்காது இருப்பதால் வயோதிப காலத்தில் பொருளாதாரப் பழுவால் துன்புறுகின்றனர் என்பதை அறிய முடிகின்றது. ஏனைய இனத்தவரை விட எம் இனத்தவர்கள் ஓரளவு சேகரிக்கும் பழக்கம் உள்ளவராயினும் தேவைகள் மாறுபட்ட வீண் செலவுகள், குடும்பத்திற்காக தனக்கு மிஞ்சி செய்த தியாகங்கள், பிழையான நிதி நிர்வாக முறைகள் என்பன வற்றால் பொருளாதாரச் சிதைவுகளில் சிக்கித்தவிப்பவரை காணலாம்.

## கனடிய ஓய்வூதிய திட்டம் (Canada Pension Plan):

1967ல் உருவாக்கப்பட்ட இத்திட்டமானது 689 தொழிலாளர்களால் மட்டுமே ஆரம்பத்தில் பங்களிக்கப்பட்டது. 1970ல் 4%ஐ விடக்குறைந்த தொழில் புரிபவர்களால் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெறுபவருக்கு ஓய்வூதிய நிதி செலுத்தப்பட்டது. இவை யாவுமே விகிதாசார அடிப்படையிலான கணக்கெடுப்புகள் மட்டுமே. CPP ஒரு உப உதவித் தொகையாகவே ஓய்வூதிய காலத்தில் வருமானமாக அமைந்தது. எனினும், பலர் தம் ஓய்வூதிய காலத்தில் அதனையே பிரதானமாக நம்பி வாழத் தலைப் படுகின்றனர். இது ஒரு பிரதான வருமானம் அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். நமது பொருளாதாரத் தேவைகளுக்காக பிறரைத் தங்கி வாழும் எமது வழமைகளில் ஒன்றாகவே இதுவும் உள்ளது.

இன்றைய இளம் வயதினர் எதிர்காலத்தில் முதியவராகுகையில் CPP ஓய்வூதிய நிதி இல்லாது போகும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது. இதனைச் செய்ய முடியாது போனாலும் யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். உங்கள் சேமிப்புத் திட்டம் மூலம் உங்களுக்காக நீங்கள் சேகரிக்காவிட்டால் நிச்சயம் எதிர்காலம் துன்பகரமானதாகவே அமையும். உங்கள் எதிர்காலத்தில் உங்களுக்கு உள்ள அக்கறை வேறுஎவர்க்கும் வரப்போவதில்லை. எனவே இச்சேமிப்பு முறைகள் பற்றி சிந்தித்து வருமுன் காப்போராக மாறி இன்றே செயல்ப்படுங்கள்.

(தொடரும்..)

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■





# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial Services Inc. (Lic # 10669)



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**

**TAX & ACCOUNTING**


304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust







**Neilson / Finch**
4+1 Bedrooms
3 Washroom Finished Basement




**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom

CONVENIENCE/VARIETY
**$95,000**
**Plus Stock**
**IN OSHAWA**



**HomeLife Today Realty Ltd., Brokerage***

Bus: 416-298-3200

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor

# தீ விபத்தைத் தவிர்க்க...!



செந்தூரன் புனிதவேல்
காப்புறுதி முகவர் -

### தீ விபத்தை தவிர்க்கச் சில அறிவுரைகள்:

இக்கட்டுரையில் நீங்கள் பார்க்கும் படம் எனது வீட்டிற்கு சில வீடுகளுக்கு அப்பால் யூலை 13ம் திகதி ஏற்பட்ட அழிபாடுகளே. பொதுவாக தீ விபத்து ஏற்படும் வேளைகளில் வீட்டின் சில பகுதிகளே எரிபடுவதுண்டு. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் வீடு முற்றுமுழுதாக எரிந்துவிட்டது. அது மட்டுமல்ல அருகில் உள்ள வீட்டிற்கும் தீ பரவிவிட்டது.

மேற்கூறிய தீ விபத்தைத் தொடர்ந்து தீ அனைக்கும் படை அதிகாரிகள் பல அறிவுரைகள் அடங்கிய பிரசுரங்களை அருகில் உள்ள வீடுகளில் வசிப்பவர்களுக்கு கொடுத்தார்கள். அதிலுள்ள பல நல்ல விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

### வீட்டில் புகை அறிகருவி (Smoke Delector) பெருத்துவதுடன் அதனை உரியமுறையில் பராமரிக்க தவறவேண்டாம்.

- புகை அறி கருவிகள் உங்களுக்கு தீயால் வரப்போகும் தீமைகளை முன் அறிவிப்பதனால் அவற்றை தவிர்க்க வாய்ப்பு தரும். இதனால் நீங்கள் தீயில் அகப்படாமல் தப்புவதற்கு வேண்டிய அவகாசத்தை கொடுக்கும்.
- ஒரு கட்டிடத்தின் ஒவ்வொரு மாடியிலும் புகையறி கருவிகள் பொருத்தப்படுவதுடன் முக்கியமாக படுக்கை அறையிலும் பொருத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.
- புகை அறி கருவியின் மின் கலன்களை (Batteries) வருடம் ஒருமுறை மாற்றுவது அவசியம். பெதுவாக பகல் நேரம் நீடிக்கும் தினம் அல்லது வீட்டின் பிரதான குடியிருப்பாளர் பிறந்த தினம் என்று அதற்கென ஒரு தினத்தை ஒதுக்குவது மறக்காமல் மாற்றுவதற்கு உதவும்.

### தப்பிச் செல்வதற்கான திட்டத்தை முன்கூட்டியே தயாரிப்பதுடன் பயிற்சி செய்வது அவசியம்:

- வீட்டில் வசிக்கும் அனைவரும் கலந்தாலோசித்து திட்டத்தை தாயாரிப்பது அவசியம்.
- ஒவ்வொரு அறையிலிருந்தும் வெளியே இரண்டு மார்க்கங்கள் வைத்திருப்பது முக்கியம்.
- வெளியேறியவர்கள் அனைவரும் ஒரு இடத்தில் கூடுவதற்கு தீர்மானித்து வையுங்கள். பாதுகாப்பான இடத்தை அடைவதுடன் 911 இலக்கத் தொலைபேசியில் உங்கள் விலாசம், விபரம் அனைத்தையும் அமைதியாகவும், விளக்கமாகவும் தெரிவியுங்கள்.
- தொடர்மாடிக் கட்டிடத்தில் வசிப்பவர்கள் எலிவேட்டர்களை பாவிக்காமல் படிகள் வழியாக வெளியேறுங்கள்.

### புகை மண்டலத்திற்கு கீழாக தவண்டு சென்று தப்புங்கள்.

- நீங்கள் வதியும் இடத்தில் புகைமண்டலம் பெருகி இருப்பின் உடனே முளங்காலில் தவழ்ந்து வெளியேறுங்கள். புகை காற்றிலும் அடர்த்தி குறைவாகையினால் அது உயரத்தில் தங்கிவிடும். நீங்கள் தவழ்வதனால் புகைக்காற்றை சுவாசிக்காமல் வெளியேறாலாம். தரைமட்டக் காற்று தெளிவானதாக நீடியநேரம் இருக்கும்.

### வெப்ப உலைகளுக்கு (Space Heaters) இடம் தரவேண்டும்:

- அறைகள் பனிக்காலத்தில் குளிர் அதிகமாக இருக்கும் வேளையில் வெப்பமூட்டுவதற்கு இத்தகைய உலைகளை பாவிப்பர். இவற்றிலிருந்து தீப்பற்றிக் கெள்ள கூடிய பொருட்களை மூன்று அடிக்கு அப்பால் வையுங்கள்.
- படுக்கச் செல்லும் பொழுதும், விட்டிற்கு வெளியே செல்லும் வேளைகளிலும் உலைகளை அனைத்துவிடுங்கள்.







- குழந்தைகளை வெப்ப உலைகளுக்கு அருகில் செல்ல விடாதீர்கள் அவை குழந்தைகளின் விளையாட்டுப் பொருள் அல்ல.
- வெப்ப உலைகள் வாங்கும் வேளைகளில் அவை CSA அல்லது ULC ஆகிய அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டவையா என பார்த்து வாங்குங்கள். விலை மலிவு என வாங்கி வீட்டை இழந்து விடாதீர்கள்.

### புகைத்தல் ஆபத்தனாது:

- புகைத்தல் பழக்கம் உங்கள் உடம்புக்கு மட்டுமல்ல வீட்டிற்கும் ஆபத்தானது. பல தீ விபத்துகள் புகைப்பவர்களாலேயே இடம்பெறுகிறது. (எனது வீட்டிற்கு அருகில் ஏற்பட்ட தீ விபத்தும் காரில் இருந்து புகைத்த நெருப்பாலேயே ஏற்பட்டது என சந்தேகிக்கப்படுகிறது.) எனவே இவ்விடயத்தில் மிகக் கவணமாய் இருக்கவும்.
- புகைக்கும் வேளைகளில் பாவிக்கும் சாம்பல் தட்டுகள் (Ash tray) பெரிதாக உள்ளதா என்பதனை கவணிப்பதுடன், எஞ்சிய சிகரட் கட்டைகயை நனைத்து விட்டு எறியவும்.
- துயிலும் வேளையிலும், களைத்து ஓய்ந்து படுத்திருக்கும் வேளையிலும், மயக்க தரும் மருந்துகள் அருந்தியுள்ள வேளைகளிலும் புகைக்காதீர்கள். பெரும் அளவு தீ விபத்து இதனால் ஏற்பட்டுள்ளதை அவதனிக்கக்கூடிதாயுள்ளது.
- தூங்கச் செல்லுமுன் கட்டில், அமர்ந்திருந்த ஆசனம் ஆகியவற்றுக்கு அருகாமையில் ஏதாகிலும் எரிந்தவண்ணம் சிகரட் கட்டைகள் உள்ளணவா என்பதை அவதானிக்கவும். அவைகள் புகைந்து கொண்டு கடைசியில் பெரும் தீ விபத்தை விளைவிக்கலாம்.

### தீப்பெட்டிகளும் லைட்டர்களும் வயது வந்தவர்களுகே:

- குழந்தைகள் ஆராயும் மனப்போக்கு கொண்டவர்கள். தீப்பெட்டிகள், லைட்டர்கள் போன்றவற்றை சிறுவர்கள் எடுக்க முடியாத இடங்களில் வைக்கவும். குழந்தைகளுக்கு அவை விளையாட்டுப் பொருள்கள் அல்ல என்பதை உணர்த்துவது அவசியம்.

### அடுப்புப் பாத்திரங்களுக்கு அண்மையில் இருங்கள்:

- சமையல் செய்யும் வேளையில் மிக அவதானமாய் இருப்பதவசியம் முக்கியமாக குழந்தைகள் அடுப்பிலிருந்து ஒரு மீற்றர் வட்டத்திற்கு அப்பால் இருக்கப் பழக்குங்கள்.
- சமைக்கும் வேளைகளில் ஆடைகள் உடம்புடன் ஒட்டியதாக அமைவதவசியம். மேலும் தலை மயிரை கட்டி அல்லது 'கொண்டை' போட்டுக் கெள்ளுங்கள். பல சந்தர்ப்பங்களில் ஆடைகள் அல்லது தலை முடி தீப்பற்றிக் கொண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதகயுள்ளது.
- பாத்திரம் ஒன்றில் தீப்பிடித்துவிட்டால் உடனே அடுப்பை அனைத்துவிட்டு அப்பாத்திரத்தை மூடிவிடுங்கள்.
- பாத்திரங்களின் பிடிகளை உள்நோக்கி திருப்பி வைப்பதனால் தவறுதலாய் தட்டுப் படுவதை தவிர்க்கலாம்.

### மின்சாரத்தை அவதானமா பாவியுங்கள்:

- ஒரு மின் உபகரணம் புகைத்தால் அல்லது மணந்தால் உடனே நிறுத்தி அந்த உபகரணத்தை மாற்றி அல்லது திருத்தி உபயோகியுங்கள்.
- உங்கள் மின் உபகரணத்திற்கு பாவிக்கும் வயரை காலத்துக்குக் காலம் கவணித்து பழுதடைந்திருந்தால் மாற்றிவிடுங்கள்.
- ஒரு பிளக் பூட்டுமிடத்தில் ஆறு பிளக் பூட்டுவதற்கு 'டொலராமா'வில் வாங்கி ஒரே இடத்தில் ஆறு உபகரணங்களை இயக்கும் 'வித்தை காட்டாதீர்கள். இரண்டு பிளக்கிற்கு வரும் மின் சக்தியில் ஆறு பிளக்குகள் பாவித்தால் சூடேறி நெருப்புப் பிடிக்கும் அபாயமுன்டு. இதை குறிப்பிடும் வேளை வள்ளுவரின்

''பீலிமை சகடு அச்சுரும் அப்பண்டம்
சால மிகப் பெயின்''

என்ற குறள் நினைவுக்கு வருகிறது. அளவிற்கு மிஞ்சினால் வண்டில் அச்சு மட்டுமல்ல வயரும் அறுந்து விடும்!

### தீப்பற்றினால் பிரதிஷ்டை செய்யுங்கள்:

- வியப்பாக இருக்கலாம் ஆனால் உண்மை. ஆடையில் தீ பிடித்துவிட்டால் ஒடவேண்டாம். அது கூடிய காற்றுபடுவதனால் அதிகமாக எரியும். ஒடுவதை தவிர்ப்பது மிகமுக்கியம்.
- ஆடையில் தீப்பற்றிவிட்டது என்பதை அறிந்தவுடன் கீழே விழந்து உருளுங்கள்.
- முகத்தை மூடிக்கொண்டு முன்னும் பின்னுமாக உருளுங்கள். அதுவே உங்களை காப்பற்றுவதற்கு வழி.

### ஆறப்போடுங்கள்:

- உடம்பில் ஏதாவது ஒரு அங்கத்தில் தீச்சுட்டுவிட்டால் உடனே அந்த இடத்தை நீரில் நனைப்பதுடன் ஈரத்துனியால் மூடி வையுங்கள்.
- எரிபட்ட இடம் கொப்பளித்தால் அல்லது தொடர்ந்து வலித்துக்கொண்டிருந்தால் உடனே வைத்திய உதவியை நாடுங்கள்.

(தமிழாக்கம்: குமார் புனிதவேல்)

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

Driving School

ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி
General Driving School
Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829




Buy and Sell Properties!
Dufferin/Hwy 9
$469,900
- 2+1 Bedrooms
- 2 Washrooms
- Finished.Basement
- Agricultural Land = Extra $$
Markham/14th Ave
$511,900
- 4 Bedrooms
- 3 Washrooms
- Beautiful Layout
- Close to all Amenities
Kennedy/Steeles
$569,500
- 4+2 Bedrooms
- 4 Washrooms
- Finished Basement
- Excellent Location
416-450-3984
lsundaram@trebnet.com
416-230-6462
kkathir@trebnet.com
HomeLife Future Realty
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Lokan Sundaram
Broker
Kathir Kandiah
Broker
*Independently Owned and Operated
This is not intended to Solicit Properties Currently on Sale


$100,000
லைவ் இன்சூரன்ஸ்
புகை பிடிக்காத 50 வயது ஆணுக்கு
Only $27.45 Monthly
புகை பிடிக்காத 50 வயது பெண்ணுக்கு மாதம் $20.70 மட்டுமே
10 Year Term Life insurance (Renewable and Convertible)
So... Why wait?
Call me to get the rate for your age.
KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON
www.familyprotection.ca
CELL 416-294-9322
OFFICE 416-759-5453
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
Canada Protection Plan
E&OE

# விற்பனைக்குத் தயார் செய்தல்

**'How to sell your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கொண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

## அலகு - 10



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

### உங்கள் வீட்டை விற்பனைக்குத் தயார் செய்தல்:

உங்களை வீடு வாங்குபவராக நினைந்து உங்களை நீங்களே கேள்வி கேட்க வேண்டும். என் வீட்டை எப்படி நான் அழகாகவும் கவர்ச்சியாகவும் மாற்றலாம்? வீட்டை வாங்குபவரை கவரக்கூடியதாக மாற்ற நான் என்ன செய்ய வேண்டும்.

உங்கள் வீட்டை விற்பது உங்களுக்கும், வாங்குபவருக்கும் ஒரு நல்ல தனிப்பட்ட அனுபவம். வீடு வாங்குபவர்களும் நீங்கள் உங்கள் வீட்டை முதன் முதலில் பார்த்தபோது அடைந்த உணர்வுகளை அனுபவிக்க வேண்டு-மென நினைக்கக் கூடும். அவர்கள் ஒரு அழுக்கான குளியல் தொட்டியையோ, அழுக்கு உடைகளையோ பார்த்து முகம் சுளிப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.

வீட்டின் கவர்ச்சியை அதிகரிக்க எத்தனையோ விடயங்கள் உண்டு. அவற்றை நீங்கள் இந்த அலகின் பிற்பகுதியில் காணலாம். மேலும் உங்கள் விற்பனை முகவரும், வீட்டைப் பளிச்சென்று பிரகாசமாக வைத்திருக்க குறிப்-பிட்ட சில ஆலோசனைகளை வழங்கலாம்.

### பரந்தளவில் என்ன செய்ய வேண்டுமென்று பார்ப்போம்:

ஒரு முறை உங்கள் வீட்டைச் சுற்றி வந்து வீட்டிலுள்ள அழுக்கு, தூசு முதலியவற்றை நீக்கவும். சுவர் அலுமாரி மூலை, படிகளின் கீழ் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி அவ்விடங்களை துப்பரவு செய்யவும். அவ்விடம் இப்போது சுத்தமாகவும், பெரிதா-கவும் காட்சிதரும்.

உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை இனிமேலும் தேவையில்லாவிடின் யாருக்காவது கொடுங்கள், வீசி விடுங்கள் அல்லது கராஜ் விற்பனையில் விற்று விடுங்கள். துப்பரவு செய்யும் போது சமையலறையையும், குளிய-லறையையும் நன்றாகத் தூசு தட்டி துப்பரவு செய்து, வர்ணம் தீட்டி வாங்குபவர்கள் வீட்டைப் பார்க்கும் வரை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உங்கள் வீட்டைச் சுற்றி வரும் போது வீட்டின் கதவு, யன்னல்கள் உடைந்திருந்தால், சுவரில் வெடிப்புகள் இருந்தால், வேறு ஏதாவது உடைந்தோ, அல்லது உபயோகிக்க முடியாத நிலையிலிருந்தால் அவற்றைத் திருத்தவோ, புதியவற்றைப் பூட்டவோ செய்யுங்கள்.

உங்கள் வீட்டு புற்றரை, Drive way முதலி-யவற்றை வீடு வாங்குபவர்கள் மாற்றி அமைக்க யோசிக்கலாம். எனவே அவற்றைத் திருத்தி யமைக்காமல் சுத்தம் செய்து வைக்கலாம். உங்கள் விற்கும் விலைக்குத்தக்கபடி அமைக்-கலாம்.

நீங்கள் உங்கள் வீட்டில் வைத்திருந்த உங்களிற்குரிய பொருட்களையோ, சில அடையாளங்களையோ அகற்றி விடுங்கள்.

உங்கள் தனிப்பட்ட விருப்பப் பொருட்களை வீடு வாங்குபவர்களின் கவனத்தைச் சிதற-டிக்கக் கூடும். உங்கள் முகவர் இந்த விடயத்தில் உங்களிற்கு வழி காட்டுவார். கடுமையான நிறம் உள்ள சுவர்களும், அதிக Desings கொண்ட சுவர் பேப்பர்களும் வீடு வாங்குபவர்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். எனவே மெல்லிய நிறங்களில் வீட்டுச் சுவர்-களை கவர்ச்சியாக மாற்றுங்கள்.

கவர்ச்சியற்ற, பார்க்கச் சகிக்காத தரைக் கம்பளங்கள், தொங்கு அழகு விளக்குகள் முதலியவற்றை அகற்றி விடுங்கள்.

உங்கள் முகவர் உங்கள் வீட்டை வாங்கு-பவர்கள் விரும்பக் கூடியவாறு மாற்றவும் அழகுபடுத்தவும் உங்கள் சொந்த நினைவாக வைத்திருந்த சின்னங்கள் முதலியவற்றை அகற்றிய பிறகு உங்கள் வீட்டை 'Staging' செய்வார்கள்.

### வீட்டையும், வளவையும் புதுப்பித்தலும், அழகுபடுத்தலும்:

வெளிறிய வர்ணத்தை மூடி நல்ல பொதுவான மெல்லிய வர்ணத்தைப் பூசுவதாலும், பழைய தரைவிரிப்புகள், யன்னல் திரை, பூச்சாடிகள், செடிகள் முதலியவற்றை மாற்றுவதாலும், புதுப்பிப்பதாலும் அழகிய விளக்குகள், மெழுகு தீபம் Stands முதலியவற்றை வைப்பதாலும் வீட்டை அழகு படுத்தலாம்.

வீட்டைச் சுற்றிவர உள்ள வளவையும் புதிய பூ மரங்களையோ, பழைய பாத்திகளிலுள்ள காய்ந்த இலைகள், மரங்களை அகற்றி, பாத்திகளை அழகுபடுத்தி புற்றரைகளைத் திருத்தியமைத்து, புல்லை அளவாக வெட்டி, முற்றத்தைப் பெருக்கி, காய்ந்த இலைகள் தேவையற்ற பொருட்களை அழுக்குத் தொட்டியில் போட்டு வைக்கலாம்.

பனிக்காலத்தில் பனியை விடாமல் நடை பாதையைத் துப்பரவு செய்து, வீட்டைப் பார்ப்பவர்கள் வசதியாக வந்து போக வழி செய்ய வேண்டும். வீட்டைத் திருத்த செலவு செய்யும் போது அது தருமோ எனத் தெரிந்து கொள்ள வேண்டும், வீட்டைத் திருத்துவதால் அதிக பணத்திற்கு விற்கலாம் என்றால் மட்டு-மே திருத்தப்பட வேண்டும்.

### வீட்டைத் திருத்த முன் பின் வரும் இரண்டு விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும்:

- திருத்த வேலை செய்வதால் வீட்டின் பெறுமதி அதிகரிக்குமா?
- வீட்டைத் திருத்தவதால், வீடு வாங்குபவர் விரும்பக் கூடியவராகவும், பெறுமதிமிக்க வீடாகவும் தோற்றமளிக்குமா?

மேற்கூறிய இரண்டு கேள்விகளுக்கும் "ஆம்" என்ற பதில் கிடைக்குமாயின் திருத்தவேலை-யைத் தொடரலாம். உதாரணமாக உங்கள் வீட்டுக்கு உட்புறமும், வெளிப்புறமும் வர்ணம் தீட்டுவது வீட்டை வாங்குபவருக்கு அதிக கவர்ச்சியைக் கொடுக்குமானால், அல்லது வீட்டின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யுமா-னால் செலவு செய்த பணம் கிடைக்குமானால் புதிய வர்ணம் பூசலாம். இதே போலத்தான் ஒவ்வொரு திருத்த வேலையையும் செய்யும் போது நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சில திருத்த வேலைகள் அல்லது மேலதிக-மாக ஒரு கார் கராஜ் (Garge)யையோ அல்லது ஒரு பலகை மேசையையோ செய்வதால் வீட்டின் கவர்ச்சியை அதிகரிக்கச் செய்யலாம். ஆனால் வீட்டின் விலையை திருத்த வேலை செய்த செலவு அளவிற்கு உயர்த்த முடியாமல் போகலாம்.

உதாரணம்: வீட்டிற்கு வெளிப்புறத்தில் ஒரு நீச்சல் குளம் உங்கள் வீட்டின் விலையை அதிகரிக்கச் செய்யலாம். அந்த விலை உயர்வை வீட்டின் விற்பனையில் சேர்த்துக் கொள்ளாமல் போகலாம். இதே போல மின் இணைப்புகளில் பழுது ஏற்பட்டால் அவற்றை நாம் திருத்த வேண்டும் ஆனால் அதிக செலவு செய்த விலையுயர்ந்த மின் இணைப்புகளை பொருத்தாது இருத்தல் வீட்டின் விலை அதிகரிப்பை தடுக்கலாம்.

### வெளியே தெரியாத திருத்த வேலைகளை மறைப்பது சரியா?

உதாரணம்: வீட்டுக் கூரையிலோ, குளியல-றைக் குழாயிலோ அடிக்கடி ஏற்படும் பழுது களை தெரியப்படுத்துவது நல்லது, ஏனெனில் இப்போது வீட்டை வாங்குபவர்கள் தாங்கள் வாங்கும் வீட்டின் தகுதியையும், பெறுமதி-யையும் அறிந்து கொள்ள அறிவுசார்ந்த நிபுணர்களை நியமிக்கிறார்கள். எனவே நாம் மறைத்தாலும் அவர்களுடைய அறிக்கை வீட்டிலுள்ள குறைபாடுகளை அம்பலப்படுத்தி விடும். எனவே இந்த விடயத்தில் அனுபவ-மிக்க முகவரின் ஆலோசனைப்படி செய்வது நன்று.

தொடரும்.

skbales@thaiveedu.com

■ ■ ■


## Sale Of Business

I PICTURE FRAMINING & HOME DECOR .OIL PAINTINGS, MIRRORS, FLOWERS,VASES & GIFT ITEMS.

**Brampton**

## $35,000 For Sale




## House for Lease

**Ellesmere & Markham**

1 Bedrooms Basement Apt.




**Canadian Home Appraisals Inc.**

Residential & Commercial Appraisals

CHAI CANADIAN HOME APPRAISALS INC.

**S.K.Bales**

CRA, CAR, MVA, FRI, CRES

Managing Director


Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**

- CRA (Canad... ...ppraiser) Designation w... ...ivision of University of British Col... ...aisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer) Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute) Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist) Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Leased:
$800
107 % List

Century 21
Affiliate Realty Inc.



**S.K.Bales**
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial

TEL: 416-290-1200
CELL: 416-801-3219

Commercial Member

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Markham/Ellesmere**



**$265,000**
Detached Bungalow, Bed rooms 3+2, Washrooms 2, Hardwood,Newer Thermal Windows,Full 2 Bedroom Basement Apartment

**Melevin/Tapscott**




**$285,000**
Townhouse Bed rooms 3, . Washrooms 3, Complete Brick House, Steps To Mal, 5 Mins To Hwy 401. Finished Basement With 4Pc Washeroom I

**Midland/Lawrence**




**$344,900**
Townhouse 3 Story Bed rooms 3+1, Washroom 2, Just 3 Years Newly Built Townhouse In The Heart Of Scarborough

**Mccowan/Denison**



**$369,900**
Link 2 story, Bed rooms 3+1 Washrooms 3, 4Car Parking In Driveway. New Furnace., New Bdlm In Bsmnt & Master Bdrm. Suits

**Mccowan/Denison**



**$389,000**
Detached 2 Story Bedrooms 3+2, Washrooms 4, All Brick Home In High Demand Area Of Markham, Finished Base ment, Near 407, Mall.Ttc

**Hoover Park/9th Line**




**$424,800**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3, 2000 Sq.Ft, Custom Model Kitchen, Large Upper Level Family Room,

**9th Line / Reeves Way**




**$424,900**
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3, 3 Years New, Freshly Painted. New Hardwood Floor On Main Level, Open Concept Family Room

**Hwy 48 / Bur Oak**



**$428,800**
Dertached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Immaculate Home In Demand Location, Walk To Go Train, Schools, Park

**Markham And Steeles**




**$429,900**
Link 2 Story, Bed rooms 4, Washrooms 3 Newly Painted Steps To Ttc Shopping & School, Double Door Entry, Double Driveway

**Bur Oak/9th Line**



**$434,000**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, New Updated Kitchen With Granite Counter, Few Blocks From Go Stn, Schools, Parks, Shops

**Mccowan/Denison**



**$435,000**
Likk 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, 4 Car Parking Spaces, Newer Roof 2 Bedroom Basement Apartment With A Separate En-

**Markham/Denison**



**$454, 900**
Link 2 Story, Bed rooms 4+2, Washrooms 4, Spacious 2320 Sqft. 4Bdrms Home With Finished Bsmt, Very Well Kept Home,

**Mccowan/16th Ave**



**$468,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Close To School - Shopping - Go Train! Fully Fenced! Door Thru Home To Garage!

**Middlefield/Dennison**




**$479,900**
Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 4, Finished Basement Apartment With Sep.Entrance,Walk To School, Ttc , Yrt,Shopping

**14th/9th Line**



**$479,900**
Detached 2 Story, Bedrooms 5, Washroom 3, Close To Schools,Parks,Shopping.Exterior Pot Lights,Oak Staircase,High Ceilings

**Morningside/Old Finch**




**$538,999**
Detached 2 Story, Bedrooms Lots Of Room In This Huge Executive Home, Professioanlly Finished Basement W/ Separate Entrance

**Woodbine / Major Mac**



**$549,000**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3 Brick & Stone Exterior, Double Door Entrance, Excellent Location, Close To Hwy 404,

**1Mccowan/16th**




**$588,888**
Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 3, Lots Of Upgrades Wide Back Yard Double Door Entry, Niche Huge Front Porch

**Markham / Bur Oak Ave**



**$599,900**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 4, Fully Upgraded Open Concept Home Upgraded Kitchen Cabinets Huge Covered Balcony

**Sales of Business**




**$99,900**
sale of business with out property Esso Gas Station, Volume Close To 2 Million Liters, Store 240K, Self Service, Net Income Of Over 85K Per Year.

**Mccowan/401**




Condo Apt. Bed rooms 1, Washrooms 1, Across From Scarborough Town Centre And Subway

**Weston/Rutherford**



Detached 2 Story, Bedrooms 3+2 Washrooms 4 Finished 2 Bdrm Bsmnt Apt.W/Sep Entrance.Extensive Landscaping&Stone

**Sales of Business**




**$795,000**
sale of business with property Esso Gas Station, Brand Name Gas Bar + 12 Units Motel + 3 Br. House + Convenience Store

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# மருத்துவக் கேள்வி - பதில்



## இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், இளைத்தவனுக்கு எள் என்று சொல்லியிருந்தீர்கள். அப்படி என்றால் குண்டானவர்கள் எள் சாப் பிடக் கூடாதா?**

- சிவாஜினி

எள்ளுக்கு ஒரு அற்புதமான குணம் உண்டு. கொளுத்தவர்களை இளைக்கவும், இளைத்தவர்களை கொழுக்கவும் செய்யும்.

காலை உணவிற்கு 3 மணி நேரத்திற்கு முன் 20 கிராம் கறுப்பு எள்ளை மென்று தின்று தண்ணீர் குடியுங்கள். உடல் குண்டாக இருப்பவர்கள் இளைக்கவும் ஒல்லியானவர்கள் பருக்கவும் வைக்கும்.

5 கிராம் எள் விழுதுடன் 5 கிராம் ஆட்டுப்பாலையும், 5 கிராம் சர்க்கரையையும் கரைத்துக் குடித்து வந்தால் மூல நோய் குணமடையும்.

ரத்தக்காயம் ஏற்பட்டால் அவ்விடத்தில் பாதியாக பொடித்த எள்ளுடன் தேனையும் நெய்யையும் கலந்து தடவ விரைவில் குணமடையும்.

நீரிழிவு நோய் கண்டவர்கள் 5 கிராம் எள்ளை 3 மணி நேரம் நீரில் ஊற வைத்தால் கருநிற தோல் கழன்று வெண்ணிறமாகும். இதை நன்கு காயவைத்து வறுக்கவும். பின் பனை வெல்லத்தைப் பாகு செய்து அதில் போட்டுக் கிளறி, எலுமிச்சம் பழ அளவு உருண்டையாக்கி காலை ஒரு உருண்டை வீதம் உண்டு வெந்நீர் பருகுங்கள். 60 நாள் செய்தால் சர்க்கரை நோய் வெகுவாக குணமடையும்.

படுக்கையில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளுக்கு இரவில் வெள்ளை முள்ளங்கியுடன் எள் சேர்த்துக் கொடுத்தால் விரைவில் குணம் தெரியும். இன்னும் எள்ளைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

சிவாஜினி உங்கள் கொலஸ்ரோலுக்கு எள் மிக நல்லது.

**டாக்டர் மூலிகை மருத்துவம் என்பது பாதுகாப்பானதா? இதனைப் பயன் படுத்துவதில் பயப்பட வேண்டாமே!.**

- மோகன்.

மருத்துவ மூலிகைகளைக் கொண்டு நோயை நீக்கிக் கொள்வது, மிகப் பழங்காலத்திலிருந்தே உலகம் முழுவதும் பின்பற்றப்பட்டு வரும் செயல். இது மனிதர்கள் மட்டுமல்லாமல் மிருகங்களும் தானாகவே பின்பற்றும் செயல் என்றும் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகளான சித்த, ஆயுர்வேத முறைகள். சீன மற்றும் திபெத்திய மருத்துவ முறைகளில் மருத்துவ மூலிகைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உலகில் எவ்வாறு உயிரினங்களின் தேவைக்காக உணவு உள்ளதோ, அதே போல அவைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்களுக்கு மருந்துகளும் உள்ளன என்பது எல்லா பாரம்பரிய மருத்துவ முறைகளின் அடிப்படைக் கருத்தாகும்.

அவ்வாறு கண்டறியப்பட்ட சில பொதுவான மூலிகைகளின் பட்டியல் கீழே உள்ளது. அந்த பெயர்களை கூகிள் இணையத்தில் 'க்ளிக்' செய்வதன் மூலம் அவற்றைப் பற்றிய விபரங்களைக் காணலாம்.

**மூலிகைகளை உபயோகிக்கும் முறைகள்:**

இந்த மூலிகைகளை நேரடியாக உபயோகிக்கும் முன்பாக, சில விபரங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

சித்த, ஆயுர்வேத முறைகளில் தாவரங்களில் உள்ள குணாதிசயங்கள் மட்டுமல்லாமல், சில குறிப்பிட்ட கால நேரங்களின் நிலைக்கேற்ப இந்த தாவரங்களில் பொதிந்து விலகும் 'எல்லைக்கு அப்பாற்பட்ட சக்தி'களும் மிக முக்கிய பண்பாகக் கருதப்படுகிறது. ஆகவே இந்த தாவரங்களை மருத்துவத்திற்காகச் சேகரிக்கும் காலங்களும், சேகரிப்பவரின் உடல் சுத்தம், உள்ளச் சுத்தம், சேகரிக்கும் போதும் மருந்து தயாரிக்கும் போது உச்சரிக்க வேண்டியவை முதலியவற்றை தேர்ந்த வல்லுனரிடமே அறிந்து கொள்ள வேண்டும்.

பல மூலிகைகளில் உள்ள நற்பயன்களைப் பெறும் முன்பு, அதில் உள்ள எதிர் தன்மை களை நீக்க வேண்டும். அப்போது தான் அந்த நற் பயன்களை தேவையான அளவில் நேரடியாக பெற முடியும். உதாரணமாக, மிளகை நாம் சாதாரணமாக உணவில் பயன்படுத்துகிறோம். ஆனால் மருத்துவத்திற்கு பயன்படுத்தும் முன்பு அதில் உள்ள எதிர் தன்மைகளை (மருத்துவக் கூற்றுப்படி – நச்சுத் தன்மைகளை) நீக்க மிளகை நன்கு புளித்த மோரில் 3 மணி நேரம் ஊறவைத்து உலர்த்த வேண்டும்.

மூலிகைகள் சாதாரணமாக பக்க விளைவுகள் இல்லாதவை. மேலும் பல மூலிகைகளை நாம் தினசரி உணவிலும் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் மருத்துவ முறைகளில் உபயோகிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய பல நுணுக்கங்கள் இருப்பதால், மூலிகைகளின் முழுப்பயனை அடைய தேர்ந்த வல்லுநரின் வழிகாட்டலின் படி நடப்பதே சிறந்தது.

**டாக்டர், எனது முகம் சோகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். கவர்ச் சியாக இருக்க மருத்துவக் குறிப்பு தாருங்களேன்.**

- கமல்

சிலரைப் பார்த்தால் ப்ரிட்ஜில் வைத்த ஆப்பிள் பழம் மாதிரி எப்போதும் 'ப்ரெஷ்' ஆக இருப்பார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள்… எப்போதும் தூங்கி வழியம் மூஞ்சாக இருப்பார்கள். சுறுசுறுப்பும் அவர்களிடம் 'மிஸ்' ஆகி இருக்கும் அதனால், அவர்களது அழகும் காணாமல் போய் இருக்கும்.

இதையொட்டி அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆய்வை மேற்கொண்டார்கள். இயற்கையான அழகு யாருக்கு கிடைக்கும்? என்கிற கோணத்தில் அந்த ஆய்வு அமைந்திருந்தது.

500க்கும் மேற்பட்ட இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடம், தினமும் அவர்கள் மேற்கொள்ளும் செயல்களில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆய்வின் முடிவில் அடிக்கடி 'டென்ஷனாக' இருப்பவர்களைக் காட்டிலும் டென்ஷன் ஆகாமல் எதையும் 'டேக் இட் ஈஸி'யாக எடுத்துக் கொள்பவர்கள் 'ப்ரெஷ்' ஆகவும், அழகாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுபற்றி ஆய்வாளர்கள் கூறும்போது, 'அழகுக்கும் மனதிற்கும் நிறையவே தொடர்பு இருக்கிறது. அந்த மனதை இயற்கையாக அதாவது, டென்ஷன் இன்றி வைத்துக்கொண்டால் முகமும் அழகாக இருக்கும், உடலும் ஆரோக்கியமாக இருக்கும்' என்று தெரிவித்தனர்.

**டாக்டர், நாமாகப் பயன்படுத்தும் பாட்டி வைத்தியம் பற்றி சுருக்கமாக அறிய விரும்புகின்றேன்,**

இயற்கை மூலிகைகளின் பயன்களைப் பாருங்கள், தெரிந்துகொள்வீர்கள்.

**டாக்டர், நாமாகப் பயன்படுத்தும் பாட்டி வைத்தியம் பற்றி சுருக்கமாக அறிய விரும்புகின்றேன்,**

இங்கு தரப்பட்டுள்ள இயற்கை மூலிகைகளையும் அவற்றின் பயன்களையும் பாருங்கள், தெரிந்துகொள்வீர்கள்.

| மூலிகை | நோய் / தீர்வு |
|---|---|
| கசகசா<br>Papaver Somniferum, | பேதி. |
| கண்டங்கத்திரி<br>Solanum Xanthocarpum | சளி, இருமல், சுவாசப் பாதை நோய்கள். |
| கல்யாண பூசணி<br>Cucurbita Moschata | உடல் பருக்க, உடல் சூடு குறைய. |
| கற்பூரவள்ளி<br>Coleus Aromaticus | குழந்தைகளுக்கு கோழை வெளியேற்ற. |
| கடுகு: Brassica Juncea | கட்டிகளுக்கு பூச. |
| கடுக்காய்<br>Terminalia Chebula | வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், கருப்பை புண்கள். |
| கரியபோளம் (மூசாம்பரம்)<br>Aloe Barbadensis | சூதகவலி, சுளுக்கு. |
| கரிசலாங்கண்ணி<br>Eclipta Prostratam | நாள் பட்ட சளி, கோழை. |
| கறிவேப்பிலை<br>Murraya Koenigii | சுவையின்மை, நீண்ட நாள் தொடர்ந்து சாப்பிட நரை மாறுதல், கண்பார்வை தெளிவு. |
| கஸ்தூரி மஞ்சள்<br>Curcuma Aromatica | சொறி, சிரங்கு வியர்வை நாற்றத்திற்கு மேல் பூச்சு. |
| காசுக்கட்டி<br>Acacia Catechu | வயிற்றுப் போக்கு, மலத்தில் இரத்தம். |
| கிராம்பு<br>Syzygium Aromaticum | பல்வலி, தேள்கடி, விஷக்கடி, கோழை. |
| கீழாநெல்லி<br>Phyllanthus Amarus | மஞ்சள் காமாலை, சர்க்கரை நோய், சிறுநீர்க்கட்டு. |
| குங்கிலியம்<br>Shorea Robusta | மூட்டுவலி, இளம்பிள்ளை வாதம். |
| குடசப்பாலை (கருப்பாலை)<br>Holarrhena Pubescens | சீதக்கழிச்சல். |
| குப்பை மேனி<br>Acalypha Indica | கோழை மேல் பூச்சாக,<br>உடல் அரிப்பு, சொறி, சிரங்குக்கு. |
| கொத்துமல்லி<br>Coriandrum Sativum | வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல். |
| கோரைக் கிழங்கு<br>Cyperus Rotundus | மூட்டுவலி, தசைவலி, வயிற்றுக் கோளாறு. |
| கோவைக்காய்<br>Coccinia Grandis | சூடு, உதடு வெடிப்பு, வயிற்றுப் புண். |
| சடமாஞ்சில்<br>Nardostachys Jatamansi | கூந்தல் தைலத்திற்கு. |
| சதகுப்பை<br>Anethum Sowa | பால் செரியாமை, வயிற்று உப்புசம். |
| சந்தனம்<br>Santalum Album | உடல் வெப்பம், சிறுநீர் எரிச்சல், சிறுநீர்க்கட்டு,<br>உடல் இளைக்க. |
| சாதிக்காய்<br>Myristica Fragrans | காது இரைச்சல், குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு,<br>சீதபேதி, நல்ல தூக்கம் வர. |
| சிறுவண் பீளை(பூலாச்செடி)<br>Aerva Lanata | சிறுநீரகக்கற்கள், சிறுநீர் எரிச்சல், சிறுநீரில் இரத்தம்,<br>வெள்ளைப்படுதல். |
| சிறுகீரை<br>Amaranthus Tricolor | உடல் பலம், சிறுநீர் நன்கு பிரிய. |
| சிறுசெருப்படை<br>Coldenia Procumbens | நீர்க்கடுப்பு, சிறுநீர் எரிச்சல், வெள்ளைப்படுதல். |
| சிற்றாமுட்டி<br>Pavonia Zeylanica | மூட்டு வலி, வாதம் ஆகியவைகளுக்கு மேல் பூச்சு. |
| சீதா<br>Annona Squamosa | ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்த, தலைப் பேன்களுக்கு.<br>(விதைகள் / இலைகளை மேல் பூச்சாக) |
| சீரகம்<br>Cuminum Cyminum | சுவையின்மை, பசியின்மை, வயிற்றுப் பொருமல். |
| சுண்டை<br>Solanum Torvum | சுவாசப் பாதை நோய்கள், வயிற்றுப் புழுக்கள்,<br>பேதி கட்டுப்படுத்த. |
| செம்பருத்தி<br>Hibiscus Rosasinensis | படபடப்பு, நெஞ்சுவலி, இரத்த சோகை. |

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்-தியரின் ஆலோசனையுடன் பின்பற்று-வதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'

www.thaiveedu.com

# கேரளா ஆயுர்வேதா

314-4005, டான்மில்ல்ஸ் ரோடு, டான்மில்ல்ஸ்/ஸ்டீல்ஸ்
தொலைபேசி: 416 995 0416
www.ayurvetha.com / ayurvetha@gmail.com




- வெண்புள்ளி - Viteligo.
- காளான்படை - Psoriasis.
- படர் தாமரை.
- கண்டமாலை.
- சொறி, சிரங்கு.
- கரப்பான்.
- கட்டி.
- அடங்காத தோல் நோய்கள்.
- அரையாப்பு.
- கிரந்தி.
- காலாணி.
- குட்டம்.
- செற்றுப் புண்.
- படுக்கைப் புண்.
- முகப் பரு.
- தேமல்.
- தலை பொடுகு (சொடுகு).
- யானைத்தோல் சொரி.
- தவளைச் சொரி.
- பித்த வெடிப்பு
- கால் ஆணி.
- நரம்பு சிலந்தி.
- மேக நோய்.
- தோல் புற்று நோய்.
- முடி உதிர்தல்.
- வெள்ளைப்படுதல்.
- கர்ப்பப் பை கட்டிகள்.
- உதிரப் போக்கு.
- மாதவிடாய் வலி.
- கரு தங்காமை.

18 வருடங்களாக மூலிகை மருந்துகளை
பொதிகை மலையில் இருந்து வழங்கி வருகின்றோம்.

ஆஸ்த்மா, அலர்ஜி, தலைவலி, இடுப்புவலி, முழங்கால் வலி, வாத நோய்கள்,
குழந்தை பேறு, குடிப்பழக்கம், போதை அடிமை போன்ற நோய்களுக்கு..




எளிய கட்டணத்தில், இந்தியாவில் தங்கி சிறந்த சிகிச்சை பெற

முன்பதிவு செய்ய வேண்டும்.

டாக்டர். இராஜசேகர் ஆத்தியப்பன் M.D.,F.H.M.S.S.,
Tel: 416 995 0416 Fax: 1-416-946-1638
E-mail: ayurvetha@gmail.com, Website: www.ayurvetha.com

# பல்கலாச்சாரத்தில் கலாச்சார எல்லைகளை மீளமைத்தல்



கந்தையா பரநிருபசிங்கம்

பொதுவாக ஒரு குறித்த சமூகத்தின் கலாச்சாரம் என்பதை அதன் சரித்திரம், மரபுகள், விழுமியங்கள், மற்றும் பழக்கவழக்கங்களின் ஒட்டுமொத்த விளைவாகக் கருதலாம். ஆனால் கனடா போன்ற பல்கலாச்சாரங்களைக் கொண்ட, உலகில் அதிகூடிய குடிவரவாளர்களைக்கொண்ட நாடொன்றில் கலாச்சாரம் என்ற எண்ணக்கரு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது. அதிலும் குடிபெயர்ந்துள்ள பெற்றோர்களுக்கும் கனடாவில் வளர்ந்துவரும் அவர்களின் பிள்ளைகளுக்கும் இடையேயான தொடர்பில் இது மிகவும் சிக்கல்த்தன்மையுடையதாக மாறியிருக்கின்றது.

பல்லினப்பெற்றோர்களின் பிள்ளைகளுக்குக் கடத்தப்பட்டுள்ள பல்லினக்கலாச்சார விழுமியங்கள் ஒன்றை மட்டும் கூறிநிற்பதாக நினைக்கின்றார்கள். அதாவது கலாச்சாரமரபுகள் மாற்றமடைந்து ஒரு செழுமையான புதுவகை உருவாகலாம். மேலும் குடிபெயர்வு நடைபெறும் போது அவர்களது புதிய நாட்டில் இவ்வகையான கலாச்சாரக் கூர்ப்பு, அந்நாட்டில் இயைபாக்கம் பெற அத்தியாவசியமானது என்று பெரும்பாலும் நினைக்கின்றார்கள்.

சில குடிவரவாளர்களின் பிள்ளைகள் கலாச்சார இயைபாக்கம் மொழி இயைபாக்கத்திற்கு ஒத்தது என்று கருதுகின்றார்கள். உதாரணமாக தமிழ் மாணவர்கள் வீட்டில் தமிழும் பாடசாலையில் ஆங்கிலமும் பேசி இயைபாக்கம் அடைவும். அதேவேளை தமிழ்ப்பெற்றோர் தம்இனத்தவருடன் சேர்ந்து தமிழில் உறவாடி வருவார்.

சில பல்லினப் பெற்றோர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் என்ன நினைக்கின்றார்கள் என்றால். தங்கள் பெற்றோரிடம் இருந்து பெற்றுக் கொண்ட வித்தியாசமான விழுமியங்களைச் கலந்தே வாழவேண்டும். இது கனேடிய பெருநீரேட்டத்துடன் இணைந்து வாழ்ந்து வெற்றி கொள்ளவதற்குரிய தேவையான தப்பிப்பிழைக்கும் தந்திரோபாயம்.

ஆனால் புதிதாக் கனடாவில் குடியேறியவர்கள் கலாச்சார எல்லைகளை மீளமைப்புச் செய்ய விழையும்போது முக்கியமானப் பின்வரும் இரு விடையங்களுக்கு உட்படுத்தப்படலாம். அவையாவன:

- பராதீனப்படுத்தப்படல் (Alienation).
- கலாச்சார முரண்பாடு (Culture Conflict).

பராதீனப்படுத்தலை விளங்கிக் கொள்ள சில புதிய குடிவரவாளர்களின் கூற்றுகளையும், அவர்தம் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

கீழைத்தேசம் ஒன்றிலிருந்து வந்த அண்மைய குடிவரவாளர் கூறுகின்றார்: "நாங்கள் கனடாவில் எங்கள் தாயக விழுமியங்களை விட்டு கனடாவிற்கு இயைபாக்கப்பட்டும், எங்கள் பிள்ளைகள் முற்று முழுதாக கனேடியர்களாக மாறவும் வேண்டியுள்ளது. இவ்வாறான முன்னெடுப்பு எங்களிற் பலருக்கு பராதீனப்படுத்தலை ஏற்படுத்திவிடுகின்றது".

பராதீனப்படுத்துதலுக்கு இட்டுச் செல்லும் கனடியப் பெருநீரோட்டத்துடனான இணைவு (Integration) பல்லினக்கலாச்சாரத்தை ஆதரிப்பவர்கள் எதிர்பார்க்கும் ஒன்றல்ல. ஆனால் குடிபெயர்ந்த பெற்றோர்களுக்குப் பிறந்த பிள்ளைகளின் மனதில் இது வியாபித்துள்ளது. இதனை பின்வரும் ஒரு கீழைத்தேய வாலிபரின் கூற்றுக்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவர் சொல்கின்றார்: "நான் கீழத்தேயவனாகவோ அல்லது கனடியனாகவோ உணரவில்லை. நான் எனது பெற்றோரைவிட கனடிய சமூகத்துடன் கூடுதலாக இணையும் போது அதிக பாதுகாப்பைப் பெறுவதாக உணருகின்றேன். ஆனால் நான் கனடாவில் பிறந்து வழர்ந்து வந்தாலும் நான் எங்குபோனாலும் வித்தியாசமாகப் பார்க்கப்படுகின்றேன். அதனால் கனடிய பெருநீரோட்ட கலாச்சாரத்திற்கும் எனது பெற்றோரின் கலாச்சார விழுமியங்கள், மரபுகளுக்கும் இடையே எதனைக் தேர்ந்தெடுப்பது என்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன".

உதாரணத்திற்கு நட்புச்சந்திப்பு (Dating), திருமணம், கல்வி, தொழில் சார்ந்த தேர்வுகள் (Choices) பொதுவாக தனி நபரின் தீர்மானங்களாகவே கனடாவில் எண்ணப்படுகின்றன. ஆனால் தெற்கு மண்டலத்திலிருந்து வருவோரைப்பொறுத்தமட்டில் இத்தீர்மானங்கள் குடும்ப மரபுரிமையாக உள்ளது. இதை மெய்ப்பிக்கும் வகையாக தென்அமெரிக்காவில் இருந்து வந்து பலசாத்தங்களாக கனடாவில் வாழும் ஒருவர் கூறுகின்றார்: "எனது பிள்ளைகள் குடும்ப விழுமியங்கள் (Family Values) பற்றி உணர்வுகொண்டிருக்க வேண்டும். மேலும் அவர்கள் எங்கள் குடும்ப வேர்களுடன் ஒரு வகை தொடர்பை வைத்திருக்கவேண்டும்".

அடுத்ததாக கலாச்சார முரண்பாட்டைக் கவனிப்போம். இரண்டு கலாச்சாரங்களுக்கிடையே இழுபறிப்படும்போது குடிபெயர்ந்த பிள்ளைகளுக்கு நாளாந்தக் கலாச்சார முரண்பாடு நிதர்சனமாகிவிடும். இவ்வாறான நிலையில் அவர்கள் இரண்டு கலாச்சாரத்தில் ஒன்றிற்கேனும் முற்றுமுழுதாக உரித்துடையவர்கள் அல்ல என்பதை உணர்வர். இதே வோளை உடனடிப் பொருளாதாரச் சவால்களுக்கு முகங்கொடுப்பதில் பிராயாசப்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களின் பெற்றோர்கள் இந்தக் கலாச்சார முரண்பாட்டால் ஏற்படும் உணர்ச்சி பூர்வமான தேவைகளை கவனிக்க முடியாதவர்களாகி விடுகின்றனர். மேலும் இவ்வாறான பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கத்தக்கதாக போதியளவு வசதிகள் இல்லை. இவ்வகையான உதவிச்சேவை குடிபெயர்ந்த குடும்பங்கள் வெற்றிகரமாகக் குடியேறுவதற்கு (Settlement) முக்கியமானது.

கனடாவின் குடிவரவாளர்களின் மேற்கூறிய பிரச்சினைகளை எதிர் கொள்வேண்டிய சூழலில், வேறுபட்ட கலாச்சாரங்களிடையே குடியேறுதல் (Settlement) தொடர்பான புறச்சூழல்களைக் கருத்தில் கொண்டு பழைய, புதிய கலாச்சாரங்களுக்கிடையே ஒரு சமநிலையைப் பேண விளையவேண்டும். இந்த முடிவினை மெய்ப்பிக்கும் வகையில் பல குடிவரவாளர்களின் கருத்துக்களை இப்பொழுது கவனிப்போம்.

கனடாவின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சாசனத்தில் (The Canadian Charter of Rights and Freedoms) பல்கலாச்சாரம். (Multiculturalism) உயர்வான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. கலாச்சாரம் என்பதற்கு ஒரு புதிய வரைவிலக்கணம் தேவைப்படலாம். கனடாவில் 'கலாச்சாரம்' என்பது ஒன்றுக்கு மேற்பட்ட விடையங்களைக் குறித்து நிற்பதுடன் இதன் கருத்து ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகாத புதியது, பழையது என்ற எண்ணக்கருக்களுக்கு இடையேயான ஒரு பாலத்தை அமைத்தல் அல்லது சமநிலைப்படுத்துதல் என்ற கருத்துப்படும். இதை மெய்ப்பிக்க இருகலாச்சாரப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளை ஒன்று இவ்வாறு கூறுகின்றது. "கலாச்சாரங்களுக்கிடையே ஒரு சமநிலை பேணல் என்பது அவ்விரு கலாச்சாரத்தையும் உதாசீனம் செய்து மறுப்பதிற்குப் பதிலாக அவற்றை மனங்கொள்ளலும், அவற்றின் விழுமியங்களை மதித்தலும்மாகும்."

எனவே எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு பார்ப்போமாகில் கனடாவின் பல்கலாச்சாரச் சூழலில் கலாச்சாரம் என்பது ஒரு தனித்த விடையத்தை குறித்து நிற்பதற்குப்திலாக பலவிடையங்களின் சேர்க்கையாகவே அமையும். அந்த விடையங்கள் வாழ்க்கை முறை, இலட்சிய வாதங்கள், விழுமியங்கள், மரபுகள், மற்றும் சமூக முறைமைகள், நாங்கள் வாழும் கனடாவில் வேற்றுமையும், இணைவும் கைகோர்த்துக் தொழிப்பட முடியும். எனவே எல்லாவற்றிக்கு மிடையே ஒரு சமநிலையைப் பேணுவதே கலாச்சார முரண்பாடுகள், மற்றும் பராதீனப்படுத்தல் பிரச்சனைகளைத் தீர்க்க வழியாக அமையும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# செல்வம் தருமா இன்பம்?



புஷ்பா கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -

இது என்ன முட்டாள்த்தனமான கேள்வி என நாம் யோசிக்கலாம். நியாயம் தான். வாழ்க்கையில் விழித்திருக்கும் பொழுதில் கூடுதலான நேரத்தை பணம் சம்பாதிப்பதற்காகத் தான் பயன்படுத்துகிறோம். அதுவும் தூங்க வேண்டிய நேரத்தில் விழித்திருந்து கூட பணம் சம்பாதிக்கிறோம். பணம் நிச்சயம் மகிழ்ச்சி தரவேண்டும். அதற்காகத்தானே கஷ்டப்பட்டு உழைக்கிறோம்.

அப்படியானால் பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியுமா? எல்லா விடயங்களிலும் ஆய்வுகள் நடத்தும் காலம் இது. இந்தக் கேள்விக்கான விளக்கங்கள் எங்களுக்குள் எவ்வளவு இருந்தாலும், ஆய்வுகள் இதுபற்றி என்ன கூறுகின்றன என்று பார்ப்போம். எங்கள் வருமான அதிகரிப்பு, எங்கள் வாழ்க்கைத் தரத்தையும், வாழ்க்கையைப் பற்றிய எம் கணிப்பையும் நல்லவிதமாக மாற்றுகிறது. நிச்சயமாக ஒரு திருப்தியை கொடுக்கிறது. ஆனால் உணர்வு ரீதியாக பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்றே அறியப்பட்டுள்ளது. அதாவது அதிக சம்பாத்தியம் எங்களுக்கு மனமகிழ்வையோ நிறைவையோ தருவதில்லை.

செல்வம் பெருகப் பெருக வாழ்வின் சின்னச் சின்ன ஆசைகளும், சந்தோஷங்களும் முன்னைய அளவுக்கு எம்மை ஈர்க்கத் தவறி விடுகின்றன. British Columbia சர்வகலாசாலையில் இது சம்பந்தமாக சுவாரசியமான ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஒரு இனிப்பான ஆய்வு. அதாவது 16 – 59 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு Chocolate ஒன்றை கொடுத்து அதை அவர்கள் உண்ண எடுத்துக் கொள்ளும் நேரம், மற்றும் அவர்கள் அதை ரசித்து உண்ணும் விதம் என்பவற்றை கணிப்பிட்டார்கள். பங்குபற்றியவர்கள் எல்லோரும் இனிப்பை அருந்தும் முன்னர் ஒரு சிறு வினாத்தாளை நிரப்பவேண்டி இருந்தது. ஒரு சாராருக்கு கொடுக்கப்பட்ட வினாத்தாளில் ஒரு காசின் படம் எதேச்சையாக போடப்பட்டது போல் கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு காசின் படம் இல்லாமல், ஒரு சாதாரண படம் அவர்கள் வினாத்தாளில் இருந்தது இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது என்னவெனில், காசு படம் போடப்பட்ட வினாத்தாளை நிரப்பிய பின் இனிப்பை உண்டவர்கள் (சாதாரண படம் போட்ட வினாத்தாளை நிரப்பிய பின் இனிப்பை உண்டவர்களுடன் ஒப்பிடும் பொழுது), இனிப்பை உண்பதற்கு குறைந்த நேரமே எடுத்துக் கொண்டார்கள். அத்துடன் அவர்கள் அதை ரசித்து உண்ணாமல், ஏனோதானோ என்று உண்டார்கள் என்பது தான். இந்த கண்டுபிடிப்பிற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் என்னவென்றால், ஆழ்மனதில் வினாத்தாளில் இருந்த காசின் படம் எம்மையும் அறியாமல் பதிந்து விடுகிறது. அப்படி காசினால் ஒரு திசைதிருப்பம் ஏற்படும் போது, Chocolate சாப்பிடுவது போன்ற ஒரு சிறிய சந்தோஷத்தில் மனம் லயிக்கத் தவறிவிடுகிறது என்பதுதான். வாழ்வின் சௌகரியங்கள் அதிகரிக்கும் போது, நினைத்ததை பெறலாம் என்ற அளவுக்கு வசதிகள் ஏற்படும் போது, காலை வேளையில் புல்லில் உறைந்திருக்கும் பனித்துளியோ, சாளரத்தில் இருந்து பார்க்கையில் வெளியில் சோவென பெய்யும் மழையோ மனதில் ஒரு ரசிப்பையும், லயிப்பையும் ஏற்படுத்துவதில்லை. அதற்கு நேரமும் இருப்பதில்லை. வாழ்வில் முன்னேற வேண்டும். இன்னும் இன்னும் செல்வம் சேர வேண்டும் என்ற துடிப்பு எங்களை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் என்பது உண்மைதான். அது மனமகிழ்ச்சியையும் கொண்டு வரவேண்டுமே. தாங்கள் வாங்கிப் போடும் வீட்டையும் வசதிகளையும் அனுபவிக்க நேரமும் வேண்டும். மனமும் வேண்டும். எங்களுக்கு இயல்பாக இருக்கும் இரசிப்புத் தன்மையைத் தான், பணம் ஈட்டும் ஆசை கொஞ்சம் கொஞ்சமாக தின்று விடுகிறதே.

**“ பொருளாதார மேம்பாடோ,**

**தொழில் ரீதியான வெற்றியோ,**

**வாழ்க்கையின் மேலோட்டமான சந்தோசம் தான்.**

**அர்த்தமுள்ள செயல்பாடுகளும்,**

**ஆழமான உறவுகளுமே அந்த சந்தோசத்தை**

**நீடிக்கவும் பலப்படுத்தவும் உதவும். ”**

விடுமுறை என்று எடுத்தால் கூட சில நேரங்களில் மனம், வேலை எண்ணங்களிலேயே மூழ்கி இருக்கும். குழந்தைகளுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருப்பீர்கள். ஆனால் சிந்தனை எல்லாம் வேலையில் மூழ்கி இருக்கும். சிறு குழந்தைகள் ஆனால் கூட இதனை கண்டுபிடித்து விடுவார்கள். அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், வேலை செய்பவர்களில் 53%த்தினர் மட்டுமே விடுமுறை அவர்களுக்கு ஓய்வையும் அதிக புத்துணர்வையும் தந்ததாக கூறுகின்றனர். 30%த்தினர் விடுமுறை நேரத்தில் கூட வேலைப்பளுவால் கஷ்டப்படுவதாக கூறுகிறார்கள். தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்துவிட்ட இக்காலத்தில் தொலைபேசிகள், இணையத்தளம் என்பன எங்கள் விடுமுறை காலத்தை கூட ஆக்கிரமித்து விடுகின்றன. மதுபாவனைக்கு அடிமையாவது போல, சில பேர் வேலைப்பளுவுக்கு அடிமையாகி விடுகிறார்கள். வேலை தரும் அழுத்தத்தால் ஈர்க்கப்பட்டு இன்னும் இன்னும் கடினமான வேலையை தலைமேல் சுமந்து அதிலிருந்து விடுபட முடியாமல் போய்விடுகிறார்கள். அப்படியானவர்களுக்கு வேலையிலிருந்து விடுமுறை எடுப்பது ‘விடுமுறைக் காய்ச்சலை’ கொண்டுவந்து விடுகிறது. உடல் களைப்பு, நோ போன்ற தடிமன், காய்ச்சலுக்கான அறிகுறிகளை இது குறிக்கிறது. சிலர் சனி, ஞாயிறுகளில் தலைவலி வந்து கஷ்டப்படுவார்கள். தொடர்ந்து உடல் ஓய்வற்ற நிலையில் இருக்கும் போது அதனால் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், உடல் நோ மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

உலகில் மிகச் சில செல்வந்தர்களே மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் பணம் அதிகரிப்பதால் எங்கள் தயாள குணமும்

30ம் பக்கம் பார்க்க...



**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

www.computek.edu

# Food Handler Certification



Next Class

**Sept 11, Saturday**

9.30 AM - 3.30 PM

**Call for registration - 416.285.9941**


*If you have a job where you handle food you need Food Handler Training!*

*Increases your job skills.*
*Be more marketable!*

**Food Handler Training available for:**
*PSW's, Food Service Workers, Dietary Aides, cooks, Daycare providers, ECE/ECA workers, home care workers, nannies, restauranteurs, .*

CITY OF TORONTO ACCREDITED PROGRAM

# Bank Teller



**Next batch , Wednesday Sept. 8th 6 PM**

**Call for registration -**
**416.321.9911**

**Get ready for job in 6 - 12 months !**

*If you are :*
- *Currently receiving E.I. benefits*
- *Received E.I. within 3 yrs*
- *Received maternity benefits within 5 yrs*

*You may be eligible for HRDC funding*

***Are you not qualified for HRDC Funding Assistance ?***
***Is your HRDC funding REJECTED?***

***You may still qualify for other Financial Assistance***
***Please call us for details***

Diploma Programs



***Network Engineering***
***Personal Support Worker (PSW)***
***Early Childcare Asst.(ECA)***
***Computerized Accounting***
***Business Administration***
***Medical Office Admin (MOA)***

**Financial assistance may be available to those who qualify**

| Markham | Scarborough | Toronto |
|---|---|---|
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES


# செல்வம் தருமா...

29ம் பக்கத் தொடர்ச்சி...

அதிகரிக்கும் என்பது தவறு என்றே தோன்றுகிறது. இன்னொரு அமெரிக்க ஆய்வு கூறுகிறது, வருடத்திற்கு $300,000 உழைப்பவர்கள், அந்த பணத்தில் 4%ற்கும் குறைவாகவே சமூக நிறுவனங்களுக்கு நன்கொடையாக வழங்குகின்றனார்கள் என்று. ''பணம் மகிழ்ச்சியை தராது என்று சொல்பவர்கள் அந்த பணத்தை சரியான முறையில் செலவழிக்கத் தெரியாதவர்களே'' என்று ஒருவர் சொல்லி இருக்கிறார். அப்படியானால் பணத்திலிருந்து எப்படி மகிழ்வை பெறலாம்? எங்களுக்கு என்ன விடயங்கள் ஆத்மதிருப்தியை தரும். எங்கள் சுயவளர்ச்சிக்கு உதவும், எங்கள் ஆரோக்கியத்திற்கு உதவும். எங்கள் அன்பானவர்களை மகிழ்விக்கும், மற்றும் எங்கள் சமூகத்திற்கு எப்படி நாம் உதவியாக இருக்கமுடியும். இப்படி சிந்தித்து பார்த்து எங்கள் பணத்தையும் நேரத்தையும் செலவழிக்கும் போது, அது நிச்சயம் எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தரும்.

உலக அளவில் சமுதாயத்தின் கண்ணோட்டத்தில், வெற்றி ஈட்டுவது என்பது மற்றவர்கள் உங்களை பார்த்து பொறாமை கொள்ள வழி அமைக்குமே அன்றி உங்களுக்கு என்ன விதத்தில் உதவப்போகிறது? வாழ்க்கையில் முன்னேற்றங்களை சந்திக்கும் காலகட்டங்களில் தானே நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால் யதார்த்தத்தில் அப்படி இல்லை. பொதுவாக நாம் இருபது வயதுகளில் மிக மகிழ்ச்சியாக இருக்கிறோம். அதன்பின் பொதுவாக எம் மகிழ்ச்சியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு, மீண்டும் ஓய்வு பெற்ற உடன் உள்ள காலகட்டத்தில் எம் மகிழ்வின் நிலை மிக உச்சத்தில் இருக்கிறது. வருமானம் அதிகரித்துக் கொண்டு போகும் போது மக்கள் பொதுவாக மகிழ்ச்சியை அனுபவிக்கத் தான் செய்கிறார்கள். அதுவே நீங்கள் அந்த வளர்ச்சியை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. வருமானம் அதிகரிக்கும் போது வேலையில் பொறுப்புகளும் அதிகரிக்கிறது. அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகள் உண்டாகலாம். எங்கள் உறவு முறைகளில் அது என்ன மாற்றங்களை கொண்டுவரும்?

பணத்திற்கும் மனமகிழ்விற்குமான தொடர்பு சிக்கல் வாய்ந்ததாக குழப்பமானதாக இருக்கலாம். ஆனால் உறவு முறைகளுக்கும் மகிழ்விற்குமான தொடர்பு தெளிவானதாகவே இருக்கிறது. ஆய்வுகள் இதைத்தான் கூறுகின்றன. மற்றவர்களுடன் நாம் செலவழிக்கும் நேரமே எம்மை மிக்க மகிழ்ச்சியானவர்களாக வைத்திருக்கிறது. திருமணம் முடிப்பதால் ஏற்படும் உள ஆரோக்கியம் என்பது, ஒரு வருடத்திற்கு $100,000இற்கும் அதிகமாக உழைப்பதால் வரும் உள ஆரோக்கியத்துடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது என ஒரு கணிப்பு சொல்கிறது. வீடு வாங்குவதற்கு ஒரு நல்ல இடம் வேண்டுமானால், நல்ல அயலவர்கள், நம்பிக்கையானவர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா என்று பார்ப்பீர்கள் இல்லையா? இது தனிமனிதர்களை பொறுத்து மட்டுமல்ல. நாடளவில் பார்த்தால் கூட, சமூக நம்பிக்கை (Social Trust) அதிகமாக உள்ள நாடுகளில் வாழும் மக்கள் அதிக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். உடல் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். அதிக பொருளாதார வளர்ச்சி அங்கு இருக்கிறது. குற்றங்கள் அந்த நாடுகளில் (குறைவாக அல்லது கூடுதலாக) எப்படி இருப்பினும், அச்சம் இல்லாமல் வாழ்கிறார்கள்.

பொருளாதார மேம்பாடோ, தொழில் ரீதியான வெற்றியோ, வாழ்க்கையின் மேலோட்டமான சந்தோஷம் தான். அவை உருவாவதின் அடிப்படை எம் ஆழமான உறவுகளில் தங்கி இருக்கிறது. பணம் மகிழ்வை தரும். அந்த மகிழ்வை நீடிக்கவும் பலப்படுத்தவும் எம் அர்த்தமுள்ள செயல்பாடுகளும், ஆழமான உறவுகளும் அடிப்படையாக இருக்கின்றன.

pushpa.kanagaratnam@thaiveedu.com

...


# Law Office

## T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# எச்சரிக்கை: தொலைபேசி ஊடாக மோசம் செய்யும் வஞ்சகர்கள்



சேரலாதன் செல்லையா

நான்கு இணைப்புக்களுடன் கூடிய ஒரு சந்தைப் படுத்தும் வர்த்தகத்தை நடத்துபவர் திரு Rod Bell. இவரது மாதாந்த கட்டணம் வழமையாக $250.00 மட்டுமே. ஆனால் கடந்த August மாதம் அவரது கட்டணம் $60,000.00 ஆகும்.

250 பக்கம் கொண்ட திரு.Bellஇன் பற்று வரவுச் சீட்டில் பல 30 நிமிட அழைப்புக்கள் பல அய்ரோப்பிய நாடுகளுக்கு மேற்கொள்ளப் பட்டு இருந்தன. இது பொதுவாக Toll Fraud என அழைக்கப் படும். இந்த மோசக் காரர்கள் வருமானத்தை உண்டாக்கும் எண்களை (1-900) வெளிநாடுகளில் திறந்து விட்டு உங்கள் தொலைபேசி தொகுதியை ஒத்து (Compromise) வரச் செய்த பின் உங்களின் எண் ஊடாக அந்த எண்களை அழைப்பதன் மூலம் கட்டணத்தை வெளிநாட்டு தொலைபேசி நிறுவனங்களிடம் பெற்றுக் கொள்வார்கள். அந்த தொலைபேசி நிறுவனங்கள் Bell, Rogers போன்ற உள்ளூர் நிறுவனங்களுக்கு கட்டணத்தை அனுப்ப உள்ளூர் நிறுவனங்கள் உங்களுக்கு கட்டணத்தை அனுப்பும்.

இந்த வகையான மோசடி மிகவும் பெரிய நடவடிக்கையாகும். கடந்த கோடைகாலத்தின் போது இத்தாலியில் இருந்து பிலிப்பைன்ஸ் வரையினாலன நாடுகள் ஒரு பெரிய மோசடி வலையத்தை உடைத்தார்கள். அந்த வழக்குப் பதிவின் படி இத்தாலியில் ஒரு Call Center சொந்தக்காரர்களான ஒரு தம்பதிகள் மணிலாவில் ஒரு குழுவுக்கு அமெரிக்காவில் தொலைபேசித் தொகுதிகளை ஒத்து வரச் செய்ய பணம் கொடுத்தார்கள் என்று கூறப் பட்டு இருக்கிறது.

இந்த தொலைபேசி தொகுதிகளை ஒத்து வரச் செய்த பின் இந்த தொலைபேசியில் இருந்து அழைப்புக்களை மேற்கொள்வதுதான் இந்த மோச நடவடிக்கையின் அடிப்படைத்



தந்திரமாகும். இந்த இத்தாலிய தம்பதிகளால் அவர்களது நிறுவனத்தின் ஊடாக ஒரே நேரத்தில் பல அழைப்புக்களை மேற் கொள்ள முடித்தது. இதனால் மொத்ததில் 12 Million நிமிட அழைப்புக்களை மேற் கொண்டு $55 million கட்டணங்களை அறவிட்டிருந்தார்கள்.

திரு. Bellஜப் போன்ற சிறிய வர்த்தகர்கள் தங்களது தொலைபேசி நிறுவனத்தினது சாதனங்களைப் பாவிக்காது வேறு நிறுவனங்களது சாதனங்களைப் பாவிப்பதால் இந்தக் கட்டணங்கள் வாடிக்கையாளருடையததே அன்றி தங்களது அல்ல என தொலைபேசி நிறுவனங்கள் கூறுகின்றன. அத்துடன் இந்த மோசடிகளைத் தடுப்பதும் அவர்களின் பொறுப்பே எனவும் அவை கூறுகின்றன.

Telus நிறுவனத்தின் சாதனங்களைப் பாவிக்காத திரு. Bellஇன் கட்டணம் $60,000.00 வரையில் உயர்ந்து விட்டது. தொலைபேசி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களை இந்த மோசடி சம்பந்தமாக எச்சரிக்க பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. இந்த நடவடிக்கைகளின் விளைவாக அண்மைக் காலங்களில் இது போன்ற மோசடிகள் பல மடங்கு குறைந்திருப்பதாக Bell Canadaவின் பேச்சாளர் Julie Smithers தெரிவித்துள்ளார். ஆனாலும் இவற்றிற்கான இறுதிப் பொறுப்பு வாடிக்கையாளரினதே என அவர் மேலும் தெரிவித்தார். இது போன்ற சந்தர்ப்பங்களில் தமது நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்களின் கட்டணங்களை கட்ட வேண்டிய கட்டாயம் இருப்பதாக அவர் மேலும் விளக்கினார்.

இந்த தொலைபேசி நிறுவனங்கள் சில நேரம் உபகரணங்களை அவர்களிடம் வாங்கியிருந்தால் இந்த இழப்புக்களை ஈடு செய்ய முடியும் ஆனால் உபகரணங்களை வேறு இடத்தில் வாங்கியிருந்தால் ஈடு செய்யும் சந்தர்ப்பம் மிகவும் அரிதாகும்.

July மாத இறுதியில் Telus தனது நிறுவனத்தை அழைத்து மோசடி நடப்பது பற்றி அறியத் தந்து கடவுச் சொல் (Pass word) மாற்றல் போன்ற சில முன்னேற்பாடுகளை அறியத் தந்த போதிலும் August மாத கட்டணங்கள் $60,000 வந்ததிலிருந்து அந்த முன்னேற்பாடுகளினால் மோசடியை நிறுத்த முடியவில்லை என்பது தெளிவு.

Telsu பேச்சாளர் Jim Johannsson கருத்துத் தெரிவிக்கையில் பெரிய வாடிக்கையாளர்களுக்கு இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் கழிவுகள் தரப்படுவதாகத் தெரிவித்தார்.

தனது கட்டணத்தை விட மேலதிகமாக எதையும் தர மறுக்கும் திரு. Bell அவர்கள் தனது கட்டணம் 70,000 இலிருந்து 32,000 ஆக குறைக்கப் பட்டதாகத் தெரிவித்துள்ளார். "இதில் நகைப்புக்கு இடமான விடயம் என்ன வெனில் அவர்கள் இன்னும் எனது தொலை பேசி சேவையைத் துண்டிக்கவில்லை. நாங்கள் எங்களது உண்மையான கட்டணங்களை ஒழுங்காகக் கட்டி வருகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

seralathan.chelliah@thaiveedu.com

■ ■ ■



அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# பாகுபாட்டிற்கு உட்பட்டால்...

## [Discrimination]

### கனடா வாழ்வில் "பாகுபாடு" [DISCRIMINATION] என்ற அநியாயத்தினை எதிர்கொண்டால்? தீர்வு!

திருமதி. எல்சா ரொறீஜோன் (Mrs. ELSA TORREJON) என்ற அந்த 52 வயதான பெண்மணி தமது இரு பிள்ளைகளையும் தனித்து நின்று (Single Mother) வளர்த்து கொண்டு ரொறன்ரோவில் உள்ள தொடர்மாடி குடியிருப்பில் வசித்து வருபவர்.

கடந்த வருட ஆரம்பத்தில் தன்னுடைய தொழில் செய்யும் இடத்தில் தொழில் துறை நிர்வாகத்தினால் தமக்கு ஏற்பட்ட ஒரு அநியாயத்தினைக் கண்ணீருடன் அரச நீதிதுறையின் கவனத்திற்கு எடுத்து சென்றார்.

கடந்த யூலை 13, 2010

இவருக்கு எதிராக நடந்த அநியாயம் தொடர்பான விசாரணையின் தீர்ப்பு வெளிவந்ததும் இது கனடாவின் சகல ஆங்கில தொடர்பு சாதனங்களிலும் பரபரப்பான ஒரு செய்தியாக வெளியாகியிருந்தது.

Weston Property Management Corporation என்ற தொடர்மாடி கட்டிடங்களை நிர்வகிக்கும் நிறுவனம் ஒன்றின் அலுவலகத்தில் சில காலமாக ஒரு மணித்தியாலத்திற்கு $12 டொலர் என்ற சம்பள உடன்படிக்கையில் பணிபுரிந்து வந்த இந்த பெண்மணிக்கு கடந்த ஜனவரி 2009யில் மார்பக புற்று நோய் (Breast Cancer) ஏற்பட்டு சில நாட்களாக அதற்குரிய சிகிச்சைகளுக்கு உட்பட்டு அந்த சிகிச்சையில் தேறியிருந்தார். தம்முடைய சிகிச்சை நாட்களில் லீவு எடுக்க வேண்டியிருந்ததால் தமக்கு ஏற்பட்ட நிலைமை பற்றி எந்த விதமான ஒழிவு மறைவுமின்றி தாம் தொழில் புரியும் நிறுவனத்திற்கு அறிவித்திருந்தார்.

சிகிச்சையில் தேறிய பின்பு வழமைபோல் தொழில்புரியும் இடத்திற்குச் சென்ற போது நோய்வாய்பட்டவர் என்ற காரணத்தினால் நிறுவனம் எழுத்து மூலம் அறிவித்து அவரை தொழிலிருந்து நிறுத்தியிருந்தது.

பாதிக்கப்பட்டவர் நீதியின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார். எழுத்து மூலம் இந்த பெண்மணிக்கு அவர் தொழில்புரிந்த நிறுவனம் வழங்கிய கடிதமே ஆதாரமாக அந்த இருந்துவிட்டது.

இந்த அநியாயமான செயல் "ஒன்ராரியோ மனித உரிமை நியாயசபை"யின் விசாரணைக்கு மனு செய்யப்பட்டது. விசாரணையின் முடிவில் வேலை இடத்தில் நடந்த மன்னிக்க முடியாத ஒரு தவறு இச்சம்பவம் என குறிப்பிட்டு இதில் சம்பந்தப்பட்ட நிறுவனம் பாதிக்கப்பட்ட இப்பெண்ணுக்கு $20,000 டொலர் நட்டஈடு வழக்க வேண்டும் எனவும். சம்பந்தப்பட்ட தொழில் வழங்கிய நிறுவனத்தின் முகாமைத்துவ பிரிவினர் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் தொடர்பான பயிற்சி வகுப்புகளுக்கு சென்று அதனை படித்து, சட்டங்களை மதித்து பேண வேண்டும். எனவும் எச்சரிக்கை செய்து தீர்ப்பு வழங்கியது.

**தகவல் தொடர் - 44**

இச்செய்தியினை கனடிய ஆங்கில ஊடகங்கள் சகலதும் வரவேற்றதுடன், ஒரு முக்கிய செய்தியாக வெளியிட்டுமிருந்தது.

சரி! இது ஒரு செய்தி இருக்கட்டும். இதே மாதிரியான, பல்வேறு வகையான பிரச்சினைகள், சம்பவங்களை கனடாவில் வசிக்கும் தமிழர்களாகிய நாம் பல இடங்களிலும், பல சந்தர்ப்பங்களிலும் கட்டாயம் எதிர்கொண்டிருப்போம், பாதிக்கப்பட்டிருப்போம். இது பலர் வாழ்வில் நடந்திருக்கும். ஆனால் இப்பாதிப்புகளுக்கு எதிராக இப்படியான வழியில் நியாயத்தினை தேடி போகின்றோமா? அதுவே இங்குள்ள கேள்வி.

கனடாவில் நாம் யாவரும் இங்கு வந்து குடியேறியவர்களே. எங்கள் மொழி, நிறம், பாரம்பரியம், கலாச்சாரம் வேறு என்பதற்காக எவரும் எவரையும் ஒதுக்கிவிட முடியாது.

### உதாரணத்திற்கு இங்கு சில வற்றினை குறிப்பிடலாம்.

- விக்ரோரியா பார்க் வீதியில் உள்ள ஒரு தொடர்மாடி கட்டிடத்தில்லை. தமிழர்களுக்கு வாடகைக்கு இடம் கொடுப்பதில் என்பது பல வருடங்களுக்கு முன்பு நடைமுறையில் இருந்தது என்பது ஒரு செய்தி.
- பிள்ளைகளோடு இருந்தால் இவ் தொடர்மாடியில் வாடகைக்கு இடம் இல்லை.
- பெண்களுக்கும் திருமணமாகாதவர்களுக்கும் வேலை தரப்படமாட்டது.
- ஈழத்தமிழர்களையே முதலில் வேலையிலிருந்து நிறுத்துவது.
- கறுப்பு இணத்தவர்களைக் கண்ணில் காட்டமுடியாது.
- இந்து மதகோயில்களுக்கு போகின்றவர்கள், விக்கிரக ஆராதனை செய்வோர். எங்கள் கர்த்தர் சபைக்குள் வரகூடாது.
- இந்த உணவகத்தினுள் தமிழ் இளைஞர்களை உள்ளே விடமாட்டார்கள்.
- கர்ப்பிணி பெண் என்றபடியால் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.
- உடல் அங்கவீனமான பெண் சக்கர நாற்காலியில் இந்து ஆலயத்திற்கு உள்ளே வரக்கூடாது என்ற மனிதநேயமற்ற உத்தரவு.

இப்படி ஏராளமான அநியாயங்கள், பாகுபாடுகளை (DISCRIMANATION) இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

சரி இவ்வாறு நியாயமற்ற முறையில் கனடாவில் அநியாயங்களை எதிர்கொண்ட ஒருவர் தமக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக.

- எங்கே? எப்படி முறைப்பாடு செய்வது?
- என்ன மாதிரியான வடிவில் முறைப்பாட்டினை முன் எடுப்பது?
- இவற்றுக்கு வழி காட்டுபவர்கள் யார்?

போன்ற ஏராளமான கேள்விகளும், தயக்கங்களும் பலரின் மனதிலும் ஏற்படுவது சாதாரணமாகும். இத்தகைய நிலையில் இருப்பவர்களுக்கு இலவசமாக கைகொடுத்து வழி காட்டவென மாகாண அரசின் நிறுவனம் ஒன்று தயார் நிலையில் உள்ளது.

Ontario – Human Rights Legal Support Centre (ஒன்ராரியோ - மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்) என்னும் அரச நிறுவனம் ஒன்றிலிருந்து மனித உரிமை சட்டங்களில் விஷேட தேர்ச்சி பெற்ற வழக்கறிஞர்கள், சட்ட உதவியாளர்கள் என ஒரு பாரிய குழு இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுக்க என்றும் காத்திருக்கின்றனர்.

இவ்நிறுவனம் பின்வரும் விலாசத்தில் இயங்குகின்றது. அதன் விவரங்கள் பின்வருமாறு.


Ontario – Human Rights Legal Support Centre
400, University Ave,
7th Floor Toronto, M7A 1X8
416 314 6266 அல்லது 1 866 625 5179
இணையதளம்: www.hrlsc.on.ca

இந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்களுக்கு மொழி என்பது ஒரு தடையாக எப்போதும் இருக்க கூடாது என்பதற்காக 140 மொழிகளில் மொழிபெயர்ப்புச் சேவை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றது. தமிழில் பேசி தங்களுக்கு தேவையான உதவிகளை பெற்று சட்டரீதியான நடவடிக்கைகளை முன் எடுக்கலாம்.

இலவசமாக தங்களுக்கு உதவி செய்ய சட்ட வல்லுனர்களின் துணையுடன் கை கொடுக்கும். இந்த 'ஒன்ராரியோ மனித உரிமை சட்ட ஆதரவு நிலையத்தின்' உதவியுடனோ அல்லது தங்களின் சொந்த வழக்கறிஞர் மூலமோ தங்களுக்கு நடந்த அநியாயத்தினை அல்லது பாகுபாட்டினை மனுசெய்ய வேண்டிய இடமே ஒன்ராரியோ மனித உரிமைகள் நியாய மன்றம் (Human Rights Tribunal of Ontario) என்னும் நியாயமன்றமாகும் இதன் முகவரி பின்வருமாறு.

Human Rights Tribunal of Ontario
655 Bay Street, 14th floor
Toronto, Ontario M7A 2A3
416 326 1312 அல்லது 1 866 598 0322
இணையத்தளம்: www.hrto.ca

ஒரு அநியாயமான சம்பவம் அல்லது பாகுபாடு நடந்து ஒரு வருடத்தினுள் இந்த முறைப்பாடுகளை நியாயமன்றத்திற்கு முன் எடுக்கலாம். சரியான ஆதாரங்களுடன் முறைப்பாடு நிருபிக்கப்படல் வேண்டும். முறைப்பாடு கிடைத்து ஒரு வருடத்தினுள் தீர்வும் கிடைக்கும். ஆதாரங்கள் இல்லாது வழக்கு தாக்கல் செய்யப்பட்டால் எதிர்தரப்புவாதியின் பதில் நியாயத்தின் அடிப்படையில் நிராகரிக்கவும் படலாம்.



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

### நியாய சபைக்கு தங்கள் பிரச்சினையினை மனுசெய்த பின்பு அடுத்த கட்டம் என்ன நடக்கும்?

- தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை மனித உரிமை சட்டங்கள், கோட்பாடுகளை மீறும் நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டதா? என்பது நியாய சபையினால் பரிசீலனை செய்து கொள்ளப்படும்.
- தங்கள் விண்ணபத்தின் பிரதி எதிர்தரப்பு வாதிக்கு அனுப்பி அவர் பக்கத்தில் உள்ள நியாயத்தினை எழுத்தில் பெற்றுக்கொள்வார்கள்.
- இணக்கமான முறையில் தீர்த்து வைக்க முதலில் முயல்வார்கள்.
- இணக்கமான முறையில் தீர்வுக்கு எதிர்த் தரப்பினர் உடன்படவில்லையானால் ஒரு முடிவை கண்டு கொள்ள விசாரணை நடத்தப்படும்.
- விசாரணை முடிவில் பாகுபாட்டினை நிறுத்தி மனித உரிமையினை மதித்து, மீண்டும் குறிப்பிட்ட நபரினை நல்லமுறையில் நடத்துமாறும் உத்தரவும் வழங்கலாம்.

தங்களுக்கு நடந்த ஒரு 'அநியாயமான செயல்கள்' அல்லது 'இன பாகுபாடு' என்பது சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க கூடியதா? என்ற தகவல்களை நேரடியாக அறிந்து, கற்றுகொள்ள விரும்புவர்கள் 'ஒன்ராரியோ மனித உரிமைகள் சபை' (Ontario Human Rights Commission) என்னும் நிறுவனத்தின் இணையத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். அதன் விபரங்கள் வருமாறு.

Ontario Human Rights Commission
180, Dundas St., West 7th Floor
Toronto, Ontario M7A 2R9
416 326 9511 அல்லது 1 800 308 5561
இணையத்தளம்: www.ohrc.on.ca

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■


காலம் சஞ்சிகையின் இலக்கிய நிகழ்வு

**வாழும் தமிழ்**

பலவகைப் புத்தகங்களின் விற்பனை

**'கவிதை' - கருத்தரங்கம்**

**Sep 06, 2010**

12 மணிமுதல்

Scarborough Civic Centre
McCowan & Ellesmare
150 Borough Drive
Scarborough, ON

416 731 1752



உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call

**Siva Panchalingam,** B.Com.
(Licensed Insurance Broker)

Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON





# Shan Thayaparan
Sales Representative



**Thinking of .....**
Selling
Buying or
Renting....
**For all your Real Estate needs**
**Please Call me First.**

***Dir: 416-567-7675***
***Web:shan123.com, Email: shan123@rogers.com***
***Bus: 416-321-2228***

Flexible Commission
Reliable Service & Full Time Agent
Free Market Evaluation

RE/MAX Above the Crowd! Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages
Also We do Refinances and find Tenants for your Rental properties

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

# பாலியல் வன்முறை



மஞ்சுளா ராஜலிங்கம்


கடந்த யூலைமாதம் 13ந் திகதி காலை ஐந்து மணியளவில், தன் தாயின் கல்லறைக்கு மலர் வைக்கப்போன 61 வயதான பெண்ணொருவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டதுடன் மிகவும் பலமாக தாக்குதலுக்கும் ஆளானார். துரதிருஷ்டவசமாக, இதை யாரும் காணாததுடன், அவர் தாக்குதலுக்கு உள்ளானதில், கிட்டத்தட்ட நாலரை மணித்தியாலங்கள் மயக்கத்திலேயே இருந்துள்ளார். பின்னர் மயக்கம் தெளிந்து எழுந்த அவர், தவழ்ந்துபோய், அங்குள்ள அலுவலகக் காவலரின் கவனத்தையீர்த்து, பின்னர் காவல் துறை வந்து, விசாரணையைத் தொடர்ந்தது. அவர் கடுமையான தாக்குதல் காரணமாக, மிகவும் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இப்படி பாலியல் வன்முறைக்கும், கற்பழிப்புக்கும் இலக்கானவர் பலர் இன்றும் நமக்குள்ளேயும் வாழ்கின்றனர். சிலர் மானம், மரியாதை என்றும் குடும்பச் சூழ்நிலை கருதியும் தமக்கு நேர்ந்த கொடுமைகளைச் சொல்லாமலே, ஒட்டாத் தன்மையுடனும், வெறுப்பு மற்றும் மரண பயத்துடனும் தம் வாழ்நாட்களைக் கழிக்க முற்படுகின்றனர். சிலர் தமக்கு நடப்பது பாலியல் வன்முறைதான் என்பதைக்கூடப் பிரித்தறிந்து பார்க்கும் பகுத்தறிவில்லாமல், அப்பாவியாய் இருக்கின்றார்கள்.

கற்பழிப்பு என்றால் பலரைப் பொறுத்தளவில், இருளான இடத்தில், மறைவில், புதரில், யாருமில்லா அந்தகாரத்தில், நம் வலிமைக்கு மீறி, நமக்கு முன்பின் அறிந்த, அறியாத ஒருவரால் நடாத்தப்படும் பாலியல் தாக்குதல் என்ற எண்ணம் இருக்கின்றது. பாலியல் பலாத்காரங்கள் இந்த வகையை மட்டுமே சாராது.

பயமுறுத்தக் கூடிய இந்த உண்மை நிலை யானது மிகவும் வித்தியாசமான கோணங்களில் இருந்தும் பெண்களைத் தாக்குகின்றது. கற்பழிப்பு மற்றும் பாலியல் பலாத்காரங்கள் நமக்கு அறிமுகமில்லாத ஒருவருடன் நடப்பதைவிட, நாம் நம்பிக்கையும், அறிமுகமும், பழக்கமும் வைத்துள்ளவர்களால்தான் அதிகம் நடக்கின்றது. ஒன்ராரியோ மாநிலத்தைப் பொறுத்த அளவில், 69 முதல் 83 சதவிகிதம் பாலியல் கொடுமைக்கு உள்ளாகும் பெண்கள் தங்கள் சந்தேக நபரை ஏற்கெனவே அறிந்தவர்கள் என்று அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

நமது விருப்பம் அனுமதி இன்றி, அண்மையில் நாம் சந்தித்த ஒருவர், ஒன்றாக வெளியில் கலந்து பழகிய ஒருவர், அல்லது நம்மைத் திருமணம் செய்த ஒருவர் அல்லது நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட ஒருவராகவும் இருக்கலாம், இவ்வாறான பழக்கத்தில் உள்ள ஒருவரால் நடாத்தப்படும் பாலியல் வன்முறையே 'அறிமுக அடிப்படைப் பலாத்காரம்' என்பதாகும். இதில் ஆயுதப் பயன்பாடு, பயமுறுத்தல், உடல்மீதான பாலியல் பலாத்காரங்கள் என்பன அடங்கலாம். நாம் ஒருவர் மீது வைத்த பரிபூரண நம்பிக்கையின் உறுதியைக் குலைக்கும் செயலே இது.

ஒரு விடயம், பாலியல் கொடுமைகள் பெண்களுக்கு மட்டும் தான் நடக்கும் என்பது தவறு. இது ஆண்களுக்கும்கூட, இன்னொரு பெண்ணாலோ அன்றி ஆணாலோ நடக்கலாம். எனினும் இக்கட்டுரை பெண்களைத் தான் கருத்தில் கொண்டு, எழுதப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர், வேலையில் ஒன்றாகப் பழகும் ஒருவர், நண்பர், காதலர் அல்லது நமக்கு அறிமுகம் இல்லாத ஒருவர், இப்படியானவர்களால் நடாத்தப்படும் பாலியல் வன் முறைகளுக்குக் கடுமையான சட்டங்கள் உண்டு. நடாத்தப்படும் மூன்று விதமான பாலியல் அனுபவங்களை அல்லது முறைகளைக் காரணிகளாக வைத்து, இப்பாலியல் வன்முறை அந்தப் பெண்ணின் விருப்பத்துடன் நடந்ததா இல்லையா என்பதை ஒரு நீதிமன்றம் தீர்மானிக்கும்.

## பாலியல் சம்பந்தப்பட்ட கொடுமை:

இதற்குச் சட்டத்தில், வலுவான காரணங்களைச் சுட்டிக் காட்டி விவரிக்கும் சரியான தீர்மானங்கள் இல்லை. காவல்துறை, நீதி மன்றங்கள், சட்ட வல்லுனர்கள், இவர்களால் ஒரு பாலியல் பலாத்காரத்தின் உடனடி இயக்கத்தின் அடிப்படைக் காரணி எதனால் உந்தப் படுகின்றது என்பதைச் சரியாகக் கணிக்க முடிவதில்லை. அதாவது, பாலியல் கொடுமையைச் செய்தவர், எந்த அடிப்படை நோக்கத்தில், என்ன மனநிலையில், எதை மனதில் கொண்டு, இந்தக் கொடுமையைச் செய்தார் என்பதைப் பிரித்தறிவது கடினம். ஆணுறுப்பு பெண்ணுறுப்புக்குள் பலவந்தமாகச் செலுத்தப் படும் செயல்தான் கற்பழிப்பு என்ற எண்ணமே நம்மில் பலருக்கு உண்டு. அந்தச் சம்பவம் மட்டுமே கற்பழிப்பாகாது. முழுதாக நிறைவேறாத இம்மாதிரிச் செயலின் தொடக்கத்திற்கும், ஒரு ஆணின் மேல் கற்பழிப்புக் குற்றம் சுமத்தி அவரைச் சட்டத்தின் பிடியில் மாட்ட வைக்கலாம். குற்றஞ்சாட்டப் பட்டவர் குற்றவாளி என்று நிரூபிக்கப் பட்டால், அவர் கூடியபட்சம், பத்து ஆண்டுகள்வரை, சிறைச்சாலையில்



அடைக்கப்படலாம். சிறிய குற்றம் என்று இனங்காட்டப் படுகையில், அங்கு சிறைச் சாலையில் அடைக்கப்படுதல் கூடியபட்சம் 18 மாதங்களாக இருக்கும்.

ஆயுதக் கையாளல், மூன்றாமவரைப் பயமுறுத்திப் பாலியல் தொடுகைகளைச் செய்தல், உடலில் பாலியல் ரீதியான காயங்களை ஏற்படுத்தல், இம்மாதிரியான வன்முறைகளில் இன்னொருவருக்கும் ஆபத்து ஏற்படும் பட்சத்தில் (தாக்கப்பட்டவரின் குழந்தை, கணவர், மனைவி அன்றி இன்னொரு பிறமனிதர்) இது, நீதிமன்றச் சட்டப்பிரகாரம், இருவரும் விரும்பி உறவுகொண்டனர் என்ற ரீதியில் பார்க்கப் படுவதில்லை. அதேநேரம், ஒருவர் இன்னொருவரின் பாலியல் வன்முறைகளுக்குத் துணை போயிருந்தாலும், அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், 14 வருடங்கள்வரை சிறையில் அடைக்கப்படலாம். உடலில் காயங்கள் நிரந்தரமாகவோ, கடுமையாகவோ பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படும்போது ஏற்படுத்தப்படின், இதற்கும் கடுமையான தண்டனைகள் சட்டத்தில் உண்டு. இந்நிலை ஒருவரை அவரது ஆயுட்காலம்வரை சிறையில் தள்ளக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

ஒரு பாலியல் பலாத்காரம் என்பது பாதிக்கப் பட்டவரின் சம்மதம் இல்லாமல் நடந்தது என்பதை உறுதிப்படுத்தும் வழிகளில் பல வகை உண்டு. அதாவது,

- பாலியல் கொடுமையைச் செய்தவர் தன் விருப்பத்தை மட்டுமே பாதிக்கப்பட்டவருக்குச் சொல்லி, அவர் விருப்பத்தை நிராகரித்தல்.
- பாதிக்கப்பட்டவர் அந்தச் சம்பவம் நடக்கும் போது, விருப்பம் இல்லாதிருந்தும், மறுப்புச் சொல்லும் பக்குவத்தையும், மனநிலையையும் அந்தக்கட்டத்தில் இழந்திருத்தல்.
- தன் மேல், பாதிக்கப்பட்டவர் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்தி, ஒருவர் வலுக்கட்டாயமாக தன் ஆசையை நிறைவேற்றல்.
- பாதிக்கப்பட்டவர் மறுத்துச்சொல்ல வேண்டிய வார்த்தைகளைத் தொலைத்திருத்தல்.
- உடலுறவு இருவரின் சம்மதத்துடன் நடந்து கொண்டிருந்த கட்டத்தில், பாதிக்கப்பட்டவர், இடையில் மறுப்புத் தெரிவிக்கும் வேளையிலும், அவரின் மனநிலையை மதிக்காமல், குற்றஞ்சுமத்தப் பட்டவர் வலுக்கட்டாயமாக தன் வன்முறையைக் கையாளல்.

பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து துன்புறுத்தி, அவர்கள் வேதனையில் தவிப்பதைப் பார்ப்பதில் சில ஆண்களுக்கு ஒரு வக்கிர திருப்தி. அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணானவள் மீண்டும், மீண்டும் அந்த நபரை தன் வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் சந்திக்க வேண்டிய (வேலை, பள்ளி, போகும் பாதை, வீடு) நிர்ப்பந்தங்கள் ஏற்படும் இடத்தில், மனதாலும், இந்த வேதனைகளைச் சந்திக்க, பயப்பட வேண்டிய கட்டாயம். தொடர்ந்தும், நடந்த சம்பவம் மறக்க முடியாதவாறு மனதில் நிழலாடிக் கொண்டே இருக்கும். ஆனால், தெரியாத ஒரு நபரால், சூறையாடப்படும் தருவாயில், அவரை மீண்டும் காண்பதென்பது அரிதானதொன்றாகவே இருக்கும். தான் தினம் தினம் காண்பவரால் நடாத்தப்பட்ட கொடுமையாகினும், அந்த நபர் தன்னைத் திருப்பியும், தாக்கி, பாலியல்ரீதியில் துன்புறுத்தி, பயமுறுத்தி, அடித்து உதைத்து, அல்லது உயிருக்கே உலைவைத்து விடுவார் என்ற பயத்தில் பெண்கள் தமக்கு நடந்த சம்பவத்தைப்பற்றி வெளியே சொல்லுவதில்லை. தமக்குள்ளேயே ஒடுங்கிப் போவதுடன், இன்னொருமுறை பழகியவர்களையே நம்பவும் பயப்படுவர்.

பெண்ணின் எண்ணத்தையும், விருப்பத்தையும் மதிக்காமல், அவள் மறுப்புச் சொல்வது தனக்கு எந்தவிதத்திலும் புத்திக்கு எட்டவில்லை, அதுபற்றி தனக்குக் கவலையும் இல்லை என்று நினைக்கும் ஆணினால் இப்படியான துணிகரமான குற்றங்களைச் செய்ய இலகுவில் முடியும்

சில பெண்களின் செயல்கள், நடத்தைகளும் கூட ஒரு ஆணின் மனதில் அழைப்பு விடுப்பது போல் தெரிவதால், இப்படியான குற்றங்கள் நடப்பதும் உண்டு. சிலரின் நடையுடை பாவனைகள் ஆண்களை, தப்புசெய் என்று சொல்லவைப்பது போல் அமைந்துவிடும். பெண்கள் உள்ளாடையில்லாமல் செல்லல், கண்ட கண்ட வாகனங்களை நிறுத்தி வழி கேட்டல், கொண்டுபோய்விட இடம் கேட்டல், மதுபோதையில் இருத்தல், தவறுதலாக நடை பெறுவதுபோல் மார்பால் முட்டுதல் போன்ற நடத்தைகள் எல்லாமே தப்பான பாதைக்குப் போகவும், மற்றவர்களால் பாலியல் வன்முறைக்குட்படுவதற்கும் திறவுகோல்கள்.

மது சிறந்த சிந்தனையைத் தடை செய்கின்றது. நண்பர்களாய் பழகும் பெண்களைக்கூட தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கச் செய்கின்றது. அந்த ஆண், சம்பந்தப்பட்ட பெண்ணையும் மது அருந்தும்படி செய்து, அப் பெண்ணின் வலிமையை நலிந்துபோகும்படி செய்து, பின் தன் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றான். நிதானத்தில் இல்லாத பெண், பின்னர் தனது தப்பையுணர்ந்து, மனதை நொந்து கொள்கின்றாள். இதில் பெண்ணின் தப்பும் பாதி உள்ளது என்பதை நாம் இக்கட்டத்தில் புரிந்துகொள்ள வேண்டும்.

வேண்டாம், விருப்பமில்லை என்று சொல்லும் பெண், வேண்டும் என்றுதான் நிற்கின்றாள் என்று ஆண் நியாயப்படுத்திக் கொள்கின்றான். உடலுறவில் ஈடுபட்டாலும், ஆண், பெண் உறுப்புக்கள் சேர்வதில் இணக்கம் உண்டு, இல்லை என்பதை முன்கூட்டியே, ஆணும், பெண்ணும் பேசித் தீர்த்துக் கொள்ளல் நல்லது என்கின்றது கட்டுரை.

இதேநேரத்தில், கற்பழிக்கப்படும் பெண்கள் எல்லாம் கெட்ட பெண்கள் என்ற எண்ணம் பலரில் ஏற்படுகின்றது. ஆனால் அது தப்பான எண்ணம். அப்பாவியாய், அமைதியாய், அடக்கமாய் இருக்கும் பெண்களிற்குக்கூட இப்படியான கொடுமைகள் எதிர்பாரா தருணத்தில் நடந்து விடுகின்றன.

ஆனால், நாமோ "இவள் சம்மதிக்காமலா இதெல்லாம் நடந்திருக்கும்?" என்று வாய் கூசாமல் பேசுவோம்.

பாலியல் கொடுமைபற்றி நடத்திய ஆய்வின் படி கீழ்க்கண்ட முடிவுகள் தெரிவிக்கப்படுகின்றன:

- கனடியக் கல்லூரிப் பெண்களின் அபிப்பிராயத்தைக் கேட்கையில், ஐந்தில் நான்கு பெண்களாவது, தாங்கள் 'டேட்டிங்' என்று ஆண்களுடன் வெளியில்போய், நேரத்தைச் செலவழிக்கும் தருணங்களிலேயே தமக்குப் பாலியல் கொடுமை அனுபவங்கள் ஏற்பட்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.
- பதினைந்திலிருந்து இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண்களுக்கே அதிகமான பாலியல் கொடுமைகள் நடக்கின்றன.
- ஏழு நிமிடங்களுக்கு ஒருமுறை, ஒரு பெண் பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றார்.
- 48 சதவிகித, கல்லூரியில் படிக்கும் ஆண்கள், தம்மை டேட்டிங் செய்யும் பெண்கள், பிடிவாதமாக இருந்து, தமக்கு உடல்சுகம் தரச்சொல்லி அழுத்தம் தருவதாகச் சொல்லியுள்ளார்கள். இதில் 6 சதவிகித ஆண்கள் தம்மைத் தம் விருப்பத்திற்கு மாறாகப் பெண்களிடம் இழந்ததாகச் சொல்கின்றார்கள். பெண்கள் அவர்களைப் பய முறுத்தி மற்றும் பிளாக்மெயில் செய்து தம் காரியங்களைச் சாதித்துக் கொண்டார்களாம்.
- பத்தில் ஒன்பது பங்கு பாலியல் பலாத்காரங்கள் முறைப்பாடு செய்யப்படுவதில்லை.
- 60 சதவிகித பலாத்காரங்கள் பொதுப்படையான இடங்களிலும், 38 சதவிகித பலாத்காரங்கள் பாதிக்கப்பட்ட பெண்ணின் வசிப்பிடத்திலுமே நடாத்தப்படுகின்றன. இதில் அடுத்த இடம், காருக்குள் நடக்கும் பாலியல் வன்முறை.

எல்லாவிதமான வயதினருக்கும்(பெண்கள்) இக்கொடுமை நடக்கின்றது எனினும், பருவ வயதுடைய பெண்களே இதில் அதிகம். இவற்றில் காதலன் மற்றும் சகமாணவர்களின் பங்கு அடக்கம்.

மற்றப் பெண்களின் நலம் கருதியும், இப்படியொரு சம்பவம் மீண்டும் நடக்காமல், அல்லது தலைக்குமேல் வெள்ளம் போகுமாற்போல், கடைசியில் கொலை, தாக்குதல் போன்றவையில் போய்முடியாமல் இருக்கவும், பெண்கள் தமக்கு நடந்த அனுபவங்கள், பாலியல் கொடுமை சம்பந்தப்பட்டது என்று உறுதியாக தம் மனதில் நம்பினால், அதைப்பற்றி முறைப்பாடு செய்வது நல்லது.

தயவுசெய்து, உங்கள் உணர்வுகளை, எதிர்காலம் கருதி மூடி மறைக்காதீர்கள். நம் பெண்களுக்குள்ளேயே இப்படி எத்தனையோ பேர் நம் மனதில், நமக்கு நடந்த கொடுமைகளை மூடிமறைத்து, வாழ்க்கையைப் பொய்யாய் நடத்துகின்றோம். அது இன்னும் தொடரக்கூடாது.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■



SUJAN SHAN will give you an EDGE over the competition
Thinking of Buying or Selling..
Call me for a free consultation
416.402.1040
LEADING EDGE PROMOTION and ADVERTISING:
Your Home's Own Website Address
Your Home Advertised 24hrs a Day Until it Sold
Virtual Tour and Professional Photo Shoot
Guaranteed Internet Traffic to Your Site and Flyer Distribution in Your Area
Professional and Exceptional Negotiation Skills to Sell Your Home for TOP DOLLARS
SUJAN SHAN Will Take the Stress Out of Buying or Selling Your Home and Will be There to the END
BANK SALE
www.OntarioBankSale.com
Brimley/Danforth
$274,900
3+2Bed
2Bath, 2Kitchen
Bsmt Separate Entrance
Morningside/Finch
$305,000
4+1Bed,2Bath
2Kitchen, Finished
Bsmt, Sep.Entrance
Mccowan/Sheppard
$314,900
3Bed
1Bath
Lot 50x120 feet
Ellesmere / Scarborough Golf Club
$325,000
4+1 Bed
2Bath
Finished Bsmt
Birchmount/ Eglinton
$349,900
3+2 Bed, 2Bath
2Kitchen, Finished Bsmt
Separate Entrance
MARKHAM LISTINGS
Markham
$588K
4+1Bed,3Bath
Lots Of Upgrades
17' In The Living Room
California Shutters
Markham
$624,900
5Bedroom,4Bath
Over 3,300 Sqft.
Granite Counters
Markham
$679,900
5Bedroom, 4Bath, Over 3300sf
Den/Library on the Main floor,
2separate staircases to the BSMT
Markham
$749,900
4+1Bedroom,4Bath
Over 3300sf, 50feet wide lot
Lots of upgrades.
Markham
$759,000
4Bed,3Bath, Over3000sf
Corner Lot
Lots of upgrades.
CONDOS
Yonge/Dundas
$186,000
BANK SALE, Bachelour Unit
Minutes away from
Eaton Center,Hotel Suite
Warden/Steeles
$229,000
2+1Bed,2Bath
1Parking
Tridel Building
Yonge/401
$365,000
BANK SALE, 1+1 Bed, 2Bath
Luxury 2 Story Loft Unit
9 & 18' Ceiling
Toronto
$189,000
BANK SALE
OVer 1400sf
Have 5 Private office
Call for More Info
$1050,000
Over 1 Acre Lot, total
34 Apartment units,
BANK SALE, Good Cash Flow
அனுபவம், நேர்மை, திறமை, பொறுமை
ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.
வீடு வாங்க விற்க
SUJAN SHAN (B.Eng)
Realestate Broker
Direct: 416.402.1040
Office: 416.321.2228
E-mail: sujan.shan@gmail.com
RE/MAX
Vision Realty Inc. BROKERAGE
2210 Markham Road, Unit 1
Toronto, Ontario M1B 5V6
www.GTAresidential.com


To Buy or Sell Real Estate.....
To Buy or Sell your Home for the Right Price please call me...
RED CARPET Royal Realty Ltd.
Bus: 416-284-5555
Free Market Evaluation
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
Cell: 416-616-7278
22 YEARS Service
# 1 Team in North America
Looking for a New Real Estate Career
Free Real Estate Coaching
• Help & guidance for newly licensed agents • Regular Sales Training from Experts
Trusted for Service and Respected for Results
$340,000 For Sale
$1,800 Net Lease
Markham / Steeles
- Brand New Commercial Unit In High Demand Area
- Excellent Retail Opportunity In An Established Plaza.
- Includes Medical/Dental Offices Personal Services And Variety Of Retail & Commercial Users
- Exposed To Hwy 48 And Direct Access To Hwy 401 And 407.
- Lots Of Parking Available.
$679,000
Mccowan/Highglen
6+2 Bedrooms, 5 Washrooms
Close To Schools,Public Transit
$129,900 For Sale
$1,250 For Lease
Kennedy/Hwy 401
2 Bedrooms, 1 Washrooms
Ideal For First Time Buyers
$644,900
14th Ave/9th Line
5 Bedrooms, 4 Washrooms
3149 Sq Ft. Built By Field Gate
$657,500
King / Younge
5 Bedrooms, 4 Washrooms
2901 Sqft Luxury Home
$449,900
9th Line/North Of 407
4 Bedrooms, 3 Washrooms
Beautiful 4 Years Old
$565,000
14th And 9th Line
4 Bedrooms, 4 Washrooms
Built Less Than 5 Years By Starlane
$349,900
Islington/Finch
3 Bedrooms, 4 Washrooms
Appr. 3 Years Old Newer Home
$394,900
Coxwell/Gerrard
2+1 Bedrooms, 3 Washrooms
Basement Apt With Sep Entrance
$299,900
Warden / Finch
3 Bedrooms, 3 Washrooms
Low Maintenance Fee Condo House
$274,900
Eglinton/Markham
4 Bedrooms, 2 Washrooms
Well Maintained Complex
$215,000 Plus Stock
Military Trail/Morningside
Opportunity To Own 2 Businesses
At An Affordable Price
$439,900
Middlefield/Denison
4+2 Bedrooms, 4 Washrooms
Hardwood In Main & 2nd Flr
$189,900
Finch/ Middlefield
2 Bedrooms, 2 Washrooms
Close To Shopping And Highways
$1,500 Gross Lease
Markham / Steeles
1 Deal Retail/Office, Corner Unit,
Two Entrance,Busy Plaza
Markham/Denison $ 900 For Rent
2 Bedroom Basement Appt. with
Sep.Entrance kitchen and Full Washroom
Markham/Denison $ 2,250 For Rent
4 Bedrooms Double garage home
Over 3000 Sq.Ft
Markham/Lawrence $1,500 For Rent
3+2 Bedrooms, 4 Washrooms
Close To Ttc, Cedarbrae Mall, Library
Tapscott/Mclevin $1,250 For Rent
2 Bedrooms, 1 Washrooms
Well-Maintained South Facing Unit




Flexible Affordable Tutoring Plans to Choose From...

Math, Science, English
Grades 1 to 12




Tutors follow school curriculum and use supplementary materials as well.

Offering at the Following Locations:
Brampton, Mississauga, Markham, North York, & Scarborough

Call: (647) 868-6475/(416) 471-9136

Students improve and excel at school through tutoring. These students will be the aces of tomorrow!

தமிழ் வகுப்புகள் சகல தரத்தினருக்கும் நடாத்தப்படுகின்றது. விபரங்களுக்கு 647-8686475

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# பருவகாலமும் எரி உலைப் பராமரிப்பும்

## (Furnace Inspection)



ராமன் செல்லையா

**வெப்பபடுத்துவதற்குரிய பருவ காலம் தொடங்குவதற்கு முன் வருடாந்திர எரி உலைப் பராமரிப்பு (furnace inspection) மேற்கொள்வது சிறந்த தீர்வு. பழுது வருவதற்கு முன்னரே செய்யப்படும் பரமாரிப்பு பணி நிறைய செலவுகளை மிச்சப்படுத்த உதவும்.**

### முக்கியமான விடயம்:

உங்கள் வீட்டின் வெப்பப்படுத்தும் உபகரணங்களை ஒரு உரிமம் பெற்ற heating contractorஐ கொண்டு வருடந்தோறும் நீங்கள் ஆய்வு செய்யவேண்டியது மிக முக்கியம். உங்கள் furnaceஐ முழுவதுமாக ஒரு பரிசோதனை செய்வதின் மூலம் அது நன்கு திறனுடனும் மற்றும் பத்திரமாகவும் இயங்கி கொண்டிருக்கிறதை நீங்கள் தெளிவாக முடிவு செய்ய முடியும். கோடை காலம் இன்னமும் நம் மனதுகளில் மறக்காமல் இருப்பதால் உங்கள் வீட்டை வெப்படுத்துவது சம்பந்தமான நினைவு தூரத்து கனவாக தான் இருக்கலாம்.

வரும் குளிர்காலத்தில் உங்கள் furnaceஐ தயார் படுத்துவதற்கு இலையுதிர் காலம் தான் சரியான நேரம். ஆனால், heating contractorகளின் பணி இந்த நேரத்தில் மெதுவாக வேகமெடுத்து, குளிர்காலம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரே பாய்ச்சலாக நெருக்கடியாக ஆகிவிடும். அதனால் வெப்பப்படுத்துவது சம்பந்தமாக உங்கள் வீட்டின் பரிசோதனை பணியை நீங்கள் முன்பாகவே செய்தால், எந்த பிரச்சினைகளும் பின்னால் நேரிடாமல் உங்களுக்கு அனுகூலமாக அமைந்துவிடும். மேலும் இதற்காக நீங்கள் மிக குறைந்த விலையில் மிக தரமான பொருள்களை பார்த்து வாங்கவும் முடியும்.

நீங்கள் ஒரு heating contractorஐ தாமதமாக, அவருக்கு வேலை நெருக்கடி இருக்கும் சமயத்தில் நியமிப்பதை விட ஆரம்பத்திலேயே உங்கள் வெப்பப்படுத்தும் பிசோதனை பணியை மேற்கொண்டால் உங்களுக்கு நிறைய பணம் மிச்சமாகும். ஆண்டுதோறும் ஒரு உரிமம் பெற்ற heating contractor மூலம் மேற்கொள்ளும் இந்தப் பணி, இந்த குளிர் காலத்தின் போது உங்கள் furnace உங்கள் வீட்டை வெதுவெதுப்பான இனிய தட்ப வெப்ப நிலையுடன் வைத்திருக்க மிக உதவும்.

### Carbon monoxideஐ கண்டு பிடிக்கும் கருவி:

நீங்கள் உங்கள் furnaceஐ இயங்க வைப்பதற்கு முன், Carbon monoxideஐ கண்டு பிடிக்கும் உங்கள் கருவி நன்றாக இயங்குகிறதா என்பதை பார்த்துக்கொள்ளுங்கள். கருவியின் battery புதிதாக மாற்றவேண்டுமானால் மாற்றிக்கொள்ளுங்கள். உங்களிடம் இத்தகைய ஒரு கருவி இல்லையென்றால் உங்கள் furnaceஐ நீங்கள் ஓடவிடுவதற்கு முன் உங்கள் வீட்டில் ஒன்றை பொருத்துங்கள். Furnaceல் எரியும் எரிபொருள் carbon monoxide எனும் நச்சுவாயுவை வெளியிடும். ஒழுங்கான முறையில் இயங்கும் Furnaceல் இந்த விஷவாயு, வெளியேற்றும் குழாய் வழியாக வெளியேறிவிடும். வெளியேற்றப்படும் பாதையில் பழுது ஏதாவது இருந்தால் carbon monoxide வீட்டினுள் புகுந்துவிடும். இந்த வாயுவுக்கு மணம், நிறம் எதுவுமில்லாததால் இதை கண்டு பிடிக்க முடியாது. மேலும் இது உடல் நலத்திற்கு பெரும் கெடுதலையும் மற்றும் மரணத்தையும் கூட விளைவித்து விடும். ஆகையால் carbon monoxide detector இல்லாமல் உங்கள் furnaceஐ ஒரு போதும் ஓட விடாதீர்கள்.



### வெப்பப்படுத்தும் உபகரணம் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

எளிதில் தீப்பிடிக்க கூடிய எந்த பொருட்களும் உங்கள் Furnaceன் அருகாமையில் இருக்ககூடாது என்பதில் கவனமாக இருங்கள். அப்படி ஏதேனும் இருந்தால் அவற்றை furnace இருக்கும் பகுதி அல்லது அறையிலிருந்து வெகு தூரத்திற்கு தள்ளி வைத்து விடுங்கள். மேலும் நல்ல காற்றோட்டத்தை தடுக்கும். ஏதாவது பொருள்கள் furnaceக்கு அருகில் கிடந்தால் அவற்றை அகற்றிவிடுங்கள். காற்று உள்ளே நுழையும் மற்றும் வெளியே செல்லும் குழாய்களில் அடைப்பு இருந்தால் அவற்றை நீக்கிவிடுங்கள். துணி, Lint மற்றும் furniture போன்றவை காற்றை தடை செய்யும் சில சாதாரண பொருள்களாகும்.

இதன் காரணமாக நீங்கள் புகைபோக்கி (Chimney) மற்றும் அதன் உபகரணங்களை நன்கு பரிசோதனை செய்வது அவசியம். வெளியேற்றும் குழாய்கள் மற்றும் அதன் இணைப்புகளில் ஏதாவது அரிப்பு, சேதம் அல்லது அடைப்பு ஏற்பட்டு காற்று வெளியேறுதல் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறியுங்கள்.

### புகைக்கரி படிவு:

Furnaceஐ சுற்றியுள்ள பகுதியில் கரிப்புகை படிந்துள்ளதா என்பதை கவனியுங்கள். Furnace அல்லது வெளியேற்று குழாயில் ஏதாவது கோளாறு உள்ளது என்பதற்கான அறிகுறி தான் கரிப்புகைக் கசிவு. அது அதிகம் படிந்திருந்தால் ஒரு heating Contractor மூலம் furnaceஐ பரிசோதனை செய்து பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன் சரி செய்யுங்கள்.

### Air filter களை மாற்றுங்கள்:

பழைய fiber glass filterகளை எடுத்து விட்டு, அதற்கு பதிலாக புதிதாக filterகளை மாற்ற வேண்டும். குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது electrostatic filterகளை சுத்தம் செய்யவேண்டும். Air filterகளில் இருக்கும் அடைப்பு காற்று செல்வதை தடுத்து விடும். அதனால் உங்கள் heating system மின் செயல்திறன் வெகுவாக குறைந்துவிடும்.

### குழாய் அமைப்புகளில் கசிவுகள் உள்ளனவா என்பதை கவனியுங்கள்:

குழாய் அமைப்புகளில் ஏதேனும் கசிவுகள் உள்ளனவா என்பதை நன்கு கவனியுங்கள் உங்கள் furnace நன்கு இயங்குவதற்கு இந்த பரிசோதனை மிக முக்கியம் காற்று உள்ளே நுழையும் அல்லது வெளியெ செல்லும் குழாய்களில் துவாரங்கள் இருந்து கசிவுகள் ஏற்படலாம். விரும்பத்தகாத இந்த துவாரங்கள் இரண்டில் ஏதேனுமொரு குழாயில் காற்று கசிந்தாலும். உங்கள் வெப்பப்படுத்தும் மற்றும் குளிரூட்டும் உபகரணங்கள் மிகவும் பாதிக்கப்படும். காற்று உள்ளே நுழையும் குழாய் முழுவதையும் உங்கள் கையை வைத்து லேசாக நீங்கள் தடவி பார்த்தாலே போதும். காற்று கசிந்து ஒழுகுகிறதா என்பதை நீங்கள் உணர முடியும். காற்று வெளியே செல்லும் குழாய் முழுவதிலும் அதன் அனைத்து பக்கங்களிலும் ஒரு tissue paperஐ கொண்டு லேசாக நீங்கள் உரசி பார்த்தாலே போதும் tissue paper குழாயின் ஏதாவது ஒரு பகுதியில் உள் இழுக்கப்படும். அந்த இடத்தில் கசிவு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். எனவே கசிவு இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அனைத்து குழாய் இணைப்புகளையும் முற்றிலும் அடைத்துவிடுவது தான் சிறந்த தீர்வு.

### சிறிதேனும் சந்தேகம் இருந்தால் ஒரு heating தொழில் வல்லுனரிடம் ஆலோசனை பெறுங்கள்:

உங்கள் heating அல்லது cooling system களில் எந்த பகுதியில் சோதனை செய்ய வேண்டும் அல்லது பராமரிப்பு பணியை மேற்கொள்ளவேண்டும் என்பது உங்களுக்கு தெளிவாக தெரியாமல் இருந்தால், ஒரு உரிமம் பெற்ற heating contractorன் உதவியை நாடுங்கள். அவர்கள் உங்கள் கேள்விகளுக்கு நல்ல முறையில் பதிலளித்து, சிறந்த அறிவுரைகளையும் வழங்குவார்கள்.

raman.selliah@thaiveedu.com

■ ■ ■




ARE YOU THINKING OF SELLING, BUYING OR INVESTING IN REAL ESTATE MARKET?

SUJAN SHAN
Real Estate Broker
416 402 1040
Bus: 416 321 2228
E mail: sujan.shan@gmail.com

www.NewReleaseCondos.com

RE/MAX Vision Realty Inc. BROKERAGE
Each Office Independently Owned and Operated
2210 Markham Road, Unit 1
Toronto, Ontario M1B 5V6

# காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்

## கேள்வி - பதில்



**சக்திவேல்**
- ஆயுட் காப்புறுதி முகவர் -

**நாம் புதிதாக திருமணம் புரிந்த தம்பதிகள். எங்கள் இருவருக்கும் வயது முறையே 28, 24 ஆகும். குழந்தைகள் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் ஒரு பங்களா வீடு ஒன்று வாங்கினோம். அத்துடன் எதிர்காலத்தில் ஒய்வூதிய திட்டமாக RRSP ஒன்று ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த நிலையில் எந்த வழியில் திறமையான சேமிப்பு திட்டம் திறம்பட செயற்படும், அதற்கான தகுந்த காரணங்கள் என்ன?**

முன்னர் பிரசுரித்த ஆக்கங்களில் குறிப்பிட்டது போல எந்த சேமிப்பு திட்டமாக இருப்பினும் 'R' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் சேமிப்புத் திட்டம் வருமானவரி இலாகாவுடன் பிணைக்கப்பட்டிருக்கும். குறிப்பாக, RRSPஇனை பொறுத்தவரை வயது 71 வரை சேமிப்பு வருமான வரியின்றி வளர்ச்சியடையும் திட்டமாகும். வயது 71 தாண்டியதும் நீங்கள் அந்த சேமிப்பை முற்றாக எடுக்க முயன்றால் முதல் வாரிசுதாரர் வருமானவரி இலாகா என்பது குறிப்பிடத்தக்கது. பதிலாக 71 வயது தாண்டியதும் இந்த RRSPஇனை முற்றாக மாதாமாதம் கிடைக்கும் வருமானமாக Registered Retirement Income Fund (சுருக்கமாக RRIF) ஆக மாற்றினாலும் அதற்கும் வருமானவரி கட்டியேயாக வேண்டும். அத்துடன் எடுக்கும் சேமிப்பு திட்டம் முற்றாக அல்லது பகுதியாக Stock Marketஇல் இருப்பின் வட்டி வீதத்தின் ஏற்ற இறக்கத்தை பொறுத்து சேமிப்பின் வளர்ச்சியும் அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். கடந்த 2 வருடங்களாக சேமிப்பின் வளர்ச்சி வீதம் -20 வீதத்திற்கும் குறைந்தது யாவரும் அறிந்ததே. பதிலாக, சேமிப்பில் ஒதுக்கும்போது குறைந்தது 5 விதம் விதமான சேமிப்பில் (கடந்த 10 அல்லது 15 வருடங்கள் இந்த திட்டங்கள் எப்படி செயற்பட்டன என்று அவதானித்து) ஒதுக்கினால் எதிர்காலத்தில் பலத்த ஏமாற்றத்தை தழுவுவதை ஒரளவு தவிர்க்கலாம். இந்த மாதிரியான RRSP எடுப்பதாயின் வங்கி, பிரத்தியேக நிறுவனங்களில் எடுப்பதிலும் பார்க்க காப்புறுதி நிறுவனம் மூலம் எடுப்பது பல விதத்திலும் மன ஆறுதலைக் கொடுக்கும். முக்கிய காரணம், கனடிய சட்டத்தின்படி ஒரு காப்புறுதி நிறுவனமும் Bankruptcy செய்யமுடியாது. அத்துடன் காப்புறுதி நிறுவனம் மூலம் எடுக்கும் சேமிப்பு திட்டம் 'காப்புறுதி செய்யப்பட்ட' (Insured) சேமிப்பு திட்டமாகும். அதாவது ஒருவரும் எக்காரணம் கொண்டும் இந்த சேமிப்பை அபகரிக்கவோ அல்லது தடுக்கவோ முடியாது.

வீட்டு அடமானக்கடனை பொறுத்தவரை உங்கள் கட்டுப்பணம் மாதாமாதம் செலுத்தினால் ஏறத்தாழ 25 அல்லது 30 வருடங்களில் முழுக்கடனையும் கட்டி முடிக்கலாம். பதிலாக, கட்டுப்பணத்தை மாதம் இருமுறை, வாரா வாரம் அல்லது அதிவிரைவில் கட்டிமுடிக்கும் திட்டமான 'Accelerated Biweekly' திட்டமாக இருப்பின் முறையே 19, 18, 15 வருடங்களுக்குள் முழுக்கடனையும் கட்டி முடிக்கலாம். கனடிய சட்டத்தின்படி நீங்கள் வாங்கும் வீடு வதியும் வீடாக இருப்பின் இந்த வீட்டை விற்கும்போது கிடைக்கும் மேலதிக லாபம் வருமான வரியின்றி கிடைக்கும் சேமிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலத்தில் பத்திரிகையிலும் வானொலியிலும் வீடுகளின் விலை ஏறத்தாழ 7 அல்லது 8 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்திருந்தார்கள். இந்த 7,8 வீத அதிகரிப்பானது வருமானவரியின்றி ஏற்பட்ட அதிகரிப்பு. இந்த அதிகரிப்பு ஏறத்தாழ 11,12 சாதாரண வட்டி வீதம் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். அத்துடன் வீட்டின் விலை 8, 10 அல்லது 15 வருடங்களுக்குபின் விற்கும் போது நட்டம் ஏற்பட்டது என்ற சரித்திரமே கிடையாது. இந்த இரண்டு சூழ்நிலைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது வீட்டு அடமானக்கடனை முதலில் கட்டிமுடிக்கும் திட்டமே மிகச்சிறப்பான, எதிர்காலத்தில் முற்றிலும் ஆறுதலை கொடுக்கும் திட்டமாக அமையும் என்றால் மிகையாகாது. உங்கள் சூழ்நிலையில் ஆயுள் காப்புறுதியுடன், 30 வருட தவணைக்காப்புறுதியை வீட்டு அடமானக்கடனையும் எதிர்காலத்தில் பிள்ளைகள் பிறக்குமாயின் அவர்கள் படிப்பு முடிந்து வேலை பார்க்கும்வரை ஒரு தற்காலிக பாதுகாப்பு திட்டமாக எடுப்பது சாலவும் சிறந்தது.

**அண்மைக்காலமாக சேமிப்பு திட்டங்களின் வளர்ச்சி வீதம் படு மோசமாக வீழ்ச்சியடைந்தள்ளன. இதன் காரணமாக இந்த மாதிரியான சூழ்நிலையில் எந்த திட்டம் உகந்த திட்டமாக அமையும்?**

10 வருடம் வட்டிவீதம் மாறாத (GIC) திட்டம், Fixed Income Fund, Bond Fund ஆகிய திட்டங்களில் ஆரம்பித்துவிட்டு எதிர்காலத்தில் ஏற்ற இறக்கம் கொண்ட சேமிப்புத்திட்டங்களில் ஒரு குறிப்பிட்ட வீதம் ஒதுக்கிவிடலாம். இந்த மாதிரியான சேமிப்பின் அதிகரிப்பு வீதத்தை அறிய 'Rule of 72' என்ற அணுகுமுறையை உபயோகிக்க வேண்டும். இதன்படி '72'இனை ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தால் வகுத்தால் கிடைக்கும் விடை 'ஒரு குறிப்பிட்ட வருடங்கள்'. உதாரணமாக, வட்டிவீதம் 6 ஆக இருப்பின் 72÷6=12 வருடங்கள். இதன்படி 12 வருடங்களுக்கு ஒருமுறை உங்கள் சேமிப்பு இரட்டிப்பாகும்.

**அண்மையில் நாம் இருவரும் வீடு ஒன்று வாங்கி அதற்கான அடமானக்கடனை ஒழுங்குபடுத்த ஒரு குறிப்பிட்ட வங்கிக்கு சென்று மனுச் செய்தபோது அடமானக் காப்புறுதி தங்கள் மூலம் செய்தால் இலகுவாக பெற்றுக்கொள்ளலாம் அல்லாது போனால் கடினம் என்று சொல்ல நாமும் அதற்கு சம்பதித்தோம். இந்த**

42ம் பக்கம் பார்க்க...

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

**சக்தி என்றால் காப்புறுதி**



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 169 துரித காப்புறுதி இழப்பீடுகள். 39 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance ), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

**மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி**

- 85 வயதிற்குட்பட்ட எவரும் $375,000 வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (BLOOD PRESSURE), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (HIGH CHOLESTEROL).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (OVER WEIGHT)
- அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

**சக்திவேல்**
**416 706 3530**

# BUYING/SELLING HOUSES

## PUNCH SOCKALINGAM

Broker

Century 21

Affiliate Realty Inc. Brokerage*

ADVERTISING
24 HRS. A DAY
7 DAYS A WEEK
UNTIL SOLD

**416-786-2463**

Call Your TOP PRODUCER

Why some properties are sold over asking price?
Why some properties are sold sooner than others?
Who is buying home in your area?





**DO YOU KNOW WHO BROUGHT BUYERS TO THE PROPERTIES WHICH BEING SOLD IN YOUR NEIGHBOURHOOD?**

# இலங்கையிலும் கனடாவிலும் தச்சுவேலையில் பல வருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால்

- **Basement**
  Complete Basement
  Separate Entrance Cutting
  Window Cutting
- **Kitchen**
  Custom Kitchen Cabinets
  Kitchen Modification
  Kitchen Backflash
  Counter tops Granite and Wood
- **Bathroom**
  Custom Bath Cabinets
  Bathroom Modification
  Counter Tops Granite and Wood
- **Floor**
  Hardwood Flooring
  Laminate Flooring
  Vinyl Tiles
  Ceramic Tiling
  Carpet
  Stairs
- **Wall and Ceiling**
  Painting
  Crown Mouldings Work
  Ceiling and Stucco Work
- **Back Yard**
  Custom Deck with Design
  Fence Work
  Storage
- **Repairs**
  Plumbing Repairs
  Basement Repairs
  Kitchen Cabinet Repairs
  Bathroom Repairs
  Floor Sanding and Polishing
  Door and Window Replacement & Repair
  Kitchen and Washroom Fan (Exhaust) Changing
  Washing Machine and Dishwasher Fixing

6 Months or 1 Year
No Payment
No Interest
some conditions may apply

Arul
RENOVATION
*Expert in Sri Lankan & Canadian Carpentry*

5200 Finch Ave. East, Unit 304,
Toronto, ON. M1S 4Z5
Tel : 416-728-2222/416-268-2993

*Quality • Commitment • Satisfaction*




# Moistஐ கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



பிரபா சின்னா

கடந்த கட்டுரையில் Air Leakage இருக்கும் வீடுகளில் ஏற்படும் ஈரலிப்புப் பிரச்சினைகள் பற்றி ஓரளவு விளக்கியிருந்தேன். உங்கள் வீட்டில் Moisture Problems உண்டா என்பதை என்னென்ன அறிகுறிகளால் கண்டு பிடிக்கலாம், அவற்றை என்னென்ன வழிமுறைகளால் ஓரளவு நீங்களாகவே குறைத்துக் கொள்ளலாம் என்பவை பற்றித் தெளிவடைந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். மேலும் இக்கட்டுரையின் மூலம் இப்பிரச்சினையை மிகச்சிறந்த முறையில் தீர்க்கக் கூடிய வழிமுறைகளை விளக்கமாக உங்களுக்குத் தரவுள்ளேன்.

வளியில் உள்ள நீராவியால் வளி ஈரப்பதன் அடைகின்றது சூடான வளி கூடியளவு நீராவியைக் கொள்ளக் கூடியதாக இருக்கும். வளியின் ஈரப்பதன் Relative Humidity (R.H) ஆல் அளக்கப்படுகின்றது அதாவது R.H ஆனது 50%எனில் வளியானது தான் வைத்திருக்கக் கூடிய நீராவியில் அரைப்பகுதியையே வைத்திருக்கின்றது என்பது கருத்தாகும். வளி சூடாகும் போது, அதனால் கூடியளவு நீராவியை வைத்திருக்கக் கூடியதாக இருக்கும். இதனால் R.H குறைவடையும். கீழ் வரும் உதாரணத்தின் மூலம் இதை விளக்குகின்றேன்.

பனிக்கால வேளையில் வெளி வெப்பநிலை $-10^{O}$Cஆக இருக்கும் போது R.H 80% இருக்கின்றது என எடுத்துக் கொள்வோம். Air Leakage உள்ள வீட்டில் இந்த வளி உட்புகும் போது வெப்பநிலை $20^{O}$Cக்கு உயர்த்தப்படும் நிலையில் R.H 10% ஆகக் குறைவடையும். இதனாலேயே பனி காலத்தில் வீட்டினுள் உலர்ந்த நிலை காணப்படும் உலர் வளியைச் சுவாசிப்பதனால் சுவாசத்தோடு சம்பந்தப்பட்ட தொண்டைநோ, சுவாச அழற்சி நோய்கள், தோல் நோய்கள் உருவாக ஏதுவாகின்றது. இந்த நிலையைத் தவிர்க்க Humdidifiersஐப் பாவித்து ஈரப்பதனைக் கூட்ட வேண்டும். Health Canada, பனிகாலத்தில் ஒரு வீட்டின் ஈரப்பதன் 30%இற்கும் 55%க்கும் இடையில் வைத்திருக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

இதே வேளையில் வீட்டினுள் உள்ள வளியின் ஈரப்பதன் 55%இற்குக் கூடுதாக உயரும் போதும் பல பிரச்சினைகள் உருவாகும். வெப்பமான நாட்களில் A.C போடும் போது மேலே விளக்கியதற்கு எதிர் விளைவாக Air Leakage உள்ள வீடுகளில் ஏற்படுகிறது. இதன் விளைவாக வீட்டினுள் ஈரப்பதன் அதிகரிக்கும். இதனால் சுவர்களில் பூஞ்சணம் பிடித்தல் பக்டீரியா வைரசுகளின் வளர்ச்சி கூடி நோய்கள் உருவாதல் ஆஸ்த்மா கூடுதல், போன்றவற்றோடு பல விளைவுகளைக் காணக் கூடியதாக இருக்கும். இந்நிலையைத் தவிர்க்க Dehumidifiers பாவிப்பது மிகச் சிறந்ததாகும். Dehumifiers வளியிலுள்ள மேலதிக ஈரப்பதனை உறுஞ்சுவதனால் சுவர்களில் யன்னல்களில் நிலத்தில் படியும் நீராவி குறைக்கப்படுகின்றது. இதேவேளை Air Leakageஉம் சீர் செய்யப்பட்டால் மேலதிக பலனைக் காணலாம் பனிக்காலங்களில் Dehumifiers பாவிப்பதைத் தவிர்ப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

பனிகாலத்தில் Air Leakage உள்ள வீடுகளின் கூரைகளில் காற்றோட்டம் (Ventilation) சிறந்த முறையில் இல்லாதுவிடின் நிண்ட காலப் பாதிப்பு ஏற்படுகின்றது. உதாரணமாக சூடான ஈரலிப்பான காற்று (R.H 50%, $20^{O}$C) மேலெழுந்து கசிந்து வெளியேறும் போது வெப்பநிலை $9^{O}$Cக்குக் குறைவடைய R.H 100% ஆகக் கூடும். இந்நிலையில் நீராவிப்படிவு ஏற்பட்டு கூரைகள், சுவர்கள் பழுதடையும் வாயுப்பரிமாற்றம் நடைபெறாது விட்டாலும் கூட Insulation இல்லாத குளிர்ந்த பரப்பைக் கொண்ட யன்னல்கள், கதவுகளில் சூடான ஈரப்பதன் கூடிய காற்றுப் படும் போது வெப்ப நிலை குறைவடைய நீராவி நீர்த்துளிகளாக மாறிப் படியும்.

வெப்பமான நாட்களில் அதாவது இலை துளிர்கால முடிவில் கோடைகால தொடக்கத்தில் நிலம் நன்றாகச் சூடாக்கப்பட்டிருக்காது. இந்நிலையில் நிலக்கீழ்ப் பகுதியின் (Basement) வெளிச் சுவர்கள் நிலத்தோடு தொடர்பு பட்டிருப்பதால் வெப்பநிலை குறை வடைந்திருக்கும். Insulationஉம் Air Leakage Sealingஉம் நல்ல நிலையில் செய்யப்படாத வீடுகளில் Basementஇனுள் உட்செல்லும் சூடான ஈரப்பதன் கூடிய காற்று மேலும் குளிர் வடைந்து. ஈரப்பதன் கூடுவதனால் சுவர்கள் நிலங்களில் நீராவிப்படிவு எற்பட்டு பாதிப்புக்களை ஏற்படுத்தும். இதனால் மேலதிக நீராவியை உறுஞ்சுவதற்காக இக்காலங்களில் Dehumifiersஐ Basementஇல் கோடை காலங்களில் பாவிப்பது மிகவும் முக்கியமாகும்.

வீட்டினுள் ஈரப்பதன் கூடும்போது நீராவிப்படிவும் கூடுதலாக இருக்கும் எனப் பார்த்தோம் ஈரப்பதன் கூடுவதற்கு Air Leakage மட்டும் காரணமல்ல. வேறு பல வழிமுறைகளாலும் இது கூட்டப்படுகின்றது. அவையாவன:-

- ஒரு வீட்டின் குடும்பத்தில் 4 பேர்கள் இருந்தால் அவர்கள் மூலம் கிழமைக்கு 30 – 40 லீற்றர் வெளிபேற்றப்படும்.
- கோடை காலத்தில் வீட்டினால் உறுஞ்சப்படும் நீராவி இலைஉதிர் காலத்தின் போது 20–40 லீற்றர்/கிழமைக்கு வீதம் 4 கிழமைக்கு வெளியேறுகிறது.
- ஒரு புதிய வீட்டின் கட்டப் பொருட்களிலிருந்து 25–35 லீற்றர்/கிழமைப்படி 18 மாதங்களுக்கு வெளியேறும்.
- சமையல், குளியல், கழுவல், நிகழ்ச்சிகளின் போது 15–20 லீற்றர் கிழமைக்கு வெளியேறும்.
- வீட்டினுள் விறகு உலரப்போடும் போது 15–30 லீற்றர் கிழமைப்படி மூன்று பருவ காலத்திற்கு அதாவது 9 மாதத்திற்கு வெளியேறும்.
- உடுப்புகள் காயப்போடும் போது 10–15 லீற்றர்/கிழமை.
- Humidifiers. (பாவனையைப் பொறுத்தது)
- வீட்டினுள் வளர்க்கும் தாவரங்கள், மீன் தொட்டி வீட்டினுள் நீச்சல் தடாகம், சுடுநீர்த் தொட்டி, Green houses முதலியவற்றிலிருந்து கணிசமான நீராவி வெளியேறும்.

வீட்டினுள் கூடும் ஈரப்பதனைச் சீர்ப்படுத்துவதற்கு காற்றோட்டத்தைக் கூட்டவேண்டும். குளியலறை, சமையலறைகளில் பொருத்தியிருக்கும் Exhaust fans Heat Recovery Ventilater ஆகியவற்றைக் தொடர்ச்சியாகக் கணிசமான நேரம் தொழிற்பட விடுவதோடு யன்னல்களையும் முழுமையாகத் திறந்து வைத்தால் மேலதின ஈரப்பதனால் யன்னல்களில் படிந்திருக்கும் நீராவிப் படிவுகளை அகற்றலாம்

வீட்டினுள் ஈரப்பதனைக் கூட்டுகின்ற வழிமுறைகள் காற்றோட்டத்தைக் கூட்டும் வழிமுறைகள், வீட்டின் குளிர்ந்த பரப்புக்கள் எல்லாமாகச் சேர்ந்தே ஒரு வீட்டில் எவ்வளவு நீராவிப்படிவு ஏற்படுத்தும் என்பதைத் தீர்மானிக்கின்றது.

உங்கள் வீட்டின் ஈரப்பதன் கூட்டப்படுவதற்கு மேற்குறிப்பிட்ட எந்த விதமான காரணிகளும் காணப்படாதவிடத்து, எரிபொருள் பாவிக்கப்படும் கருவிகளைப் பரிசோதிப்பது அவசியம் Furnace, Hot water heater, Boiler, Fire Place, Wood Stove முதலியவற்றிற்கு காற்றோட்டம் தகுந்த முறையில் இருக்கின்றதா என அவதானிக்கவும். Chimney தடைபட்டிருந்தால் எரிபொருட்களோடு அதிகளவு நீராவியும் வீட்டினுள் சிந்தப்படும். அத்தோடு உயிராபத்தை விளைவிக்கின்ற காபன் மொனொக்சைட் வாயுவும் வெளியேறும் எனவே தகுந்த பரிசோதகரைக் கொண்டு பரிசோதனை செய்து அதற்குரிய மாற்று வழி முறைகளை அமைத்தல் முக்கியமானது. காற்றோட்டம் போதாமையும், சக்திவாய்ந்த Exhaust fans தொடர்ச்சியாக வேலை செய்வதுமே எரிபொருள் வாயுக்களை சிந்தவைக்கின்றது. இது நடைபெறுகிறதா என்பதை Gas water heaterஇன் பக்கத்தினல் கறைபடிதல் Fire place இருந்து புகைவருதல் Pilot lights அணைதல், காபன் மொனொக்சைட் கண்டு பிடிக்கும் கருவி மணி ஒசை எழுப்புதல் போன்றவற்றின் மூலம் கண்டு பிடிக்கலாம்.

பரிசோதகர் தரும் அறிவுறுத்தல்களுக்கமைய தேவையான திருத்தங்களைச் செய்யாமலோ அல்லது முக்கியமான இடங்கலில் Carbon-monoxide detectorஐயும் பொருத்தாமலோ விடுவீர்களானால் பெரும் உயிராபத்துக்களைச் சந்திக்க வேண்டி நேரிடும் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

இக்கட்டுரை உங்களுக்கு மேலும் பல தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் தந்திருக்கும். தொடந்துப் பல முக்கிய விடயங்களுடன் அடுத்தடுத்த கட்டுரைகளில் சந்திப்போம் என்பதை மகிழ்ச்சியோடு கூறி விடை பெறுகிறேன்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில் ஏற்...

40ம் பக்கத் தொடர்ச்சி...

**இக்கட்டான நிலையிலிருந்து விலக என்ன வழி?**

இந்த மாதிரியான நிர்ப்பந்தங்கள் விதிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமில்லை. இதை அந்தந்த வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது இந்த மாதிரியான முறைப்பாடுகளை கண்காணிக்கும் அமைச்சுக்கு புகார் செய்யலாம். அடமானக் காப்புறுதிக்கு நிச்சயமாக தங்களுடன் மனுச் செய்யவேண்டும் என்று அடமானக்கடன் விண்ணப்ப பத்திரத்தில் இல்லாத படியால் அடமானக் கடன் கிடைத்த அடுத்த மாதமே நீங்கள் பிரத்தியேகக் காப்புறுதிக்கு மனுச்செய்துவிட்டு இந்த அடமானக் காப்புறுதியை ரத்து செய்தால் அடமானக் கடன் விடயமாக ஒரு விதமான பிரச்சினையும் ஏற்படாது. மேலும், வங்கி மூலம் அடமானக் காப்புறுதி செய்வதனால் ஏற்படும் விளைவுகளில் முக்கியமான விடயங்கள் வருமாறு.

- ஏதாவது காரணத்தையிட்டு நீங்கள் வதியும் வீட்டை வாடகைக்கு கொடுத்து நீங்கள் வேறு ஒரு வீட்டில் வாடகைக்கு இருக்க முயன்றால் இந்த காப்புறுதி செல்லுபடியாகாது.
- ஒரு வங்கியை விட்டு இன்னுமோர் வங்கிக்கு அடமானக் கடனை மாற்றும்போது உங்கள் காப்புறுதியும் ரத்து செய்யப்படும்.
- அடமானக் கடன் குறைய, குறைய அடமானக் காப்புறுதியும் அதற்கேற்ப குறையும். ஆனால் மாதாந்த கட்டுப்பணத்தில் ஒரு விதமான கழிவும் கிடையாது. இந்த காப்புறுதியின் உரிமையாளர், வாரிசுதாரர் ஆகிய இருவரும் வங்கியொழிய உங்கள் குடும்பத்தை சார்ந்தவர்கள் அல்ல.
- மரணம் ஏற்பட்டபின்னர்தான் அநேகமாக உங்கள் மருத்துவ விவரங்களை விசாரிக்க வங்கியுடன் தொடர்பு கொள்ள காப்புறுதி நிறுவனம் முயற்சி செய்யும். இந்த தாமதம் பற்றிய விவரம் அறிவதற்கு உங்கள் காப்புறுதி நிபுணர் யார் என்று தெரியாத படியால் இது வாரிசுதாரரின் பொறுமையை சோதிக்கும் விளைவை ஏற்படுத்தும். அத்துடன் ஏதாவது காரணம் காட்டி உங்கள் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையும் நிராகரிக்கப்படும் சாத்தியமும் உண்டு.

ஆனால் பிரத்தியேகமாக மனுச்செய்யும் காப்புறுதியை பொறுத்தவரை மனுச்செய்த ஆரம்பத்தொகை, கட்டுப்பணம் காலவரை முடியும்வரை ஒருபோதும் மாறாது. அத்துடன் காலவரை முடியுமுன் அல்லது முடிந்தபின் உங்கள் வயது 65, 70, அல்லது 75 வயதிற்குள் (நிறுவனங்களை பொறுத்து) இதனை ஆயுள் காப்புறுதியாக மருத்துவரீதியின்றி நீங்களோ அல்லது உங்கள் குடும்ப அங்கத்தவரோ மாற்றி காப்புறுதி இழப்பீட்டு தொகையை வருமான வரியின்றி 'நிச்சயமாக' மீளப்பெறலாம். காரணம், கனடாவினை பொறுத்தவரை 'மரணம்', 'வருமான வரி' ஆகிய இரண்டுமே நிச்சய காரணிகள் ஆகும்.

தொடரும்...

saththivel@thaiveedu.com

■ ■ ■

First step to receiving Provicial and Toronto rebates is an

ENERGY AUDIT

Prabha Sinna

Tel: 416.655.9464

Do the pre-audit > Do the retrofit > Do the post-audit > Get the cheque in the mail


HomeLife/Future Realty Inc., Brokerage*
Birchmount & Ellesmere
•4 Bed Rooms
•3 Wash Rooms
$349,900
Warden & Finch
•3 Bed Rooms
•4 Wash Rooms
$299,000
Sheppard & Brimley
Business Unit
$119,000
Steeles & Staines
•3 Bed Rooms
•3 Wash Rooms
$419,900
Mccowan & Finch
•3+1 Bed Rooms
•2 Wash Rooms
$294,000
Midland & Lawrence
•3 Bed Rooms
•2 Wash Rooms
$157,900
Downtown Condo
X2
&
ICE2
&
ONE BLOOR
With More VIP Price Condos
Call NOW
Scarborough Condo
Starting Price
$147,800
For Sale or Rent
Call NOW
Markham Condo
Starting Price
$189,000
For Sale or Rent
Call NOW
16 YEARS
ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற NaNo Computer ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்
RAJ NADARAJAH
Sales Representative
வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு
Direct: 416-333-6115
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®
Buying/Selling Your Home ?
Call Now!
Lets Talk!
Direct: 416-333-6115


பொருத்தமான வீட்டைத் தேர்வுசெய்ய
சரியானதொரு முகவரைத்
தேர்வுசெய்யுங்கள்
அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
வீடு, வியாபார நிலையங்கள் வாங்குதல், விற்றல் தொடர்பான
அனைத்து சேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும்
- digi Media-
Rajee Iyadurai
Sales Representative
Direct: 416-918-7346
RE/MAX West Realty Inc., Brokerage
6074 Kingston Road, Scarborough, ON M1C 1K4
Tel: 416-281-0027 Fax: 416-281-0034
E-mail: riyadurai@trebnet.com
RE/MAX
Above the Crowd!
RE/MAX

# பங்குச்சந்தை - சராசரியும் கவனிப்பும்

முன்பு Candle Stickஇன் வெவ்வேறு உருவங்களையும் அதனால் சந்தையில் ஏற்படும் மாற்றங்களையும் அதாவது சந்தையின் எதிர் காலத்தை ஓரளவுக்கு சரியாக எவ்வாறு முன்கூட்டியே கணிக்கலாம் என்றும் பார்த்தோம்.

இந்த முறை மிக முக்கியமான Indicatorஆன Moving Average என்றால் என்ன என்று பார்ப்போம். அதாவது ஏற்கனவே நான் கூறிய Open, Close, High, Low என்ற 4 புள்ளிகளில் ஏதேனும் ஒன்றை தொடர்ச்சியாக எடுத்து அதன் Averageஐ கவனிப்பதன் மூலம் பெறப்படும் தரவை அடிப்படையாகக் கொண்டது.

Moving Average மூன்று வகையாக கணிப்பிடப்படுகிறது.

- Simple Moving Average.
- Exponential Moving Average.
- Weighted Moving Average.

Average என்றால் சராசரி என்போம் (சராசரி என்றால் குத்துமதிப்பு என்று கூறாதீர்கள், பின் குத்து மதிப்பு என்றால்... ஒரு குத்துக்கு எவ்வளவு மதிப்பு என்று கேட்க வேண்டியிருக்கும்) Average என்றால், உதாரணமாக 20 டொலர்க்கு ஒரு பொருளை வாங்கி, மேலும் அதே பொருளை 10 டொலர்க்கு இன்னும் கொஞ்சம் வேண்டும் போது அந்த பொருளின் சராசரி விலை 15 டொலராக மாறுகின்றது. அதேபோல் இன்று $60 டொலர் விற்கும் ஒரு பங்கு நாம் வேண்டிய பின் அதன் விலை குறைவடைந்து $40 டொலரிற்கு இப்போது விற்றால், மேலும் சில பங்குகளை நாம் $40 டொலரிற்கு வேண்டும் போது நாம் வேண்டிய பங்குகளின் சராசரி விலை 50 டொலராக ஆகிவிடும். இப்போது அந்தப் பங்குகள் விலை ஏற ஆரம்பிக்கும் போது 50 டொலரில் இருந்து எமது லாபம் ஆரம்பிக்கத் தொடங்கிவிடும். அதாவது 60 டொலரில் இருந்து எமக்கு லாபம் ஆரம்பிப்பதற்கு பதிலாக Average செய்ததன் மூலம் 50 டொலரிலேயே எமது லாபம் ஆரம்பமாகி விட்டது. இவ்வாறாக Averageஐ வைத்து வெவ்வேறு பல வகையான நல்ல பயன்களை பங்குச் சந்தையில் பெறலாம்.

பொதுவாக Moving Average எனப்படுவது ஒரு பங்கின் குறிப்பிட்ட வெவ்வேறு நாட்களின் Close Priceஐ வைத்து ஒரு வகையான Graphஐ உருவாக்கி அதன் மூலம் சந்தையில் பங்கின் விலைகளின் எதிர்காலத்தை ஓரளவுக்கு சரியாக கணித்தல்.




உதாரணமாக ஒரு பங்கின் Close Price தொடர்ச்சியா 5 நாட்கள் 100, 150, 120, 130, 125 என வைத்துக் கொண்டால், 100+150+120+130+125=125 அதாவது 5 நாட்களுக்கான Closing Price Average 125. இவ்வாறாக ஒவ்வொரு நாளும் (6வது நாள் 7வது நாள் 8வது நாள் என ஒவ்வொரு நாளும் அதிகமாகும் போது தொடக்க நாள் (Close Price 100,150,120…) இல்லாமல் செய்யப்பட்டு புதிய ஒரு Close Price சேர்த்துக்கொள்ளப்படும். இவ்வாறு புதியதாக உருவாக்கப்படும் Average மூலம் ஒரு Graph வரையப்படும் போது அது Simple Moving Averageஆக உருவாகும். மேலும் வெவ்வேறு சிறு மாற்றங்களின் மூலம் Exponential மற்றும் Weighter Moving Average கணக்கிடப்படுகிறது.

இந்த Moving Average வைத்து நாம் எதிர் காலத்தில் எந்தப்புள்ளியில் பங்குகளை வாங்கலாம் அல்லது விற்கலாம் என்பதனை கணிப்பதோடு Stop Loss, Target Price. Support மற்றும் Resistance போன்றவற்றை மிக இலகுவாக கணிக்கக்கூடியதாக இருக்கும்.

கண்ணன் காங்கேசு



மேலும் பல்வேறு வகையான Indicatorகளான RSI – Relative Strength Index, MACD – Moving Average Convergence and Divergence, ADX – Average Direcation Movement Index என மிக முக்கியமான Indicator களையும் உருவாக்குவதற்கு இந்த Moving Average வழிசெய்கிறது.

## RSI – Relative Strength Index:

பங்குகளின் விலை ஏற்ற இறக்கங்கள் எந்தத் திசையில் நகரும் என்பதனை முன்கூட்டியே அனுமானிக்கப் பயன்படும் ஒரு குறிகாட்டியாகும். இதில் 0 (Zero) வில் இருந்து 100 வரை மேலும் கீழுமாக இந்த Graph செல்லும் போது ஒரு குறித்த இலக்கத்தை கடந்து மேலே சென்றால் பங்கின் விலை தொடர்ந்து ஏறிச் செல்லும் என்றும் குறித்த இலக்கத்தை கடந்து கீழே சென்றால் விலை குறைவதற்கான அறி குறி என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

அதாவது RSI Indicator 30 என்ற புள்ளியை கீழே இருந்து மேலே கடந்து சென்றால் பங்குகளின் விலை ஏற்றத்திற்கான அறிகுறி பின்னும் மேலும் இது 50 என்ற புள்ளியை கடக்கும் போது மேலும் கூடுதலான சக்தி பெற்று அதிக விலை ஏற்றத்திற்கான அறிகுறி என்றும் எடுத்துக் கொண்டு மற்றை Indicatorsஐ கவனத்தில் எடுத்து Call Option ஐயோ அல்லது பங்குகளையோ வாங்கலாம்.

இதே போன்ற RSI Indicator 70 என்ற புள்ளியை மேலிருந்து கடந்து கீழ் நோக்கி வரும் போது

50ம் பக்கம் பார்க்க...





Kannan Kankesu
REAL ESTATE & MORTGAGE BROKER
Mortgage/Refinance
Cell: 416 418 5189
Bus: 416 284 5555
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
880 Ellesmere Road, Suit 204, Toronto, ON
kkankesu@gmail.com


14th &9th


Over 120K upgraded 4+1Bedroom
Box Grove Arista Home 4 Washrooms

Pharmacy &Finch


$294,900 3+1Bedroom
Finished Basement 2Washrooms

Elson/Coppard

$455,000 Finsd Bsmt/SepEnt
4+2 Bedroom 4 Washrooms

Birchnount/Steeles

$439,000 Finished Basement
3 Bedroom 4 Washrooms




"ONE SOURCE REAL ESTATE SERVICES"..
Sheppard & Neilson
$ 169,900
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Steeles
$ 217,000
2+1 Bedrooms + 2 Washrooms
Rossland & Harwood
$ 381,900
3 Bedrooms + 3 Washrooms
Mccowan & Eglinton
$188,900
2+1 Bedrooms + 2 Washrooms
Finch & Morningside
$ 239,900
3+2 Bedrooms + 4 Washrooms
Markham & Sheppard
$ 264,900
3 Bedrooms + 2 Washrooms
Morningside & Sheppard
$ 279,800
3+1 Bedrooms + 2 Washrooms
Morningside & Sheppard
$ 285,900
2+1 Bedrooms + 3 Washrooms
Markham & Sheppard
$ 319,000
3+1 Bedrooms + 2 Washrooms
Dixie & Kingston
$339,800
3 Bedrooms + 3 Washrooms
Garden & Elgin
$ 349,900
3+1 Bedrooms + 3 Washrooms
Mccowan & Eglinton
$ 359,700
3+2 Bedrooms + 3 Washrooms
Steeles & Staines
$ 419,900
3 Bedrooms + 3 Washrooms
Medowvale & Sheppard
$ 369,900
4 Bedrooms + 3 Washrooms
Airport & Bovaird
$ 369,900
4 Bedrooms + 3 Washrooms
Markham & Sheppard
$389,900
4+1 Bedrooms + 3 Washrooms
Morningside & Oldfinch
$ 449,900
4+3 Bedrooms + 5 Washrooms
Bayview & Newman
$ 549,990
4 Bedrooms + 3 Washrooms
Middlefield & Denison
$ 444,900
4 Bedrooms + 4 Washrooms
Sandalwood & Mclaughlin
$ 484,900
4 Bedrooms + 3 Washrooms
Sandalwood & Mclaughlin
$ 489,500
4 Bedrooms + 4 Washrooms
Gore & Ebenezer
$386,000
3+1 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 399,900
3 Bedrooms + 3 Washrooms
Middlefield & Steeles
$ 438,000
3 Bedrooms + 3 Washrooms
Brimley & Steeles
$ 479,900
4+2 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 184,999
Commercial / Retail
Markham & 14th Ave.
$ 409,900
Commercial / Retail
Markham & Nashdene
$226,900
Professional Office
14th Ave. & 9th Line
$ 439,000
3 Bedrooms + 3 Washrooms
Middlefield & Denison
$ 489,500
4+1 Bedrooms + 4 Washrooms
Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
Experience, Knowledge, Professionalism, Team work & No Pressure
YOUR HOME SOLD GUARANTEED!
LET US YOUR HOME FAST AND FOR THE BEST PRICE!
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205, Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
SOLD
*Independently Owned and Operated
புதிய முகவரி தேடும் உங்களுடன்
முகவர்களாய் நாங்கள்

# நீங்கள் ஒரு தொழிலாளியா? சுயேட்சையான ஒப்பந்தக்காரரா?

**பகுதி - 2**

**- என். மிலான் -**

சென்ற இதழின் தொடர்ச்சி...

நீங்கள் ஒரு தொழிலாளியா அல்லது சுயேட்சையான ஒப்பந்தக்காரரா என்பது பற்றி தெரிந்து கொள்வேண்டிய விபரங்களின் சென்ற மாத இதழின் தொடர்ச்சி இங்கே தரப்பட்டுள்ளது. கடந்த மாத இதழை வாசிக்கத் தவறியவர்கள், www.thaiveedu.com என்ற இணையத்தளத்திற்கு சென்று வாசித்தறிந்து கொள்ளலாம்.

## தொழிலாளர்கள் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு அமைப்பும் (WSIB) சுயேட்சையான ஒப்பந்தக்காரரும்:

நீங்கள் ஒரு ஊழியராக பணியாற்றும் போது, வேலை நேரத்தில் நீங்கள் காயம் அடையவோ அல்லது நோய் வாய்படவோ நேர்ந்தால். அதற்கான இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு உங்கள் முதலாளி உங்களுக்காக காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்துவார். ஆனால் நீங்கள் ஒரு சுயேட்சையான ஒப்பந்தக்காரராக இருந்தால் WSIB இழப்பீட்டு தொகைக்காக நீங்கள் தான் உங்கள் சொந்த பணத்தை கட்டவேண்டும்.

## வேலை காப்பீடும் (EI) சுயேட்சையான ஒப்பந்தக்காரரும்:


நீங்கள் ஒரு ஊழியராக இருந்தால், நீங்களும் மற்றும் உங்கள் முதலாளியும் EIக்கு கட்டணங்கள் செலுத்துவீர்கள். நீங்கள் உங்கள் வேலையை இழக்கும் போதோ, உங்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கும் போதோ அல்லது பிரத்தியேகமான சலுகைகள் தேவைப் படும் போதோ, நீங்கள் EI சலுகைகளுக்காக விண்ணப்பிக்க முடியும். நீங்கள் ஒரு சுயேட்சையான ஒப்பந்தக்காரராக இருந்தால் உங்களுக்கு வேலை இல்லாமல் இருக்கும் போது நீங்கள் EI உரிமைகளை பெற விண்ணப்பிக்க முடியாது. ஆயினும், உங்களுக்கு பிரசவ கால காப்புறுதி (Maternity benefit) நோயாளிகளுக்கான சலுகைகள்(sick benefit) மற்றும் பெற்றோர் சம்பந்தமான கருணைத் தொகைகள் (Compassionate care) போன்ற பிரத்தியேகமான சலுகைகளை பெற உங்களுக்கு உரிமை உண்டு. இவைகளை நீங்கள் கேட்டுத்தான் பெற முடியும். இந்த சலுகைகள் 2011 ஜனவரியில் செயலாற்ற தொடங்கும். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில்:

- நீங்கள் Commissionனுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.
- service Canada மூலம் விண்ணப்பித்து EIக்கு கட்டணங்கள் செலுத்த நீங்கள் ஆரம்பிக்க வேண்டும்.
- கனடாவில் ஒரு குடிமகனாகவோ அல்லது கனடாவில் நிரந்தரமாக வசிப்பவராகவோ இருக்க வேண்டும்.

## வருமான வரியும் (Income Tax) சுயேட்சை ஒப்பந்தக்காரரும்:

ஊழியர்கள் மற்றும் சுயேட்சையான ஒப்பந்தக்காரர்கள். ஆகிய இருதரப்பினரும் வருமான வரி செலுத்த வேண்டும்.

நீங்கள் ஒரு தொழிலாளியானால் உங்களுடைய ஒவ்வொரு மாத சம்பளத்திலிருந்து நீங்கள் செலுத்த வேண்டிய வருமான வரியை கழித்து தான் உங்கள் முதலாளி சம்பளத்துக்கான காசோலையை உங்களுக்கு தருவார். அந்த பணத்தை அரசுக்கு உங்கள் சார்பில் அவரே செலுத்தி விடுவார். நீங்கள் ஒரு சுயேட்சை ஒப்பந்தக்காரராக இருக்கும் போது,



உங்கள் வருமானத்தை நீங்களே அறிவித்து அதற்கான வரிகளை நீங்களே அரசுக்கு நேரடியாக செலுத்த வேண்டும்.

சுயேட்சை ஒப்பந்தக்காரர்கள் தங்கள் வேலை தொடர்பான மேலும் சில செலவுகளை தங்கள் வருமானத்தில் இருந்து செலவுகளாக கழித்துக் காட்டமுடியும். உதாரணமாக gas அல்லது cell phone செலவுகளையும் காட்டி, சில நேரங்களில் குறைந்த அளவிலான வரிகளை அவர்கள் செலுத்துவார்கள். ஊழியர்கள் ஒரு வரம்புக்கு உட்பட்ட எண்ணிக்கையிலான வேலை தொடர்புடைய செலவுகளை மட்டுமே எழுதி தங்கள் வரிகளை குறைக்க முடியும்.

இதில் உங்கள் வேலை அந்தஸ்து மிக முக்கிய பங்கு ஆற்றுகிறது. நீங்கள் ஒரு சுயேட்சை ஒப்பந்தக்காரர் என்ற முறையில் உங்கள் வருமான வரி விண்ணபத்தில் உங்கள் வேலை தொடர்பான செலவுகளை அறிவித்திருக்கிறீர்கள் என்றாலும். பின்னர் நீங்கள் ஒரு ஊழியர் என்று உணரும் பட்சத்தில் நீங்கள் சில வரிகளை கூடுதலாக செலுத்த வேண்டி வரலாம்.

## இவற்றிலிருந்து உங்களை எவ்வாற பாதுகாத்து கொள்வது?

நீங்கள் ஒரு சுயேட்சை ஒப்பந்தகாரர் என்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கலாம். நீங்கள் ஒருவேளை அப்படி இல்லாமல் இருந்தால், உங்கள் முதலாளி சுயேட்சை ஒப்பந்தகாரர் என கருதி அதற்குரிய சம்பளத்தை மட்டுமே தருவேன் என்று சொல்ல முடியாது. உங்கள் வேலை எப்படிப்பட்டது என்பது தான் முக்கியம். சுயேட்சை ஒப்பந்தகாரர் என்று நீங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டதினால் மட்டும். ஒரு ஊழியருக்குரிய உரிமைகளை நீங்கள் விட்டுக் கொடுத்துவிட முடியாது.

நீங்கள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்கு முன் அந்த ஒப்பந்தத்தில் என்னென்ன விடயங்கள் கூறப்பட்டுள்ளது என்பதை நன்கு கவனித்து பாருங்கள். ஒப்பந்தம் முழுவதையும் நன்றாக படித்து பார்ப்பதற்கு முன்பே கையெழுத்திடவேண்டும் என்று உங்கள் முதலாளி ஒருவேளை உங்களை வற்புறுத்தலாம்.

நீங்கள் வேலை பார்க்கும் தேதிகள், மணி நேரங்கள், உங்களுக்கு கிடைக்கும் ஊதியம் மற்றும் நீங்கள் தினமும் பார்க்கும் வேலை ஆகிய சகல விவரங்களையும் எழுதி வைத்திருங்கள். நீங்கள் அதிக வேலைக்கான ஊதியம், விடுமுறைகால ஊதியம் அல்லது குறைந்தபட்ச ஊதியம் போன்றவைகளை விசாரிக்க முற்படும் போது இந்த விவரக் குறிப்புகள் உங்களுக்கு உதவும்.

உங்கள் உரிமைகளை பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்பதற்காக உங்கள் முதலாளி உங்களை வேலையிலிருந்து நீக்குவது சட்டத்திற்கு புறம்பானது. ஆயினும் பல எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இப்படி வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இது ஒரு தவறான செயல் ஆகும். உங்கள் வேலை சம்பந்தமான அனைத்து விவரங்களையும் நீங்கள் எழுதி வைத்திருந்தால் பின்னர் அது உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

மற்றைய தொழிலாளர்களிடம் விசாரித்துப் பாருங்கள். அவர்களும் இந்த மாதிரியான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தார்கள் என்றால் தொழிலாளர்கள் நடவடிக்கை மையம் நடத்தும் கூட்டத்தில் ஒரு குழுவினராக கலந்து கொண்டு உங்களை எப்படி பாதுகாத்து கொள்ளவேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு சம்பளபாக்கிகள் தரவேண்டுமென்றால் அதுபற்றி உங்கள் முதலாளிக்கு எழுத்து மூலம் தெரிவியுங்கள், அதற்கான ஒரு காலக்கெடு விதியுங்கள்.

நீங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டாலோ, வேலையை விட்டு செல்ல கட்டாயப்படுத்தப் பட்டாலோ அல்லது வேலை இல்லாத காலம் என்று கூறப்பட்டாலோ Employment Insurance (வேலை காப்பீடு) சலுகைகள் உங்களுக்கும் கிடைக்கும். EI benefits களுக்காக நீங்கள் விண்ணப்பிக்கும் போது நீங்கள் எழுதிவைத்துள்ள வேலை சம்பந்தமான விவரக் குறிப்புகள் உங்களுக்கு மிக உதவும்.

தொழிலாளர் அமைச்சகத்திடம் இது சம்பந்தமாக புகார் செய்யுங்கள். நீங்கள் ஒரு ஊழியர் என்பதை நிரூபிக்க சிரமமாக இருந்தால் தொழிலாளர் நடவடிக்கை மையத்தின் உதவியை நாடுங்கள்.

## உதவிகள் தேவைப்படின் தொடர்புகொள்வதற்கு:

### தொழிலாளர் நடவடிக்கை மையம்:

உங்கள் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக மேலும் கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416 531 0778 அல்லது இணையத்தளம் www.workersactioncentre.org

### தொழிலாளர் அமைச்சகம்:

சம்பளப்பாக்கிகளுக்காக புகார் செய்ய மேலும் கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 1 800 531 5551 அல்லது இணையத் தளம் www.labour.gov.on.va.

### Ministry of Labour, Occupational Health and Safety Branch:

வேலை செய்யும் இடத்தில் உடல் நலம் மற்றும் சுகாதார பாதுகாப்பை பேணுதல் சம்பந்தமாக கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 1-800-268-8013 அல்லது இணையத்தளம் www.labour.go.on.ca/english/

### Workers Safety and Insurance Board (WSIB):

விண்ணப்ப படிவங்கள், கோரிக்கைகள், சலுகைகள் ஆகியன சம்பந்தமான தகவல்களை விசாரிப்பதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416 344 1000 அல்லது 1 800 387 0750. அல்லது நீங்கள் பார்க்க வேண்டிய இணையத்தளம்: www.wsib.on.ca/wsibsite.nsf/public/workers

### Human Rights Legal Support Centre:

நீங்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகிறீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்தால் மனித உரிமைகள் சட்டசேவை மையத்தின் உதவியை நாடலாம். அதற்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 1-866-625-579 அல்லது இணையதளம் www.hrlsc.on.ca

### Canada Pension Plan (CPP):

CPPயில் கீழ் உங்களுக்கு கிடைக்கும் சலுகைகள் பற்றி கேட்கப்படும் பொதுவான கேள்விகளுக்குரிய பதில்கள் சம்பந்தமான கூடுதல் விபரங்களுக்கு பாருங்கள். www.servicecanadagc.ca/eng/isp/cpp/cpptoc.shtml

### Revenue Canada (CRA):

உங்கள் வேலை அந்தஸ்து மற்றும் உங்கள் வரி சலுகைகள் சம்பந்தமாக மேலும் கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் அல்லது இணையதளம் யாதெனில்:1-800-959-8281 www.cra-arc.gc.ca/e/pbg/tf/t777/t777-09e.pdf

milan@thaiveedu.com

■ ■ ■

நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை



Das Narayanasamy
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147

RMA
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

**$399,000**


**Markham/Steeles**
3+1 Bedroom
Fin Basement
TTC & YRT

**$139,000**

**Midland/Lawrence**
2 Bedroom Condo
In Prime Location

**$193,700**


**Kenndy/Eglinton**
2+1 Bedrooms
2 Washrooms

**$399,900**


**Mccowan/16th Ave**
3 bedrooms, 3 Washroom
main floor hardwood &
Ceramic, Excellent Location

**$299,000**

**Finch/Warden**
Super Location
3 Bedroom
Close to Mall
Park & School
Open House Sun
2Pm to 4Pm

**$189,000**

**Finch/Middlefield**
Demand Location
2Bed Main Floor

**$199,000**


**Finch/Middlefield**
Excellent Location
Commercial Unit For Retail
Store Related

**$199,000**

**Finch/Middlefield**
2+1 Bedrooms

**$469,000**


**Steeles/Middlefield**

**$572,900**


**Yonge/Sheppard**

**$499,000**


**9th Line/Reeves Way**

**$381,900**

**Rossland/Harwood**
3 Bedrooms 3 Wash

**$419,900**

**Steeles/Staines**
3 Bed Rooms
3 Washrooms

**$299,000**


**Birchmount/Danforth**
3+1 Bedrooms
2 Washrooms

**$294,000**

**Finch/Mccowan**
3+1 Bedroom
Finished Bsmt, Sep. Entance.
Open House Sat 2Pm to 4Pm

**$199,000**

**Finch/Middlefield**
commercial unit for Retail
Store related



More Houses Visit
www.krishome.ca

**Krish Sivapatham**
Sales Representative

**Full Time Realtor**

**Direct : 416-895-4457**
**HomeLife/ Future Realty Inc.,** Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under contract/ some conditions may apply/ I Do Not Represent The Developer

HOMELIFE HIGHER STANDARDS 25th ANNIVERSARY

**www.NewCondoInGTA.com**

**New Condos Call Krish**

**VIP Price & Floor PLan**

# அனைத்துக் காப்புறுதி தேவைகளுக்கும் கல்வி சேமிப்புத்திட்டங்களுக்கும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

### Critical Illness Insurance

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்


### வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.

*Our guarantees are written in your policy*

LiLand INSURANCE INC.
Assumption Life
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்
**647-885-3012**
**www.vvinsurence.ca**
759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453



நாம் அழகாய் இருக்க

# முகப் பராமரிப்பும் சந்தேக நிவர்த்தியும்

**தொடர் 10**

சசி நரேன்
Cosmetologist & Aestheticia



இதுவரை அழகு என்றால் என்ன? அழகாய் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? செய்து கொள்ள என்னென்ன பொருள்கள் தேவை? எப்படி செய்து கொள்வது? என்பதை பற்றி எல்லாம் தெரிந்து கொண்டோம். இவைகளை எல்லாம் தெரிந்துகொண்ட பிறகு இன்னும் சில எண்ணங்கள் மனத்தில் தோன்றலாம். பொதுவாக சிறிய சந்தேகங்களும் உண்டாகலாம். இங்கு கொடுத்துள்ள குறிப்புகள் நிச்சயமாக உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் என நினைக்கிறேன்.

## எண்ணெய்க் குளியல்:

வாரம் ஒரு முறை எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது. ஏனென்றால் சருமத்தில் உள்ள அழுக்கை அகற்றி, சூரிய வெப்பத்தினால் ஏற்படும் கோளாறுகளை தடுத்து, சருமம் உலர்ந்து போகாமல் பாதுகாத்து, சருமத்திற்கு மென்மையையும், பளபளப்பையும் கொடுக்கும். பொதுவாக இது எந்த வகை சருமம் உடையவர்களுக்கும் நல்லது. முக்கியமாக உலர்ந்த சருமம் உடையவர்களுக்கு மிகவும் நல்லது.

தலையில் தினமும் எண்ணெய் தடவுவது அவசியமா என்றால் எண்ணெய் கசிவாக கேசம் உடையவர்களுக்கு அவசியம் இல்லை. மெல்லிய முடி உடையவர்கள் எண்ணெய் அதிகம் தடவுவதால் இன்னும் முடி குறைவதாக உள்ளதுபோல் தோற்றம் அளிக்கும். நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள எண்ணெயே உடம்பிற்கு போதுமானது. ஆனாலும் தினமும் எண்ணெய் இல்லாமல் இருக்கக் கூடாது. ஆகையால் மிகக் குறைந்த அளவில் இரவில் படுக்கும் முன் தடவி காலையில் தேய்த்து குளித்து விடலாம்.

## கண்ணைச் சுற்றி கருவட்டம்:

சத்துக்குறைவு, மனக்கவலை போன்றனவற்றாலும் கண்ணைச் சுற்றி கருவட்டம் தோன்றும்.

ஆனால் சிலருக்கு ஒரு சில சமயங்களில் தோன்றி இது மறைந்துவிடுவதுண்டு. இது எதனால் என்றால், நிறைய கைவினை வேலைகள் செய்வதனாலும், அதிகம் படிப்பதனாலும் நிறையத் திரைப்படங்கள் பார்பதாலும், தூக்கமின்மையாலும் தோன்றலாம். இதைப் போக்க இரவு படுக்கும் முன் கண்ணுக்குள் சுத்தமான நீரை விட்டு கண்களை கழுவ வேண்டும். கண்ணில் தண்ணீர் ஊற்றுவது சற்று எரிச்சல் உண்டாகலாம். மிருதுவான துணியால் ஒற்றி எடுக்க வேண்டும். லேசாக விளக்கெண்ணெயை விரல்களில் உட்புறத்தில் தடவிக்கொண்டு, உள் கண்ணிலிருந்து ஓரம் வரை தடவி மசாஜ் செய்ய வேண்டும். சுமார் 10 முறை செய்ய வேண்டும்.

சுத்தமான பஞ்சை எடுத்து 'ரோஸ் நீரில்' நனைத்து இமைகள் மேல் சுமார் 5 அல்லது 10 நிமிடம் வைத்திருக்கலாம். அல்லது வெள்ளரிக்காயை சிறிது வட்டத் துண்டுகளாக வெட்டி, கண்ணின் மேல் வைத்துக்கொள்ளலாம். இம்மாதிரி சுமார் 15 தினங்கள் செய்து வந்தால் கண்ணை சுற்றி உள்ள கருவட்டங்கள் நீங்கி கண்கள் பிரகாசமாயிருக்கும்.

## முகத்தின் சருமத் துவாரங்கள்:

சிலருக்கு முகத்தில் சருமத் துவாரங்கள் திறந்திருக்கும். இதை எப்படி தெரிந்துகொள்வது என்றால், முகத்தில் பொடி பொடியாய் வேர்க்குரு போல் இருக்கும். அருகில் பார்க்கும் போது வியர்வை துவாரங்கள் திறந்திருப்பது தெரியும். இதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு பாத்திரத்தில் வெந்நீரும், ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரும் வைத்துக்கொண்டு, முதலில் வெந்நீரும் பிறகு தண்ணீருமாக முகத்தில் வீசி அடிக்க வேண்டும். இதனால் வேர்வை துவாங்கள் திறந்து மூடி, பயிற்சி அளிக்கப்பட்டு இறுதியில் வியர்வைத் துவாரங்கள் மூடிக்கொள்ளும். பிறகு வெள்ளரிக்காயை துருவி முகத்தில் தடவிக்கொள்ளலாம்.

எண்ணெய் கசிவுள்ள சருமம்:
எண்ணெய் கசிவுள்ள சருமத்தை உடையவர்கள், அடிக்கடி முகத்தை mild soap உபயோகித்து கழுவ வேண்டும். நீங்கள் உபயோகிக்கும் சவற்காரம் அலர்ஜியாக இருந்தால், வேப்பம் எண்ணெய் கலந்த சவற்காரம், எலுமிச்சை கலந்த சவற்காரம் உபயோகிக்கலாம்.

ரோஸ் வாட்டர் சிறிதளவு, பார்லி பவுடர் சிறதளவு, உருளைக்கிழங்கு சிறிதளவு இவை மூன்றையும் கலந்து, எண்ணெய் சருமம் உடையவர்கள் முகத்தில் பூசிக் கொண்டு 5 நிமிடங்களுக்கு பிறகு முகம் கழுவுவதால் நல்ல பயன் கிடைக்கும்.

## முகத்தோல் வியாதி:

துளசிச் சாறு ஒரு மேஜைக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் 2 சிட்டிகை, புதினா சாறு ஒரு மேசைக் கரண்டி மூன்றையும் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடங்களுக்குப் பிறகு முகத்தை கழுவி விட வேண்டும். தோல் வியாதி உள்ளவர்களுக்கு இது நல்லது.

## உலர்ந்த சரும்:

உலர்ந்த சரும் உடையவர்கள் கிளசரின் ஒரு மேஜைக்கரண்டி, ஒரு நாமக்கட்டி, ஒரு தேக்கரண்டி காலமின் லோஷன் மூன்றையும் கலந்து முகத்தில் பூசிக்கொண்டு சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு முகத்தை அலம்பிவிடலாம்

உலர்ந்த சரும் உடையவாகள் முட்டை வெள்ளைக்கருவையும், மஞ்சள் கருவையும், தனித்தனியாக எடுத்து, இரண்டையும் மாறி மாறி முகத்தில் தடவி, பிறகு முகத்தை நன்றாகக் கழுவிவிட்டு ஒரேஞ்சுச் சாற்றைப் பூசிக்கொள்ளலாம்.

## சருமம் மென்மையாக:

கேழ்வரகு மாவு ஆறு தேக்கரண்டி, அரிசி மாவு 4 தேக்கரண்டி இரண்டையும் தண்ணீர் விட்டுக் கரைத்து, அடுப்பில் வைத்து கூழ் போல் காய்ச்சி, மிதமான சூட்டில் டவலில் வைத்து முகம் பூராவும் சுமார் 5 நிமிடம் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் சருமம் மென்மையாகும். சுருக்கம் வராமல் இருக்கும்.

## முகம் பொலிவுடன் இருக்க:

புருவத்திலும் இமைகளிலும் படாமல் முகம் பூராவும் தேனைத் தடவிக்கொண்டு சிறிது நேரத்திற்குப் பிறகு கழுவ வேண்டும். முகம் பொலிவுடன் இருக்கும். கிருமிகளை அழிக்க தேன் உதவும்.

## முகம் புத்துணர்வுடன் இருக்க:

பப்பாளி பழத்தின் தோலை சீவி விதைகளை நீக்கிவிட்டு, சதைப் பகுதியை முகத்தில் தடவிக்கொண்டு 5 நிமிடங்களுக்குப் பிறகு கழுவ வேண்டும். இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து முகம் புத்துணர்வுடன் இருக்கச் செய்யும்.

## எண்ணெய் சருமம் உடையவர்கள்:

வினிகர் ஒரு மேஜைக் கரண்டி, அரை மூடி எலுமிச்சம் பழச் சாறு, கடலைமாவு ஒரு மேஜைக்கரண்டி, இம்மூன்றையும் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடங்களுக்குப் பிறகு கழுவ வேண்டும். இது எண்ணெய் சருமம் உடையவர்கள் செய்ய வேணடியது.

முகப்பருவிற்கு:
முகப்பரு அதிகம் உள்ளவர்கள், அது எதனால் வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பரம்பரை மூலமாகவும் வரலாம். சுத்தம் இல்லாமையினாலும், கொழுப்புச் சத்து அதிகமானாலும், இனிப்புப் பொருட்கள், குளிர்ந்த பானங்கள், இவைகளை அதிகம் உட்கொள்ளுவதாலும், மலச்சிக்கல் ஏற்படுவதாலும் பருக்கள் வரலாம். தலையில் பொடுகு இருந்தாலும் முகப்பரு வரலாம். பருவ வளர்ச்சியாலும் சிலருக்கு வரக்கூடும். இது தானே மறைந்து விடும். இல்லாவிடில் உடனே அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும். இல்லையெனில் முகத்தில் தழும்பு உண்டாகி முக அழகு கெட்டுவிடும். மேற்கூறிய உணவு வகைகளைக் குறைத்து உட்கொள்ள வேண்டும். பருக்களை கிள்ளி எடுக்கக்கூடாது. இவ்வாறு உள்ளவர்கள், தாய்பால் சிறிதளவு பஞ்சில் எடுத்து முகத்தில் தடவிக் கொள்ளலாம். கடலை மாவு, பயத்தம் மாவு, பாதாம்பருப்பு அரைத்தது, முட்டை வெள்ளைக் கரு, புளித்த மோர் இவைகளில் ஏதாவது ஒன்றை முகத்தில் தடவலாம். இது முகப்பருவைக் குறைக்க உதவும்.

## முகத்தை வெளுக்கச் செய்யலாம்:

ஒரேஞ்சுப் பழத்தோலைச் சிறதளவு தண்ணீருடன் நன்றாகக் கொதிக்க வைத்து, ஆறிய பின் அந்தச் சாறை முகத்தில் தடவி கொள்வதால் முகத்தை வெளுக்கச் செய்யலாம்.

## நெற்றிசிறியதாக உள்ளவர்கள்:

நெற்றிசிறியதாக உள்ளவர்கள், 'மேக்கப்' கொஞ்சம் டார்க்காகப் போட்டுக்கொண்டு நெற்றியின் நடுவில் புருவத்திற்குச் சற்று மேல் பொட்டு சற்றுப் பெரியதாக வைத்தால் நன்றாக இருக்கும். கூந்தலை தளர்த்தி வாரிக்கொள்ளாமல் தூக்கினாற்போல வாரிக் கொள்ள வேண்டும். அதிகம் தளர்த்தியாக வாரிக்கொண்டால் வயதானவர்களைப் போல் தோற்றம்தரும்.

## நீண்ட முகம் உடையவர்கள்:

நீண்ட முகம் உடையவர்கள் புருவம் இரண்டிற்கும் நடுவில் பொட்டு வைத்துக் கொண்டால் பார்க்க முகம் வட்டமாகத் தோன்றும். கன்னங்களும் எடுப்பாகத் தோன்றும்.

## பற்கள் மஞ்சளாக இருந்தால்:

பற்கள் மஞ்சளாக இருந்தால் எலுமிச்சம் பழத் தோலில் சிறிதளவு உப்பு வைத்து பற்களைத் தேயத்து வந்தால் பற்கள் விரைவிலேயே வெண்மையாகும்.


ஹைட்ரஜன் பெராக்சைடைப் பஞ்சில் நனைத்து, பற்களைச் சுத்தம் செய்வதால் பற்கள் வெண்மையாகும்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■

SP Electronics
TV, VCR, DVD, Players-Telephone-Computers
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ்
வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

Non Medical Insurance / Funeral Expense $10,000



| Age | Female | Male | Male Smoker |
|---|---|---|---|
| 60 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

Call us for more details 905.470.0063

# வீடு வாங்கவும், விற்கவும்......




4+2 Bedrooms, 4 Washrooms
Hardwood In Main & 2nd Flr




2 Bedrooms, 2 Washrooms
Close To Shopping And Highways




3 Bedrooms, 3 Washrooms
Interlock In Front And Back

சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக்
கொடுக்கப்படும்

இரஞ்சன் *or*
செல்வா
416.816.1220




5 Bedrooms, 4 Washrooms
3149 Sq Ft. Built By Field Gate




4+1 Bedrooms, 2 Washrooms
Newly Renovated Bright,Clean




5 Bedrooms, 3 Washrooms
A Good Investment Opportunity



RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services

**RANJAN** FRANCIS XAVIER
Sales Representative
**Cell: 416.816.1220**
**Office: 416.284.5555**
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

## வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
  - Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
  - Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion



**Beauty Classes**
அழகியல் கலையை கற்க
விரும்புகிறீர்களா? எங்களது கலை
வகுப்புகளில் இணைந்து
கொள்ளுங்கள்

**Certificate Courses & Seminars**

## அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

**Tel: 416.509.7978**
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# அரைகுறை அறிவு ஆபத்தானது

ராகுலன்
- Accountant -



அமெரிக்க வீட்டுவிலை சரிவைத் தொடர்ந்து கடன் கொடுப்பனவுச் சந்தையில் ஏற்பட்ட இறுக்கமும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட தளர்வும் கனடியர்களுக்கு முழுமையான நிதிநிலவரங்கள் பற்றிய அறிவு தேவை என்ற முடிவுக்கு மத்திய அரசின் நிதியமைச்சர் வந்திருக்கிறார். இந்த அறிவிப்புக்குப் பின்னால் கடந்த ஜுன் மாதம் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு ஒன்று தனது அறிகையில் இலட்சக் கணக்கான நுகர்வோர் போதிய அறிவற்ற நிலையில் அவர்களது நாளாந்த வாழ்க்கை பற்றி எடுத்த முடிவுகள் தான் இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்று தெரிவித்தது இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க நாங்கள் எல்லோரும் அறிவு வளர்வதற்கு ஆதரவாக இருந்தாலும் வங்கிகளின் ஆசையால் விளைந்த சமுதாய அறத்தைப் பற்றிய கரிசனையற்ற கடன் கொடுக்கும் கொள்கையாலும் சிக்கலான மனித நேயமற்ற முதலீட்டு உபகரணங்களாலும் இது நடந்தது என்றால் அதுவும் ஆதாரமற்ற குற்றமல்ல.

இது இப்படியிருந்தால் இரு பெரிய வங்கிகளின் நடத்துனர்கள் இருவரால் தலைமை வகிக்கப்பட்ட அரசாங்கம் நியமித்த இந்தக் குழுவின் ஆலோசனைகளால் என்ன பெரிய பலன் வந்துவிடப் போகிறது. இது பற்றித் தெரிவித்த கலிபோர்ணியாவின் சட்டப் பேராசிரியர் Lauren E.Willis இவர்களின் நிதி நிலைமை பற்றிய படிப்பு குற்றத்தை நுகர்வோர் மீது குற்றத்தைப் போட்டு மாற்றம் பற்றிய அரசாங்கங்களின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது என்கிறார். இந்தப் படிப்பு நுகர்வோர்ன் நலன் கருதி நடாத்தப்படுவதாக ஒரு மயக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் சாதாரணமான படிப்பும் எப்பவாவது ஒரு பட்டறையும் இணையத்தளங்களில் தரப்படும் தகவல்களும் அரசாங்கம் தரும் தகவல்களும் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தியதாக ஆதாரங்கள் இல்லை. இந்தச் சிறிய முயற்சிகள்கூட நிதி நிறுவனங்களின் விலையுயர்ந்த விளம்பர நிறுவனங்களின் அசரவைக்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் முன்னால் அடிபட்டுப் போகின்றன. இந்த இரண்டுக்கும் இடைவெளி பெரிது. இந்தக் கவர்ச்சி தரும் மயக்கம் எதிர்காலத்தில் வரக்கூடிய பாதிப்பில் இருந்து பாதுகாக்கும் சாதாரண அறிவை மழுங்கடித்து விடுகிறது. இதனால் வருகின்ற அரைகுறை அறிவால் வருகின்ற அதீத நம்பிக்கையால் பாரதூரமான முடிவுகளை எடுக்க நேரிடுகிறது என்கிறார் Willis.

நுகர்வோர் தங்களது வழக்கறிஞர்களாகவோ வைத்தியர்களாகவோ தாங்களே பணிபுரிவது இல்லை. பொதுவாக தங்களது நிதி ஆலோசகராகவும் பணி புரியக்கூடாது.

அண்மையில் ஒன்ராரியோ நிதியமைச்சர் வாகனக் காப்புறுதிச் சட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட விளைவு கிடைக்காது எனகிறார் Willis. நிதியமைச்சர் Duncanனின் திட்டத்தின்படி எல்லாருக்கும் $50,000 அடிப்படைக் Coverage உடன் கடுமையான காயத்துள்ளானோருக்கு 100,000 அல்லது 1,000,000 வாங்கக்கூடிய சலுகையும் இருக்கிறது. புதிய குறைந்த எல்லை நுகர்வோர் கட்டுப்பணத்தைக் குறைத்த பொழுதிலும் தரகர்கள் மேலதிக சலுகை எல்லையைப்பற்றிப் பேசாது விடலாம். நுகர்வோர் தங்களுக்கு தரப்பட்ட முதலாவது தெரிவையே வாங்கிக் கொள்வதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கங்களுக்கு பேராசிரியர் Willis தரும் ஆலோசனை என்னவென்றால் பொதுவாக செய்யும் முயற்ச்சிகளைவிட தனித்தனியாக ஆலோசனை தரக்கூடிய நடுநிலையான ஆலோசகர்களை நியமித்தல். நீண்ட காலத்தில் இது மலிவானதாக இருக்கும்.

ஓய்வுகால சேமிப்பு, வீட்டு அடமான கடன் எல்லை போன்றவற்றை சட்டத்தால் கட்டுப்படுத்துதல். இது நுகர்வோர் பாதுகாப்பை அதிகரிக்கும்.

நிதிச் சந்தைகளின் வாகனங்களின் சிக்கலைக் குறைத்து நுகர்வோர் பலவற்றை ஒத்துப்பார்க்கும் வசதியைக் கொடுத்தல்.

நிதி ஆலோசகர்கள் சம்பளத்திற்கு வேலை செய்வதாக்கி அதற்கு மேலான கொடுப்பனவுகள் எல்லாம் வாடிக்கையாளரிகளின் முதலீடுகளின் வளர்ச்சியில் தங்கியிருக்க வேண்டும்.

நிதி ஆலோசகர்கள் நுகர்வோரின் முதலீடுகளுக்கு வரும் பாதிப்புகளுக்கு பொறுப்பாக வேண்டும்.

இடர் நிறைந்த பாதிப்பு தரும் கூறுகளைக் கொண்ட நிதிக் கருவிகளை முற்றாகத் தடை செய்தல்.

ragulan@thaiveedu.com

■ ■ ■

# பங்குச்சந்தை...

44ம் பக்கத் தொடர்ச்சி...

பங்குகளின் விலை இறக்கம் நிகழ்வதற்கான அறிகுறி என்றும் இது தொடந்து 50 என்ற புள்ளியை கடந்தால். மேலும் கூடுதலான விலை இறக்கத் திற்கான Indicator என்று எடுத்துக்கொண்டு ஏதாவது பங்குகளை வைத் திருந்தால். அவற்றை விற்பதற்கும் மேலும் put Optionஐ வாங்குவதற்கான நேரம் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இந்த RSI Indicatorஇல் மேலும் இரண்டு வகையாக நாம் பார்க்கலாம். Positive Divergence மற்றும் Negative Divergence அதாவது Positive Divergence எனப்படுவது RSI Indicator உயர்ந்து நல்ல Volume உள்ள நேரத்தில் பங்கின் விலை உயராமல் இருந்தால் தொடர்ந்து பங்குகளின் விலை உயர்வதற்கான நேரம் என்று எடுத்துக் கொள்ளலாம். Negative Divergence எனப்படுவது RSI Indicator நல்ல உயரத்தில் இருந்து மேலும் உயராமல் பங்கின் விலை நல்ல volume இல்லாமல் அதிகமாகும் போது அந்தப்பங்குகள் விரைவில் விலை வீழ்ச்சி ஏற்படப்போகின்றது என்று எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் அடுத்தமுறை விரிவாக MACD, ADX ஆகியவற்றைறோடு மேலும் சில Indicator களையும் பார்ப்போம்.

படத்தில் 50 நாள் மற்றும் 200 நாள் Moving Averageஐ எவ்வாறு Coca Cola பங்குகளின் விலைகள் கடந்து செல்கின்றது என்பதோடு இந்த Moving Averageஐ எவ்வாறு Support மற்றும் Resistanceஆக பயன் படுத்தலாம் என்பதை கவனிக்கவும். மேலும் கீழ் பகுதியில் உள்ள படத்தில் RSI – Relative Strength Indexஇன் ஏற்ற இறக்கங்களை விலை மாற்றங்களோடு ஒப்பிட்டு பார்க்கவும்.

kannan.kankesu@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

Men's clothing store
For sale
22yrs in Business

---

Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.

Inprobus Realty Corporation

Call : Alan 647-504-2536


SRKP
Developments
Retail Plaza
SunCity
2761 MARKHAM ROAD. OCCUPANCY JAN-2011
WWW.SUNCITYPLAZA.COM
SALES CONTACT: RAMESH: 416.888.8650
EMAIL: SALES@SUNCITYPLAZA.CA
Restaurant
Computer Repair
Supermarket
NOW UNDER CONSTRUCTION
More than 50% SOLD
பல ஆண்டுகாலமாக கட்டிட தொழில் செய்து கொண்டிருக்கும் (Fieldgate Construction Management Ltd.) நிறுவனத்தினரால் இந்தக்கட்டிட வேலை நடந்துகொண்டிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
OUR TEAM
SRKP DEVELOPMENTS
TURNER FLEISCHER ARCHITECTS
K. O. & PARTNERS
JAIN & ASSOCIATES LTD
COOK CONSULTING ENGINEERS LIMITED
LAWRENCE, LAWRENCE, STEVENSON LLP
PARADIGM TRANSPORTATION SOLUTIONS LIMITED
MARTIN RENDL ASSOCIATES
PMA LANDSCAPE ARCHITECTS LTD
KRCMAR SURVEYORS LTD.
DUKA CONSULTING INC.
FCML
FIELDGATE CONSTRUCTION MANAGEMENT LIMITED
Free Maintenance Fee for 18 Months on deals
Win 2 Free Vacation to the Dominican
உங்கள் வியாபார தேவைகளுக்கு
உகந்த மாதிரி 677sqf முதல் 5000sqf
வரைக்கும் வேண்டிக் கொள்ளலாம்.
தை மாதம் 2011 ஆம் ஆண்டு
நீங்கள் சொந்த கட்டடத்தில் உங்கள்
வியாபாரத்தை தொடங்கலாம்.
"புதிய கட்டட பணி தொடங்கி விட்டது"

உலகப் புகழ் பெற்ற

# சைக்கிள் பிராண்ட்

# அகர் பத்திகள்




**சகல சமய நிகழ்வுகள், மங்கல வைபவங்கள், பிராத்தனைகள்,**

**இல்ல வழிபாடுகள், போன்ற அனைத்துத் தேவைகளுக்கும்**

## நீடித்த நறுமணம் தரும்

## சைக்கிள் பிராண்ட் அகர் பத்திகளை

**கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்**

இப்போது சகல வர்த்தக நிறுவனங்களிலும் கிடைக்கிறது.

விற்பனைப் பிரதிநிதி:

**URUTHIRA BROTHERS LTD.**

**Tel: 416 412 4427**

இறக்குமதியாளர்கள்/மொத்த விற்பனையாளர்கள்

**Fernando Enterprises Inc.**

**90 Hymus Road, Unit 1**

**Scarborough, ON. M1L 2C9**

**Tel: 416 615 4446**

உங்களின் சுதந்திரமான முடிவுக்கு...



RBC



RBC Royal Bank
Mayuran Ketheeswaran
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada

Cell : 416 823 4479
Fax : 416 444 4433

mayuran.ketheeswaran@rbc.com

MARKHAM / STEELS
*EXCLUSIVE LISTING*



Fabulous Four Bedroom, Four Bathroom Semi With Many Upgrades. Beautiful Hardwood Floors, Hardwood Stairs, Coffered Ceilings, Main Floor Powder Room & Laundry. Separate Side Entrance To Full Finished Basement W/4 Pc Bathroom. Modern Upgraded Kitchen W/Walk-Out To Deck & A Large Backyard. Large Master Bedroom With Oversized Walk-In Closet & Ensuite Bathroom.



ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY



Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441

RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

*Not intended to solicit properties currently listed for sale.


Toronto - London - Kuwait - Colombo
Toronto - London - Kuwait - Madras
From $999 + Tax
Toronto - Washington - Doha - Colombo
$850 + Tax
QATAR AIRWAYS
Toronto - London - Colombo
$1175 + Tax
SriLankan
Toronto - Brussels - Chennai
$910 + Tax
JET AIRWAYS
Toronto - Abudhabi - Chennai
$725 + Tax
ETIHAD
Toronto - London - Colombo - Chennai $1175 + Tax
By Sri Lankan Airlines
SPECIAL GUIDED TOURS
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia • Vietnam • Laos • Myanmar • Hongkong • China • Korea • Japan
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202, Toronto, ON (Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207 Markham, ON (Markham & Steeles) 905.201.6660
New Location
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $465.
- digi Media -

# சுற்றுலாவும் திட்டமிடலும்



திரு மகேசன்

ஆன்மிக சக்குரு வாசுதேவ் அவர்களுடன் கைலாஷ பயணம் சென்று வந்ததில் உடலில் ஒரு அபரிமிதமான சக்தி இருப்பதுபோல் இருக்கின்றது. மாளசரூவர் முதல் கைலாச மலை வரையான பயணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே என் அவா.

வாழ்வின் முக்கியமான கட்டமாக இப்பயணம் அமைந்துவிட்டது. எப்படிப் போனேன், எப்படித் திரும்பினேன் என்பது எனக்கே புரியாத புதிர். ஆண்டவன் அழைப்பில் கிடைத்த ஒரு பெரும் பாக்கியமாக நான் இதை கருதுகின்றேன்.

ஆனாலும் நாடு திரும்பியதும் நாலாபுறத்திலிருந்தும் பல விதமாக ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்பது போல் பலரும் பலவிதமான பிரச்சினைகளைச் சொன்னார்கள்.

"Airportஇல் எங்கட Laggageஐ காணேவில்லை"

"நாங்கள் நிண்ட Hotel சரியில்லை"

"Ticket Reconform பண்ணக் காசு எடுத்திட்டினம்"

கோடை விடுமுறையை கோலாகலமாக களிக்க எண்ணி உலகின் பல பாககங்களுக்கும் பறந்துவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருப்பவர்களின் கொந்தளிப்புக் குரல்கள் தான் இவை.

பயணங்கள் சுமூகமாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டும் என்பதுதான் எந்தவொரு பிரயாண முகவரினதும் எண்ணமாக இருக்கும். யாரும் வேண்டுமென்றே பயணம் செய்பவர்களுக்கு கிடஞ்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் செயல்படுவது கிடையாது.

ஆனால் பயணிகள் சொல்லும் எந்தக் குற்றச் சாட்டுக்கும் பிரயாண முகவர்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்பதுதான் அப்பட்டமான உண்மை. Laggage காணமல் போனால். அது நீங்கள் பறக்கும் விமான சேவை நிறுவனத்தின் பொறுப்பு. அதேபோல் Hotel Booking செய்தவர்கள் நீங்கள் தானே தவிர பிரயாண முகவரல்ல. இப்படி வரும் பல தரப்பட்ட குற்றங்கள் குறைகள் நடைபெறாமல் இருக்க வேண்டுமானால், நாம் நடைமுறையை பலரும் கடைப்பிடிக்கும் வழி முறையை பின்பற்றியிருந்தால் இந்த இக்கட்டான நிலமை ஏற்பட்டிருக்காது. எந்தவித திட்டமிடலும் இன்றி திடீரென புறப்பட்டு "Vacation போகிறேன்" என்று விட்டு புறப்படுபவர்கள் தான் இக்கட்டான சிக்கல்களில் மாட்டுப்படுகின்றார்கள்.

அவசரமான காரியகளுக்குப் புறப்படுபவர்களைவிட மற்றவர்கள் நன்கு திட்டமிட்டு சிறந்த Hotel, Airlines போன்றவற்றை தெரிவு செய்து பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது ஆசை. அதற்காகவே உங்களின் திட்ட மிடலுக்கு உதவும் வகையில் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

கல்லூரி, அலுவலகம் தொழில் என எல்லா வயதில்லுள்ளவருமே நாளாந்த வாழ்க்கையில் தமது நிறைவுகளுக்காக ஓடிக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த தொடர் ஓட்டம் ஒரு கட்டத்தில் அப்பாடா என வாழ்வில் தீர்க்க முடியாத அலுப்பையும், களைப்பையும் தந்து விடுகின்றது. அத்தகைய சூழலில் அவர்களின் மனது இவற்றிலிருந்து ஒரு மாறுதலைத் தேடுகிறது. அங்கேதான் எல்லோருக்குமே தேவைப்படுகிறது ஒரு சுற்றுலா. இதனால் தான் சுற்றுலா பயணத்தை 'Energy Gainer' அல்லது 'Booster' என்று சொல்கின்றார்கள்.

சுற்றுலா பல விதமான மனிதர்களையும், இடங்களையும் பார்க்க வைத்து நம் மனதை இலகுவாக்கி சுறுசுறுப்படைய வைத்து அடுத்த சில மாதங்களுக்கு உற்சாகமாக ஓடவைக்கும். அந்த சுற்றுலாவை சுலபமாக்க நாம் தரும் சில ஆலோசனைகள் தான் இவை.

சுற்றுலா செல்வது என்ற முடிவை எடுத்த அடுத்த நிமிடமே வீடு முழுவதும் உற்சாகம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பிக்கும். அந்த சுற்றுலாவுக்கான முன் நடவடிக்கைகளை முறையாக செய்து முடித்தால் அது நமது சுற்றுப்பயணத்தின் பதட்டத்தை குறைத்து உற்சாகத்தை கூட்டும்.

சுற்றுலாவின் போது உங்கள் குடும்பத்தினர் மட்டும் தான் போகின்றார்களா அல்லது வேறு யாருடனும் இணைந்து போகின்றீர்களா என்பதை முதலில் முடிவு செய்யுங்கள். அப்படி முடிவு செய்தால் தான் அடுத்துவரும் விடயங்களை மிகச் சுலபமாக திட்டமிடலாம். காரணம் மற்றவர்களின் இழுப்புக்கெல்லாம் இழுபட்டுப் போனால் எல்லாமே இழுபறிதான். உங்கள் வீட்டுக்காரர்கள் உங்களின் சொல்லுக்கு கட்டுப்படுவார்கள். ஆனால் வேறு நபர்களை உங்களுடன் அழைத்துச் செல்லும்போது அவர்களின் போக்குக்கு நீங்களும் இழுத்துச் செல்லப்பட்டு தேவையில்லாத செலவுகளையும், பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டியதாகி விடும். அதுவும் சிறு குழந்தைகளோடு வருபவர்களாக இருந்து கஞ்சத்தனமாக தமது பணத்தை இறுக்கிப் பிடித்து வைத்துக் கொண்டால் நீங்கள் தான் அவர்களின் செலவையும் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.



யார் யார் போகின்றோம் என்பதை முடிவு செய்தபின் எங்கே போகின்றோம் என்பதை சேர்ந்தே முடிவு செய்வது நல்லது. ஒவ்வொரு ஆண்டும் "அங்கை தானா" என்று யாராவது முனகினால் கண்டிப்பாக மாற்றுத்திட்டம் அவசியம். எனவே வீட்டிலுள்ள குழந்தைகள், முதியவர்கள் எல்லோருடனும் கதைத்து உங்களுக்கும் பிடித்தமான இடத்தை தேர்வு செய்யுங்கள். அவை உங்கள் 'பட்ஜெட்'டுக்குள் வருகின்றதா என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் உங்கள் பிரயாணம் (Tour) முடிந்து வந்ததும் மற்றச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் 'நிதி' நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க இயலும். சுற்றுலாச் செல்லும் இடம் முடிவாகிவிட்டதும். நீங்கள் பயணம் செய்யும் விமானம், பஸ், இரயில் அல்லது Tour Groupஐ முடிவு செய்யுங்கள். முடிவு செய்த உடன் பயண ஏற்பாட்டு வேலைகளில் இறங்கிவிட வேண்டும். காரணம் பல மாதங்களுக்கு முன்பே உங்களுடைய bookingsஐ செய்து கொண்டால் மிக மலிவாக உங்கள் பயண ஏற்பாடு இருக்கும். பஸ், இரயில் எனில் அதற்கான Ticketஐ முன்கூட்டியே பதிவு செய்வது அவசியம். Ticket கையில் கிடைத்ததும். அதன் Photo copy ஒன்றை உங்கள் பயணப் பெட்டி ஒன்றினுள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். தப்பித்தவறி உங்கள் Original Ticketஐ தொலைத்தாலும் உங்கள் Photo copy கை கொடுக்கும்.

எந்த ஊரில் தங்கப் போகின்றீர்களோ அங்கே இருக்கும் தங்கும் வசதிகளைப்பற்றி தெரிந்து வைத்துக் கொள்வது அவசியம். அங்கே போய் பார்த்துக் கொள்ளலாம் என்று போய் பிரபலமான Hotelகளில் இடம் கிடைக்காமல் Lodgeகளில் அல்லது Motelகளில் தங்கவேண்டியோ அல்லது Room கிடைக்காமல் நடுரோட்டில் நிற்கவேண்டியோ வரலாம். நினைத்துப் பாருங்கள் குடும்பத்தோடு போய் Room கிடைக்காமல் ஒரு நிலை வந்தால் எப்படி இருக்கும். எனவே முடியும் பட்சத்தில் முன்கூட்டியே அதனை பதிவு செய்து கொள்ளவும்.

என்னென்ன Laggage எடுத்துப் போகின்றோம், எத்தனை எடுத்துப் போகின்றோம் என்பதை தீர்மானியுங்கள். முடிந்தவரை Laggage எண்ணிக்கையையும் பாரத்தையும் குறைப்பது பயணத்திற்கு இலகுவாக இருக்கும். பல தடவை Toronto Airportஇல் நம்மவரில் பலர் over weightஆல் அதிக விலை கொடுத்து புதிய Bagஐ Airportஇல் வாங்கி Over Weight இற்கு பணம் கட்டி, மனம் நொந்தபடி பயணம் போவதை கண்டிருக்கின்றோம். எனவே நிறைக்கு மேலாக எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம்.

குடை, Sunglass, தொப்பி, Bandage போன்றவற்றை மறக்கவேண்டாம். இல்லாவிட்டால் போகும் இடத்தில் அவசரதேவைக்கு அதிக பணம் கொடுத்து இவற்றை வாங்கவேண்டி வரலாம். இவையெல்லாம் அவசர தேவைக்கு உபயோகமான பொருட்களே. விமானத்திலோ, பஸ்ஸிலோ அல்லது எந்த வாகனத்தில் ஏறும் போதும், இறங்கும்போதும் கொண்டு சென்ற Laggage சரியாக இருக்கிறதா என்பதை ஒருவர் பொறுப்பாக கவனித்து வந்தால் "ஐயோ அந்த Bagஐ அங்க வச்சுவிட்டேன்" என்ற அலறல் கேட்காது. ஒரு இடத்திற்கு செல்வதற்கு நேரத்தை நிச்சயத்துவிட்டால் சரியாக நேரத்திற்கு எல்லோரும் தயாராகி விடவேண்டும். இல்லையேல் மற்றவர்களை காத்திருக்க வைத்து எரிச்சலை உண்டாக்கி பயணத்தை துக்ககரமாக மாற்றிவிடுவோம்.

நெருங்கிய உறவுகளுடன் குழுவாக செல்வதாக இருந்தால் செலவு விஷயத்தில் எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். ஒருவரே செலவு செய்யும் வகையில் நடந்து கொண்டால் அடுத்த தடவை அப்படியோரு பயணத்தை நீங்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போகும். உறவினர்கள், நண்பர்கள் யாராக இருந்தாலும் முதலிலேயே மொத்தமாக தொகையை வசூலித்து கடைசியில் கணக்குப் பார்த்து மீதியை திருப்பித் தருவது போல் ஏற்பாடு செய்தால் பிரச்சினையை தவிர்க்கலாம். உள்நாட்டுச் சுற்றுலா அல்லது வெளிநாட்டுச் சுற்றுலாவாக இருந்தாலும் Travel Insurance எடுத்து சொல்வது நல்லது. அது நமக்கு பாதுகாப்பாக இருக்கும். எப்போதும் அங்கீகரிக்கப்பட்ட Tour நிறுவனங்களை தேர்வு செய்து கொள்ளவும்.

கூடுதலாக பணத்தை கையில் வைத்துப் பாவிப்பதைவிட Credit Card வைத்துப் பாவிப்பதே பாதுகாப்பாகும் காரணம் பணத்தை தொலைத்துவிட்டால் அம்போதான். Credit Card என்றால் தொலைபேசியல் தொடர்பு கொண்டு Cardஐ பாதுகாத்துக் கெள்ளலாம்.

வீட்டை விட்டுச் செல்லும் முன் நகைகள், விலையுர்த்த பொருட்கள், முக்கியமான பத்திரங்களை Lockerஇல் வைத்துவிட்டுப் போகவும். பொருட்களை Lockerஇல் வைத்தாலும், உங்கள் நெருங்கிப் நண்பர்களிடம் வீட்டைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படையுங்கள்.

சரி வந்துவிட்டோமென்று, போன இடத்தில் மூக்கு முட்டக் குடித்துவிட்டு, ரூமில் பிரண்டு பிரண்டு படுத்து, இருண்டது விடிந்தது கூடத் தெரியாமல் போய்வந்தவர்களையும் நாம் பார்த்திருக்கின்றோம்.

'கோடை விடுமுறையை கோலாகலமாக களிக்க எண்ணி வந்திருக்கின்றோம்' என்று மறக்கும் போதெல்லாம் மனதில் நிறுத்துங்கள். நீங்களும் உங்களுடன் கூட வந்தவர்களும் மகிழ்வாக வீடு திரும்பலாம்.

இப்படி பல Travel Tipsகள் இருக்கின்றன எல்லாவற்றையும் இக்கட்டுரையில் விபரிக்க முடியாது.

இன்னுமோர் சுற்றுலாக் கட்டுரையுடன் மீண்டும் சந்திப்போம்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■



# இரசாயன மாசினைக் குறைப்பது எப்படி?



ஜெறாட்
றட்ணராஜா
- Energy Advisor -

**உங்கள் வீட்டில் உள்ள இரசாயன மாசினைக் (Chemical Contaminants) குறைப்பது எப்படி?**

வீடுகளில் உள்ள காற்றை எப்படி சுத்தமாக வைத்திருப்பது என்பதை இக்கட்டுரை விபரிக்கிறது. வீட்டில் உள்ள காற்றின் அசுத்தங்களை அகற்றுவதன் மூலம் காற்றின் தரத்தைப் பேணலாம்.

சாதாரணமாக வீடுகளில் பைக்றீரியா, வைரஸ், தூசியிலுள்ள நுண்ணுயிர்கள், பூஞ்சணங்கள் (Mold) போன்று உயிரியல் அசுத்தங்கள் (Biological Contaminants) காணப்படும். இதைத் தவிர ஏனைய அசுத்தங்கள் யாவும் இரசாயன அசுத்தங்களாக (Chemical Contaminants) கருதப்படும். இவ்விரு வகையான அசுத்தங்களும் தூசு, நார் அல்லது நச்சுக்காற்று போன்ற வடிவங்களில் காணப்படும்.

அநேக மக்கள் காற்றை வடிகட்டுவதன் மூலம் இவ்வகையான அசுத்தங்களை அகற்றலாமென நினைக்கிறார்கள். சாதாரண (Furnace filter) காற்றில் உள்ள தூசுக்களை மட்டும் அகற்றக்கூடியது. ஆனால் வாயுக்களை அகற்ற Activated charcoal அல்லது Activated alumina போன்ற பிரத்தியேக வடிகட்டிகளை பயன் படுத்த வேண்டும். அத்தோடு இவ்வடிகட்டிகள் அவற்றிற்குரிய முறையில் பொருத்தப்படுவதோடு அடிக்கடி மாற்றப்படவும் வேண்டும். எனினும் இம்முறையானது அசுத்தங்களை முற்றாக அகற்றக்கூடிய சிறந்த வழியல்ல. எனவே இத்தகைய இரசாயன வாயுக்களோ அல்லது சிறு துகழ்களோ வீடு முழுவதும் பரவுவதற்கு முன்னமே அவை உற்பத்தியாகும் இடங்களிலிருந்து அகற்றுவதன் மூலம் அல்லது அதன் உற்பத்தியை நிறுத்துவதன் மூலம் காற்றின் உயர்தரத்தைப் பேணமுடியும். அதாவது நச்சுக்காற்று உற்பத்தியாகுமுன் இடத்தை தனிமைப்படுத்த வேண்டும் அல்லது Encapsulating பண்ணப்பட வேண்டும்.

### உடலாரோக்கியத்தின் பாதிப்பு:

வேலைத்தளங்களில் பாவிக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படும் ஆரோக்கியப் பாதிப்புபற்றி யாவரும் அறிந்ததே. கனடாவின் தொழில்த்துறை சுகாதாரமும் பாதுகாப்பும் சம்பந்தமான நிறுவனமும் (Canadian center for occupational health and safety /CCOHS) மாகாணத் தொழில்த்துறை நிறுவனமும் (provincial department of labor) இரசாயன அசுத்தங்களை தாக்குப்படிக்கும் அளவை ஆகக்குறைந்த காலம் ஒருமணித்தியாலம் எனவும் ஆகக்கூடியகாலம் எட்டு மணித்தியாலம் எனவும் வகைப்படுத்தியுள்ளனர்.

வேலையிடத்தில் காணப்படும் இரசாயன மாசுக்களின் செறிவு பொதுவாக வீட்டிலுள்ள மாசுக்களின் செறிவை விட அதிகமானபடியால் இந்த அளவுகோலை வீடுகளில் பாவிக்க முடியாது. ஆனாலும் நாளொன்றுக்கு எட்டு மணிநேரம் வேலைத்தளத்தில் இரசாயனப் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் மட்டுமன்றி நலிந்த உடல்நிலையில் வீடுகளை விட்டு வெளிவராது இரசாயன மாசுச் சூழலில் வாழ்பவர்களும் பாதிப்படைகிறார்கள்.

### ஒரு செய்முறை அணுகல்:

இரசாயனப் பாதிப்பைத் தடுக்க சிறந்த முறை என்னவெனில் முதலில் வீட்டினுள் கொண்டு வரும் பொருட்களை பரிசீலிக்க வேண்டும். வீடுகட்டும் போதோ புனரமைக்கும் போதோ அதற்குரிய கட்டடப் பொருட்களை கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். வீட்டில் பாவிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலைத் தயாரித்து இரசாயன மாசுக்களை வெளியேற்று முன் கணிக்கப்பட்ட பொருட்களைத் தவிர்க்க வேண்டும். அல்லது கூடியளவு குறைத்துப் பாவிக்கவேண்டும். முதலில் கட்டடப் பொருட்கள் எதனால் ஆக்கப்பட்டதென்றும், எத்தகைய பதார்த்தத்தை வெளியேற்றும் வாய்ப்புண்டு என்றும் அறிந்து கொள்ளவேண்டும். ஒரு சில பொருட்களே மாசுக்களை வெளிவிடமாட்டாது. உதாரணமாக:- கண்ணாடி, செராமிக் ரையில் (ceramic tiles), உலோகம், கல் மற்றும் கடின மந்தமான பதார்த்தங்கள் என்பனவே. நீங்கள் பாவிக்கப் போகும் பொருட்களின் குணாதிசயம் தெரியாவிடில் தயாரிப்பாளர், அல்லது விநியோகஸ்தர்களிடமிருந்து பதார்த்தப் பாதுகாப்பு தகவல் அடங்கிய விளக்கத்தை (material safety / data sheet - MSDS) பெற்றுக்கொள்ள வேண்டும். அநேகமான பொருட்களின் MSDSஐ இணையத்தளத்திலிருந்தும் (Web) பெற்றுக் கொள்ளலாம். இத்தகவல்களிலிருந்து பொருட்களில் கலந்துள்ள இரசாயனப் பதார்த்தங்களை அறிந்துகொள்வதில் மட்டுமன்றி ஆரோக்கியத்திற்கு ஏற்படும் ஆபத்துக்களையும் மேற் கொள்ளப்பட வேண்டிய எச்சரிக்கைகளையும் அறிந்துகொள்ளலாம். முன் எச்சரிக்கை உங்களைப் பயமுறுத்துமாகில் அதைத்தவிர்த்து வேறுபொருட்களை தேர்ந்தெடுக்கலாம்.

உடல் நலத்திற்கு கேடுவராதென்றால் உங்கள் முகரும் சக்தியைப் பயன்படுத்தியே பொருட்களை தேர்ந்தெடுக்கலாம். வாசனையை வைத்து வாயுக்கள் வெளியேறுவதை கண்டு பிடிக்க முடியுமென்றாலும் எந்தவிதமான வாடையுமின்றி இரசாயனவாயுக்கள் மற்றும் அசுத்தங்கள் வெளியேறலாம் என்பதை நினைவில் வையுங்கள். அத்தோடு வாயுவின் வாசனைச் செறிவு குறைவாக இருப்பினும் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். உதாரணமாக Carbon monoxide (co), Carbon dioxide ($CO_2$) மற்றும் Radon போன்றவாயுக்கள் எந்தவாடையையும் வெளியிடுவதில்லை.

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் உங்கள் வீட்டில் சாதாரணமாகக் காணப்படும் பொருட்களிலிருந்து வெளியாகும் மணம், இரசாயன வெளியேற்றம், ஆபத்தானபொருட்கள் ஆகியவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.

- அடிக்கடி மற்றும் அதிகளவில் பாவிக்கும் பொருட்களிலிருந்தும்,
- வீட்டினுள் அதிகபரப்பில் காணப்படும் கட்டடப் பொருட்களிலும் ,
- வீட்டுக்குள் கொண்டுவரும் புதுப் பொருட்களிலிருந்தும்,

அதிகூடிய இரசாயன மாசுக்கள் வெளியேறுகின்றன.

புதுப்பொருட்களிலிருந்து வெளியேறும் மாசுக் காற்று நாளடைவில் குறைந்து கொண்டு போகும். உதாரணம் paint, varnish, glue போன்றன. அத்தோடு கடும் சூட்டுக்குள்ளாகும் கம்பளங்கள் சூடேற்றப்பட்ட நிலங்கள், ஈரமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் particle board தளபாடங்கள் போன்றவை இரசாயன மாசுக்களை உற்பத்திசெய்யும் பொருட்களாகும்.

### உங்கள் வீட்டில் இரசாயன அசுத்தங்கள் வராமல் தடுத்தல்.

**புகைப்பிடித்தல்:**

சிகரட்டுப் புகையில் பல இரசாயன மாசுக்கள் அடங்கியுள்ளன. கண்டிப்பாக வீட்டினுள் புகைத்தல் கூடாது.

**எரியும் மெழுகுவர்த்தி:**

எரிதலின் பக்கவிளைவுகள் கார்பன் மோனாக்ஸைடு(co), கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$), VOCs, Polycyclic aromatic hydrocarbons ஆகிய மாசுப்பொருட்கள்.

வீட்டினுள் வைத்து மெழுகுவர்த்திகள் திரவ எரிபொருட்கள் அல்லது சாம்பிராணி, கற்பூரம் போன்றவைகளை எரிக்காதீர்கள்.

> “ வீடுகளை விட்டு வெளிவராது
> இரசாயன மாசுச் சூழலில் வாழும்
> நலிந்த உடல்நிலையுள்ளோரும் சிறுவர்களும்
> இரசாயனப் பதார்த்தங்களால்
> அதிகம் பாதிப்படைகிறார்கள். ”

**பூச்சிகொல்லிமருந்தின் பாவனை:**

பூச்சி கொல்லி மருந்துகள் பூச்சியை மட்டுமல்லாமல் உங்களையும் பாதிப்புறச் செய்யும்.

பூச்சிகளை trap அல்லது fly swatterகள் போன்ற இரசாயன ரீதி அல்லாது பிற பூச்சி கொல்லித் தடுப்புமுறைகளை பயன்படுத்துங்கள்.

Vacuuming மூலம் சிலந்திகள் மற்றும் மற்றும் பூச்சிக் கூட்டங்களை அழியுங்கள்.

பூச்சி நுழையக் கூடிய இடங்களை அடைத்து விடுங்கள்.

எங்கள் வீட்டில் உள்ள செல்லப் பிராணிகளின் மீதுள்ள ஈக்கள் மற்றும் பூச்சிகளை அழிப்பதற்கு மிருகவைத்தியரின் உதவியை நாடுங்கள்.

உங்கள் வீட்டில் பசும்புல் வெளிக்கு அல்லது தோட்த்திற்கு பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்தாதீர்கள்.

### வீட்டுச்சுத்தமும் இரசாயனப் பொருட்களும்:

மணமற்ற நச்சுத்தன்மை குறைந்த பொருட்களைப் பாவியுங்கள் உதாரணமாக mold (பூஞ்சணம்)ஐ சுத்தப்படுத்த bleachற்கு பதிலாக வாசனையில்லாத detergentஐயும் மற்றும் ammonia கலந்த சுத்திகரிப்புப் பொருட்களுக்கு பதிலாக அப்பச்சோடாவைப் பயன்படுத்துங்கள். கிருமிநாசினி திரவங்களுக்குப் பதிலாக detergent மற்றும் தண்ணீரைப் பயன்படுத்துங்கள்

வீட்டிலுள்ள குப்பைகள், சமையலறையிலுள்ள கழிவுகள் மற்றும் அழுகும் காய்கறிகளை தினசரி அகற்றி deodorizerகளின் தேவையை இல்லாமல் ஆக்குங்கள்.

இலை, தழை போன்ற அழுகும் பொருள்களை வெளியே ஒதுக்கி வைத்துவிடுங்கள். இறைச்சி அல்லது மீன் வைக்கப்பட்டிருக்கும் அட்டைப் பெட்டிகளை தண்ணீரில் கழுவிய பின் குப்பையில் எறியுங்கள்.

குப்பைகளை சேகரிப்பவர் வரும் தினம் வரை இறைச்சி, மீன் போன்ற அழுகக்கூடிய பொருட்களை குளிரூட்டும் பெட்டியில் வைத்திருங்கள்.

Aerosol deodorizer அல்லது Air freshenersகளை உபயோகிப்பதற்கு பதில் Mold உள்ளிட்டவைகள் உற்பத்தியாகி, துர்நாற்றம் வீசக் காரணம் என்பதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுங்கள்.

வாசனையில்லாத biodegradable detergentகளை பயன்படுத்துங்கள்.

இரசாயன ரீதியான வாசனைகளை வீசும் நறுமணம் உள்ள fabric softenerகளை உங்கள் ஆடைகளுக்குப் பயன்படுத்தாதீர்கள்.

அடிக்கடி bleach பயன்படுத்துவதை குறைத்து விடுங்கள்.

Moth ballகளை பயன்படுத்தாதீர்கள். அவை உங்கள் வீட்டிலுள்ள காற்று, மற்றும் உங்கள் ஆடைகள், furnishingகளில் வாடையை விட்டுச் செல்லும்.

வீட்டினுள் எந்தவகை aerosol spray களையும் பயன்படுத்தாதீர்கள்.

Carpet அல்லது furnishingகளில் soil-repellent பொருட்களை தடவாதீர்கள்.

### தனிப்பட்ட பொருட்கள்:

வாசனையில்லாத சவர்க்காரங்கள், Shampooகள், Deodorantகள் மற்றும் Lotionகளை பயன்படுத்துங்கள்.

வாசனை திரவியங்கள் பயன்படுத்துவதை நிறுத்தி விடுங்கள்.

Dry cleaning செய்யப்பட்ட ஆடைகளை வீட்டிற்கு வெளியில் அதனுடைய வாடை போகும் வரை வைத்திருங்கள்.

நீங்கள் வீட்டிற்கு கொண்டுவரும் பொருட்களில் ஏதாவது வாடை வீசுகிறதா என்பதை கவனியுங்கள்.

66ம் பக்கம் பார்க்க...

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

**For a limited time government will pay rebate for insulating your attic**

**+ Provincial (750) + Toronto (200) = $ 950**

from existing R-12 insulation to raise it up to R50

### How can attic insulation help me?

-Reduce the heat loss through attic

-Save on heating & cooling cost

-Prevent roof rot and mold in a well

-insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

**Call for no obligation free quote**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

ENERecon INSULATION

**Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com**

Stay warm in winter. Be cool in summer

# பாரதியின் பார்வையில் பெண்



சிவவதனி
பிரபாகரன்

உலகில் முதன்மைச் சிறப்புடையவள் பெண். உயிர்களை பிறப்பித்து பேணிக்காக்கும் அரும் பணியாற்றுபவள். அத்தகைய பெண்ணை தரமுயர்த்திக் கவி எழுதியவர் பாரதியார்.

பெண்ணின் பெருமையைப் போற்றாத அறிஞர் இவ்வுலகில் இல்லை. எனினும் நானறிந்த-வரை பெண்ணை, பாரதி போற்றியது போல் எவரும் போற்றியதில்லை. குறிப்பாக ஆணா-திக்கத்தின் உச்சக்கட்ட ஆக்கிரமிப்பு நிலவிய காலத்தில், அடிமைப்பட்ட பெண்ணினத்தின் வலிகளை உள்வாங்கி, பெண்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதை தன் கட்டாய கடனாக்கி தன் எழுத்துக்களால் போரிட்ட ஒரு 'எழுதுகோல் போராளி'யாக பாரதி வாழ்ந்-தமையை தமிழ்ப் பெண்ணினம் நன்றியோடு எண்ணிப்பார்க்க வேண்டும்.

வள்ளுவப் பெருந்தகை வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் பெண்ணைப் பலவாறு போற்றுகின்றார்.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்ற குறளில் மனைவியான பெண் தன்னையும் காத்து, தன்னை மணந்த கணவனையும் காத்து பேணிப் பண்பு சான்ற சொற்கள் கொண்டு சோர்வற்றுப் பணி செய்பவள் எனப் போற்றுகின்றார். எந்தவொரு குடும்பத்திலும் அச்சாணியாகத் திகழ்பவள் பெண். இங்ஙனம் பெண்ணின் சிறப்பை வள்ளுவர் போற்றும் வகைக்கு ஒருபடி மேலாகச் சென்று பெண்-ணைத் 'தெய்வம்' எனப் போற்றியவர் பாரதி.

மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்
மனையாளும் தெய்வமன்றோ?

பாரதியின் இந்த பெரு நோக்கும் பெண் சார்ந்த நீதிக்கான குரலும் அவரை பெரும் புரட்சிக்கவியாக்கிற்று. "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்" எனப் பாடிய மானிடப் பண்பாளர் பாரதி. "எங்கெங்கும் காணினும் சக்தியடா" என பெண்தெய்வ வழிபாட்டை மட்டுமன்றி பெண்ணையே தெய்வமாகப் போற்றுகின்றார்.

பெண்ணின் சிறப்புகள் பலவானாலும் தன்னல-மற்ற தொண்டு ஆற்றும் இயல்பும் மென்மையும் உடையவள் தாய் மட்டுமே. இதனை நன்கு-ணர்ந்தவராக தனது பல பாடல்களில் பாரதி தாயைப் பலவாறாகப் போற்றுவதைக் காண முடிகின்றது.

"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா"

"மற்றைக் கருமங்கள் செய்தே மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை"

"உண்டாக்கி பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள் என்றறியீரோ?"

எனத் தாயைப் பல இடங்களில் தன் பாடல் களில் போற்றிப் பாடியுள்ளார். ஔவையார் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனப் பாடியது போல அன்னையே உலகாளும் சக்தியான உமையென்று பாடுகிறார் பாரதி. 'தாயை விட உயர்ந்த தெய்வம் இவ்வுலகில் வேறு உள்ளதா?' என வினவுகிறார்.

"தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?
தாய் பெண்ணே அல்லலோ?"

'இங்ஙனம் உயர்ந்த தாயும் ஒரு பெண் தானே அவளைப் போற்றி மதிக்க வேண்டாமா?' என ஆணாதிக்கச் சமூகத்தை உலுக்கிக் கேட்கின்-றன பாரதியின் கவிதைகள்.

காதலை பலவாறாக போற்றியவர் பாரதி. உண்மையான காதல் அமரத் தன்மையுடையது. ஆண் பெண்களிடையே இருமனநிலை கலைத்து ஒருமைநிலை தருவது காதல். காதலுக்கு தெய்வத்தன்மையுண்டு. அந்த தெய்வத் தன்மைக்கும் காரணமானவள் காதலி-யாகிய பெண் தான் என பெண்ணின் மற்று-மொரு வடிவினைப் போற்றுகின்றார் பாரதி.

> " விலங்கொடித்து விடுதலை பெற
> நாம் துணியாதவரை
> எத்தனை பாரதிகள் பாடினாலும்
> விடுதலை என்பது எமக்கு எட்டாக்கனியே. "

பாரதியின் கனவுப்பெண் கண்ணம்மா உலகப் புகழ் பெற்ற கவிதைக் காதலி. பாரதியார் கவிதைகளில், காதலின் சிறப்பைச் சொல்பவள் கண்ணம்மாவாக இருந்த போதும் குயிலி, பாஞ்சாலி போன்ற வேறு பல பாத்திரங்க-ளுடாகவும் பெண்ணைக் காதலியாகப் போற்றுகின்றார்.

அழகு பற்றிய கருத்து மனிதர்க்கு மனிதர் மாறுபடுகின்றது. மனச்சாந்தி தருவது உண்மை-யழகாகும். பெண் மனநிறைவளிப்பவள். அதனால் அவள் அழகானவள். நாலடியார் கூறுவது போல் ஒரு பெண்ணுக்கு ஆடை, அணி வண்ணப்பூச்சுக்கள் முதலியன அழகன்று.

நெஞ்சத்து நல்லம் யாமென்னும் கல்வியழகே அழகு. பெண்ணின் போற்றத்தக்க பண்புகள் தனியழகு. இவ்வண்ணம் பெண்ணின் அழகுக்கு தக்க சான்றுகள் பகல்கின்றன பாரதியின் கவிதைகள்.

"பெண்மை இன்பமாயின் பெண்மை அழகும் ஆகும்"

"பெண் என்னும் தமிழ்ச்சொற்கு அழகு என்பது பொருள்"

"பெண் என்னும் அழகு
இவ்வழகிய உலகை அழகு செய்கிறது
பெண் இல்லையேல் உலகில் அழகு ஏது?"

என தன் பல பாடல்களில் அழகின் உச்ச நிலையாக பெண்ணழகை இரசித்துப் போற்றும் பாரதி பெண்ணின் புற அழகை கருத்தில் கொள்ளாமல் அக அழகையே பாடுபொரு-ளாக்கியுள்ளார் என்பதைக் காண முடிகிறது.

பாரதியின் பாட்டிலுள்ள பெண் அழகுத் தெய்வ-மாக அறிவும் ஞானமும் தத்துவ விளக்கப் பேரறிவும் உடையவளாகத் திகழ்கின்றாள். பாரதி பெண்ணழகின் பெருமையைக் 'காதல்' என்ற பகுதியிலும் தெய்வீகக் கருத்தழகை 'புதுமைப் பெண்' என்ற பகுதியிலும் பாடி-யுள்ளார்.

பெண்ணைத் தாழ்வுபடுத்தி ஈனப்பிறப்புகளாக. ஒதுக்கிச் சிறுமைப்படுத்திய காலத்தில் துணி கரமாக தான் வாழும் சமூகத்தை தன் கவி-தைச் சாட்டையடிகளால் தொடர்ச்சியாக அடித்துத் திருத்த முயன்ற பெருமை பாரதிக்கு உண்டு.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

'மங்கையர் பங்கையக் கைநலம் பார்த்து அறங்கள் செழிக்கின்றன' எனப்பாடியது போல் தர்மத்தைப் படைத்தும் காத்தும் வழங்கியும் வாழும் பெண்ணின் அறத்திறனையும் பாரதி தன் பாடல்களில் போற்றியுள்ளார்.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்ற ஔவை-யின் கூற்றுக்கமைய உயர்வான இல்லறத்தி னைப் போற்றும் பாரதி அதன் கண் எனப் பெண்ணைப் போற்றுகிறார். அன்பும் அறனும் உடைத்தாய இல்வாழ்க்கை சிறக்க இல்லாள் துணை வேண்டும் என்பது பாரதியின் கருத்து. இதனை பெண்புலவரான ஔவையார் "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்று-மில்லை" என பாடியதைவிட ஆணாதிக்க சமூகத்தில் ஆணாகப் பிறந்த பாரதி பாடிய-தானது தனிச்சிறப்புடையது.

"மற்றைக் கருமங்கள் செய்தே மனை வாழ்ந்-திடச் செய்பவள் அன்னை" என இல்லற வாழ்வின் கண்ணான பெண்ணைப் போற்றும் பாரதி இவ்வுலகையும் பெண்ணைப் போற்றிடு-மாறு வலியுறுத்துகின்றான். இல்லற வாழ்வை முத்திப்பேரின்பம் என ஆன்மீகத்தோடு மனைவி-யுடனான வாழ்வை இணைத்துப் பாடும் பாரதி 'பெண்ணும் இல்லறமும்' 'மக்கட்பேறு' ஆகிய பகுதிகளில் இல்லறப் பெண் பற்றிப் பாடியுள்ளமையைக் காணமுடியும்.

பாரதியின் கற்பு பற்றிய கருத்துக்களை அவரது கற்புக் கோட்பாடுகளூடாக வாதிட முடியும். அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதே எனக் கூறுபவை பாரதியின் பாடல்கள்.

"கற்பு நிலையெனச் சொல்ல வந்தார்
இருகட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்"

என்ற அவரது பெண் விடுதலைக் கும்மிப் பாடல்களில் அவரது இந்த உயர்ந்த இலட்சிய வரிகளைக் காணமுடியும். பெண்ணிற்கு கற்பொழுக்கம் வகுத்து அதனைத் தவமெனப் போற்றப்பணிக்கின்றார்.

கற்ற பெண்களின் மக்கள் நன்மக்களாக கல்வியில் சிறந்தோராக வாழ்வர் என பாரதி பாடியதில் பொய்யில்லை. 'கல்வியறிவு என்னும் ஒளி, அறியாமை இருளகற்றி தத்தன தகாதன ஆய்ந்தறிந்து வாழ உதவும்.' 'அறிவின் வலிமை விடுதலை பெற்றுத்தரும்' என்பன போன்ற உயர்ந்த கருத்துக்களை பாரதியின் பாடல்களில் காணலாம். கற்ற பெண்கள் நாட்டின் கண்கள் எனக் கூறும் பாரதி கல்வித் தொண்டு இதர அறங்களைவிட உயர்ந்தது என்கின்றார். ஒரு பெண்ணின் கல்வி ஒளி ஓராயிரம் விளக்குகளை ஏற்றி உலகுக்கே ஒளி தர வல்லது என வியந்துரைக்கின்றார். பெண்ணின் கல்வி குன்றிலிட்ட விளக்காக ஊருக்கும் பயன்படவேண்டுமேயொழிய குடத்துள் விளக்காக குடும்பத்துள் முடங்கக் கூடாது. பாரதியின் பெண் கல்வி பற்றிய கருத்துக்களை 'பெண்ணும் கல்வியும்' என்ற பகுதியில் காண முடியும்.

வீட்டுக்குள் பெண்களைப் பூட்டி வைத்த மடமை மாந்தரின் அறிவீனத்தைக் கடிந்து முடங்கிக் கிடைக்காமல் பரந்த உலகில் பணி செய்ய எழுகை பூண்டு விடுதலை உணர்வுடன் வெளிவருமாறு பெண்களுள் எழுச்சியூட்டியவர் பாரதி. விடுதலை என்பது யாரும் எமக்குத் தருவதல்ல. நாமாகவே போராடிப் பெறுவது. இது பெண் விடுதலைக்கும் பொருந்தும்.

காலத்திற்கேற்ற பெண்ணறங்களைப் பாரதியின் புதுமைப் பெண் அறிவிக்கின்றாள். இவற்றை 'இலட்சியப் பெண்மை' என்ற பகுதியில் காண முடியும். பாரதி பெண்ணின் பெருமையை தன் பாடல்கள் பலவற்றிலும் பரவலாகப் பாடியுள்-ளார். பெண் தன்னைத் தான் அறிய வேண்டும். தன்னிலைத் தெளிவு பெற வேண்டும். அதன் மூலமே அவள் வளர்ச்சி காணமுடியும். பெண்-ணின் பெருமையை ஆண்களும் முழு வையகமுமே உணர வேண்டும்.

வியன்னா மனித உரிமை மாநாட்டில் 1993ல் பெண்ணுரிமையும் மனித உரிமையே என்னும் தீர்மானம் நிலைநாட்டப்பட்டது. ஆனால் பாரதியோ இதனை அன்றே வலியுறுத்திப் பாடினார். இதிலிருந்து பாரதியின் தூரநோக்-குப் பார்வையை தெளிவாகக் காணமுடிகின்றது.

பெண்ணுக்கு விடுதலை வேண்டும், உரிமை வேண்டுமெனப் பாடியவருள் பாரதி முதன்-மையானவர் எனலாம்.

66ம் பக்கம் பார்க்க...

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO)
துயர் துடைக்க விரும்புவோருக்கான பங்களிக்கும் முறைகள்:
1. தபால் மூல முகவரி: (காசோலையாக) "IMHO Canada", 5637 Finch Avenue East, Unit #7, Scarborough, ON M1B 2T9
2. இணைய த்தள மூலம் : www.imhocanada.org ⟶ Paypal
3. வங்கிக் கிரமக்கழிவு: இணையத்தளத்திலிருந்து அதற்கான படிவத்தை தரவிறக்கி நிரப்பி அனுப்பலாம்
(Monthly contribution)
தொடர்புகளுக்கு: 416 321 9500; contact@imhocanada.org

# உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு King Cobraவின் விஷம் 25 மனிதர்களை அல்லது ஒரு யானையைக் கொல்லக்கூடியது.
- Walt Disney World களியாட்ட இடத்தில் ஒரு நாளைக்கு 120,000 இறாத்தல் கழிவுப் பொருட்கள் சேருகின்றன.
- 80 வீதத்திற்கும் அதிகமான குத்துச்சண்டை வீரர்கள் மூளை பாதிப்பினால் (Brain Damage) அவதியுறுகிறார்கள்.
- ஒரு பெண் மக்கரல் மீன் ஒரு நாளைக்கு 500,000 முட்டைகளை ஒரே தடவையில் இடும்.
- ஒரு சுறாமீன் அதனுடைய வாழ்காலத்தில் 50,000 பற்களை இழக்கும்.
- Persia என்ற நாட்டின் பெயர் 1935இல் ஈரான் என்று மாற்றப்பட்டது.
- கரட்டை விரும்பி உண்ணும் Bugs Bunny முயல் கதாபாத்திரத்திற்கு குரல்கொடுக்கும் Mel Balance என்பவர் கரட் உணவுக்கு ஒவ்வாத்தன்மை உடையவர்.
- ஒரு மனித இருதயம் 1.5 மில்லியன் கலன் இரத்தச் சுற்றோட்டத்தை ஏற்படுத்துகிறது.
- கட்டை விரலின் நகத்தைவிடவும் நடு விரலின் நக வளர்ச்சி அதிகமானது.
- 60 வயதை அடையும்போது மனிதர்களின் நாக்கில் இருக்கும் சுவை அரும்புகளில் 50 வீதமானவை இறந்துவிடுகின்றன.
- ஆண்டார்டிக்கா நிலப்பரப்பு மட்டுமே உலகின் எந்த நாட்டுக்கும் உரிமையில்லாதது.
- எந்த இலக்கத்தையும் ஒன்பதால் பெருக்கி வரும் விடையைக் கூட்டினால் ஒன்பது என்பது கடைசியாக பதிலாக இருக்கும். (7x9=63, 6+3=9; 531x9=4779, 4+7+7+9=27, 2+7=9)
- உலகின் மிகச் சிறிய நாடு வத்திக்கான். (0.17 சதுர மைல்கள்) சனத்தொகை 1000. இரண்டாவது சிறிய நாடு மொனாக்கோ (0.7 சதுர மைல்கள்)
- ஆஸ்திரேலிய நாடு மட்டுமே ஒரு தனி கண்டமாகவும் நாடாகவும் அழைக்கப்படுகிறது.
- கிறீஸ் நாட்டின் தேசிய கீதம் 158 வரிகளை உள்ளடக்கியது.
- தீக்கோழி(Ostrich)யின் முட்டையை முழுமையாக அவிக்க நான்கு மணித்தியாலங்கள் பிடிக்கும்.
- வாழைப்பழத்தில் மனிதர்களை ஆனந்தமாக வைத்திருக்கும் இரசாயனம் இருக்கிறது.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது ஒன்பது வயதுவரை சரியாக பேசவில்லை. அவருக்கு Dyslexia நோய் இருப்பதாக சந்தேகப்பட்டார்கள்.
- 1976 ஆம் ஆண்டு வங்கிகள் சேர்ந்து Master charge என்ற வங்கிக் கிரடிட் கார்டுகளை உருவாக்கினார்கள். அதுவே பின்னர் 'மாஸ்டர் கார்ட்' என்று அழைக்கப்படுகிறது.
- சூரியன் உதயமாகும் பொழுதிலும் பார்க்க அஸ்தமிக்கும் பொழுதில் சிவப்பு நிறம் அதிகமாக இருப்பதற்கு காலைப் பொழுதிலும் பார்க்க மாலை நேரத்தில் வானில் அதிக தூசு படலம் இருப்பதே காரணம்.
- ஒப்பீட்டளவில் மனித உடலில் மிகப் பலமான தசைப் பகுதி நாக்கு.
- உலகில் மிக அபாயகரமான பூச்சி இனம் Housefly. இவை உலகில் எந்த விலங்கினையும் விட அதிகமான நோய்க் கிருமிகளைக் கடத்தும் நோய் காவியாகும்.
- மனித உடலில் நான்கில் ஒரு பகுதி எலும்புகள் காலின் பாதத்தில் இருக்கிறது.
- 30,000 தொன் coal உருவாக்கக்கூடிய சக்தியை ஒரு தொன் யுரேனியம் உருவாக்கும்.
- குதிரைகளால் வாந்தி எடுக்க முடியாது.
- ஒவ்வொரு தனிநபருக்கும் கைவிரல் அடையாளங்கள் மட்டுமல்லாமல் நாக்கில் இருக்கும் ரேகைகளும் கண்ணின் நுண்ணிய அமைப்பும் மிக தனித்துவமானதாகக் காணப்படும். இவை இரட்டைப் பிறவிகளானாலும் ஒவ்வொருவருக்கும் தனித்துவமானதாகவே அமைந்திருக்கும்.
- வெனிசுவெலா நாட்டில் இருக்கும் த ஏஞ்சல் நீர்வீழ்ச்சி கனடாவிலுள்ள நயாகராவை விடவும் 20 மடங்கு உயரமானது.
- வளர்ந்த மனிதனுடைய உடம்பில் 206 எலும்புகள் காணப்படும். மனிதன் பிறக்கும் போது 300 எலும்புகள் காணப்படும்.
- எறும்புகள் தூங்குவதில்லை.
- தகர டப்பாக்கள் (Can) கண்டுபிடிக்கப்பட்டு 48 ஆண்டுகளின் பின்னரே can opener கண்டுபிடிக்கப்பட்டது.
- தேனீக்கள் மணிக்கு 15 மைல்கள் வேகமாகப் பறக்கக்கூடியவை.
- கோணலான மூக்குடன் பிறப்பவர்கள் தலைமைத்துவ தன்மையுடையவர்களென ரோம ஆட்சிக்காலத்தில் நம்பப்பட்டது.
- ஒவ்வொரு நாளும் 20 மில்லியன் விண்வெளிக் கற்கள் பூமியின் வளி மண்டலத்துள் புகுகின்றன.
- சராசரி நிறையுள்ள ஒரு மனிதனின் உடல் எரிக்கப்பட்டால் கிடைக்கும் சாம்பலின் நிறை 9 இறாத்தல்கள்.
- 1950ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சனத்தொகை கணக்கெடுப்பில் பாவிக்கப்பட்ட முதலாவது கணனியின் பெயர் UNIVAC.

**- ஜி.:.ப்றி மீராசாஹிப் -**

- புன்னகை செய்யும்போது உடம்பில் உருவாகும் Endorphins அந்த மனிதரை சந்தோஷமாக உணரவைக்கிறது.
- வளர்ந்த ஒட்டகச் சிவிங்கியின் நாக்கினது நீளம் 21 அங்குலம். நீளமான நாக்கு அதனுடைய காதுகளைச் சுத்தப்படுத்தவும் உதவுகின்றது.
- நலமாக உள்ள மனிதனின் கண்கள் 17,000 நிறங்களைப் பிரித்தறியும் வல்லமை உடையது.
- முத்தமிடுவதனால் முத்தமிடுபவர்களின் பல் சேதமடைதல் (Tooth decaying) தன்மை குறைக்கப்படுமாம். முத்தமிடும்போது சுரக்கும் மேலதிகமான உமிழ்நீர் இந்த பற் சேதத்தைத் தடுக்க உதவுகிறதாம்.
- வட துருவத்தில் Penguinகளைக் காண முடியாது.
- கண்களை திறந்து வைத்தபடி தும்ம உங்களால் முடியாது.
- இன்று வாகன உற்பத்தியின் பெருக்கம், மனித இனப் பெருக்கத்திலும் மூண்டு மடங்கு அதிகமாக உள்ளது,
- உங்கள் உயரத்தை அளந்து அதனை எட்டினால் பிரித்தால் வரும் விடை உங்கள் தலையின் உயரத்தை தரும்.
- சவுதி அரேபியா 830,000 சதுர மைல் பரப்பளவு உடைய பெரிய நாடக இருந்தாலும் ஒரு நீர் நிறைந்த ஓடும் நதி இல்லை

jiffry.meearashahib@thaiveedu.com

■ ■ ■


**LEARN TO EARN in REAL ESTATE INVESTMENTS!!!**

COMMERCIAL

$599,000

Unbelievable : Over 10% Cap rate for the Property and ESSO - Good for a small family

$699,000

Ideal investment for a new immigrant SHELL Gas Station in their own property.

$799,000

Money making 3 in 1(Gas + Convenience + Coffee time) business with property

$2.49Million

Cash on Cash over 20% within one hour from Toronto; Approx 3.5 acres on Hi-way location


$3.29Million

Rental Income + Gas Station for the right investor; Less than 1.5 Hrs from GTA

RESIDENTIAL

$99,000

2BR+2WRcondo near doctors office, shopping, Schools & 24hr TTC - Rental Income $900/m

$129,000

2BR+2WR condo near Hospital, shopping etc; Possible Rental Income $1100/m

$249,000

3BR+2WR detached Home near HWY 401; Rental Income $1350/m + Utilities

$349,000

3BR+2WR detached Home in quite neighborhood; Rental Income $1650/m + Utilities

$409,500

Large 4BR+4WR in Pickering selling for a Bargain price; Ideal for a Handyman/ Investor

*WE OFFER AFFORDABLE PROPERTY MANAGEMENT SERVICES FOR YOUR INVESTMENT PROPERTIES!!*

ஆதன முதலீட்டுக்குத் தகுந்த தருணம்!!- வரலாறு காணாத வட்டி விகிதம் இப்போது கிடைக்கிறது!!!

*சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் - உடனே அழையுங்கள்!!!*

Uthayan Nadarajah
Real Estate & Business Broker
Direct:
416-727-9945

RE/MAX
The Real Estate Leaders

Vijay Thiagarajah
Real Estate & Business Broker
Direct:
647-297-7144

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage, Independantly owned and operated
6758 Kingston Road, Toronto, ON. M1B 1G8 Office: 416-286-3993 Fax: 416-286-3348
***Every office is independantly owned and operated*** ****Not Intended to solicit any property under contract****

சிறப்புத்தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல் (Identifying Special Needs children)

# கற்றல் திறன் குறைந்த தன்மைகள்

## (Learning Disabilities)



ஜீவா திசைராஜா

தொடர் - 6

எனது பிள்ளை ஏன் மற்றைய பிள்ளைகளைப் போல் படிக்க முடிவதில்லை என்பது இன்று பல பெற்றோருடைய வினாவாக உள்ளது. பிள்ளைகள் பாடசாலை செல்லும் வயதில், அவர்களின் கற்றல் திறன் குறைந்த தன்மையானது (Learning disability) பெற்றோருக்கு மனச்சுமையைக் கொடுக்கும் ஒன்றாக காணப்படுகின்றது.

இந்த கற்றல் திறன் குறைந்த தன்மை என்றால் என்ன? இது எவ்வாறு வரையறுக்கப்படுகின்றது? எவ்வாறு இத்தகைய பிள்ளைகளை இனங்காணலாம். இவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதை இக் கட்டுரை விளக்குகின்றது.

கல்வி அமைச்சினால் கற்றல் திறன் குறைந்த தன்மைகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது. கற்றல் திறன் குறைந்த தன்மை என்பது பேச்சு மற்றும் தொடர்பாடல் தன்மைகள் தேவைப்படும் கல்விசார் மற்றும் சமூக சூழலில் தெளிவாகத் தெரியும் கற்றல் ஒழுங்கீனம் ஆகும்.

இவ் ஒழுங்கீனம் பின்வருவனவற்றின் விளைவால் ஏற்பட்டதாக இராது. அதாவது பார்வைக் குறைபாடு, காது கேட்கும் தன்மையில் குறைபாடு, உடலியல் திறன் குறைந்த தன்மை (Physical disability), அபிவிருத்தி திறன் குறைந்த தன்மை (Developmental disability), ஆரம்ப உணர்ச்சி குழப்பம் (Primary emotional disturbance) அல்லது கலாசார வேறுபாடுகளின் காரணத்தால் இந்த கற்றல் ஒழுங்கீனம் ஏற்பட்டதாக இராது.

அந்தப் பிள்ளையால் இயலக்கூடிய தன்மைக்கும் அப்பிள்ளை கல்விமட்டத்தில் அடைந்துள்ள தன்மைக்கும் (Academic achievement) இடையில் அதிக வேறுபாடு காணப்படல். அதாவது பின்வருவனவற்றுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றிலோ குறைபாடுகள் இருத்தல். உதாரணமாக கேட்டல், வாசித்தல், சிந்தித்தல், கருத்துருவாக்கல், ஒருங்கிணைத்தல், பேசுதல், சொல்வதெழுதல், எழுதுதல், கணிதரீதியான கணக்கீடுகள் (Mathematical computations) போன்றவற்றில் ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ குறைபாடுகளைக் காட்டி நிற்றல்.

சில சமயம் வெளிப்படையாகத் தெரியும் ஓர் இயலாத் தன்மையாக மூளைப் பாதிப்பு, குறைந்தளவில் மூளை செயலிழத்தல் அல்லது மூளை அபிவிருத்தி குறைபாட்டுடன் தொடர்பு பட்டதாக இருக்கும்.

எல்லா மாணவர்களும் தமக்கேயுரிய கற்றல் பலங்களையும் தேவைகளையும் கொண்டிருப்பர். மாணவரின் தேவைகள் என்ன என்பதை அறிவதற்கு மாணவரின் பலங்களை இனங்காணல் முக்கியமானதாகும். அநேக காரணிகள் - உடலியல், புத்திசார், கல்விசார், கலாச்சார உணர்வுசார் மற்றும் சமூக-காரணிகள் ஒரு மாணவரின் கற்றலுக்கான இயலுதன்மையில் செல்வாக்கு செலுத்துகின்றன. ஒரு மாணவரின் தேவையைக் கவனத்திற் கொண்டு செயற்படுவதற்கு அம் மாணவரின் பலங்கள் பயன்படுத்தப்படலாம். பொருத்தமான நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்திக்கு அப்பலங்களை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப செயல்படல் முக்கியமானதாகும்.

கற்றல் திறன் குறைந்த மாணவர்கள் சராசரியான இயலுதன்மைகளுடன் சராசரிக்கு சற்று மேலான இயலுதன்மைகளையும் கொண்டிருப்பர். ஆனால் அவர்கள் நன்கு கற்பதற்கும் தமது அறிவையும் திறன்களையும் எடுத்துக் காட்டுவதற்கும் குறிப்பிட்ட கற்பித்தல் வழிமுறைகள் தேவைப்படுகின்றன. கற்றல் திறன் குறைந்த தன்மைகள் (Learning disabilities) உள்ள அநேகமான மாணவர்கள் ஒன்ராறியோ கல்வித் திட்ட எதிர்பார்ப்புகளை (Ontario Curriculum expectations) வெற்றிகரமாக பூர்த்தி செய்யக் கூடியவர்களாக இருப்பதுடன் உயர்கல்வி நிறுவனங்களிலும் கல்வியைத் தொடரக் கூடியவர்களாக உள்ளனர்.

கற்றல் திறன் குறைந்த தன்மைக்கு ஓர் தெளிவான பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் எதுவுமில்லை. பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் காணப்பட்ட போதும் சில பொதுவான ஒத்த தன்மைகளை இவை காட்டி நிற்கின்றன. அவையாவன:

கற்றல் திறன் குறைந்தவர்கள் கல்விசார் அடைதல் (achievement) மற்றும் முன்னேற்றம் தொடர்பில் பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றனர். ஒருவர் கற்கக் கூடிய உள்ளார்ந்த



தன்மைக்கும் (Person's potential for learning) அவர் உண்மையில் எவ்வளவு கற்கிறார் என்பதற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கற்றல் திறன் குறைந்தவர்கள் ஒழுங்கற்ற அபிவிருத்தி நிலைகளைக் காட்டி நிற்பர் (மொழி அபிவிருத்தி, உடலியல் அபிவிருத்தி, கல்வி சார் அபிவிருத்தி மற்றும் கண்டுணரக் கூடிய திறன்களின் அபிவிருத்தி).

இவர்களின் கற்றல் பிரச்சினைகளானவை சூழலில் உள்ள பாதக தன்மைகளால் ஏற்பட்டதல்ல. இக் கற்றல் பிரச்சினைகளானவை, மனநல குறைபாடு அல்லது உணர்வு சார் பிரச்சினைகளால் ஏற்பட்டதல்ல.

### கற்றல் திறன்குறைந்த தன்மைக்கான காரணங்கள் யாவை?

கற்றல் திறன் குறைந்த தன்மைக்கான காரணங்கள் பற்றி சிறிதளவே தற்போது அறியப்பட்டுள்ளது. எனினும், சில பொதுவான அவதானிப்புகளாக பின்வருவனவற்றைக் கூறலாம். ஒரே வயதமைப்புடைய பிள்ளைகளாக இருந்தாலும் கூட சில பிள்ளைகள் ஏனையோரை விட மிக மெதுவான வீதத்தில் அபிவிருத்தி - முதிர்ச்சி நிலைகளை அடைகிறார்கள். இதன் விளைவாக, இவர்கள் எதிர்பார்க்கப்பட்ட பாடசாலை வேலைகளைச் செய்ய முடியாதவர்களாக இருப்பர். இந்த வகையான கற்றல் இயலாத் தன்மையானது "முதிர்வு மெதுவடைதல்" (maturational lag) எனப்படும்.

பார்வை மற்றும் கேட்கும் நரம்பு தொகுதியில் விளக்க முடியாத ஒழுங்கீனங்களின் காரணமாக ஒவ்வொருநாளும் பார்க்கும் மற்றும் காட்சிகளையும் கேட்கும் ஒலிகளையும் சில பிள்ளைகள் தவறாக புரிந்து கொள்ளலாம். பிறப்புக்கு முன் அல்லது ஆரம்ப பிள்ளைப் பருவத்தில் ஏற்பட்ட காயங்கள், பின்னர் கற்றல் பிரச்சினைகட்கு காரணமாக இருந்திருக்கலாம்.

குறைப்பிரவசமாக பிறந்த பிள்ளைகள் அல்லது பிறந்த உடனேயே மருத்துவ பிரச்சினைகள் உள்ள பிள்ளைகள் கற்றல் குறைபாடுகளைக் கொண்டிருக்கலாம்.

கற்றல் திறன் குறைந்த தன்மை பரம்பரையானதாகக் கூட இருக்கலாம்.

கற்றல் திறன் குறைந்த தன்மை, பெண்களை விட ஆண்களிடையே அதிகமாக காணப்படுகின்றது. இதற்கு ஆண்பிள்ளைகள் பெண் பிள்ளைகளை விட மெதுவாக முதிர்வுறுதல் காரணமாக இருக்கலாம்.

சில கற்றல் இயலாத் தன்மையானது சொற்களை எழுத்துக் கூட்டுதல் (Spelling), உச்சரிப்பு மற்றும் ஆங்கில இலக்கண வரம்புகளுடன் தொடர்பானதாக காணப்படுகிறது. கற்றல் திறன் குறைந்த தன்மை ஸ்பானிய மற்றும் இத்தாலிய மொழி பேசும் நாடுகளிடையே குறைவானதாக காணப்படுகிறது.

### கற்றல் திறன்குறைந்த தன்மையின் ஆரம்ப எச்சரிப்பு அறிகுறிகள் யாவை?

கற்றல் திறன் குறைந்த தன்மையுடனான பிள்ளைகள், பரந்தளவில் அறிகுறிகளை வெளிக்காட்டுகிறார்கள். இவற்றுள் வாசித்தல், கணிதம், புரிந்து கொள்ளுதல் (Comprehension), எழுதுதல், பேச்சு மொழி அல்லது காரணம் காட்டக் கூடிய இயலுதன்மைகளுடன் தொடர்பான பிரச்சினைகள் அடங்கும். அளவுக்கு மீறிய இயக்கம் (Hyperactivity), கவனமின்மை (inattention) என்பனவும் கற்றல் திறன் குறைந்த தன்மையுடன் தொடர்புற்றனவாக இருந்த போதிலும் இவை தனியே கற்றல் திறன் குறைந்த தன்மை எனக் கூற முடியாது. கற்றல் திறன்குறைந்த தன்மையின் முதற் குணவியல்பானது, பிள்ளையின் முற்று முழுதான அறிவுத் திறனிற்கும் (intelligence) சில விடயங்களில் (area) பிள்ளையின் அடைவிற்கும்/ சாதனைக்கும் (Achievement) இடையேயான கணிசமான வேறுபாடாகும். அதாவது பிள்ளையால் முடியுமாக இருந்த போதிலும் பிள்ளையின் பெறுபேறுகள் குறைவாக இருத்தல். கற்றல் இயலாத் தன்மைகள் பொதுவாக 5 பொதுவான விடயங்களைப் பாதிக்கின்றது.

**பேச்சு மொழி:** பேச்சு - கதைத்தலில் தாமதங்கள் (delays), ஒழுங்கீனங்கள் (disorders).

**எழுத்து மொழி:** வாசித்தல், எழுதுதல், சொற்களை எழுத்துக் கூட்டலில் கஷ்டங்கள்.

**கணிதம்:** கணித செயற்பாடுகளை செய்வதில் அல்லது அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதில் கஷ்டங்கள்.

**காரணங்காட்டுதல்:** எண்ணங்களை ஒழுங்கு படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலில் கஷ்டங்கள்.

**நினைவாற்றல்:** தகவல்களையும் (Information), அறிவுறுத்தல்களையும் (instruction) நினைவில் வைத்துக் கொள்வதில் ஏற்படும் கஷ்டம்.

### கற்றல் திறன் குறைந்த தன்மையுடன் தொடர்புடைய பொதுவான அறிகுறிகள்:

- குழுப் பரீட்சைகளில் நன்றாக செய்யாதிருத்தல்.
- பருமன், வடிவம், நிறம் (Size, shape, colour) என்பவற்றை பகுத்தறிவதில் கஷ்டம்.
- காலம் (Time) தொடர்பான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதில் கடினம்.
- எழுத்துக்களை எதிரிடையாக மாற்றி எழுதுதல், வாசித்தல். உதாரணமாக: 'b' ஐ 'd' என எழுதுதல். அதாவது 'boy' என எழுத வேண்டுமாயின் 'doy' என எழுதுவார்கள்.
- கட்புலன் ஒருங்கிணைப்பு கடினமாக இருத்தல்.
- அதிகூடிய இயக்கம் (Hyper activity).
- ஒரு மாதிரியை (Model) பார்த்து பிரதி (Copy) செய்வதில் கடினம்.
- ஒரு வேலையை செய்து முடிப்பதில் மெதுவான தன்மை
- ஒழுங்கமைப்புத் திறன் (Organizational skills) குறைவான தன்மை.
- அறிவுறுத்தல்கள் (Instructions) வழங்கப்படும்போது இலகுவாக குழப்பமடைதல்.
- பிரச்சனை தீர்ப்பதில் கஷ்டம்.
- ஒழுங்கற்ற சிந்தனை.
- ஒரு விடயம் அல்லது கருத்தையே பற்றியிருத்தல்.
- குறைந்த கால ஞாபகசக்தி அல்லது நீண்ட கால ஞாபகசக்தியைக் கொண்டிராமை. அதாவது உடனடியாக நடந்தவைகளை மறத்தல் அல்லது நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்தவற்றை நினைவில் வைத்திராமை.
- செயற்பட முன் அதன் விளைவு பற்றி சிந்தியாமை.
- ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமை.
- நித்திரையின் போது அளவுக்கதிகமாக அசைதல்.
- தன் வயதொத்தவர்களுடன் (Peer) நல்லுறவுகளைக் கொண்டிராமை.
- குழுவிளையாட்டுக்களில் ஈடுபடும்போது அளவுக்கதிகமாக மனக்கிளர்ச்சி (Excitement)ஐக் கொண்டிருத்தல்.
- சமூகத்தைப் பற்றிய மதிப்பீட்டை (social judgement) போதியளவில் கொண்டிராமை
- பொருத்தமற்ற அல்லது அளவுக்கதிக

62ம் பக்கம் பார்க்க...

வாகனப் பராமரிப்பு

# கவனிக்கப்படவேண்டிய Ball Joint



அதீசன் சர்வானந்தன்

Ball Jointகள், உங்கள் வாகனத்தின் suspensionன் ஒரு அங்கமாக செயல்படுகின்றன. Steering இணைப்புகளை Control armகளுடன் அது இணைக்கிறது. Suspensionஐ நகரவைக்க உதவும் ஒரு flexible ball மற்றும் ஒரு Socket, ball jointல் இருக்கும். இதனால் wheelகளை திருப்புவதற்கு முடியும். பொதுவாக carகள் மற்றும் truckகளில் மேலே ஒன்று கீழே ஒன்று என இரண்டு பக்கங்களிலும் நான்கு suspensionகள் இருக்கும். ஆனால் strut suspensionகள் என்றால் மேலே ஒன்று கீழே ஒன்று என இரண்டு தான் இருக்கும். சில front wheel drive carகளில் rear suspension மீது ball jointகள் இருக்கும். மற்ற உதிரி பாாகங்களை போன்று ball jointகளும் தேய்ந்து loose ஆகிவிடும். Joint மிதமிஞ்சிய அளவு பயன்படுத்தப்பட்டால் wheel alignment மற்றும் tire விரைவில் தேய்ந்துவிடும். Jointகள் loose ஆகிவிட்டால் suspensionலிருந்து 'க்ளங்' என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருக்கும்.

ஒரு ball joint பழுதடைந்துவிட்டால், suspension சேதமடைந்துவிடும். அதனால் steeringஐ control பண்ண முடியாத நிலை ஏற்படும். எனவே ஒரு போதும் மேசாமான jointகளை பொருத்தாதீர்கள்.

## Jointஐ பரிசோதனை செய்தல்:

Jointகளில் ஏற்படும் இறுக்கத்தை grease ஓரளவு நழுவவைக்கும் என்பதால் grease போடுவதற்கு முன்னரே jointகளை பரிசோதனை செய்து விடுங்கள். Ball Jointகளை பரிசோதனை செய்வது மிகவும் சுலபம். ஆனால் ஒவ்வொரு வகைக்கும் மாறுபட்ட பரிசோதனை முறை அவசியம். தவறான முறையிலான பரிசோதனை சரியான பலன்களை தராது. Jointல் எந்த இடம் மற்றும் அதன் மீதுள்ள பளு ஆகியவற்றை கவனித்து, சோதனை செய்யவேண்டும்.


## குறைவான பாரத்தை ஏற்றிச் செல்லும் வாகனம்:

Front மற்றும் rear wheel drive வாகனங்களில் lower control arm மீது ball jointகள் காணப்படும். சில வாகனங்களில் அவைகளை rear suspension மீது நீங்கள் காண முடியும்.

சில வாகனங்களில் Indicatorகளுடன் கூடிய Jointகள் பொருத்தப்பட்டிருக்கும். இந்த வாகங்களின் Tireகள் தரையில் நிற்கும் போதே அதன் முழுபாரத்துடன் பரிசோதனை செய்யப்பட வேண்டும். Jack standகளால் Suspension தாங்கப்பட்டு அல்லது wheelகள் தூக்கி நிறுத்தப்பட்ட நிலையில் பரிசோதனை செய்யக்கூடாது.

உள்பக்கம் உள்ள செயல்பாட்டை grease போன்று செயல்படும் உலோகக் குமிழ் (boss) சுட்டிக்காட்டும் என்பதால் wear indicator கொண்ட ஒரு joint இருந்தால் அளவீடுகள் செய்யவேண்டிய அவசியமில்லை. புதிய Joint மீது 0.50 அங்குலங்கள் உலோகக் குமிழ் துருத்திக் கொண்டிருக்கும் Joint தேய்ந்து போகும் போது உலோகக்குமிழ் சரிந்து பின்னோக்கி housingக்கு உள்ளே சென்றுவிடும். உலோகக்குமிழின் (boss) விளிம்பு housingலிருந்து வெளியே துருத்திக் கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கும் வரையில் joint நல்ல நிலையில் உள்ளது என நீங்கள் கருதமுடியும். ஆனால் உலோகக் குமிழின் உச்சி பகுதி housingக்கு கீழே சென்றவிட்டால் நீங்கள் jointஐ மாற்றவேண்டும். ஒரு wear indicator இல்லாத குறைவான பாரத்தை தாங்கும் ball jointகள் பாரம் ஏற்றப்படாத நிலையில், wheelகள் மற்றும் lower control arm ஆகியன ஒரு jack stand மூலம் தூக்கி நிறுத்தப்பட்டு, joint பரிசோதனை செய்யப்படும். பின்னர் ஒரு dial indicatorஐ பயன்படுத்தி ஒன்றிரண்டு திசைகளில் playஐ அளவீடு செய்யவேண்டும். பக்கவாட்டிலோ அல்லது செங்குத்தாகவோ அளக்கவேண்டும்.

ஒரு indicatorஐ jointக்கு அருகில் உள்ள wheel rimன் உள்பக்கம் பொருத்தி பக்கவாட்டு playஐ அளவீடு செய்ய வேண்டும். wheelஐ உள்ளேயும் வெளியேயும் தள்ளி, side ways playஐ சோதித்து பார்க்கவேண்டும். Vertical playஐ சோதனை செய்வதற்கு 25 இறாத்தல்களை விடகூடுதல் விசை கொடுத்து wheelஐ உயர்த்தி தூக்கக்கூடாது. பல jointகள் பக்கவாட்டில் 250 in play (radial play)ஐ தான் அனுமதிக்கும். ஆனால் சில jointகள் .015 in playஐ தான் அனுமதிக்கும். உங்கள் வாகன தயாரிப்பாளரின் குறிப்பு புத்தகத்தை படியுங்கள்.





Pry bar மீது அதிக அழுத்தம் கொடுப்பது தவறு அதைப்போல control arm மற்றும் knuckleக் கிடையே prybarஐ செருககூடாது.

## பாரம் குறைவான அல்லது ஏற்றப்படாத நிலை:

இரண்டுவகை உபயோகங்களுக்கு ball jointகள் பயன்படுகின்றன. அவை எவை எனில் upper-control armக்கு மேலே spring உள்ள RWD carகள் மற்றும் Mac Pherson strut suspensionகள் கொண்ட வாகனங்கள் இரண்டு வகை உபயோகங்களிலும் wheelஐ தரையிலிருந்து உயர்த்தி தூக்கி lower jointஐ சோதனை

62ம் பக்கம் பார்க்க...



# CTR தகவல் பலகை

**DONMILLS & SHEPPARD**
2 bdrm basement for rent
எல்லா வசதிகளுடனும்
Pathi: 416 502 8053

**MARKHAM & ELLESMERE**
3 bdrm basement for rent
Babu: 647 239 4542

**WESTON & FINCH**
3 bdrm for rent
Raje: 647 456 9332

**MORNINGSIDE & FINCH**
2 Rooms for women
Ravi647 863 6468

**KIPLING**
2 bdrm basement for rent தனிவழியுடன்
Near school /HWY's with 1 parking
Selva: 416 418 9793

**MORNINGSIDE & STAINES**
1 bdrm, Separate path / young people
Sri: 416 609 1484

**MARKHAM & EGLINTON**
2 bdrm basement
Cable/internet
Kamal: 416 438 3724

**BRIMLEY & LAWRENCE**
3 bdrm bungalow house for rent
Siva: 905 209 0856

**BELLAMY & EGLINTON**
2 bdrm condo for rent
2 full washrooms, Washer/dryer
Vijay: 416 452 5567

**MORNINGSIDE & FINCH**
2 bdrm தனிவழியுடன்/for rent
Ranjan: 416 299 7990

**DENISON & MIDDLEFIELD**
2 bedroom basement
Separate way
Siva: 905 201 9901, 416 566 9411

**MORNINGSIDE & STAINES**
2 bdrm basement
Devaki: 416 350 1494

**MORNINGSIDE & FINCH**
5 bdrm basement for rent
Ravi: 905 483 2540

**MORNINGSIDE**
2 bdrm basement
Latha: 416 299 6950, 416 219 4491

**FINCH & PHARMACY**
2 bdrm basement for rent and
தனிவழியுடன்
Jeeva: 416 492 7973/ 416 494 0403

**BRIMLEY & ELLESMERE**
1 bed room basement for rent
Town centre அருகில்
Raj: 647-456 3144/ 416-430 0035

**NEILSON & MALVERN MALL**
1 bdrm for rent in a condo
Vanaja: 416 818 2019

**NEILSON & MCLEVIN**
House for Rent
or part of house (3bdrm)
Thushi: 647 500 1343

**MARKHAM & DENISON**
2 bdrm basement for rent
Rani: 416 839 3546, 416 648 1987

**2003 TOYOTA CAMRY**
winter, New tire
Ranjan: 416 464 2415

**2000 HONDA ACCORD**
Van services
Kumar: 416 824 5955

இலவச திருமண சேவை
Europe/Canada
Kanthan: 416 514 1661

தையல் வகுப்பு
Puspa: 647 278 8445

**PORTABLE WASHER**
King size mattress/bed- new
Bala: 905 495 6297

**DAYCARE & PRESCHOOL**
(வீட்டில்)
Thurairaja: 905 949 1075

**AZ வாகன சாரதிகள் தேவை**

**கனடா மற்றும் அமெரிக்காவில் (USA, Canada) கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு அனுபவமுள்ள (Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.**

**Tel: 416 749 5392,**
**Fax: 416 749 5087**

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

## HELP WANTED

**கதவு மற்றும் ஜன்னல்கள் தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.**

கருணா
**416 892 7070**
**Viewtech Windows & Home Improvements.**

## HELP WANTED

**Danforth & Pharmacy**
**சந்திப்பிற்கு அருகாமையிலுள்ள Pizza தயாரிக்கும் நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை.**

**416 875 6869**

இப் பகுதியில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற வேண்டுமா
416 857 6406

# கற்றல் திறன்...

60ம் பக்கத் தொடர்ச்சி...

அன்பை வெளிக்காட்டல்.

- வளர்ச்சிநிலைப் படிகளில் (உதாரணம்: புலன், மொழி) மெதுவான தன்மைகளைக் கொண்டிருத்தல். அதாவது பிந்திக் கதைத்தல், நடத்தல் போன்றன.
- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமற்ற நடத்தையைக் காட்டல்.
- தனது நடவடிக்கைகட்கான விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை எண்ணாதிருத்தல்.
- எளிதில் ஏமாறக்கூடியவராக இருப்பர்.
- மனநிலை மற்றும் பதிலளிப்பதில் அடிக்கடி அளவுக்கதிகமான மாறுபாடுகளைக் கொண்டிருப்பர். அதாவது மிகவும் துக்கமாக இருப்பர் பின் அதிகம் சந்தோஷமாக இருப்பர்.
- சூழல் மாற்றங்கட்கேற்ப தம்மை சரிசெய்து கொள்வது கடினமாக இருத்தல்.
- தீர்மானமெடுப்பதில் கஷ்டம்.
- எந்தக் கையை பாவிப்பது (வலது கையையா அல்லது இடது கையையா?) என்பதைத் தீர்மானிப்பதில் கடினம். அல்லது இரு கைகளையும் பாவிப்பர்.

இந்த அறிகுறிகளைப் பார்க்கும்போது பின்வருவனவற்றைப் பற்றி கவனமாக இருத்தல் வேண்டும்.

- எவருக்கும் இந்த எல்லா அறிகுறிகளும் இருக்க மாட்டாது.
- சில அறிகுறிகள் மற்றவர்களை விட மிக மெதுவானவையாக இருக்கும்.
- ஒரு குறிப்பிட்ட பிள்ளையில் காணப்படும் அறிகுறிகள் இந்த இயலாத் தன்மை ஓரளவானதோ அல்லது கடுமையானதோ என்பதைக் குறிப்பிட்டுக் காட்டாது. இந்த குணங்குறிகள் விட்டுவிட்டு சில காலத்திற்குப் பின் ஏற்பட்டால் அல்லது ஒருமிக்க ஏற்பட்டால் இதனைக் குறித்து கவனம் செலுத்த வேண்டும.

தொடரும்...

உசாத்துணை:
The Ontario Curriculum Unit Planner: Special Education Companion, 2002
http://www.edu.gov.mb.ca/k12/specedu/beh
http://en.wikipedia.org/wiki/Learning-disability
http://www.helpguide.org/mental/learning-disabilities.html

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# கவனிக்கப்பட...

61ம் பக்கத் தொடர்ச்சி...

செய்யவேண்டும். Wheelஐ உள்ளேயும் மற்றும் வெளியேயும் கைகளால் அசையுங்கள். ஒரு நல்ல joint என்றால் கொஞ்சம்கூட அசையாது.

### மேற்புறத்தில் பாரம் ஏற்றப்படும் நிலை:

spring அல்லது torsion bar, upper contral arm மீது பொருத்தப்பட்டிருக்கும் வாகனங்களில் ball jointகள் காணப்படும். மேற்புறம் jointகளும் பாரம் ஏற்றப்படாத நிலையில் wheelகள் தரையிலிருந்து உயர்த்தி தூக்கப்பட்ட நிலையில், கீழ்ப்புறம் பொருத்தப்பட்டிருக்கும் ball jointகள் போலவே பரிசோதனை செய்யப்படும். ஆனால் upper armஐ தாங்குவதற்கு frame மற்றும் upper control armக்கு இடையே ஒரு ஆப்பு (Wedge) வைக்கப்படும். இவற்றில் அசைவு லேசாக ஏற்பட்டாலும் jointகள் புதிதாக மாற்றப்படவேண்டும். ஆனால் radial play .250 inch வரை இருக்கும் சில வாகனங்களில் இது அனுமதிக்கப்படும்.

### மேல்புறம் பாரம் ஏற்றப்படாத நிலை:

Wheelகள் தரையிலிருந்து உயர்த்தப்பட்ட நிலையில் ஆனால் control arm தாங்கப்பட்ட நிலையில் ball jointகள் பரிசோதனை செய்யப்படும். ஏதாவது அசைவு இருந்தால் புதிதாக மாற்றப்படவேண்டும்.

### Jointஐ புதிதாக மாற்றுதல்.

தயாரிப்பாளர் அனுமதித்த தேய்மானத்தைவிட கூடுதலாக ஏதாவது joint தேய்ந்து போய் இருந்தால், அதை புதிதாக மாற்றவேண்டியது அவசியம். எவ்வளவு அதிகம் தேய்ந்துள்ளதோ அந்த அளவுக்கு விரைவாக மாற்றவேண்டும்.

Ball jointகளை பல நேரங்களிலும் முழுமையான setகளாக, குறைந்தபட்சம் இரண்டு பக்கங்களிலும் இணையான ஜோடிகளாக மாற்ற வேண்டும். ஏனென்றால் ஒரு வாகனத்தின் இரண்டு பக்கங்களிலும் வழக்கமாக ஒரே அளவு தேய்மானம் தான் இருக்கும். ஒன்று மோசமாகிவிட்டால், சாதாரணமாக அடுத்ததும் மோசமாகிவிடும். பாரம் தாங்காதவைகளை விட பாரம் தாங்கும் ball jointகள் தான் விரைவாகத் தேய்ந்துவிடும். எனவே complete setஐயும் மாற்றுவதற்கு பதில் பாரத்தை தாங்கும் ball jointகளை மட்டும் புதிதாக மாற்றினால் போதும்.

ball jointகளை புதிதாக மாற்றுவதற்கு முதலில் steering knuckleகளிலிருந்து control armகளை தனியாக கழற்றி பிரிக்கவேண்டும். இந்த வேலை சற்று கடினம். வாகனத்தின் அமைப்பு மற்றும் வயதை சார்ந்த விடயம் இது. மேலும் knuckleலிருந்து ball joint studஐ கழற்ற ஒரு பிரத்தியேகமான ball joint fork மிக அவசியம். இது உங்களுக்கு சற்று அதிகமான வேலை என தோன்றினால் ஒரு தொழில் வல்லுனரை கொண்டு இந்த வேலையை செய்வியுங்கள்.

atheesan.s@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்

## நோக்கம்:

தமிழ் மொழியின் சொல் வளத்தினாலும் அதன் வரிவடிவத்தினாலும் தோற்றம் பெற்றதுமான பல இந்திய மொழிகளுக்கும், அண்டை நாடான இலங்கையின் பெரும்பான்மை இன மொழியான சிங்கள மொழியினுக்கும், தமிழ் வரிவடிவமே அம்மொழிகளின் தோற்றத்திற்கு ஆதாரமாகவும் மூல வரிவடிவமாகவும் இருந்ததா என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதனை ஆராயும்போது தமிழின் தொன்மை, அதன் வரலாறு அதன் மொழி வரிவடிவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அத்தோடு அம்மொழி வரிவடிவம் ஏனைய மொழிகளின் வரிவடிவத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை நோக்குவதே இக்கட்டுரையாகும்.

தமிழின் வரலாறு இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு லெமூரியா தொடங்கி சிந்துவெளி நாகரீக காலத்திலிருந்து முழு இந்தியாவிலும் மற்றும் முழு இலங்கையிலும் செழித்தோங்கிய மொழியாகவே இருந்துள்ளது. லெமூரியா இன்று எம் முன் இல்லாமல் மறைந்து போயிருந்தாலும் தமிழ்மொழி பற்றிய உண்மையான வரலாறு 6000 ஆண்டுகளிலிருந்து சிந்துவெளியிருந்து எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. இந்த வகையான தொன்மையும், வரலாறும், ஆதாரமும் கொண்டதான மொழிகள் உலகில் மிகச் சிலவே.

## தமிழும் திராவிடமும்:

தமிழும் திராவிடமும் என்ற இரு பதங்கள் ஒரு கருத்தையே பிரதிபலிக்கின்றன. தமிழ் என்பதன் உச்சரிப்பே காலப்போக்கில் திரிபடைந்து ‘திரமிழ்’ என்றாகி ‘திரமிழ’ என்றாகி ‘த்திரவிட’ என்றாகி பின் ‘திராவிட’ என்று மாறியதாக அறிஞர் பெருமக்கள் கொள்ளுவர்.

திராவிடம் என்ற சொற்பதத்தினை றெபேட் கால்டுவெல் அவர்களே 1856ல் திராவிட மொழிகளுக்கான ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலில் முதன் முதலில் பயன்படுததினார். திராவிட மொழிக் குடும்ப மொழிகளாக தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, கொடகு, துத, தோத, கோந்தி, கூய், ஓரான், ராஜ்மஹால் ஆகிய 12 மொழிகளைத் தெரியப்படுத்தினார். இக்குடும்பத்திற்கு தாய் மொழியாக தமிழேயென அறிய முற்பட்டுள்ளார். இதன்பின்பு நடைபெற்ற ஆராச்சிகளின்போது பின்வரும் மொழிகளும் அதனுள் அடக்கப் பெற்றன. அவையாவன பிரகூய், கொலாமி, நாய்க்கி, குவி, கோண்டா, கட்பா, குருக், ஒல்லாரி, கோயா, மோல்டா, பார்ஜி, கதபா, பெங்கோ, இருளா, கொடகு, குறவா, தோடா, படகா, ஆகியனவாகும். இதில் காட்டப்பட்ட பிரகூய் மொழியானது இந்தியாவிற்கு வடக்கேயுள்ள பலுகிஸ்தானினும் ஆப்கானிஸ்தனிலும் பாகிஸ்தானின் ஒரு சிறு பகுதியில் பேசப்படும் மொழியாகும். அத்தோடு பாகிஸ்தானிய பல்கலைக்கழகத்தில் பயிலுவதற்கான விருப்புப் பாடமாகவுள்ளது. இம்மொழிகள் தாய்த் திராவிட மொழியிலிருந்து பேசப்பட்ட பிராந்திய மற்றும் இனக்குழுமங்களின் மொழிகளாக அறியப்பட்டுள்ளன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழிகளின் இலக்கண ஒப்புமைகள், சொல் ஒப்புமைகள் பற்றி ஏராளமான தரவுகளை கால்டுவெல் அவர்கள் தந்துள்ளார்.

கால்டுவல் கோடிட்டுக் காட்டியதை மேலும் ஆராய்ந்து மாந்த இன முதன் மொழி ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும் எனவும், மிகு தொன்மை வாய்ந்த தமிழே அனைத்து மொழிக் குடும்பங்களுக்கும் (இந்தோ-ஆரிய மொழிகள் உட்பட) மூலமான மொழியாகக் கருதப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை மாறல் கார்த்திகேய முதலியார் 1913இலும், கா.சுப்பிரமணியபிள்ளை 1920களிலும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1930, 1940களிலும், ஞா. தேவநேய பாவாணர் 1940- 1980களிலும் மிக விரிவாக ஆராந்து நிறுவியுள்ளனர்.

ஆதாரம் 1. லெமூறியாவில் திராவிடன்

இன்றைய ஸ்ரீலங்கா அடங்கலாக பாண்டியத் தமிழ் பேரரசே கோலோச்சி தமிழர்களே ஆதிக்குடிகளாக இருந்துள்ளனர். இதற்கு முந்திய காலப்பகுதியிலேயே நாகர்கள் என்றழைக்கப்பட்ட மனிதஇனம் வாழ்ந்துள்ளதாக லெமூறியா பற்றி ஆராந்த அறிஞர்கள் ஆராச்சிக் கட்டுரைகளின் மூலம் தெரிவித்துள்ளார்கள். இவர்களைப் பாம்பு மனிதர்கள் (Snake People) என அழைத்துள்ளார்கள். இவர்கள் பற்றி அவர்கள் கூறும்போது பாம்பு மனிதர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் மிக மிக ஆதிகாலத்தில் எறத்தாள 10,000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களாவர். அவர்களே லெமூறியாவின் தொன்மையான குடிகள். பாம்பு மனிதர்களே உலகில் பதிவுகள் பற்றிய அறிதலை விட்டுச் சென்றவராவர். பாம்பு என்பது ஒரு குறியீடே இது உலகியலில் அதி விவேகத்தினைக் குறிக்கும் குறியீடென அறியப்பட்டுள்ளது. ஆகவே பாம்பு மனிதன் என்று அவர்கள் குறிப்பிடுவது நாகர்களையே ஆகும். அவர்களே தமிழனின் பரம்பரையினர். அன்றே அவன் எழுத்தை அறிந்து வைத்து அதனைத் தமது பதிவுகளுக்குப் பயன் படுத்தியிருக்கிறான் என்ற ஒரு செய்தி இங்கிருந்து கிடைக்கின்றது.

லெமூறியாவின் எஞ்சிய பகுதிகளான தென்இந்தியா, இலங்கை, வடமேற்கு அவுஸ்ரேலியா ஆகிய இடங்களில் திராவிடர்களின் பரம்பரையினரே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக பல்லாயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் வடமேற்கு அவுஸ்ரேலியாவில் வாழும் ஆதிக்குடிகள் பற்றி ஆய்ந்தபோது பெறப்பட்ட உண்மைகள் அதிசயிக்க வைத்தன.

அவுஸ்ரேலியாவின் வடமேற்குப் பகுதியில் தற்போதும் வாழும் கரிறியா என்னும் ஆதிக்குடிகள் ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியுமா என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு அவர்களது உருவத் தோற்றப்பாடு ஆதாரமாயுள்ளது. அத்தோடு அவர்களது மொழியிலும் திராவிட மொழியின் சாயலும் இலக்கண, ஒலியன் ஒற்றுமைகள் உள்ளதாக கு.அரசேந்திரன் குறிப்பிடுகின்றார்.

ஆதாரம்: தமிழ்க்கப்பல் பக்3.



குமரிக் கண்ட நிலத்தொடர்பு இருந்த காலத்திலேயே ஆதித் திராவிடர் குமரிக் கண்டத்திலிருந்து புலம் பெயர்ந்து உணவு தேடி வேட்டையாடும் நோக்கோடு வேறொரு பிரதேசத்திற்குச் சென்றுள்ளார்கள்.

மேலும் அங்குள்ள சில ஆதிக்குடிகளின் சில இனக்குழுமங்களின் பெயர்கள் வியப்புத்தருவதாகவும் மேலும் ஆராயப்பட வேண்டியதனையும் வலியுறுத்துகின்றது. அவையாவன குவினி இது இலங்கையின் இயக்கர் இனப் பெண்ணான குவேனியின் பெயரை ஒத்திருக்கின்றது. இவரையே இந்தியாவின் கலிங்கத்திலிருந்து துரத்தப்பட்ட கலிங்கத்து இளவரசனான விஜயன் மணம் முடித்தார் என மகாவம்சம் கூறுகின்றது. மேலும் அவுஸ்திரேலிய ஆதிக் குடிகளின் சில குழுக்களின் பெயர்களான நகர, நன, நந்தா, நங்கா, நகரியா, நகுரி, நகண்டி, நகம்பா என்ற பெயர்களை நோக்கும்போது நாகர் என்ற பெயருடன் தொடர்பட்டது போன்றும் ஏதொவொரு அறிந்த பெயரான தமிழ்ப் பெயர்கள் போலவும் இருக்கின்றது. ஆதாரம்: விக்கிப்பிடியா தேடுதளம். இக்காரணத்தினாலும் லெமூறியாவில் தமிழன் வாழ்ந்தான் என்பதற்குரிய ஒரு ஆதாரமாகக் கொள்ள முடியும். குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவனின் இறுதிக் குடிகளே அதன் எஞ்சிய பகுதிகளான இலங்கையிலும் இந்தியாவிலும் வடமேற்கு அவுஸ்ரேலியாவிலும் 10,000 ஆண்டுகளுக்கு முந்திய ஆதிக்குடிகளாவர்.

அவுஸ்ரேலியாவின் சில ஆதி இனக்குழுமங்களின் மரபணுக்கூறுகள் (டீ.என்.ஏ) ஐ.நா சபையினால் ஆராயப்பட்டுள்ளன. திரவிட இனத்தொடர்பு இருப்பதாக நாம் கருதும் இனங்களின் மரபணுக்கள் பரிசோதிக்கப்பட்டால் பல உண்மைகள் வெளிவரும். இதற்கு தமிழ்நாட்டு அரசு நிதியொதுக்கி இச்செயற்பாட்டினை ஆரம்பித்து வைக்கவேண்டுமென பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.



முருகேசு பாக்கியநாதன்

மேற்கு அவுஸ்ரேலியாவில் வாழும் திராவிட ஆதிக்குடிகள்

## திராவிடனின் மூதாதையர்கள் -நாகர்களும் இயக்கர்களும்.

இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த ஆதிமக்களை நாகர்கள் மற்றும் இயக்கர்கள் என மகாவம்சம் என்ற பௌத்த நூல் கூறுகின்றது. இந்த இரண்டு இனங்களும் திராவிடரின் மூதாதையராவேயிருக்க முடியும். நாகர் என்ற இனம் வாழ்ந்த வாழ்க்கை நாகாிகம் என்றும், அவர்கள் வாழ்ந்த இடம் நகரம் என்றும் அவர்கள் பேசிய மொழி நகரி என்றும் உருப்பெற்றது. இதனை ஒத்த தமிழ் பெயர்களே நாகராசா, நாககன்னி, நாகதுவீபம் அல்லது நாகதீபம், நாகவிகாரை, நாகர்கோவில், நாகபட்டினம், நாகர்லாந்து என்ற பெயர்களாகும். நாகர் இனத்திலிருந்தே இப்பெயர்கள் தோன்றியருக்க வேண்டும். ஆரியர் இந்தியாவை ஆக்கிரமித்தபோது நாகர்களிடமிருந்தே எழுத்து முறையினைக் கற்றிருக்க வேண்டும். இதனாலேயே அங்கு வாழ்ந்த மூதாதையராகிய நாகர்களின் மொழியாகிய நகரியை தங்கள் மொழிப் பெயராக தேவ என்னும் இறைவன் பெயர் சார்ந்த அடைமொழியினைச் சேர்த்து தேவநகரி என பெயர் சூட்டிக்கொண்டனர்.

## சிந்துவெளித் தமிழ்:

தமிழ் இனமானது மிகவும் தொன்மையான இனமாக ஆசியாவின் நாகரீகத்திற்கே தோற்றுவாயாக அமைந்த சிந்துவெளியின் மொஹஞ்சதாரோ ஹறப்பா நாகரீத்தின் பிதாமகராகத் திகழ்ந்த திராவிடரின் மூலவேராக இருந்தது. இந்த இனம் கிறிஸ்துவுக்கு முன்பு 6000 ஆண்டுகளுக்கு முன்பு செழுமையுடன் வாழ்ந்த ஒரு இனமாகும். தமிழ் மொழியின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்ப மொழி வரிவடிவாகிய தமிழ்பிராமியின் வழிவந்ததே தமிழ் என்பதாகும். மேற்கொண்டு தமிழ்பிராமி என்பதனை விடுத்து தமிழி என அழைப்போம்.

இன்று உள்ள தமிழ் மொழித் தோற்ற வரிவடிவம் அப்போது இல்லாததிருந்தாலும் அப்போது அறியப்பட்ட திராவிடர் பாவித்த மொழியின் பரிணாம வளர்ச்சியே தற்போது பாவனையில் உள்ள தமிழ் மொழியாகும். அவர்கள் பாவித்த மொழி திராவிட தமிழ் மொழியென அறிய பலவித ஆராச்சிகள் உதவியுள்ளன. சிந்துவெளியில் நடைபெற்ற அகழ்வாராச்சியின் போது பெறப்பட்ட சில உலோக முத்திரைகளில் பதிக்கப் பெற்ற பெயர்கள் இன்றும் தமிழில் வழங்கப்படும் தமிழ் பெயராக இருப்பது குறிப்பிடக் கூடியது. உதாரணமாக கூத்தன், தக்கன், அண்ணி, அரட்டன், அப்பன், ஐயன், சாத்தன், ஐயாவு, கக்கன், கந்தன் - கந்தப்பன், குப்பன் ஆகிய பெயர்கள் சிந்துவெளி நாகரீக புதைபொருள் ஆராச்சியாளர்களின் முறையே 232, 3762, 2190, 157, 2626, 6074, 4195, 7513, 4323, 6120, 2719, 2025 என்ற இலக்கங்கள் கொண்ட உலோக முத்திரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பம்பாய் வரலாற்று ஆராச்சி நிலையத்தில்


64ம் பக்கம் பார்க்க...


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# பல மொழிகளுக்கு தமிழே...

63ம் பக்கத் தொடர்ச்சி...

சிந்துவெளி ஆய்வினை முன்னெடுத்துச் சென்று ஆய்வு செய்த ஹெராஸ் பாதிரியார் (Fr. Heras) அவர்களே முதன் முதலில் இது தமிழர்களின் நாகரீகமெனவும் அவர்கள் பேசிய மொழி தமிழ் என்றும் உலகுகிற்குக் கூறியவர். இவர் சீன நாகரீகத்தினையே சிந்து வெளியின் கிளை நாகரீகம் என்று வெளிப்படுத்தினார். பல சிந்து வெளி எழுத்துக்கள் சீன எழுத்து-களுக்கு வழிகாட்டியாகும் எனவும். தமிழுக்கும் சீனத்திற்கும் உள்ள தொடர்புகள் பற்றி “சீனம் என்ற செந்தமிழ்” என்ற கட்டுரையில் விரிவுபடக் கூறியுள்ளார்.

## பிரகிருதம்:

பிரகிருதம் என்பது வடஇந்தியாவிலே ஆதி-காலத்தில் பயன்பாட்டில் இருந்த மொழியாகும். பிரகிருதத்திலேயே அசோகன் பிராமி எழுதப்-பட்டிருந்தது. அத்துடன் தேவநகரி பிரகிருதத்-திலேயே எழுதப்பட்டது. பிரகிருத மொழிப் பிறப்பினையும் அதன் வழக்கத்தினையும் தேவநேயப்பாவணர் மறுத்துரைத்து பிரகிருதம் என்பது வடக்கில் பயன்படுத்திய வடதிராவிடம் என்றே கொள்ளப்பட வேண்டும் என தனது ஆராச்சியின் போது குறிப்பிடுகின்றார். தேவ-நேயப்பாவணர் அவர்கள் கால்டுவெல் வழி-யிலே தொடர்ந்து ஆராச்சிகளைச் செய்து இந்திய மொழிகளில் தமிழே சகல மொழி-களுக்கும் தாய் மொழியென 1900-81 காலப் பகுதியில் நிறுவினார்.

மேலும் சிந்துவெளி முத்திரைகளைவிட அடுத்ததாகக் கண்டுபிடிக்கப்பெற்ற அசோகன் கல்வெட்டு பிரகிருதத்திலேயே எழுதப்பட்டுள்-ளது. பிரகிருதம் என்பது வடதிராவிடம் என்ப-தனை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று அடித்துக் கூறுகிறார் பாவாணர். ஆதாரம்: தமிழ்க்கப்பல், கு.அரசேந்திரன் பக் 46.

## தென்இந்திய குகைக் கல்வெட்டுக்கள்:

தமிழ் எழுத்தின் வரிவடிவம் சிந்துவெளியின் சித்திர வரி வடிவத்தின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில், பின்பு தொடர்ந்து வந்த வரி வடிவங்களின் பரிணாம வளர்ச்சியே இன்று காணப்படும் வரிவடிவமாகும். இதனை மறுப் பவர்களும் உண்டு. சிந்துவெளி நாகரீக காலத்தே பதிக்கப்பெற்ற சித்திரவடிவங்களும் இதனைத் தொடர்ந்து கண்டெடுக்கப் பெற்ற கடலூர், சானூர், கொடுமணல் மற்றும் ஆதிச்ச நல்லூர் கல்வெட்டுக்கள் தமிழ் வரிவடிவம் எப்படியாக வளர்ச்சி பெற்றன என்பதற்குச் சான்றாக அமைகின்றன.

இதனைவிட திருநாதன் குன்றத்து கல்வெட்டின் காலம் கி.மு 2ம் நூற்றாண்டு என வரையறை செய்யப்பட்டுள்ளது. இங்கு காணப்பட்ட எழுத்துக்கள் உண்மையான தமிழ் வரிவடி-வத்தினைப் பிரதிபலித்தது. பிரம்மகிரி அகழ் வாராச்சிகளானது பெருங்கற்காலத்து மக்கள் கி.மு 5ம் நூற்றாண்டளவில் தென் நாட்டில் வாழ்ந்ததாகவும் அவர்கள் திராவிடர்கள் எனவும், அப்பண்பாட்டின் பண்புகளை சங்க இலக்கியத்தில் காணக்கூடியதாக உள்ளதாக குருராஜராவ் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் கருத்துப்படி தமிழகத்தில் பெறப்பட்ட கல்வெட்டுக்களின் காலம் கி.மு 3ம் நூற்றாண்டு என்பதாகும். இவை தென் பிராமியில் எழுதப்பட்டிருப்பதா-கவும் இதே வகையான தென் பிராமி எழுத்து வகையான எழுத்துக்களே இலங்கையில் கண்டுபிடிக்கப் பெற்ற குகைக் கல்வெட்டுக்-களாகும்.

இந்திய வரலாற்று நூலை எழுதிய சத்திய-நாதையர், சமஸ்கிருதத்தில் கல்வெட்டு எழுதும் பழக்கம் கி.மு 2ம் நூற்றாண்டளவில் தொடக்கம் பெற்றாகவே குறிப்பிடுகிறார். (*History of India Vol. 1 – P-209.)* தமிழகத்திலே சமஸ்கிருதத்தில் கல்வெட்டெழுதப் பெற்றது பல்லவ அரசன் விட்டுணுவர்த்தனன் காலமான கி.பி 6ம் நூற்றாண்டிலிருந்து என்கிறார் ஐராவதம் மகாதேவன். - Early History Epigraphy from the times to the Sixth Century AD P-114

## தமிழ் வரிவடிவத்தின் வளர்ச்சி

தமிழ் அரிச்சுவடி பற்றி கி.மு 3ம் நூற்றாண்டின் எழுதப்பெற்ற தொல்காப்பியம் பின் வருமாறு கூறுகின்றது.

எழுத் தெனப் படுப
அகர முதல
னகர இறுவாய் முப்ப.்.தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே

என ‘அ’ முதல் ‘ன’ வரையான தமிழ் உயி-ரெழுத்து பன்னிரண்டுடன் மெய்யெழுத்துமாக முப்பது என இங்கு காட்டுகின்றார். அத்தோடு குற்றியலிகரம், குற்றியலுகரம் அத்துடன் முப்புள்ளியுடைய ஆய்த எழுத்தெனவும் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் ஒரு கருத்தினைச் சொல்ல விளையும்போது அதனை தனக்கு முந்திய புலவர்கள் சொல்வார்கள் என்றும் அதனை என்மனார் புலவர் என்று பலவிடங்களில் குறிப்பிடுகின்றார். அப்படியாயின் கி.மு 3ம் நூற்றாண்டிற்கு முன்பு பல காலத்திற்கு முன்பே தமிழில் தொல்காப்பியத்திற்கு முந்திய ஒரு இலக்கணம் இருந்திருக்க வேண்டும் அல்லது இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு செழித்து வளர்ந்த மொழிக்கோ அன்றி செழித்த இலக்கியங்கள் உள்ள மொழிக்கோ மட்டுமே இலக்கணத்தினைப் படைக்க முடியும். ஆகவே கி.மு 500 ஆண்டிற்கு முன்பும் தமிழ் மிகச் சொழிப்புற்று இருந்த ஒரு மொழியா-கவே இருந்துதுள்ளது என கொள்ளமுடியும். அதுவே தமிழ்ப் பிராமி எனப்படும் தமிழி என்பதாகும்.


## சித்திர முத்திரைகளின் வரிவடிவம்:

சித்திர முத்திரைகளினால் எழுத்துக்கள் எழுதும் போது சில தனியாகவும் சில ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட முத்திரைகள் சேர்ந்தோ ஒரு எழுத்தை அமைப்பதாக கொள்ள முடியும். அதேபோலவே தமிழ் வரிவடிவம் தனிக் கோடுகளாலும், தனி வட்டங்களாலும், பல கோடுகளாலும், பல வட்டங்களாலும் எழுதப் படும் எழுத்துக்களாகும். அந்தக் காரணத்தின் அடிப்படையிலேயே சிந்துவெளி முத்திரைகள் தனியாகவோ அன்றி ஒன்றாகவோ அன்றி ஒன்றிற்கு மேற்பட்டனவாகவோ சேர்ந்து வரி வடிவங்களை அமைக்கிறதென்று கொள்ள முடியும்.

கி.மு.1500இன் இறுதியிலிருந்த சித்திரவெழுத்து கி.மு.500 ஆண்டுகளில் தமிழியாக வளர்ச்சி பெற்று தொடர்ந்து கி.பி.200லிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று கி.பி.400 ஆண்டளவில் வட்டெ-முத்தாக மாற்றம் பெற்று மேலும் வளர்ச்சி-யடைந்த நிலையிலேயே இன்றைய வரிவடி-வத்தின் பரிணாம வளர்ச்சித் தோற்றம் பெற்றது.

## சிந்துவெளி சித்திர எழுத்தி-லிருந்து தற்காலம் வரையான தமிழ் அகரத்தின் பரிணாம வளர்ச்சி:

சிந்துவெளி சிந்திர வரிவடிவிலிருந்து தமிழ் அகரத்தின் பரிணாம வளர்ச்சியும் அசோகன் பிராமிக்கு அது எவ்வாறாக வித்திட்டது என்ப-தனை கீழே நோக்கவும். மனித உருவத்திலி-ருந்தே சிந்துவெளித் தமிழன் தனது அகரத் தினைத் தோற்றுவித்தான். அதன் அவையவங்-களை வைத்தே அகரத்தின் பரிணாமவளர்ச்சி வளர்ந்துள்ளது.




1 கி.மு 6000 - கிமு1500 வரையான சிந்துவெளி அகரத்தின் சித்திர வரிவடிவம்.

2 சித்திர வரிவடிவத்தின் தொடர்ச்சியான அகர பரிணாம வளர்ச்சி.

3 கிமு.5ம் நூற்றாண்டிற்கு முந்திய அகரத்தின் பரிணாமம்.

4 கி.மு.5ம் நூற்றாண்டின் தமிழி.

5 அகரத்தின் அடுத்ததான பரிணாமம்.

6 தற்போதைய அகரத்தினை அண்டிவிட்ட அ


7 தற்போதைய நவீன அகரத்திற்கு முந்திய அகர தோற்றம்.

8 கி.பி 4ஆம் நூற்றாண்டிகத் தோன்றம் பெற்ற வட்டெழுத்தான நவீன அகரம்.

## அசோகன் பிராமி:

பிரகிருதத்தில் எழுதப்பெற்ற அசோகன் பிராமி-யினை அடியொற்றியே தேவநகரியும் அதனை அடியொற்றிப் பிறந்த வடஇந்திய மொழிகளும் ஆகவேதான் ஏற்கவே பாவனையில் இருந்த திராவிடர்கள் பாவித்த பிரகிருதம் அவர்களுக்-குக் கைகொடுத்தது. தேவநேயப் பாவாணர் அவர்களது கருத்துப் போல் வடதிரவிடர்கள் பாவித்த வடதிராவிடமாகிய பிரகிருதமே அசோகன் பிராமியின் பிறப்பிற்கும் தேவநக-ரியின் பிறப்பிற்கும் ஆதாரமாயின.

5. மேலேயுள்ள ஆதாரங்களை நோக்கின் சகல வடமொழிகளின் பிறப்பிற்கு திராவிடமே ஆதார-மாகவிருந்தது என்ற உண்மை இங்கு வெளியே தெரிகின்றது.



சிந்துவின் சித்திரவரிவடிவம் - தமிழி – அசோகன் பிராமி – ஏனைய மொழிவடிவங்களின் ஒப்பீடு

பிறந்ததாகக் பல அறிஞர்கள் கொள்ளுகின் றார்கள். இம்மொழிகளை இந்தோ-ஆரிய மொழிகள் என்ற பெயரினால் அழைக்கத் தலைப்பட்டனர். ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தேறு குடிகளாவர். அவர்கள் மத்தியசியாவி-லிருந்தும் குறிபாக ரஷ்யா, பாரசீகம், கிழக்கு ஐரோப்பா ஆகிய பிரதேசங்களிலிருந்து குடியேறியோராவர். இதன் காரணமாக பல மொழிகளினைப் பேசும் ஒரு கூட்டமாகவே வந்து ஆக்கிரமிப்புச் செய்திருந்தார்கள். ஆகவே இப்பல மொழி பேசுவோர் இந்தியாவில் ஏற்-கனவே வாழ்ந்த சுதேசிகளுடன் கலந்தபோது அந்த சுதேசிகள் பாவித்த மொழியினை-யொட்டிய ஒரு மொழி பாவனையில் இருப்பின் அவர்களுடன் ஒன்றிணைவதற்கு ஒரு பாலமாக அமையும் என்று கருதியதனால் ஒரு பொது மொழி தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம். இதனா-லேயே அப்போது வடநாட்டில் வாழ்ந்த திரா-விடர்கள் பாவித்த பிரகிருதத்தினைத் தங்கள் மொழித் தோற்றத்திற்குப் பாவித்திருக்கலாம். இக்காலத்தே அசோகன் பிராமியானது சிந்து-வின் சித்திரவெழுத்திலிருந்து தோன்றிய தமிழியில் இருந்து தனக்கு வேண்டிய வரிவடி-வங்களை அமைத்துள்ளது என்றே கொள்ள வேண்டும். அதற்கான காரணங்களைப் பின்வரு-வனவற்றினைக் கொண்டு அறிய முடியும்

1. தமிழி வரிவடிவம் தோன்றுவதற்கு சிந்து வெளியின் சித்திரவெழுத்துக்கள் ஆதாரமாக விருந்தது. இது முழுக்க முழுக்க திராவிட வரிவடிவமென ஐயமிதிரிபற ஏற்கப்பட்டுவிட்டது.

2. அசோகன் பிராமியிலிருந்து ஏனைய மொழி-களின் வரிவடிவம் தோன்றியதாயின் அதற்கான மூல வரிவடிவம் எங்கிருந்து கிடைக்கப் பெற்-றது. சிந்துவெளி நாகரிக முத்திரைகளை விட வேறெந்த முத்திரைகளோ அன்றி சித்திர வரிவடிவங்களோ கிடைக்காதபோது அசோகன் பிராமியின் மூல வரிவடிவ ஆதாரத்தினை நிறுவுவதற்று எந்தச்சான்றுகளும் இல்லை.

3. சிந்துவின் சித்திரவெழுத்திலிருந்து தமிழியும், தமிழியிலிருந்து அசோகன் பிராமியும் தோன்-றியதனை மேலே நோக்கினோம்.

4. ஆரியர்கள் இந்திய சுதேசிகளுடன் கலந்த போது அங்கு திராவிடர்களே ஏற்கனவே அதி உச்ச நாகரிகத்தில் வாழ்ந்துள்ளார்கள். ஒரு இடத்தினை ஆக்கிரமிப்போர் அங்குள்ள செல்வம், கலை கலாசாரம் போன்றவற்றினை அபகரிக்கவே முயன்றிருப்பர். இதனைச் செய்ய அவர்களுக்கு அங்கு பாவனையில் இருந்த சுதேச மொழியில் அறிவு தேவைப்பட்டது.

## அசோகன் பிராமியின் அகரம்:

மேலே காணப்படுவதே அசோகன் பிராமியின் அகரம். இதன் தோற்றம் கிமு.3ஆம் நூற்றாண்-டாகும். தமிழியின் காலம் கிமு.5ஆம் நூற்-றாண்டாகும். ஆகவே தமிழ் பிராமியிலிருந்தே தோற்றத்தின் அடிப்படையிலும் காலத்தின் அடிப்படையிலும் வரிவடிவத்தின் அடிப்படை-யிலும் தமிழியே அசேகன் பிராமிக்கு முந்தியது மட்டுமல்லாது அது தோன்றுவதற்கும் ஆதார-மாய் அமைந்து அதன் பிரதிமையே அசோகன் பிராமியென உறுதியாகக் கூறமுடியும். ஆகவே அதன் வழிவந்த வட மொழிகள் அத்தனையும் தமிழ் பிராமி வழிவந்ததென்றே கொள்ள வேண்டும். தமிழிக்கு அதன் வரிவடிவத்தினை அமைக்க அதன்பின்புலமாக சிந்துவெளியின் சித்திர எழுத்துக்கள் இருந்துள்ளன. சிந்துவெளி வரிவடிவங்களும் அக்காலத்தே பாவிக்கப்பட்ட மொழி திராவிடம் என்பதும் ஐயமிதிரிபற சகல ஆராச்சியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அசோன் பிராமி எங்கிருந்து தனது மூலவரிவடிவத்தினைப் பெற்றுக் கொண்டது என்பதற்கான விளக்கம் என்ன? சிந்துவெளி நாகரிகத்தினை விட வேறு எங்கிருந்தும் வரி வடிவங்களினை அசோகன்பிராமி பெற்றுக் கொள்ளுவதற்கு வேறு ஏதும் வரிவடிவங்கள் இந்திய துணைக்கண்டத்தில் இருந்ததா என்று நோக்கின் அதற்குரிய விடை அப்படியேதும் இருந்ததில்லையென்பதாகும். ஆகவே இதனை யொற்றிப் பிறந்த பிரகிருதமும் அதிலிலிருந்து பிறந்த ஆரிய மொழிகளினதும் மற்றும் வட இந்திய மொழிகளின் வரிவடிவத்திற்கும் திரா-விடமே மொழிவரிவடித்தினைக் கொடுத்தத-தென்றே கூறமுடியும்.

## அகரவரிசைகளின் ஒப்பீடு:

இங்கு காணப்படும் அட்டவணையில் தமிழ் அகர வரிசையில் உள்ள ‘அ’ வும் ‘ஆ’ என்ற வரிவடிவத்தினைப் போன்ற சாயலுடனேயே சமஸ்கிருத அ, ஆ ஆகிய இரண்டு எழுத்-துக்களும் அமைந்தன. ‘அ’ விற்கு மேலே சுழியிட்டு பின்பு அதற்குக் கீழே ஒரு வண்டி-யிட்டு பிற்பகுதியில் ஒரு கோட்டினை இட்டு முடிப்பதே தமிழ் அகரமாகும். இதே எழுத்து முறையினைப் பின்பற்றியே இங்கு குறிப்பிட்ட கால வரிசைப்படி தோன்றிய பல இந்திய மொழிகளின் எழுத்து வரிவடிவங்கள் தோற்றம் பெற்றன., திராவிட மொழிகளிலோ அன்றி ஆரிய மொழிகளிலோ அந்தந்த மொழிகளின் வரிவடிவங்கள் தமிழ் வரிவடிவத்தின் சாயலை

72ம் பக்கம் பார்க்க...




# வயோதிபர்களுக்கான காப்புறுதி

## மிகக் குறைந்த விலையில்...

**$30.55**

$10000
60 years female
non smoker
Some conditions may apply

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

## NO PROBLEM

**HIRING NEW AGENTS RESP & Insurance**

No Contract
No Obligation
Friendly Service
Quality Training

உங்களுக்கு காப்புறுதி நிராகரிக்கப்பட்டு அல்லது காப்புறுதி தெளிவற்ற முறையிலிருந்தால் மேலதிக ஆலோசனைகளுக்கு என்னை அழையுங்கள். CTBC வானொலியில் சனி காலை 9:00 - 10:00 மணிவரையிலும், ஞாயிறு இரவு 9:00 - 10:00 மணிவரையிலும் நான் கலந்துகொள்ளும் காப்புறுதி பற்றிய நிகழ்ச்சியைக் கேளுங்கள்.





RB ROYAL BROKERS CORPORATION

## Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE

JRS Institute

"Committed to provide Quality Training"

**Scarborough Campus**

Free Computer Basic Class
Starts on Aug.31st @7.00PM(Tuesday)

Business Communication(English Class)
Starts on Sept.22nd @7.00PM(Wednesday)

**Etobicoke Campus**

Free Computer Basic Class
Starts on Sept.11th@10.00 AM (Saturday)

Cashier Training
Starts on Oct.2nd@10.00AM (Saturday)

**DIPLOMA PROGRAMS**

Accounting and Payroll Administration

Health Office Administrator (HOA)

Computerized Accounting

Office Assistant



CERTIFICATE COURSES

- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Bank Teller
- Cashier
- Food Handling
- Simply Accounting
- Accpac

Some Courses are not available in Etobicoke Campus

(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch) | (Kipling & Dundas) |
| PH16-4168 Finch Ave East | 300-5359 Dundas St West |
| Scarborough, ON M1S 5H6 | Etobicoke, ON M9B 1B1 |
| 416-292-2455 | 416-207-9975 |


# இரசாயன மாசினை...

56ம் பக்கத் தொடர்ச்சி...

## உள்வீட்டுச் செயற்பாடுகள்:

நீங்கள் வெளியே போகும் போது அணியும் செருப்புக்களை வீட்டிற்குள் கொண்டுவரா-தீர்கள். ஏனென்றால் அவற்றில் அழுக்குகள் மற்றும் அசுத்தங்கள் ஒட்டியிருக்கலாம்.

வாயுக்கள் அல்லது தூசி துகள்களை வெளி-யேற்ற exhaust fanஐ பயன்படுத்துங்கள்.

வீட்டினுள் Solvent அடிப்படையிலான Markerகள் மற்றும் craft பொருட்களை பயன்படுத்-தாதீர்கள்.

சமைக்கும்போது range hoodஐயும் குளிக்கும் போது குளியல் அறையில் Exhaust fanஐ ஓட விடுங்கள். ஈரம் மற்றும் மீதமுள்ள மணத்-தை அகற்றும்.

## கட்டடம் மாசுக்கள், எரிபொருள் அசுத்தங்கள்:

உங்கள் வீட்டில் வெப்பப்படுத்தும் உபகர-ணங்களை தகுதி பெற்ற ஒரு செயல்நுட்ப வல்லுனரைக் கொண்டு சரிபாருங்கள்.

உங்கள் புகைபோக்கி (Chimney) மற்றும் ventகளில் உள்ள அடைப்புக்களை நீக்கி விடுங்கள்.

உங்கள் வீட்டில் உள்ள கார்பன் மோனோக்-சைட் (CO) அளவுகளை கண்காணிக்க ஒரு மொனிட்டர் கருவியை பயன்படுத்துங்கள்.

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு gas அடுப்பை பயன்படுத்தும் போது range hoodஐ பயன்படுத்துங்கள் இல்லையென்றால் ஒரு மின்சார அடுப்புக்கு மாறிவிடுங்கள்.

Chain saws, Lawn mower இயந்திரங்கள் போன்ற gas மூலம் இயங்கும் உபகரணங்-களை உங்கள் வீட்டினுள் வைக்காதீர்கள்.

அருகில் உள்ள வண்டிக்கொட்டகையிலிருந்து (Car Garage) வீட்டிற்குள் CO கசிந்துவிடாத-படி பார்த்துக் கொள்ளுங்கள்.

## Carpetகள், Floor coveringகள், underpadகள், wood மற்றும் plastic பொருள்களை பரிசோ-தித்தல்:

பொருட்களின் மாதிரித் துண்டினை (Sample) முதலில் பெற்றுச் சோதித்து பாருங்கள். அவற்றை ஒரு சுத்தமான கண்ணாடிச் சாடியில் இட்டு சூரிய ஒளிபடும் ஜன்னல் போன்ற மிதமான வெப்பமுள்ள ஒரு இடத்தில் வை-யுங்கள். சாடியினைத் திறந்து அதனுள் இருந்து வீரியத்துடன் வாடை வருகிறதா என்பதை பரிசோதனை செய்யுங்கள். இவ்வாறு செய்-வதன் மூலம் பெரிய பொருட்களில் இருந்து எவ்வளவு வாடை வரும் என்பதனை மதிப்பீடு செய்யுங்கள்.

## காற்றோட்ட வசதி:

வீட்டினுள் அசுத்தம் வெளியிடும் பொருட்களை எவ்வளவு குறைக்க முடியுமோ அந்த அளவு குறைத்த பின், வீட்டில் சிறந்த காற்றோட்ட வசதியை அமைப்பதில் கவனம் செலுத்துங்கள். இதற்கு ஜன்னல்களைத் திறந்து வைக்கலாம் அல்லது ஒரு Heat Recovery Ventilator (HRV) நிட்சயம் வீட்டில் உள்ள பழைய காற்றை வெளியேற்றி விட்டு, புத்தம் புதிய வெளியி-லுள்ள காற்றை வீட்டினுள் வரவழைக்கும். இதனால் வருடத்தின் குளிர்கால மாதங்களின் போது வீட்டினுள் ஈரம் கட்டுப்படுத்தப்பட்டு mold வளர்ச்சியடையாமல் இருக்கும். மேலும் சிறந்த காற்றோட்டம் காற்றில் கலந்திருக்கும் அசுத்தமான துகள்களையும் மிகவும் குறைத்து விடும். ஆயினும் காற்றோட்ட வசதி அசுத்தமான பொருட்களை உற்பத்தி செய்யும் ஆதாரங்-களை அழிக்க உதவும் ஒரு இரண்டாம் நிலை திட்டம் தான் என்பதை நினைவில் வையுங்கள்.

gerard.ratnarajah@thaiveedu.com

■ ■ ■

# பாரதியின் பார்வை...

58ம் பக்கத் தொடர்ச்சி...

"பெண் விடுதலை வேண்டும்"

"எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே
பெண் இளைப்பில்லை காண்"

"மாதர்க்குண்டு சுதந்திரம்'

"பெண்ணடிமையுற்றால் மக்களெல்லாம்
அடிமையுறல் வியப்பென்றாமோ?"

என வகைவகையாக எளிய நடையில் எவரும் புரிந்து உணர்ந்துகொள்ளும் வகையில் பாடியுள்ளார் பாரதி. மேலைநாட்டுப் பெண் சுதந்திரத்தைச் சுட்டிக்காட்டி பாரதத்திலும் பெண் விடுதலை வேண்டும் என பாடினார், வாதாடினார்.

பெண்ணுரிமைக்குத் தடையாக இருந்த செல்லரித்துப்போன சமய தர்ம சாத்திரங்க-ளையும், ஆணாதிக்கக் கருத்துக்களையும், மூடநம்பிக்கைகளையும், சமூகப்பழக்க வழக்-கங்களையும் தகர்த்தெறியப் போராடிய சமூகப்போராளியே பாரதி எனலாம். சமூகச் சீர்திருந்த இயக்கத்தின் பெண் விடுதலை-யாளர்களின் தீவிர குழுவினர்களில் பாரதியும் ஒருவராக திகழ்ந்தவர்.

ரோமண்ட் ரோலந் "கடைசிவரை பெண்களை அடக்குபவர்களை எதிர்ப்பேன்" எனக்கூறியது போல் பாரதியும் தன் இறுதிமூச்சுவரை பெண்-ணடிமைத்தனத்திற்கு எதிராகவும் பெண்ணு-ரிமைகளுக்கு ஆதரவாகவும் வாழ்ந்தார்.

பாரதியின் புதுமைப்பெண் புதுமைச் சிந்தனை-யென்னும் முலைப்பாலூட்டி புதுமைப் பெண் சேய்களை ஈற்றெடுத்து வளர்த்தவள். பெண் களின் அடிமை விலங்கொடித்து சுதந்திர பறவைகளாக விண்ணில் பறக்க உணர்வூட்டிய அற்புதச் சக்தியவள். பெண்ணானவள் தான் விடுதலை பெற்று, தன் பெண்ணினத்தை விடுதலை பெறச்செய்து, தான் சார்ந்த சமூ-கத்தையும் விடுதலை பெறச் செய்யும் போதே பெண்விடுதலையின் உச்சநிலையை எய்து-கின்றாள். பாரதி கனவில் மட்டுமே புதுமைப் பெண்ணைக் கண்டான். தமிழர்கள் தமது விடுதலைப் போராட்டத்தில் பாரதி கண்ட புதுமைப்பெண்களின் உச்ச வடிவினரான வீரமிகு பெண்களைக் கண்ணுற்று பெருமையை யெய்தினர். அன்று பாரதி விதைத்த வீரத்தின் விருட்சங்களை நாம் எம் வீராங்கனைகளில் கண்டிருந்தோம். 'நவீன நவயுக அறிவிற்-சிறந்த சுதந்திரப் பெண்களைப் பிரசவித்த தாயாக' பாரதியைப் போற்ற வேண்டும்.

இன்று மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் சாதனை படைக்கின்றாள் பெண். இன்று பெண்களின் திறன்கள் விண்ணை விஞ்சு-பனவாக வெளிப்பட்டு வருகின்றன. எனினும் அடிமைப்பட்ட பெண்கள் பலர் கண்ணீரில் வாழ்வை இன்னமும், இக்காலத்திலும் கரைக்காமலில்லை. அவர்களுக்குச் சொல்-லக்கூடிய ஒரே விடயம்...

விடுதலை என்பது பாரதி பாடி வந்ததல்ல. விலங்கொடித்து விடுதலை பெற நாம் துணி-யாதவரை எத்தனை பாரதிகள் பாடினாலும் விடுதலை என்பது எமக்கு எட்டாக்கனியே.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■


இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

www.thaiveedu.com


பேரழிவினைக் கொண்டுவரும்
நீரழிவு நோயினை
இரண்டே இரண்டு மாதங்களில்
முற்றும் முழுதாக கட்டுப்படுத்த
முடியும்!
ஊளைச் சதை பெருகுவதை
தடுக்கிறது!
வாத வலியை நீக்குகிறது!
உடலுக்கு புதுத்தென்பைக்
கொடுக்கிறது!
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் கருக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
க்லூாட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
இயற்கை மூலிகையின் உதவியுடன்
உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
The ERVAMATIN HAIR LOTION
provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.
இயற்கை மூலிகையிலான
தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
Send gifts to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
www.egiftsender.com
SABONA & Gift
Amazon Health Care
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



ஒகஸ்ட் 21, 2010 அன்று **L'Amoreaux** பூங்காவில் நடைபெற்ற **Jarvis** உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் **Under 6** மற்றும் **Under 8** பிரிவில் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிய **Cheetahs** விளையாட்டு வீரர்கள்.



ஒகஸ்ட் 28, 2010 அன்று **Rowntree Mills** பூங்காவில் நடைபெற்ற 'பாடும் மீன்களின் பொழுது 2010' கோடைகால ஒன்றுகூடலில்.



**Armenian Youth Centre**ல் ஒகஸ்ட் 28, 2010 அன்று சுசி நல்லையாவின் மாணவி துளசிகா சத்தியநாதனின் அரங்கேற்றத்தில். படம்: சுரேஸ்



ஒகஸ்ட் 21, 2010 அன்று **Markham Civic Centre**ல் நடைபெற்ற எஸ்.பத்மநாதனின் 'சிந்தனைப் பூக்கள் பாகம் 3' புத்தக வெளியீட்டு விழாவில். படம்: ஞானி



ஒகஸ்ட் 08, 2010 அன்று **Miliken** பூங்காவில் நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் கோடைகால ஒன்றுகூடலில். படம்: கருணா



**Miliken** பூங்காவில் நடைபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை ஒன்றுகூடலில்.



ஒகஸ்ட் 07, 2010 அன்று **Thomson Memorial** பூங்காவில் நடைபெற்ற ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்களின் கோடைகால ஒன்றுகூடலில். படம்: கருணா



ஒகஸ்ட் 22, 2010 அன்று பிருந்தன் பூங்காவில், பிருந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண விருதுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில்.

**உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**


DON'T MISS
THE HONDA YEAR-END SALES EVENT
The Honda YEAR-END $ SALES EVENT
LOW LEASE & FINANCE RATES
$
ACT NOW!
$
CASH REBATES
ON SELECT MODELS UP TO
$6,000†
$
HONDA
அதீசன் (SHAN) சர்வானந்தன்
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465
†$2,500.00 price reduction available on new 2010 Civic Sedan and Coupe models (excluding Civic DX Sedans, model FA1E2AEX, FA1F2AEX, FA1E2AE4X); $3,000.00 price reduction available on new 2010 Civic LX Coupe and Sport Sedan models; $1,500.00 price reduction available on new 2010 Civic Si Sedan and Coupe; $3,000.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe 4-cylinder models (excluding Accord LX Sedan, model CP2E3AE); $2,500.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe V6 models; $2,500.00 price reduction available on new 2010 Accord Crosstour models (excluding Accord Crosstour EX-L 4WD Navi, model TF2H5AKN); $3,000.00 price reduction available on new 2010 CR-V models (excluding CR-V LX 2WD, model RE3H3AEY); $4,000.00 price reduction available on new 2010 Insight models; $5,000.00 price reduction available on new 2010 Ridgeline and Pilot models; $6,000.00 price reduction available on new 2010 Odyssey models (excluding Odyssey DX, model RL3H1AE which is available with a $2,000.00 price reduction). Price reduction amounts valid only on cash purchase transactions, and may not be combined with any other offer. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. Lease example based on new 2010 Civic DX-A MT Sedan, model FA1E2AE4X available through Honda Financial Services on approved credit. 2.4% lease APR for 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148.44. Down payment or equivalent trade of $4,950.00, first monthly payment and $0 security deposit due at lease inception. Total lease obligation is $13,779.89. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Offers valid from August 4th, 2010 through August 31st, 2010, at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers locations. Offers subject to change or cancellation without notice. Visit www.hondaontario.com or see your Honda retailer for full details.


S.P.IMPORTERS
Furniture
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
Sealy
Posturepedic
Special Sealy
Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின்
“தென்றல் இசைக்குழு” வழங்கும்...
இசையும்
உதவும்
திசையும்
ஆதரவற்ற குழந்தைகளினதும் (தாய் தந்தையரை இழந்த) அங்கவீனமான மாணவர்களினதும் கல்வி மேம்பாட்டிற்காகவும், போரிலே உழைப்போர் உயிர் இழப்புக்களை அதிகமாக எதிர்கொண்ட வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத குடும்பங்களது சுயதொழில் ஊக்குவிப்பு உதவி நிதிக்காகவும் ஆதரவுக் கரங்கொடுங்கள்..
அன்பளிப்பு $ 10
இடம்: ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார மண்டபம்
635 Middlefield Road, Scarborough
மேலதிக தொடர்புகளுக்கு:
416-644-1113
www.vannitamil.com | info@vannitamil.com
SEPTEMBER 2010
04
மாலை 6:00

# மனிதனால் உருவாக்கப்படும் ஓசை

- பொன் குலேந்திரன் -

ஓசையில்லாத சூழல் மரணத்துக்கு சமன். இயற்கை பலவிதமான அலை ஓசை, காற்றின் ஓசை, உயிரினங்களின் ஓசை, மரங்கள் உருவாக்கும் ஓசை, இடியோசை, வாகனங்களின் ஓசை, இப்படி எத்தனையோ விதமான ஓசைகள் நிறைந்தது. தொடர்புக்கு ஓசை அவசியம். மனிதர்கள் பல காரணங்களுக்காக தமது அவயங்களை பாவித்து ஓசையை உருவாக்கிறார்கள். வாத்தியக் கருவிகளை மட்டும் பாவித்து தாளத்தோடு ஓசையை உருவாக்க வேண்டும் என்பதில்லை. இனிமையான குரலைப் பாவித்து எழுப்பும் ஓசையானது சங்கீதமாகத் தோன்றி பிறரை மயங்கவைக்கிறது. இது எல்லோராலும் செய்யக் கூடிய காரியமல்ல. அதே சமயம் தாளத்துக்கு ஏற்ப கைதட்டி மக்களை கவருவது ஒரு வகை முறையாகும். ஏன் தம் பாதங்களால் கூட தாளம் போட்டு ஓசையை உருவாக்கி தமக்குள் இரசிக்கிறார்கள். அது மனதோடு இணைந்த ஓசையாகும். ஆபிரிக்க நாடுகளில் கிராமப் புறங்களில் ஓசைக்கு தனி மதிப்புண்டு. நோயைப் போக்கவும் பாவிக்கப்படுகிறது.

இரு கைளையும் பாவித்து ஓசையைக் கிளப்புவது பல காரணங்களுக்காக. வாயினால் விசிலடித்து ஓசையைக் கிளப்புவது இன்னொரு விதம். மூக்கை இரு விரல்களால் அடைத்து பல விதமான ஓசைகளை கிளப்புவதும் ஒரு வகை கலையாகும். அதேபோல் மிருகங்கள் பறவைகள் வாகனங்களைப் போன்று ஒலியை உருவாக்குவது ஒரு திறமையாகும். இவ்வாறான முறைகள் எக்காரணத்தால் உருவாகிறது என்பதற்கு பல காரணங்கள் உண்டு.

ஒரு காலத்தில் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களைக் குறிப்பிடுவதற்கு "விசில் அடிச்சான் குஞ்சுகள்" என்ற வசனம் கிண்டல் செய்வதற்கு பாவிக்கப்பட்டது. ஆமாம் அரசியல்வாதிகளுக்கு தாளம் போடுபவர்களை இது குறிக்கும். அவர்கள் பேசும் பொருள் விளங்காது விசில் அடிப்பவர்கள். தமக்கு விசில் அடிக்கும் கெட்டித்தனம் உண்டு என்பதை காட்டி திருப்தியடையும் "ஆமாம் சாமிகள்". அதியுயர் அதிர்வெண்ணுள்ள விசில் சத்தத்தை உருவாக்குவது எல்லோராலும் முடியாத காரியம். அதற்கு பயிற்சி தேவை. "எடேய் களிசரை போல் விசில் அடிக்காதே" என்று தாய் மகனுக்கு சொல்வது வழக்கமாயிருந்தது. படித்தவர்கள், பண்புள்ளவர்கள் விசிலடிப்பதில்லை 'காவாலிகள்' தான் அவ்வோசையை உருவாக்குவது வழக்கம். வீதியில் வெகு தூரத்தில் செல்லும் பெண்ணொருத்தியின் கவனத்தைக் கவருவதற்கு விசில் அடிப்பது வழக்கம். சில பெண் ஓசையை உதாசீனம் செய்து விட்டு போய்விடுவார்கள் - "யாரோ வம்புக்கு விசிலடிக்கிறான்" என்று. நாக்கை மடித்து விரலை வைத்த விசில் அடிப்பார்கள். "அடியடா விசில்" என்று அருகில் இருக்கும் நண்பர்கள் கொடுக்கும் உற்சாகத்தில் வாய்க்குள் விரல் தானாகவே போகும் ஓசையை உருவாக்க.

இந்த சத்தத்தை ஒரு காலத்தில், ஏன் இப்பவும் கூட சினிமா பார்க்கும் போது கதாநாயகனின் அபிமான இரசிகர்கள் உருவாக்குவார்கள். அருகில் இருப்பவருக்கு அது அசௌகரியத்தைக் கொடுக்குமே என்று அவர்கள் சிந்திப்பதில்லை. ஒருவர் விசில் அடித்தவுடன் பலர் அதைத் தொடர்ந்து அடிப்பது வழக்கம், ஏதோ சாதனை படைத்து விட்டோம் என்று.

ஒரு உதைபந்தாட்டப் போட்டியில் கோல் போட்டவுடனேயும் அல்லது கிரிக்கெட் போட்டியில் சிக்சர் அடித்தவுடனேயும் இவ்விசில் சத்தம் ஆதரவாளர்களிடையே உருவாகும். ஏன் அரசியல் கூட்டங்களில் எதிராளியைக் கிண்டல் செய்து பேசினால் அல்லது தாம் செய்த சாதனையைக் குறிப்பிட்டுப் பேசினாலும் விசில் சத்தம் கூட்டத்துக்கு வந்தவர்களிடையே உருவாகும். அவ்வோசை மேலும் பேச்சாளருக்கு உற்சாகத்தைத் தூண்டும். இவை விசில் சத்தத்தின் விந்தைகள். ஒருவர் விசிலடித்து ஆரம்பித்து வைத்தவுடன் அதை தொடர்ந்து ஆமோதிப்பது போல் விசிலடிப்பார்கள்.

> “ கைகளைத் தட்டும் போது உடலில் ஏற்படும் அதிர்வுகள் இரத்த தளங்களில் உள்ள அடைப்புகளை நீக்குகின்றன.
> இரத்த ஓட்டமும் நரம்பு மண்டலமும் சீராகி பலமடைகின்றது.
> மகிழ்ச்சியில் மனதில் திருப்தி ஏற்படுகிறது.
> இதனால் 90 விகிதமான உடல் நோய்கள் குறைவடைகிறது. ”

விசில் அடிக்கத் தெரியாதவர்கள் தம் இரு கரங்களின் உதவியை நாடுவார்கள். கைளை தட்டி மகிழ்ச்சியினைத் தெரிவிப்பது உலகம் முழுவதும் இருந்து வரும் பழக்கம். பலர் கைகள் தட்டுவதனால் ஏற்படும் ஓசையானது சொற்பொழிவு ஆற்றுபவருக்கு உற்சாகத்தையும் வரவேற்பினையும் கொடுக்கும்.

கைகளைத் தட்டுவதினால் 90 சதவிகிதம் உடலில் உள்ள நோய்கள் குறைகிறது என்பது சமீபத்தில் உள்ள ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. கைகள் தட்டுவதினால் விரல்களுக்கு ஏற்பட்ட வாதத்தன்மை குறைகிறது. கைகளைத் தட்டும் போது உடலில் ஏற்படும் அதிர்வுகள் இரத்த தளங்களில் உள்ள அடைப்புகளை நீக்குகின்றன. மகிழ்ச்சியில் மனதில் திருப்தி ஏற்படுகிறது. இரத்த ஓட்டமும் நரம்பு மண்டலமும் சீராகி பலமடைகின்றது. இதனால் நோய்கள் குறைவடைகிறது.

படுத்துக் கொண்டே கைதட்டலாம். யோகா அப்பியாசம் செய்யும் போது பிறநாடுகளில் கைதட்டியபடி உடலை அசைப்பார்கள். அப்போது இரு கைகளும் தலைக்கு மேல் இருக்கும்.

வீதியில் போகும் ஒருவரின் கவனத்தை ஈர்க்க வேண்டுமாகில் அதற்கு பல வழிகள் உண்டு. பேரைச் சொல்லி பலத்த குரலில் கூப்பிடலாம், விசில் அடித்து கவனத்தை ஈர்க்கலாம். கைதட்டிக் கூப்பிடலாம். இதனால் பலருக்கு இடைஞ்சல் ஏற்படும்.

ஒரு கூட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் கைதட்டல் இடம் பெறும். முக்கிய பேச்சாளர் மேடைக்கு வரும்போது அவரை வரவேற்க எழும்பிநின்று கைதட்டுவார்கள். இது வரவேற்புக்கு எடுத்துக்காட்டு. மேசையில் தட்டி ஓசையை கிளப்புவதும் ஒரு வகை முறையாகும். பாராளுமன்ற கூட்டத்தில் இது நடப்பதை காணலாம். அது பலத்த சத்தத்தை உருவாக்கும். அமைதியடைய வெகு நேரம் எடுக்கும். விளையாடும் போது மெதுவாக கைதட்டுவது ஒரு வழக்கம். இது விளையாடும் மற்றவர்கள் ஒருமுகப்படுத்தி விளையாடுவதற்கு உதவுகிறது.

கிராமப்புரங்களில் "கூய்ப்" என்று உரத்த குரலில் கூக்குரல் இட்டு அழைப்பது ஒரு வகை வழக்கமாயிருந்து வந்தது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புகையிலை தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்கக் காலை போவதற்கு இப்படி சத்தம் போட்டு அழைப்பது உண்டு. இது பேய் கூவும் சத்தமோ என்று பயத்தில் பதில் அளிக்க மாட்டார்கள்.

கூட்டங்களில் பேசுபவர் நீண்ட நேரம் அலுப்புத் தட்டும் விதத்தில் பேசினாலும், பொருள் இல்லாமல் பேசினாலும் "போதும் பேச்சை நிறுத்துங்கள்" என்பதை சுட்டிக்காட்ட தொடர்ந்து கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் கைதட்டுவார்கள். அதையும் அவர் கவனிக்காது தொடர்ந்து பேசினால் பதிலுக்குக் கை தட்டல் கையில் கிடைப்பதால் எறிவதாகவும் மாறலாம்.

இசைக் கச்சேரி, கலை விழாக்கள், நாடகம் போன்றவற்றில் கைதட்டலுக்கு குறைவில்லை. இதை வைத்து பாடகர்களின் திறமையை விமர்சகர்கள் கணிப்பது வழக்கம். கூட்டத்தில் கைதட்டும் வழக்கத்தை ஒருவர் ஆரம்பித்து வைத்தவுடன் மற்றவர்களும் தொடர்ந்து செய்வார்கள். இது ஒரு வகை தொற்று வியாதி என்றும் சொல்லலாம்.

பல கலாச்சாரங்களில் பாராட்டைத் தெரிவிப்பதற்கு கைதட்டி தீய சக்திகளை துரத்துவற்கு ஒரு முறையாக கருதுவர். இது திபெத்து நாட்டிலுண்டு. தமிழ்நாட்டில் திருமணங்களில் குரவை சத்தத்தை நாவினால் வாய்க்குள் உருவாக்கி தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டுவர். இந்த வழக்கம் அரேபிய நாட்டு திருமணங்களிலும் உண்டு. கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் குரவை ஆட்டத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஓசை மனிதனுக்கு மட்டும் உரித்தானதல்ல. அதிகாலையில் குருவிகள், மிருகங்கள் எழுப்பும் ஓசை கேட்க அருமையாக இருக்கும். அவை தமக்குள் பேசிக் கொள்கின்றனவோ என்னவோ! குயில் எழுப்பும் ஓசையை அடிப்படையாக வைத்து பல கவிதைகள் தோன்றியுள்ளன. ஒருமித்த தாளத்தோடு ஓசை ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறது. மனதுக்குள் உள்ள மகிழ்ச்சியை, உணர்வை வெளிக்காட்டுகிறது. கட்டுப்படுத்தக் கூடாது.

பிறக்கும் குழந்தையின் அழுகை ஓசை!
பசியினால் கதறும் ஓசை!
அதிகாரத்துக்காக அரசியல்வாதி எழுப்பும் ஓசை!
இரசிப்பதற்கு இசையின் ஓசை!
இறுதியில் ஒப்பாரி என்ற அழுகை ஓசை!

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

**Tution Classes**

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

1 to 1 or Group classes

**905-554-2496, 416-522-3314**



வீடு வங்க, விற்க மற்றும் முதலீடு செய்வதற்கு
அனுபவம் உள்ள என்னை தொடர்பு கொள்ளுங்கள்

**சுஜன் ஷான்**

Real Estate Broker

**416 402 1040**

Bus: 416 321 2228

E mail: sujan.shan@gmail.com

RE/MAX
Vision Realty Inc.

www.NewReleaseCondos.com

# பல மொழிகளுக்கு...

64ம் பக்கத் தொடர்ச்சி...

அடியொற்றியே அமைக்கப் பெற்றன. தெலுங்கும் கன்னடமும் தமிழ் 'அ' வரிவடிவத்தை தலை கீழாக போட்டு எழுதியிருப்பதனை அவதானிக்க முடியும். அதிலும் ஒரு வட்டம், ஒரு வண்டி மற்றும் ஒரு கோட்டுடனேயே அகரம் அமைக்கப்பட்டுள்ளது. கீழே காணப்படும் பட்டியலின் வரிவடிவங்களை நோக்கின் உயிர் எழுத்துக்களின் தொடர்பு பற்றி ஒரு முடிவிற்கு வர முடியும்.

கீழே காணப்படும் அட்டவணையில் மொழிகளின் அகரவரிசை வரிவடிவங்களும் அவை தோன்றிய காலவரிசையின் அடிப்படையிலும் எழுத்து வரிவடிவங்களின் ஒப்பீட்டடிப்படையிலும் தரப்பட்டுள்ளன. இவ்வட்டவணையிலிருந்து சிந்து சித்தரவெழுத்திலிருந்து தமிழியும் தமிழியிலிருந்து தற்கால தமிழ் அகரவரிசையும் தமிழியைப் பின்பற்றி ஏனைய எழுத்துக்களின் வரிவடிவங்களும் எவ்வாறாகத் தோன்றியதென்பதை ஐயம்தெளிவுற அறிந்துகொள்ள முடிகின்றது. அகரவரிசையின் ஏனைய எழுத்துகளாக இ, ஈ, உ, ஊ, எ, ஏ, உ, ஊ, ஐ, ஒ ஆகிய எழுத்துக்களை பட்டியலில் காட்டப்பட்ட ஏனைய எழுத்துக்களுடன் நோக்கின் தமிழ் எழுத்துக்களுக்கும் மற்ற மொழிகளின் அதே எழுத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமைகளை அறிந்து கொள்ள முடியும்.

தமிழின் தொன்மையும் அதன் நீண்ட வரலாறும், சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளும் தென்னாட்டில் கிடைக்கப்பெற்ற குகைக் கல்வெட்டுகளும் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் காணப்படும் வரிவடிவங்களும், தொல்காப்பியத்தின் தொன்மையான வரலாறும் ஏனைய மொழிவரிவடிவங்களில் எவ்வாறான தாக்கத்தினையும் செல்வாக்கினையும் செலுத்தியது என்பதனை அறிய முடியும்.

● மேலேயுள்ள அட்டவனையில் காணப்படும் தமிழின் எழுத்துக்கள் கி.பி 2ம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக வட்டெழுத்தாக மாற்றம் பெறுகின்றன.

● வடமொழி தமிழியின் வடிவத்தினின்றும் தனது சொந்த வரிவடிவத்திலிருந்து மாற்றம் பெற்று வட்டெழுத்தாக கிரந்தம் என்ற பெயருடன் கி.பி.500 ஆண்டளவில் தென்னாட்டிற்கு அறிமுகமாயிற்று. இக்காலத்தேதான் பல்லவப் பேரரசர்கள் ஆரியச் செலவாக்கினைத் தென் நாட்டில் வேரூன்றச் செய்யும் நோக்கோடு தமிழோடு இணைந்த ஒரு வரிவடிவத்தினை கிரந்தமாகத் தோற்றுவித்து தென்நாட்டில் புகுத்தினர்கள். முதன் முதலில் கிரந்தமே தமிழ் வரிவடிவத்தினையொற்றிப் பிறந்த மொழியாகும். தேவநகரி எழுத்துகள் நேர் கோட்டு வரிகளைக் கொண்ட எழுத்து வடிவத்தால் அமைந்தது. ஆனால் அதன் 'அ' மற்றும் 'ஆ'வன்னாவிலும் தமிழ் அ, ஆ வன்னாவின் வட்டெழுத்துச் சாயல் காணப்படுகின்றது அதனை ஆரியர்களால் மறைக்க முடியவில்லை.

● சிந்துவெளியில் வாழ்ந்த திரவிடர்களே இந்தியாவின் ஆதிக் குடிகளாகும். சிறப்புடன் கட்டிடக்கலை, சிற்பக்கலை, உலோக பயன் பாட்டுக்கலை, நகர நிர்மாணம், மட்பாண்ட பாவனையில் தங்கள் மொழியினைப் பதிவு செய்யும் கலை போன்றவற்றை அங்கு வாழ்ந்தவர்களே இந்திய நாட்டிற்கு அறிமுகம் செய்தார்கள். அவர்கள் எழுதி வைத்த சித்திர எழுத்து வடிவங்களே இந்தியாவின் முதல் எழுத்து வடிவங்களாகும். இதற்கு முன்பு இந்தியாவில் எந்தவிதமான சித்திரவரிவடிவங்களோ அல்லது எழுத்து வடிவங்களோ இருந்ததேயில்லை. அதற்கான ஆதாரங்கள் எதுவுமேயில்லை. இந்த சித்திர வடிவங்களே முதலில் இந்திய துணைக்கண்ட மனிதன் பேசும் மொழியின் கருத்தினை எழுத்தில் வடிக்கப் பிறந்த தெளிக்கப்பெற்ற வரிவடிவமாகும். இதிலிருந்து பிறந்த தமிழில் இருந்தே ஏனைய மொழிகளும் அடியொற்றி பின்பற்றியிருக்க முடியுமேயல்லாமல் வேறு எக்காரணிகளும் அந்தந்த மொழிகளின் வரிவடிவம் தோன்றக் காரணமாவிருக்க முடியுாது.

● தமிழில் முதல் தோன்றிய இலக்கண நூல், தொல்காப்பியமாகும். இதன் காலம் கி.மு 300 என்று பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழில் தொல்காப்பியம் எழுதப்பட முன்னர் ஒரு சில இலக்கிய வடிவங்கள் இருந்திருக்க வேண்டும் என சிந்திக்கும் எவருக்கும் உதிக்கும் ஒரு உண்மையாகும். காரணம் அதில் படைக்கப் பெற்ற எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பனவற்றிக்கான இலக்கணவடிவம் ஏற்கனவே எழுதப்பட்டிருந்த ஒரு இலக்கிய வடிவத்திற்கோ அன்றி ஒரு திருந்திய மொழிக்கோ எழுதப்பட்டிருக்க வேண்டும். அல்லாது விட்டால் வெறும் வெறுமையிலிருந்து ஒரு மொழியின் இலக்கணத்தைப் படைக்க முடியாது. ஆகவே தமிழ் எழுத்து வரிவடிவம் கி.மு விற்கு முற்பட்ட கி.மு 500 ஆகக் கருதப்பட முடியும்.

● திராவிட மொழிகளான தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளுக்கோ அன்றி சிங்களத்திற்கோ எந்தவொரு தெலுங்கு பிராமியோ அன்றி கன்னட பிராமியோ அல்லது சிங்கள பிராமியோ இதுவரை ஆந்திராவிலோ அல்லது கன்னடத்திலோ அல்லது இலங்கையிலோ கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே அதற்கான வரிவடிவம் நேரடியாகத் தமிழில் இருந்தும் அம்மொழிகளின் சில அம்சங்கள் பிரகிருதத்திலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இந்த இரண்டு வரிவடிவங்களுக்கும் மேலே அட்டவணையிலுள்ள ஏனைய திராவிட மற்றும் ஆரிய மொழிகளெனக் கூறப்படும் மொழிகளுக்கும் வரிவடிவத்தில் வேறுபாடுகள் தெரிந்தாலும் அ எழுத்தையும் ஆ வன்னா எழுத்தையும் தொடர்ந்து ஏனைய எழுத்துக்களையும் நோக்கும் போது சகல மொழிகளின் அ, ஆ எழுத்து இரண்டும் தமிழுக்கேயுரியதான ஒரு வட்டம், ஒரு வண்டி, ஒரு கோடு, ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது.

● ஆரிய மொழிகள் என்று கூறப்படுகின்ற ஒரியா, சிங்களம், குஜராத்தி ஆகிய மொழிகளுக்கும் அ, ஆ அகிய இரண்டு எழுத்துக்கள் தமிழுக்கென விசேடமாக அமைந்த ஒரு வட்டம் ஒரு வண்டி ஒரு கோடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. ஏனைய உயிர் மெய் எழுத்துக்கும் தமிழ் வரிவடிவத்தினையொற்றியே எழுதுப்பட்டு இருப்பதனைக் காணமுடியும். இந்த மொழிகள் ஆரிய மாயைக்கு உட்பட்டே ஆரிய மொழிகளாக தங்களை ஆக்கிக் கொண்டன. அதனை தங்கள் மேன்மையென்றும் கருதிக் கொண்டனர். அண்மைய ஆராச்சிகள் ஒரிய மொழியும் திராவிடம் என்ற முடிவிற்கு ஒரு சில அறிஞர்கள் வந்துள்ளனர்.

● சேர் கியேசன் என்னும் அறிஞர் கூறும் போது தமிழ் மிகவும் அனாதியானது மிக நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு மொழியாகும். தமிழ் ஆரம்ப காலத்தே தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளை உள்ளடக்கிய மொழியாகவேயிருந்தது. பின்பு கி.பி 10ம் நூற்றாண்டில் தெலுங்கும், கி.பி. 850ஆம் ஆண்டுகளில் கன்னடமும், கி.பி. 1400ல் மலையாளமும் தனித் தனி மொழிகளாயின. ஆதாரம்: Concise History of Ceylon. P.40.

● கி.மு 2500 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் ஒரு மொழியே இருந்துள்ளது. அதுபற்றி இன்னொரிடத்தில் கிரியேசன் குறிப்பிடும் போது இலங்கையில் தமிழோ அன்றி அதனை யொட்டிய ஒரு மொழியோ வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தேயிருந்திருக்க வேண்டும். ஆதாரம்: Concise History of Ceylon. P42. பௌத்த சமயம் இலங்கையில் பரவியதனைத் தொடர்ந்தும் விஜயனின் வருகையோடும் அதனைத் தொடர்ந்துமே ஆரியச் செல்வாக்கு இலங்கையில் பரவியது.

## முடிவுரை:

மேலே கூறப்பட்ட தமிழின் வரலாறும் அதன் தொன்மையும் அதன் மொழிச் செழிப்பும் சிந்து வெளியிலிருந்து வளர்ந்த மொழிவரிவடிவ பரிணாமவளர்ச்சியும் ஆரிய ஆக்கிரமிப்பின் போதுகூட தனது தனித்தன்மையுடன் வளர்ந்து அதன் வரிவடிவத்தினை ஏனைய மொழிகளுக்கும் கொடுத்து அந்தந்த மொழிகளும் வளர வழிசமைத்ததென்றே கூறமுடியம்.


உசாத்துணை நூல்கள்:

கு. அரசநாதனின் தமிழ்க்கப்பல் நூலில். (நூலின் முகவுரையில் பி.இராமநாதன்,)

விக்கிப்பீடியா தேடுதளம்.

கு.அரசேந்திரனின் தமிழ்க்கப்பல்.

மொழி வரலாறு தெ.பொ.மீ களஞ்சியம் 1.

*Concise History of Ceylon 1961.*

என் மொழியின் கதை - ச.வீ.துருவசங்கரி *Canada.*


packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

# துயர் பகிர்வோம்




## திருமதி. லட்சுமி நடராசா

கரவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. லட்சுமி நடராசா அவர்கள் ஓகஸ்ட் மாதம் 31ம் நாள் கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தப்பு - பத்தினி இணையரின் மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவகாமி இணையரின் மருமகளும் நடராசாவின் மனைவியும் காலஞ்சென்ற பார்வதி, மற்றும் செல்லம்மா, பாக்கியம், தங்கமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு, பொன்னம்மா (ஆசிரியை), மற்றும் சிவகுரு, ராசதுரை, வைரமுத்து, கணேசன் ஆகியோரின் மைத்துனியும். பாமதி, முகுந்தன், சுகந்தன், ஜெயந்தன், நிஷாந்தன், சதீசன் ஆகியோரின் தாயாரும் நடா என அழைக்கப்படும் நடராசா, கௌசலா, வாசுகி, புஸ்பா, யசிகலா, ஆகியோரின் மாமியாரும், சுகிர்தன், சுயிர்த்திரா, தரணீசன், வசீகரன், யுகேன், அனிஷா, நிதுஷா, சங்கீத், நவீன், லக்சன், சோபிதா, திவிஷான் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு செப்டெம்பர் 2ம் நாள் ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| முகுந்தன்: | 905 201 6670 |
| நடா: | 416 837 2834 |



## திருமதி. முத்துக்குமாரு கற்பகம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கற்பகம் அவர்கள் 22-08-2010 அன்று கனடாவில் இறையடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை இணையரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் சிவகாமிப்பிள்ளை இணையரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு அவர்களின் அன்புமனைவியும், நாகம்மா (கனடா), கந்தையா (மல்லாவி), பாலசிங்கம் (கனடா), கோபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான கமலம் (யாழ்ப்பாணம்), தில்லாத்தைபிள்ளை (நெடுந்தீவு), சிந்தாமணி (பாண்டியங்குளம்) ஆகியோரின் மூத்த சகோதரியும்,

பேரம்பலம் (மல்லாவி), காலஞ்சென்ற கோபாலபிள்ளை, தியாகராசா (பாண்டியங்குளம்), சுப்பிரமணியம் (மல்லாவி), குணசிங்கம் (மல்லாவி), நடராஜா (மல்லாவி), கனகாம்பிகை (கனடா), கமலநாதன் (மல்லாவி), யோகநாதன் (இலண்டன்), சண்முகநாதன் (இலண்டன்), மகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகுதாயாரும், சரஸ்வதி, யோகபத்மாவதி (லண்டன்), சந்திரா (பாண்டியங்குளம்), கலாமதி (சுவிஸ்), மாலினி, கமலாம்பிகை, தில்லைநாதன் (கனடா), சந்திரமணி (மல்லாவி), பத்மாவதி (இலண்டன்), தயாநிதி (இலண்டன்), குணசீலி (கனடா) ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு, செப்ரெம்பர் 01ம் நாள் ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| லிங்கம்(மகன்) | கனடா | 1289 752 0762, 1416 562 1043. |
| குமார்(மகன்) | பிரித்தானியா | 44208 514 3425. |
| பேரம்பலம் | இலங்கை | 9424 492 0768. |
| மூர்த்தி | இலங்கை | 9472 670 6587. |
| மூர்த்தி | இந்தியா | 91917 134 9041. |
| ராணி(மகள்) | கனடா | 1416 609 1924. |
| யோகன்(மகன்) | பிரித்தானியா | 44208 472 8659. |





- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

**கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!**



**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

**இலவச ஆலோசனைகள்**
**CALL: (416) 264 1272**

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

## 13th ANNIVERSARY SPECIAL !!!

**We sell new & used cellphones, Pagers and accessories for:**

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY VIRGIN MOBILE, KOODO MOBILE, SOLO MOBILE, MOBILICITY, PUBLIC MOBILE, WIND MOBILE, CHATR WIRELESS.**



*Anniversary Sale*

**Geunine Leather Case**

From **$1.99**

Reg. $19.99

***Offer Valid between August 1st 2010 To August 31st 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.



*Anniversary Sale*

**Hands free**

From **$1.99**

Reg. $29.99

***Offer Valid between August 1st 2010 To August 31st 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.



*Anniversary Sale*

**Smart car charger**

From **$2.99**

Reg. $39.99

***Offer Valid between August 1st 2010 To August 31st 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.





- Car charger
- Leather case
- Head sets
- Home charger
- Clear case
- Bluetooth headset
- Bluetooth dongle
- Data cables
- Batteries
- Belt clip/Holder
- Antenna booster
- Flashing antenna
- Flashing light




**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***



2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
**416.266.6818**

5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
**416.495.7776**

5A - 1162 Morningside Ave
Morningside Ave/ Sheppard Ave
**416.281.2355**

NEW LOCATION
49 - 45 Karachi Dr
Markham Rd / 14 th Avenue
**905.201.4859**

# விளங்கு தமிழை வளர்த்த வித்துவான் வேந்தனார்

- வி. கந்தவனம் -

(18.09.2010, சனிக்கிழமை கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் வித்துவான் வேந்தனார் விழாவையொட்டி இக்கட்டுரை வெளியிடப்பெறுகின்றது. தமிழ்ப்பற்றாளர் அனைவரும் பங்குபற்றி வித்துவான் அவர்களைச் சிறப்பிக்க வேண்டிய விழா இது. - ஆசிரியர்)

வித்துவான் வேந்தனார் என்று உச்சரிக்கையிலேயே மின்சார சக்தி ஒன்று மேனியைக் கிள்ளுகின்றது. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்ற பாரதியாரின் வாக்கின் உண்மையும் நெஞ்சை அள்ளுகின்றது. வித்துவான் அவர்களின் அளப்பரும் பெருமைகளும் மேலோங்கி நினைவுகளில் துள்ளுகின்றன.

அந்தமிழ் இன்பச் செந்மிழ் வழங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டு வேலணைப் பதி வித்துவான் அவர்களைப் பெற்றெடுத்த பெருமைக்குரியது. பெற்ற நாள் 05.11.1918. தவஞ் செய்த பெற்றோர் கனகசபை - தையல்முத்து தம்பதியர். பிறப்புப் பெயர் நாகேந்திரம், சிறப்புப் பெயர் வேந்தனார்.

### தனது காலத்தை ஆட்சிசெய்தவர்:

எங்ஙனம் நாவலர் பெருமான் தமிழையும் சைவத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டாரோ அங்ஙனம் வேந்தனாரும் தமிழையும் சைவத்தையும் தனது கண்களாக மதித்துப் போற்றினார். வேந்தனார் வேந்தராகவே விளங்கித் தான் வாழ்ந்த காலத்தை ஆட்சி செய்தார் - ஆசிரியராக, எழுத்தாளராக, பேச்சாளராக. அதற்குக் காரணம் நாவலரைப்போலவே தமிழின் ஆழத்தையும் அகலத்தையும் அவர் நன்கு அறிந்திருந் தமைதான். நாவலரைப் போலவே தூங்காது பணிகளைச் செய்தார். நாவலரைப் போலவே சரியெனப் பட்டதைத் துணிவோடு முழங்கினார்.


ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் பால பண்டிதர் பரீட்சையில் 1934ல் முதற் பிரிவிலே சித்திபெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பரீட்சையில் 1941ல் தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து சென்னை சைவ சித்தாந்த சமாசத்தின் சைவப் புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். இப்பரீட்சைகள் மிகவே கடுமையானவை. பலருக்கு முயற்கொம்பாக இருந்த பட்டங்களை வேந்தனார் முதல் முயற்சிகளிலே பெற்றுக் கொண்டது அவரது நினைவாற்றலுக்கும் புலமைக்கும் விவேகத்துக்கும் தக்க சான்று பகருகின்றது. பின்னர் ஆசிரியர் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்று 1946ஆம் ஆண்டுதொடக்கம் இறைவனடியெய்திய காலம்வரை(18.09.1966) திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரியிலே தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

### சோர்விலாச் சொற்பொழிவாளர்:

வித்துவான் வேந்தனார் அவர்கள் வித்தியாசமான ஒரு தமிழறிஞர். அறிஞருக்கு அழகு அடக்கம். ஆயினும் இவர் கடக்கக் கருது வோரை மடக்கும் மிடுக்குமுள்ளவர். இந்த மிடுக்கினால் அவர் பெருமிதம் மிகுந்த அறிஞராகவே அறிவுலகத்திற் பவனிவந்தார்.

அறிவும் இருவகைப்படும். ஒன்று நூலறிவு, மற்றையது பட்டறிவு. இவற்றால் மெய்ப்பொருள் காணும் அறிவை அவர் சிறப்பாக வளர்த்துக் கொண்டார். தமது நுட்பமான அறிவினால் வாதங்களிலும் பட்டிமன்றங்களிலும் வெற்றிகளை எளிதிலே ஈட்டினார்.

அறிஞர்களும் பலவகை. பலர் கற்றதை உணர விரித்துரைக்கும் ஆற்றல் இல்லாதவர். சிலர் அந்த ஆற்றல் நன்கு கைவரப்பெற்றவர். வேந்தனார் அறிஞர்களே போற்றிச் சூடிக்கொண்ட நறுமலர். அவருடைய நறுமணம் நாவன்மை. அது அவருக்கு இயற்கையாக அமைந்த கொடை. அந்தக் கொடையால் தமிழின் சிறப்பை, சமயத்தின் தத்துவங்களை எல்லாம் கேளாரும் வேட்ப அள்ளி வழங்கிய சொற்பொழிவாளர் அவர். தமிழர் சமுதாயத்திலே காணப்படும் பிற்போக்குத் தனமான கொள்கைகளையும் கண்டித்துப் பேசுவார். அவருடைய சொற்பொழிவுகள் பல பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவருக்குப் பின் செவிச்செல்வத்தை வாரி வழங்கிய



ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால் அவர் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்தாம்.

### கட்டுரைக் கலைஞர்:

நாவன்மையிலன்றிக் கட்டுரை வரையும் கலையிலும் வேந்தனார் வல்லவர். கட்டுரைகளிற் கருத்துக்கள் மட்டுமன்றிக் கன்னித் தமிழும் கனிந்து குழையும். அவரது தமிழின் இனிமை கட்டுரையைத் தொடர்ந்து படிக்கத் தூண்டும் தூண்டில் போல இருக்கும்.

தமிழைச் செம்மைப் படுத்திய செம்மல் வேந்தனார். அவரால் எழுதப்பெற்றுப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் 78 கட்டுரைகள் வெளிவந்துள்ளன என்று பிரபல அறிஞர் சொக்கன் தாம் எழுதிய தமிழ்ப்பேரன்பர் வித்துவான். க. வேந்தனார் என்ற நூலிலே ஒரு கணக்கைத் தந்துள்ளார்.

கட்டுரைகளோடு யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற் பத்தும், கவிதைப் பூம்பொழில், சான்றோர் வளர்த்த தமிழ், இந்து சமயம் ஆகிய நூல்களையும் ஆக்கியுள்ளார்.

மாணவர் கல்வி வளர்ச்சிக்கு இவர் செய்த பங்களிப்பு மலையினும் மாணப் பெரிது. ஆசிரியர் என்ற தொழில்சார்ந்த கடமைகளுக்கும் அப்பால் பாடசாலை மாணவரின் படிப்பை எளிதாக்கிய பெருமை இவருக்குண்டு. இவரது உரைவிளக்க நூல்கள் அக்காலத்தில் பாடசாலைகளில் மிகவும் பெயர்பெற்றவை. குறிப்பாகத் தமிழ் இலக்கியப் பாடங்களுக்கு இவர் எழுதிய விளக்க நூல்கள் மாணவருக்கு மட்டுமன்றிப் படிப்பிக்கும் ஆசிரியருக்கும் உதவியாக இருந்தன. இது ஒரு இணையற்ற கல்விச் சேவை.

### விழுமிய கவிஞர்:

வித்துவான் அவர்கள் விழுமிய ஒரு கவிஞருமாவர். கவிதைப் பூம்பொழில் என்ற கவிதைத் தொகுப்பு அவரது கவிபுனையும் ஆற்றலுக்கு மட்டுமன்றி ஈழத்துக் கவிவளத்துக்கும் சான்று பகருமொரு தகைமைசார் படைப்பு.

அக்காலத்தில் கவிதை பாடுவதென்றால் அது பண்டிதராலேதான் முடியும் என்று பலர் நம்பியிருந்தார்கள். ஆனால் பண்டிதராகிய வேந்தனார்,

பாடுகின்றோர் எல்லோருங் கவிஞ ரல்லர்  
பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமையல்ல

என்று பாடி, ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல உணர்ச்சி ஊற்றுள்ள எவரும் கவிதை பாடலாம் என்ற கருத்துடையவராக இருந்தார். பண்டிதரை அவர் வெறுக்கவில்லை. விளங்காத கடும் நடையில் பாடல் புனைவதையே எதிர்த்தார். காலத்துக்கேற்ற முறையிற் கவிதை படைக்க வேண்டும், அதுவும் மக்கள் பற்றியதாக, மக்களுக்கு விளங்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதனாலேயே பாரதியாரை அவர் போற்றினார். அவர்வழி எளிமையான கவிதைகளைப் பாடிக் காட்டினார்.

எங்கள் இலங்கையும் ஆங்கி லேயரின்  
இல்லமோ - இது - நல்லதோ  
தங்கள் ஆட்சியை இங்கு நாட்டிடச்  
சாற்றினார் - வழி - மாற்றினார்.

என்பதுபோன்ற விடுதலை உணர்வை எம்மத்தியில் விதைத்த முன்னோடி வித்துவான் வேந்தனார்.

இவரது கதைப் பாடல்கள் கருத்துக்கும் கற்பனைக்கும் இயல்புநவிற்சி அணிக்கும் பெயர்பெற்றவை. தினகரன் இதழில் 1956ல் வெளிவந்த இவரது உற்றதுணை என்ற கதைப் பாடல் இவ்விதம் தொடங்குகின்றது:

காதலனும் காதலியும் கடற்கரையில் இருந்து  
கடலையுடன் சிற்றுண்டி கனிவகைகள் உண்டும்  
மோதியெழும் கடலலையில் முந்திரிகைப் பழத்தை  
முகைநீக்கி விட்டெறிந்தும் முறுவலித்தும் மகிழ்ந்தார்.

### குழந்தைக் கவிஞர்:

தமிழ்ப் பற்றாளராக, விடுதலைப் போராளியாக, சமுதாயச் சீர்திருத்தவாதியாக, ஆன்மிகவாதியாக இவர் அவ்வப்போது தமது சிந்தனைகளைக் கட்டுரைகளிலும் கவிதைகளிலும் வடித்தாலும் இவரது குழந்தைப் பாடல்களே பெரிதும் பேசப்படும் படைப்புகளாக இருக்கின்றன. நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்குப்பின் குழந்தைகளைப்பற்றி அதிகம் சிந்தித்தவராகவும் குழந்தை இலக்கியத்தை வளர்த்தெடுத்தவராகவும் வேந்தனார் போற்றப்படுகின்றார். இவரது குழந்தைகள்பற்றிய பாடல்களுள்,

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்  
கட்டிக் கொஞ்சும் அம்மா  
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்  
பருகத் தந்த அம்மா

என்று தொடங்கும் அம்மாவின் அன்பு என்ற பாடல் புகழ்பெற்றதொன்று. இரசிகமணி கனக செந்திநாதன் மேடைகளில் அடிக்கடி இந்தப் பாடலைப் பாடி வேந்தனாரின் கவித்திறனைப் புகழ்வதுண்டு. பாடபுத்தகங்களிலும் வேந்தனாரின் பாடல்கள் பல இடம்பெற்றிருக்கின்றன.

### முற்போக்குச் சிந்தனையாளர்:

தக்கார் தகவிலர் என்பது அவரவர்  
எச்சத்தாற் காணப்படும்

என்பதுபோல வேந்தனாரின் படைப்புகளைக் கொண்டு அவரது பண்புகளை அறிந்து கொள்ளலாம். வேந்தனார் அன்பும் பண்புமுடையவர். ஒழுக்கத்திலே உயர்ந்து நின்றவர். சைவநீதியைப் பின்பற்றி வாழ்ந்தவர். தமிழுணர்வு மிகுந்தவர். தமிழ்ப் பண்பாண்டைப் போற்றியவர்.

அவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர். சமுதாய முன்னேற்றத்தை வலியுறுத்தியவர். தமிழ் மறுமலர்ச்சிக்கு உழைத்தவர். தமிழை எளிமையாகவும் இனிமையாகவும் கட்டுரைகளிலும் கவிதைகளிலும் கையாண்டவர். அவ்வகையில் கற்றவர் உலகத்துக்கும் பொது மக்கள் உலகத்துக்கும் வலுவானவொரு பாலமாக அமைந்தவர்.

அவரது எழுத்துக்களுக்கும் சிந்தனைகளுக்கும் மக்கள் மத்தியிற் பெருவரவேற்பிருந்தது. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அவரது ஆக்கங்களை வெளியிடுவதிலே பெருமையடைந்தன. அவரது சொற்பொழிவுகளைக் கேட்டின்புற மக்கள் திரண்டெழுந்தனர். தமிழின் பெருமைகளை எடுத்துரைத்து, தமிழுணர்வை வளர்த்துத் தமிழை விளங்க வைத்த தமிழ்ப் பற்றாளர் வேந்தனார் அவர்கள்.

அவரது முதற் கட்டுரை இந்துசாதனத்தில் 1940ல் வெளிவந்தது. அதாவது, 22 வயதில் அவர் எழுதத் தொடங்கிவிட்டார். அவர் இம் மண்ணுலகில் வாழ்ந்த காலம் 48 ஆண்டுகள். இந்த 26 ஆண்டுகளில் அவர் தமிழுக்கு அளித்த அணிகலன்கள் ஏராளம். சிந்தித்துப் பார்த்தால் அவர் சதா எழுதிக்கொண்டே இருந்தார் என்பது தெளிவாகின்றது. அத்துடன் அவரைத் தன்பாட்டில் எழுதவிட்டுக் குடும்பத்தைக் கவனித்து வந்த துணைவியார் சவுந்தரநாயகி அம்மாளின் இல்லற மாண்பும் தலைதூக்கி நிற்கின்றது.

### பாராட்டுகளும் பட்டங்களும்:

வேந்தனார் அவர்களின் தமிழ்த் தொண்டுக்குக் கிடைத்த விருதுகளும் பட்டங்களும் பல. அவற்றுள் 1964ல் இலங்கைச் சைவாதீனம் சூட்டிய சித்தாந்த சிரோமணி என்ற பட்டமும் தமிழ்நாடு திருவாவடுதுறை மாகாசந்நிதானம் வழங்கிய தமிழ்ப்பேரன்பர் என்ற பட்டமும் பெயர் பெற்றவை.

தமிழை வளர்த்த தமிழ்ப்பேரன்பர் மறைவதில்லை, தமிழ் உள்ளவரை வாழ்வார்கள். வேந்தனார் அவர்கள் வாழ்ந்துகொண்டேயிருக்கிறார்கள். அவரது பிள்ளைகள் கலையரசி, இளங்கோ, இளஞ்சேய் ஆகியோரும் ஆன்ற தமிழுணர்வாளர்கள். தந்தையாரின் வெளிவராத ஆக்கங்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டுவரும் அவர்களைத் தமிழுலகம் என்றும் பாராட்டும்.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com



# சாட்சி சொன்ன சரிந்த வேலி

- குரு அரவிந்தன் -

**வே**லிக்கு ஓணான் சாட்சி என்று ஊரிலே ஒரு முதுமொழியுண்டு. எதைக் கேட்டாலும் ஓம் என்று சொல்வதுபோல மேலும் கீழும்தான் ஓணான் தலையாட்டுமாம். வேலி என்றதும் ஊரிலே முன்பு நடந்த வேலிச்சண்டைதான் எங்களுக்கு ஞாபகம் வரும். அங்கே சிலருடைய வேலிகள் அடுத்த வளவை நோக்கி மெல்ல மெல்ல நகரக்கூடியவை என்பது பலருக்குத் தெரியாது. அயலவரின் எத்தனையோ கோபதாபங்களுக்கு இந்த வேலிகள் தான் காரணமாய் இருந்திருக்கின்றன. இந்த வேலி காரணமாகப் பல அயலவர்கள் பேச்சுவார்த்தையின்றி உறவை முறித்திருக்கிறார்கள். கிடுகு வேலி, பனையோலை வேலி, இலந்தை முள்ளுவேலி, மூரிமட்டை வேலி, பூநாறி வேலி, கிளுவங்கதியால் வேலி, முள்முருக்கை வேலி, முள்ளுக் கம்பி வேலி என்று பலவிதமான வேலிகளும் ஊரிலே இருந்தன. சில வீடுகளில் உள்ள குமர்ப்பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப வேலியின் உயரமும் வளர்ந்து கொண்டே போவதுண்டு. சில இளைஞர்களுக்கு வேலி பாய்ந்த அனுபவங்கள்கூட இப்போ ஞாபகத்திற்கு வரலாம். இளமைப் பருவம் எதையும் யோசிக்காமல் தாண்டச் சொல்லும். வயது அப்படி! வேலி மேயிறான் என்றும் சிலேடையாகச் சொல்வதுண்டு. பெடியளின் ஆக்கினை தாங்காமல் சில இடங்களில் இப்படியான வேலிகள் மதில்களாகவும் மாறியிருக்கின்றன. இங்கே நான் சொல்ல வந்த வேலி கனடாவில் உள்ள ரொறன்ரோவில் இருந்தது. தற்செயலாக எனது பழைய நண்பர் ஒருவரை இங்கே நடந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஒருநாள் சந்தித்த போது அவர் சொன்ன சம்பவம்தான் இது.

இலங்கையில் பெறியியலாளராகப் பட்டம் பெற்று அங்கேயே பொறியியலாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த இவர் எப்பொழுதும் சிரித்த முகத்தோடுதான் இருப்பார். எதையுமே வேடிக்கையாக எடுத்துக் கொள்ளக்கூடியவர். உள்நாட்டு அரசியலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பல வருடங்களுக்கு முன்பே கனடாவிற்குப் புலம் பெயர்ந்தவர். கனடாவிற்கு வந்த புதிதில் அவர் படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை எதுவும் கிடைக்கவில்லை. வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் என்று அவர்கள் படித்த படிப்பிற்கு இங்கே மதிப்புக் கொடுக்கப் படவில்லை. வேலை தேடி எங்கே சென்றாலும் கனடியத்தராதரம் உங்களுக்கு இருக்கிறதா என்ற கேள்வியைத்தான் கேட்டார்களாம். அது போதாதென்று எந்த ஒரு வேலைக்கும் குறைந்தது ஆறுமாதகால அனுபவமாவது இருக்கிறதா என்றும் கேட்பார்களாம். அதனால் சலிப்படைந்த நண்பர் ஒரு இடத்திலும் வேலையே தராமல் எப்படி ஆறுமாத அனுபவம் எடுப்பது என்று தினமும் தான் மண்டையைப்போட்டு உடைத்துக் கொண்டதாகச் சொன்னார். ஆனாலும் அவர் வேறு வழி இல்லாததால், பொருளாதார நிலை கருதிப் பொறுமையாக வேலைதேடி எலிவேற்றர் எலிவேற்றராய் ஏறி இறங்கியதாகச் சொன்னார்.

எப்படியோ அரும் பாடுபட்டுக் கடைசியில் அவருக்குப் பாதுகாவலர் உத்தியோகம் ஒன்று கிடைத்தது. அந்த நாட்களில் படித்துக் கொண்டே பகுதிநேர உத்தியோகம் பார்ப்பதற்கு ஏற்றவாறு செக்கூரிட்டிக் காட், பெற்றோல் நிலையத்தில் காசாளர், தொழிற்சாலையில் மெசின் ஒப்பிறேற்றர், றெஸ்ரோறன்ட் கிச்சின் கெல்ப்பர் என்று எம்மவர்க்கு ஏற்றவாறு சில தொழில்கள் தயாராக இருந்தன. ஏற்றதாழ்வு இல்லாமல் கனடாவிற்கு வந்த புதிதில் படித்துக் கொண்டு பகுதி நேரமாக இப்படியான வேலைகளையே அதிகமானவர்கள் செய்தார்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்ற பயபக்தியோடு இவர் செக்கூரிட்டிக்காட் வேலையை ஒப்புக்கொண்டார்.


அவரை எங்கே வேலைக்கு அனுப்பினாலும் அங்கே வேலைக்குச் செல்ல அவர் தயாராக இருந்தார். முதலில் குறைந்தது ஆறுமாதகால அனுபவமாவது பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் அனுப்பிய இடத்திற்குச் சீருடை அணிந்து வேலைக்குச் சென்றார். இரவு வேலை கடினமானது அல்ல, இடையிடையே கண்ணயரலாம் என்று இவரது இன்னொரு பாதுகாவலர் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் இவருக்கு அறிவுரை சொல்லியிருந்தார். ஒரு முறை அறிவுரை சொன்ன அந்த நண்பர் கண்ணயர்ந்தபோது தீயணைப்புப் படையே அங்கே வந்து நின்றதாகச் சென்னாராம். கண்முழித்துப் பார்த்தபோது முதலில் கனவோ என்றுகூட நினைத்தாராம். பின்புதான் இல்லை அது நிஜம் என்பதைப் புரிந்து கொண்டு எப்டியோ தான்தான் புகையலாரம் அடித்ததால், உடனடியாக 911க்கு அடித்ததாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டாராம். சமயோசிதமாய் எப்படித் தப்பித்துக் கொள்வது என்று நம்மவர்களுக்குச் சொல்லியா கொடுக்க வேணடும்?

எனது நண்பர் வேலைக்குச் சென்ற இடம் ஒரு எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையாகும். ஒன்ராறியோ வாவிக்கரையில் அந்த இடம் அமைந்திருந்தது. பனி கொட்டும் காலமாயும் அது இருந்தது. வாரஇறுதி நாட்களில் இரவுநேர வேலையை அவரே விரும்பி ஏற்றுக் கொண்டார். தொழிற்சாலையின் அடிவளவில் தொடர்வண்டி வந்து போவதற்காக ஒரு பாதையும் இருந்தது. வாரநாட்களில் மட்டும் எப்போதாவது ஒருதடவை அங்கே தொடர் வண்டி வந்து போவதுண்டு. மற்றும்படி கம்பி வலையால் செய்யப்பட்ட பெரிய கதவுகள் இரண்டு பாதுகாப்புக் கருதி அந்தத் தொடர் வண்டிப் பாதையை மூடியபடி இருக்கும். அதன் அருகே செக்கூரிட்டி செக்பொயின்ற் ஒன்றும் இருந்தது. பாதுகாவலர் மூன்று மணித்தியாலத்திற்கு ஒரு தடைவ அடிவளவைச் சுற்றி வந்து அங்கே உள்ள 'பஞ்ச்குளக்கில்' தான் வந்ததற்கான அடையாளத்தைப் பதிக்கவேண்டும். அன்று மாலை நேரம் தொடக்கம் அதி காலைவரை பனி கொட்டிக் குவிந்திருந்தது. மறுநாள் பகல் வேலைக்குச் சென்ற பாதுகாவலர் பின்பக்கத்தில் கதவோடுகூடிய வேலி சரிந்து விழுந்திருப்பதை அவதானித்து தலைமையகத்திற்கு அறிவித்தார். அங்கிருந்து உடனடியாகவே பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வந்து என்ன நடந்தது என்பது பற்றி அறிக்கை தயாரித்தார். இரவு பாதுகாவலராகக் கடமையில் இருந்த நண்பர் வேலி சரிந்து விழுந்ததைப் பற்றி எதுவுமே தனது றிப்போட்டில் எழுதியிருக்கவில்லை. அதுமட்டுமல்ல இரவு 12 மணிக்கும், அதிகாலை 3 மணிக்கும், காலை 6 மணிக்கும் சரியாக அங்கே உள்ள மணிக்கூட்டில் பஞ்ச் பண்ணியிருந்தார்.

அதிகாரியால் நம்பமுடியாமல் இருந்தது. திரும்பத்திரும்பப் பஞ்ச்காட்டைச் சரிபார்த்தார். எல்லாமே சரியாக இருந்தன. ஆனால் வேலிக்கு அருகே சென்று பார்த்தபோது அது சரிந்து விழுந்த பின் நிறையவே பனிகொட்டி விழுந்த வேலியை மூடியிருந்தது. எனவே காற்றோடு கூடிய பனிகொட்டியபோதே, அதாவது 12 மணிக்கு முன்பாகவே வேலி விழுந்திருக்க வேண்டும் என்பதை அவர் ஊகித்துக் கொண்டார். நண்பரிடம் விசாரித்தபோது அவர் தான் கிரமமாகப் பஞ்ச் பண்ணியதாகவே சொன்னார். நண்பர் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிக்குப் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. பொறுமை இழந்த அவர், 'நித்திரைத் தூக்கத்தில நடக்கிற பழக்கம் உனக்கிருக்கா?' என்று கூடக் கேட்டுப் பார்த்தாராம். ஏன்? என்று இவர் திருப்பிக் கேட்டபோது 'பக்கத்தில் விழுந்து கிடக்கிற வேலியைக் கூடப் பார்க்காமல் எப்படி உன்னால் மணிக் கூட்டில் பஞ்ச் பண்ண முடிந்தது' என்று கேட்டாராம். இவரிடம் இருந்து தகுந்த பதில் கிடைக்காததால் அவர் ஏமாற்றத்தோடு திரும்ப வேண்டி வந்ததாம்.

சில வருடங்களின்பின் அவர்கள் வேலை செய்த பாதுகாவலர் கொம்பனி மூடப்பட்டதால் இருவரும் வேலையை இழக்கவேண்டி வந்தது. சமீபத்தில் ஒருநாள் நண்பரை அந்த அதிகாரி சந்தித்தபோது, இப்பதான் இரண்டு பேருக்கும் அந்த வேலை இல்லையே, இப்போதாவது சொல்லு அன்று என்ன நடந்தது என்று கேட்டாராம். அதுமட்டுமல்ல, எத்தனை நாள் நித்திரை இல்லாமல், எப்படி அது நடந்தது என்று தெரியாமல் அதைப் பற்றியே யோசிச்சுக் கொண்டிருந்ததாகவும் கூறினாராம். இனியும் மறைப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்த நண்பர் அந்த முன்னாள் பாதுகாப்பு அதிகாரியிடம் நடந்த உண்மையைச் சென்னாராம்.

உண்மையில் என்ன நடந்ததென்றால், ஒரு நாள் அதிகாரி இவருக்கு முன்பாகவே மணிக் கூட்டைத் திறந்து பஞ்ச் காட்டை எடுத்து சரிபிழை பார்த்துவிட்டு மணிக்கூட்டை மூடாமலே விட்டுவிட்டுப் போய்விட்டார். இவர் ஆர்வம் காரணமாக அதை எடுத்து ஆராய்ந்து பார்த்திருக்கிறார். அடிவளவில் இருக்கும் பஞ்ச் குளக்கும் தொழிற்சாலையின் உள்ளே இருக்கும் வேறுஒரு பஞ்ச்குளக்கும் ஒரேமாதிரியாக, ஒரே நேரில் பஞ்ச் பண்ணுவதை அவதானித்திருக்கிறார். அதன்பின் இரவு நேரங்களில் பனிக்குளிருக்குப் பயந்து வெளியே செல்வதைத் தவிர்ப்பதற்காக தொழிற்சாலைக்குள் இருக்கும் பஞ்ச்குளக்கில் சரியாக அந்த நேரம் பார்த்து பஞ்ச் பண்ணுவார். கூட்டாளியின் அறிவுரைக்கேற்ப அடிக்கடி குட்டித் தூக்கமும் போடுவார். ஏந்த ஒரு தடங்கலும் இல்லாமல் இது பல நாட்களாகவே தொடர்ந்துகொண்டிருந்ததாம். பலநாள் கள்ளன் ஒருநாள் அகப்படுவான் என்பதுபோல அன்று நண்பரின் கஸ்டகாலமோ என்னவோ அந்த வேலி சரிந்து விழுந்து சாட்சி சொன்னதால் நண்பர் அகப்பட்டுக் கொண்டார். தலைக்கு வந்தது தலைப்பாவோடு போனதுபோல, நல்லகாலம் வேலியால் அவரது வேலை அன்று பறிபோகவில்லை.



kuruaravindan@thaiveedu.com



# பேச்சுப் பல்லக்கு

எனக்கு உங்களுடன் பேச வேண்டுமென்ற ஆசை உள்ளூர இருந்து கொண்டுதான் இருந்தது. ஆனாலும் பேசுவதற்குப் பயம். கமலஹாசன் யாழ்ப்பாணத் தமிழ் பேச முயற்சிக்கிற ஒரு படத்தில் சொல்வது போன்ற பயம். ஏனென்றால் என்னபேசினாலும் அது வில்லங்கமாய் முடிவது வழமையாகி விட்டது. அதனால் நீண்ட நாட்களாக வாயை மூடி வைத்திருந்து கொண்டேன். அப்பொழுதெல்லாம் "பேசாதிருக்கப் பிசகொன்றுமில்லை" "எல்லாம் முடிந்த காரியம்" "சும்மா இரு" இப்படிப் பெரிய வசனங்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு தான் காலம் போனது.

அப்படியும் பலன் இல்லை வில்லங்கமென்பது விட்டபாடாக இல்லை. அது வந்துதான் ஆவேன் என்று அடம் பிடித்து வந்து கொண்டு தான் இருந்தது. பேசாமல் பொத்திப் பொத்தி வைத்திருந்து 'போர்டர்கேஸ்' ஆகி நான் எனது பாட்டில் பேசிக்கொண்டு திரிவதிலும் பார்க்க உங்களிடம் பைத்தியம் என்று பெயர் வாங்குவது நல்லது என்று எண்ணித்தான் பேசத் துணிந்திருக்கிறேன்.

எதைப் பேசினாலும் நாங்கள் எங்களது பெருமைகளை விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. அப்படிப் போனால் நாங்கள் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தம் இல்லை எல்லாம் எங்கள் மூலமாக வந்ததாக இருக்கும்போது அதையெல்லாம் விடமுடியுமோ.

"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்தகுடி"

என்பதை மறக்கக் கூடாது என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

சூரியனில் இருந்து பிரிந்து ஈர்ப்பு மையம் கொண்டு, தன்னைத் தானே சுற்றி சூரியனையும் சுற்றி, மழை கண்டு நெருப்பு அடங்கி, கல்தோன்றி, மண்தோன்றி, கடல்தோன்றி, மலைதோன்றி, பாசி தோன்றி, தாவரம் தோன்றி, ஊர்வன பறப்பன தோன்றி, மனிதன் தோன்றி, மனிதனோடு மனிதன் பேசத்தொடங்கி, ஒவ்வொரு மனிதக் குழுவும் ஒன்றையொன்று சந்தித்து, மோதி வென்று கொன்று கலந்து, புணர்ந்து, ஒவ்வொரு மொழியிலும் திசைச் சொற்கள் சேர்ந்து. இவ்வாறு இவ்வாறாக மண்ணினதும் மனிதனதும் சங்கதிகள் பல்வேறு படிநிலை வளர்ச்சிகளைக் கொண்டது என்று சிலர் சொல்லுகிறார்களே என்று கேட்டால், அது சில "மண்டை செத்ததுகளின் ஓலம். அவர்கள் இப்படித்தான் கூத்துக் காட்டுவார்கள். அவற்றையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் எங்களது பெருமைகளை விட்டுக் கொடுக்காமல் பேசவேண்டும்" என்று சொல்கிறார்கள்.

ஆனால் இதே மூத்தகுடியில் வந்த மாணிக்கவாசக சுவாமிகளும்.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்"

நுழைந்து வருகின்றார்.

'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதி'யான பிரபஞ்சத்தை நுணுகி நோக்குகிறார், ஆயினும் நாமோ அவரை பரிணாமத்தின் படிமுறைகளோடு இணைக்காமல் மறுபிறவிக் கோட்பாட்டோடு மாட்டிவிட்டுத் தப்பிக் கொள்கிறோம். அதனால் கோவிலிலும் சாவு வீட்டிலும் சிவபுராணம் படித்து விட்டு 'சிவனே' என்று இருந்து விடுகிறோம்.

கல்தோன்றி மண் தோன்றா என்பதை இலக்கண விளக்கமாகப் பார்த்தால் கல்தோன்றி மண் தோன்றிய காலம் என்று கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள் எப்படிப் பார்த்தாலும் பூமி தோன்றும் போது நாங்களும் 'பொத்துக்கொண்டு' வந்து விட்டோம் என்று சொல்வதாகத்தானே இருக்கிறது.

சில பேர் இதற்கு மேலேயும் போய் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி" என்றும் பேசுவது கேட்டிருக்கிறோம். அப்போது ஒருவர் சொன்னார். "நல்ல வேளையாக இவர்கள் இரும்பு வாள் என்று சொல்லாமல் விட்டு விட்டார்கள். இரும்பு வாள்தான் சண்டைக்கு நின்று பிடிக்கும் என்றாலும் இரும்பு மிகப் பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட உலோகம்"

சொன்னவர்கள் நுணுக்கம் தெரிந்துதான் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இடத்தில் திரு ந. இரவீந்திரன் என்பவர் தனது புத்தகம் ஒன்றில் குறிப்பிடுவதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது.



"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ் என வீண்தம்பட்டம் அடிப்பவர்களை விடுங்கள். அவர்களின் சுயமோகத்தைச் சாடுவதாக நினைத்து தமிழின் சாதனைகளை நிராகரிக்க முனையக்கூடாது".

இத்தொடரின் நோக்கம் தமிழின் சாதனைகளை நிராகரிப்பதல்ல. வீண்தம்பட்டமாக அல்லாமல் வெடியாக கொழுத்திக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நாமோ கேள்வி முறையின்றி அவர்களுக்கு கூட்டம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதே இத் தொடரின் நோக்கம்.

## ஒருகாசுக் குருவி

பெருமை பேசவேண்டுமென்பதற்காக பழைய கதைகளை எடுத்தாள்வதும் அர்த்தமில்லாமல் அவற்றிற்கு மெருகூட்டி நம்மை நாமே அவமானப்படுத்திக் கொள்வதும் நமக்குள்ளே பிடிவாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

எனது ஊர் நெடுந்தீவு. அந்த நாளில் நெடுந்தீவுக்குப் பசுத்தீவு என்று பெயர் இருந்தது என்றும் இராமேசுவரம் கோவில் பூசைக்கு அங்கிருந்து பால் கொண்டு சென்றார்களென்றும் கர்ணபரம்பரைக் கதைகள் இருக்கிறது. அது ஒரு காலமாக இருக்கும். இப்போது வரவர மாடுகளும் குறைந்து இருப்பவைகளும் 'வத்தல் தொத்தலாய்' இருக்கிற காலம்.

அண்மையில் ஒரு நாள் இது பற்றிய பேச்சு வந்தபோது 'நம்மாளு ஒருவர்' "எங்கடை மாடுகளைத் தெரியுந்தானே இதுகளை வைச்சுக்கொண்டே நாங்கள் இராமேசுவரத்திற்குப் பால் ஏத்தினனாங்கள் எண்டால் நாங்கள் எந்தண்டி ஆக்கள் எண்டு அறிய வேணும்" என்றார். அந்தக் காலத்தில் இராமேசுவரத்துக்குப் பால் அனுப்பிய கதை இப் போ பரட்டை மாட்டை வைத்தே பால் ஏற்றுமதி செய்தவீரர் என்ற கதையாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

கல்கியின் 'பொன்னியின் செல்வன்' வாசிக்கும்போது, ஒரே நாளில் தஞ்சையில் காவிரி ஆற்றில் இறங்கி வேதாரணியம் கடலில் மிதந்து மாந்தையில் கரையேறி தேரோடும் அநுரதபுரத்துத் தெருவீதியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுமே! அவ்வாறு நெடுந்தீவிலிருந்து ஒவ்வொரு நாளும் இராமேசுவரம் போய் வந்திருக்க முடியுமா? கடலின் 'சீர்' பொறுத்து ஒரு நாளிலும் போகலாம் 'பாய்மாறிப் பாய்மாறி' ஒன்பது நாளிலும் போகவரும். இதெல்லாம் ஆயிரம் வருடங்கள் வரை பின்னோக்கிப் பார்க்க வேண்டிய விடயங்கள்.

நெடுந்தீவின் இயற்கையான தரைத்தோற்ற அமைப்பு கரையோரங்கள் உயர்ந்ததாயும் நடுவில் வாகான புல்வெளிகளும் வடிகாலமைப்புடன் கூடிய ஒன்றையொன்று தொடர்புடைய சில பெரிய பல சிறிய நீர்த் தேக்கங்களையும் கொண்டது. பின்னாளில் இவ்வமைப்பு சீரழிக்கப்பட்டது. அன்றைய காலங்களில் இருந்து பருவகாலச் சூழ்நிலைகளும் உலகம் முழுவதும் பல்வேறு மாற்றங்களுக் குட்பட்டது.

நாட்பட நாட்பட அற்றுப் போனாலும் ஒவ்வொரு புலப்பெயர்வின் போதும் புலத்திற்கும் பெயர்க்கப்பட்டோருக்கும் சில தலைமுறைக் காலம்வரை தொடரும் உறவுத் தொடர்புகள். இவ்வாறான விடயங்களூடாக இராமேசுவரத்திற்குப் பால் அனுப்பிய கதையை அணுக வேண்டும். அவ்வாறு அணுகினால் திருவிழாக்களுக்குச் சென்று வருதல் நடைபெற்றிருக்கக் கூடும். தயிர், வெண்ணெய், நெய் போன்ற பாற் பொருட்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என்று ஊகிக்கக் கூடும்.

இதை விடுத்து முன்னர் கூறியது போல பெருமைக்கு ஏதாவது சொல்லப்போய் நம்மை நாமே அவமானப்படுத்திக் கொள்வது நமது வழமையாகிவிட்டது. யதார்த்தம் புரியாத வறட்டுத் தனம் வாழ்வின் அம்சமாகி விட்டது.

ஒரு குருவியொன்று ஒரு நாள் ஒரு காசைக் கண்டெடுத்தது. காசு கிடைத்த புழுகத்தில்

'எங்கிட்ட ஒரு காசிருக்குது – அது



சி.சண்முகநாதன்

யாருக்கு வேணுங்கோ
அது யாருக்கு வேணுங்கோ'

என்று பாடிப் பாடிப்பறந்தது. அந்தநேரம் ராசாவும் ஊர்கோலம் போய்க் கொண்டிருந்தார். குருவியும் ராசாவைச் சுற்றிப் பறந்து பறந்து பாடியது. ராசா ஏதேச்சையாகக் கையை நீட்டி காசை வாங்கி விட்டார். உடனே குருவி.

"ஒரு காசுக்கு வழியில்லாத
ராசா பாருங்கோ...
ராசா பாருங்கோ"

என்று பாடிப் பாடிப் பறக்க ராசா கோபத்தில் காசை எறிந்து விட்டார் குருவியும் உடனே


எனக்குப் பயந்து ராசா காசை
வீசிற்றுப் போறாங்கோ...
வீசிற்றுப் போறாங்கோ

என்று பாட ஆரம்பித்துவிட்டது. இப்படித் தான் ஒரு வாத்தியார் கதையும் இருக்கு கொஞ்சம் வித்தியாசமாக.

வாத்தியார் ஒருவர் கோவணமும் கட்டாமல் நாலு முழ வேட்டியுடன் வகுப்புக்கு வருவாராம் பிள்ளைகள் தமக்குள் குசுகுசுப்பது பெற்றோர் காதில் விழ, இன்ஸ்பெக்டரிடம் முறைப்பாடு போயிருக்கிறது. அவரும் நேரடியாகக் கேட்கத் தயங்கி. "சேர் நீங்கள் வகுப்பில் கௌபீனம் தெரியைக்கூடியதாய் இருக்கிறீங்கள் எண்டு சொல்லுகினம்" என்றாராம். அதற்கு வாத்தியார் "எந்த மடையன் நான் கௌபீனம் தெரியக் கூடியதாய் அமர்கிறேன் என்று சொன்னவன். நான் தான் கௌபீனமே தரிப்பதில்லையே" என்றாராம்.

sanmuganathan.s@thaiveedu.com

■ ■ ■



வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி
இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

**Save 1500$ to 6500$ per year**

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக
கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

* **Grade 1 - 12 Tutoring**
* **Kids & Adult Computer**
* **Western Music**
* **Indian Music**

*Further information visit -:* www.varnamonline.com

**You Can Learn From Your Home Face to Face ( Live )**

***Any Where in the World !!!***

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird

**Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884**



கமலா தாஸ் 1934-2009 மலையாள, ஆங்கில எழுத்தாளர். கவிஞர், சுய சரிதையாளர். மிகவும் சர்ச்சைக்குரிய, இரகசியக் காதல், காம விடயங்கள் அடங்கிய தன் சுய சரிதையை எழுதியதால் மிகப் பெரும் பெயர் பெற்றார். சுதந்திரப் பெண்ணாகக் காட்டிக் கொண்ட அவர் இந்துவாகப் பிறந்து முஸ்லீமாக இறுதியில் மாறியவர். அவர், மாதவிக் குட்டி, கமலா சுரையா என்றும் அறியப்பட்டவர்.



# பொய்கள்

கமலா தாஸ்

**ஆங்கிலம் ஊடாகத் தமிழில் - என்.கே. மகாலிங்கம்**

அவன் கண்களைத் திறந்தபோது, அம்மா படுக்கைக்குப் பக்கத்தில் நின்றாள். 'அம்மா, அம்மா என்னைத் தூக்குங்கள்' என்றான் அவன். அவள் அவனைக் கொஞ்சியபோது, அவளுடைய உள்ளங் கைகள் குளிர்ச்சியாகவும், கண்கள் விரிந்தும் இருந்தன. 'நீங்கள் பல நாட்களாக என்னை விட்டுத் தூர விட்டீர்கள்' என்று அவன் முறையிட்டான். தன்னைத் தன் தகப்பனுடனும் முரட்டுக் கைகள் உள்ள சமையல்காரனுடனும் விட்டுச் சென்றதை அவன் மன்னிக்கவே மாட்டான். அந்தச் சூழ்ச்சியை செய்வதற்கு அவனுடைய அபிப்பிராயத்தை எவருமே கேட்கவில்லை. அவனுடைய அனுமதியையும் கேட்கவில்லை. அவள் திரும்பி வந்தபோது புன்னகைக்கவும் கூடாது என்று அவன் தன் மனத்தைத் திடப் படுத்தியும் இருந்தான். அவளைப் பார்ப்பதில் கூட சந்தோசமாக அவன் இருக்கவில்லை. ஆனால் அம்மா அவனைத் தூக்கியபோது அவன் சினத்துடன் அழ ஆரம்பித்தான்.

'ஏன் அப்பு? நான் இரண்டு நாட்கள் தானே போயிருந்தேன்?' அம்மா அவனைக் குசினி மேசைக்கு அருகிலிருந்த கதிரையில் இருத்தினாள். இன்னொரு கதிரையில் அப்பா இருந்தார். அவருடைய முகம் நாளிதழால் மறைக்கப் பட்டிருந்தது. 'அப்பு, இன்று எங்களுடன் தேநீர் அருந்து. நான் கொண்டு வந்த இனிப்புக்களைச் சாப்பிடலாம்.' அவள் இரண்டொரு ரின்களைத் திறந்தாள்.

அம்மா என்னைச் சந்தோசப்படுத்தப் பார்க்கிறாள். அதற்கு நான் ஏமாறக் கூடாது.

'எனக்கொன்றும் வேண்டாம்.'

அப்பா நாளிதழைத் தாழ்த்தி என்னைப் பார்த்தார். பிறகு மெதுவாகச் சிகரெற் புகையை உள்ளிழுத்தார்.

'அவருடன் கோபம் கொள்ளாதே.' என்றாள் அம்மா.

'ராதா நீ தான் அவனுக்குச் செல்லம் கொடுக்கிறாய். நாங்கள் சொல்வதை அவன் செய்வதே இல்லை. அப்படியான கீழ்ப்படிவில்லாத பிள்ளை அவன்.'

'ஆனால் அவன் எங்கள் ஒரே பிள்ளை.' அம்மா அவனுடைய தட்டில் ஒரு லட்டையும் ஒரு துண்டு முறுக்கையும் வைத்தாள். அப்பா அவனைப் பார்த்தார். தன் வாயிலிருந்து சிகரெட்டை எடுத்து விட்டு, இதழ்களைத் திறந்து புகையை ஊதினார்.

லட்டு மிக இனிப்பாக இருந்தது. அம்மாவுக்கு எல்லாவற்றையும் நான் சொல்லுவேன். முறுக்கை அரைத்து மெல்லும்போது அப்படி நினைத்தான். அவள் என்னை விட்டு போயிருந்தபோது நடந்தவை எல்லாவற்றையும் நான் சொல்லுவேன். சோற்றுடன் புளித்த தயிருடன் மட்டும்தான் சாப்பிடத் தந்தார்கள். இருட்டறையில் என்னைத் தனியாகவே படுக்க வைத்தார்கள். ஸ்ரெல்லா வருவாள். கீழே இரவில் பலபேர் சத்தம் போடுவார்கள். போத்தல்களைத் திறப்பார்கள். இவையெல்லாவற்றையும் சொல்லுவேன். அவனை நித்திரைக்கு அம்மா அழைத்துச் செல்லும்போது, அப்பா அவனில் எப்படி அன்பு செலுத்தினார் என்பதையோ, அதனால் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதையோ சொல்லமாட்டேன். அவர் எப்படியான கொடுமைக்காரன் என்பதை அவளே கண்டு பிடிக்க வேண்டும். அப்படி யென்றால் சிலவேளை அப்பா வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது அவரில் அவள் கவனம் செலுத்துவதை விட்டு விடலாம்.

'அப்பு நன்றாகவே நடப்பான் என்று நம்புகிறேன். இங்கே எப்படி என்ன நடக்கிறது என் பதைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டே இருந்தேன்.' அம்மா சொன்னாள்.

அப்பா அம்மாவை தன் மடிக்குள் இழுத்தார். அப்போது அவன் அதைக் கவனிக்காதது போல கீழே பார்த்தான். லட்டை உடைத்து அதன் தூள்களை கோப்பையில் பரவினான். அவன் அவர்களைப் பார்த்தால் அப்பா அம்மாவில் கோபிப்பார். அன்றிரவு அம்மா திரும்பி வருமுன்பு, அவன் கீழே படிகளில் இறங்கிப் போகையில் ஸ்ரெல்லா அப்பாவின் மடியில் இருந்து தொண்டிருந்தாள். ஸ்ரெல்லா பொழுது படுவதற்கு முன்பே போயிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். எல்லாரும் நித்திரை கொள்ளும்போது, விளக்கு எரிந்து கொண்டிருக்கையில் ஸ்ரெல்லா ஏன் அப்பாவின் மடியில் இருந்தாள்? மாடிப் படிப் பிடியில் சாய்ந்து கொண்டு 'ஸ்ரெல்லா' என்று மென்மையாக அழைத்தான். ஸ்ரெல்லா மேலே பார்த்து விட்டுப் புன்னகைத்தாள். ஆனால் பதிலளிக்கவில்லை. 'ஏன் நீ புன்னகைக்கிறாய்? என்று அப்பா கேட்டார். அவருடைய குரல் தொண்டையில் வலியுள்ளதுபோல அந்நியமாக இருந்தது. ஸ்ரெல்லா அமைதியாக இருந்தாள்.

'சொல்லு' என்றார்.

'பிள்ளை' என்று சொல்லி, ஸ்ரெல்லா அவர் பக்கம் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அப்பா சடக்கென எழும்ப, ஸ்ரெல்லா ஏறக்குறைய விழுந்தே விட்டாள். அப்பா அவனை அவனுடைய அறைக்குள் தூக்கிச் சென்று படுக்கையில் போட்டு, அவனின் தொடைகளில் தட்டி, நித்திரையாக்குவதற்கு முயன்றார்.

'ஸ்ரெல்லா ஏன் இன்னும் வீட்டுக்குப் போக வில்லை?'

யன்னல்களைப் பூட்டியபடியே அப்பா சொன்னார், 'அவள் போகப் போகிறாள். இரவானவுடன் அவள் போய் விடுவாள்.'

'இன்னும் இரவாகவில்லையா?'

'குழந்தைகளுக்கு ஆம், வளர்ந்தவர்களுக்கு இன்னும் அரையிருள்.'

அவனுக்குத் தெரியும் அது பொய்யென்று. ஏனென்றால் அவன் இரவில் விழிக்கும்போது குயில் மணிக்கூண்டு ஒலிப்பதைக் கேட்டிருக்கிறான். அப்போது தாய் ஆழ்ந்த நித்திரையில் இருப்பாள். அவன் அவளின் மேல் படுத்து, தனக்குத் தாகமாக இருக்கிறது தண்ணீர் வேண்டும் என்று அவளை எழுப்புவான். அதனால் அப்பா பொய் சொல்கிறார் என்று அவனுக்குத் தெரியும். மாடிப்படிகளில் மணிக்கூண்டு ஒலிப்பதை முன்பு கேட்டிருக்கிறான். 'அப்பா இங்கே படுங்கள். எனக்கு நித்திரை வரவில்லை.'

'அப்பு, நான் கெதியில் வந்து விடுவேன்.'

அப்பா மெதுவாகக் கதவைச் சாத்துகையில் அவன் திரும்பவும் அதைக் கேட்க வேண்டும் போல நினைத்தான், 'ஏன் இன்னும் ஸ்ரெல்லா வீட்டுக்குப் போகவில்லை?' ஒருவரும் அதற்குப் பதிலளிக்கவில்லை. ஆனால் அதிக நேரம் அப்பாவின் குரல் கீழே கேட்டுக் கொண்டே இருந்தது. முதலில் அப்பாவின் குரல் கோபமாக இருந்தது. பிறகு ஸ்ரெல்லாவின் கேவலால் அக்குரல் அடைக்கப்பட்டது. பிறகு அது மென்மையாகவும் இறைஞ்சுவதாகவும் இருந்தது. காலையில் அவன் எழும்பியபோது, அவன் ஆகாயத்தில் ஒரு குதிரையில் சவாரி செய்த ஒரு கனவு அவனுக்கு மிகத் தெளிவாகவே நினைவில் இருந்தது.

'அம்மா, குதிரைச் சவாரி செய்து கொண்டு நான் பல இடங்களுக்குச் சென்றேன்.'

'எப்போ?'

'நீங்கள் என்னை விட்டுப் போயிருந்தபோது. ஸ்ரெல்லா மாலையில் வந்தபோது.'

'யார்?'

அப்பா நாளிதழைக் கீழே போட்டார். சிகரெட் துண்டு அவர் இதழில் ஒளிர்ந்தது.

'ஸ்ரெல்லா. ஸ்ரெல்லாவை உனக்குத் தெரியாதா, அம்மா? அந்த உயர்ந்த ஸ்ரெல்லா? முக அலங்காரம் செய்த அந்த ஸ்ரெல்லா?'

அப்பா தன் சிகரெட் துண்டை தேநீர் கோப்பையில் தேய்த்து அமுத்தி நூர்த்த பின் பெரிதாகச் சிரித்தார். 'முதலில், அது ஒரு குதிரை. இப்போது ஸ்ரெல்லா. அவன் இவை எல்லாவற்றையும் கனவு காண்கிறானா அல்லது கற்பனை செய்கிறானா?'

அம்மா ஒரு துளி கோப்பியை அவனுடைய பால் கோப்பைக்குள் விட்டாள், அதற்கு ஒருவகை நிறத்தை அளிப்பதற்காக. புன்னகைப்பதற்கு ஆயத்தமாவது போல அவள் தெரிந்தாள். அப்பா கோபமாகத் தெரிந்தார். நான் என்ன செய்கிறேன், என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

'ஸ்ரெல்லா... எங்கேயிருந்து இந்தப் பெயர்களை எல்லாம் கேட்டிருக்கிறான். ராதா உனக்குத் தெரியுமா ஒரு நாளைக்கு எத்தனை பொய்களை அவன் சொல்கிறான் என்று?'

அப்பா இன்னொரு சிகரெற்றைப் பற்ற வைத்து விட்டு எரியும் நெருப்புக் குச்சியை அணைப்பதற்கு கையை ஆட்டி அசைத்தார்.

'அவன் ஒரு குழந்தை.' அம்மா கோப்பியை குளிர வைப்பதற்காக சோசருக்குள் ஊற்றினாள்.


'இந்தப் பொய் சொல்லும் பழக்கத்தை அவனிடமிருந்து அகற்றுவேன்.' அப்பா மிகவும் கோபமாக இருந்தது போல அவர் குரலில் தெரிந்தது. அப்புவால் அவரைப் பார்க்க முடிய வில்லை. அவன் தன்னுடைய கோப்பிக்குள் விரலை விட்டான். யார் பொய் சொல்வது? அப்பாவா நானா? அவை எல்லாம் கனவா? ஸ்ரெல்லா வந்தது, அவன் குதிரையில் சவாரி செய்தது? அவன் கனவில் வருபவர்களின் முகங்களை அவனால் நினைவில் வைத்துக் கொள்ள முடிவதில்லை. ஆனால் ஸ்ரெல்லாவின் முகம் அவனுக்கு மிகத் தெளிவாகவே நினைவிருக்கிறது. அவளுடைய நிறந் தீட்டப்பெற்ற நகங்கள், அவளுடைய உரத்த சிரிப்பு, அவளுடைய உடுப்பின் மணம். அவை எல்லாம் அவனுக்குத் தெளிவாகவே நினைவிருக்கின்றன. ஸ்ரெல்லா நிச்சயமாகக் கனவே அல்ல. ஸ்ரெல்லா மாலையில் வந்தாள். அவனுடைய தாடையில் மெல்லமாகத் தட்டி, 'அம்மா வீட்டில் இருக்கிறாரா? அவரை நான் பார்க்க வந்திருக்கிறேன்' என்று சொன்னாள். பிறகு அப்பாவுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தாள். பலவேளை அவனுக்குப் புரியாத மொழியில் பேசினார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்தே சிரித்துக் கொண்டார்கள். பிறகு இருவரும் தேநீர் அருந்தினார்கள். அவள் போகும் போது,'ஸ்ரெல்லாவை மறந்து விடுவாயா?' என்று அவனைக் கேட்டாள். அதுவெல்லாம் பொய்யா? அது வெறும் கனவா? குதிரை எப்படி இருந்தது என்று அவனால் நினைவு கூர முடியவில்லை. அது ஓடியபோது ஆகாயத்தில் மிதந்த வெள்ளைத் தூசியை மட்டுமே அவனுக்கு நினைவிருந்தது. அது நிச்சயமாக ஒரு கனவு மட்டுமே. ஆனால் ஸ்ரெல்லா...

அப்பா எழும்பி சிகரெற்றை பாதத்தடியில் போட்டு மிதித்தார். 'இப்படி இனிமேலும் நீ பொய்கள் சொன்னால், நான்...'

'நீங்கள் ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள்? அவன் ஒரு குழந்தை தானே.' அம்மா அவனைத் தூக்கிக் கொண்டு போய் விறாந்தையில் கிடந்த புற்பாயில் கிடத்தினாள். அவனுடைய பொம்மைகளை அவன் முன்னே போட்டாள். காதில்லாத முயல், சிவத்த ற்றக், துண்டுத் தடிகள்...

அப்பா நாளிதழை படுக்கை அறைக்குள் எடுத்துச் சென்றார். அவர்கள் இருவரும் தனியே இருக்கையில், அம்மா அவனுடைய கையை எடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டு, 'அப்பு, ஒருநாளும் பொய் சொல்வதில்லை. வளர்ந்து நீ பெரியவனாகும்போது நீ உன் அப்பாவைப் போல இருக்க விருப்பமில்லையா உனக்கு?'

அம்மாவின் கைகள் குளிர்ச்சியாக இருந்தன. அவள் நெற்றியில் இட்டிருந்த குங்குமப் பொட்டின் ஒரு சிறு தூள் அவளுடைய மூக்கின் தண்டில் விழுந்திருந்தது. அவனுடைய அம்மா மிகவும் அழகானவள் என்று அவன் எண்ணினான். 'குதிரையைப் பற்றியும் பேசக் கூடாதா, அம்மா?' என்று அவன் கேட்டான்.



mahalingam.k@thaiveedu.com

# குயிலே குயிலே, கூவும் குயிலே


உதயணன்

பல பழைய இன்னிசைப் பாடல்கள் மறைந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய அருமையான பாடல்களைப் பாடிய இசை மேதைகளைக் கூடத் தெரியாத பலர் இன்றைய தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்களில் இசையுலகில் கொடி கட்டிப் பறந்த எம்.எம். தண்டபாணிதேசிகர், ஜி.என். பாலசுப்பிரமணியம், எம்.கே. தியாகராஜ பாகவதர், டி.ஆர். மகாலிங்கம், எம்.எஸ். சுப்புலட்சுமி போன்ற பலர் இன்று மறக்கப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில், கனடாவில் ஒரு மேடையில் எம்.எல். வசந்தகுமாரியின்

''குயிலே, உனக்கனந்த கோடி நமஸ்காரம்,
குமரன் வரக் கூவுவாய்''

என்ற பாடலை ஒரு தமிழ்ச் சிறுமி பாடியதைக் கேட்க அற்புதமாகவும் அமிர்தமாகவும் இருந்தது. அப்பொழுது எனக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பெரியவர், "இந்தப் பாடலைக் கேட்டவுடன் பல பழைய பாடல்கள் நினைவுக்கு வருகின்றன. டி.கே.பட்டம்மாள் பாடிய 'எப்படிப் பாடினாரோ', என்.ஸி.வசந்தகோகிலம் பாடிய 'தந்தை தாயிருந்தால்', இன்னும் எத்தனையெத்தனை இனிமையான பாடல்கள்! பாடல்கள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். அந்தக் காலத்துப் பாடல்களைக் கேட்பது கொம்புத்தேன் பருகுவது போன்றது. இந்தக் காலத்துப் பாடல்களைக் கேட்பது கொக்கா கோலா குடிப்பது போன்றது'' என்றவர், "இந்தக் காலத்தில் சுத்தமான தேன் எங்கே கிடைக்கிறது? ஊ...ம்!'' என்று பெருமூச்சு விட்டார். எதனை எண்ணிப் பெருமூச்சு விட்டாரோ? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து; ஒவ்வொரு கவலை. அவரவரின் உள்ளத்தின் அனுபவத்தின் ரசனையின் வெளிப்பாட்டின் அடிப்படையில் அமைவது அவரவரின் கருத்துக்கள்.

என்னுடைய வாய் சும்மா இருந்திருக்கலாம். ஆனால் அவரைப் பார்த்து, "அய்யா, கர்நாடக இசையின் அடிப்படையில் அமைந்த சில பழைய அற்புதமான திரைப்படப் பாடல்கள் 'ரீ-மிக்ஸ்' என்ற மினுங்கல் சட்டையை மாட்டிக்கொண்டு இன்றைய மேடைகளில் ஏறியாடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று பணிவாகவும் பவ்வியமாகவும்தான் கேட்டேன். இன்றைய தமிழ்ப் படத்தின் கதா நாயகனைப் போல அவர் சடக்குச் சடக்குச் சடக்கு என்று மூன்று முறை என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் படக்குப் படக்குப் படக்கு என்று பாய்ந்து ஓடிவிட்டேன்.

பழைய பாடல்களாகட்டும் புதிய பாடல்களாகட்டும் அவற்றைப் போற்றுவாரும் உண்டு, தூற்றுவாரும் உண்டு. மேலே அந்தப் பெரியவர் பாராட்டிய அதே பாடலுக்கு இன்னொருவரின் கருத்து இதோ. 13.03.2001இல் இரா முருகன் என்பவர் 'அகத்தியர்' என்னும் இணையதளத்தில் இவ்வாறு எழுதியிருந்தார். "'குயிலே, உனக்கனந்த கோடி நமஸ்காரம். குமரன் வரக் கூவுவாய்' என்று ஒரு பாட்டா? நிசமாகவா? அது என்ன, ஊருக்குப் போயிருக்கும் பிராணநாதருக்குப் பிராணசகி இன்லண்ட் லெட்டர் எழுதுவது போல 'அனந்த கோடி நமஸ்காரம்? ''

இரவில் விழித்திருக்கும் ஆந்தை போன்ற பறவைகளைத் தவிர அநேகமான பறவைகள் பகலில் விழித்திருந்து இரவில் உறங்குபவை. இத்தகைய பறவைகள் குஞ்சு பொரிக்கும் காலங்களில் மட்டும் கூடுகளில் உறங்கும். மற்றக் காலங்களில் மரக் கிளைகளிலோ பொந்துகளிலோ உறங்கும். சில பறவைகள் ஒற்றைக் காலிலே நின்று ஓய்வெடுப்பதோடு சரி. பெரும்பாலான பறவைகள் ஒரு கூடல் காலத்திற்காவது ஒரே இணையுடன் வாழ்பவை. வழக்கம் போல் இதிலும் சில விதிவிலக்குகள் உண்டு. ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு சாயல். ஒவ்வொரு நிறம். ஒவ்வொரு அழகு. அந்தந்தப்

பறவையின் குரலில், அந்தக் குரலில் இழையும் இசையில், அந்த இசையில் இணையும் சுவையில் ஒரு தனித்துவம் தெரியவரும். பாடுகின்ற பறவைகள் பாட்டாலேயே தங்கள் துணையைப் பிடிக்கின்றன. பெரும்பாலும் சத்தமாக நீளமாகப் பாடும் ஆணின் பாட்டிற்குத்தான் பெண் பறவை மயங்கி வந்து சேரும். வேறு சில பறவைகள் தங்கள் இறகு அலங்காரத்தால் துணையை மயக்குகின்றன.



பொதுவாக, மயில், கிளி, காகம், கோழி, புறா, வாத்து போன்ற பறவைகள் மனித இனத்தோடு இணைந்து வாழக்கூடியன. பருந்து, கழுகு, தூக்கணாங்குருவி, ஆந்தை, மரங்கொத்தி போன்றவை விலகி வாழ்பவை. குயிலும் விலகியே வாழும் ஒரு பறவை. ஆனால் அதன் இனிய குரலுக்காக மனிதன் அதனைத் தேடிப்போய் அதற்கு ஒரு தனி மரியாதை கொடுத்து மதிக்கக் கற்றுக் கொண்டான். அதனால் மனிதன் மதிக்கும் குயில் மயில் கிளி போன்ற பறவைகளை விளித்துப் பாடப்பட்ட பாடல்கள் பல உண்டு.

தென்னாசிய நாடுகளான இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் வாழும் குயிலினத்தை 'இந்தியக் குயில்' (Cuculus micropterus) என்பார்கள். இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மூன்று வகையான குயில் இனங்கள் வாழ்கின்றன. அவற்றுள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழும் குயில்கள் scolopacea இனத்தைச் சேர்ந்தவை. ஆண் குயில்கள் பளபளப்பான கருமை நிறத்தில் காணப்படும். அலகு மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலும், கண்கள் இரத்தச் சிவப்பு நிறத்திலும் இருக்கும். பெண் குயில்கள் வெள்ளைப் புள்ளிகள் நிறைந்த பழுப்பு நிற உடலை உடையவை. மரங்கள் நிறைந்த தோட்டங்களிலோ தோப்புகளிலோ இவற்றைத் தனியாகவோ சோடிகளாகவோ காணலாம். குயில்களை நிலத்தில் காண்பது அரிது. பழங்களும் சிறு கனிகளும் நிறைந்த தோட்டங்களும் தோப்புகளுமே இவை விரும்பும் இடங்கள். பெரும்பாலும் குயில்கள் அதிகாலையிலும் மாலையிலும் கூவும். முதலில் ஒரு குயில் 'கூ...!' என்று ஆரம்பிக்கும். ஒரு சிறு இடைவெளிக்குப் பின்னர், இன்னொரு குயில் இன்னொரு திசையிலிருந்து, 'கூ...!' என்று பதில் கொடுக்கும். மேலும் ஒரு இடைவெளி விட்டு, மூன்றாவது குயில் வேறொரு திசையிலிருந்து 'கூ...!' என்று தொடரும். பின்னர் பல குயில்கள் சேர்ந்து ஓர் இசைக் கச்சேரியையே நிகழ்த்தும். தாழ்ந்த ஒலியுடன் ஆரம்பித்த கூவல் படிப்படியாக உச்சத்துக்குச் சென்று, ஏழாவது அல்லது எட்டாவது கூவலுடன் திடுமென்று ஓர் இடைவேளை வரும். சிறிது நேரத்தில் கச்சேரி மீண்டும் ஆரம்பமாகும். ஆட்கள் நடமாட்டம் குறைந்த அமைதியான பெரும் தோப்புகளில் இத்தகைய இரம்மியமான குயில் கச்சேரிகள் உள்ளத்தை அள்ளித் தாலாட்டும்.

பறவைகளில் ஆண், பெண் இரண்டுமே முட்டையை அடைகாப்பதுண்டு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும் பறவைகளில், இந்த 'இசை மேதை'களான குயில்கள் எவருடைய சாபத்துக்கு ஆளானவையோ தெரியாது, ஏனைய சிறு பறவைகளுக்கு இயற்கை வழங்கிய வரங்களில் இரண்டு இவற்றிற்கு மறுக்கப்பட்டன. ஒன்று குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. 'தெரியாது' என்று சொல்வதிலும் பார்க்க, 'கூடு கட்டும் வழக்கம் இல்லை' என்று சொல்லலாம். முட்டை இடும் காலம் வந்ததும், சிட்டுக் குருவியிலிருந்து காகம் வரை அநேகமான பறவைகள் சுள்ளிகள், வைக்கோல், காய்ந்த புற்கள் ஆகியவற்றை அலகினால் பொறுக்கிக் கொண்டுபோய், வரப் போகும் தத்தம் குஞ்சுகளுக்குக் கூடுகட்டி வீடமைக்கும் பொறுப்புணர்வைப் பார்த்திருக்கிறோம். மரத்தில் தொங்கிக் கொண்டே தனது அலகினால் காய்ந்த புல்லினால் தூக்கணாங்குருவி அமைக்கும் கலையம்சம் நிறைந்த இரு வாசல்களைக் கொண்ட கூட்டுக்கு நிகர் எதுவுமே இல்லை. கூடு கட்டும் செயலில் தூக்கணாங்குருவியைப் பறவைகளின் சிற்பி என்று சொல்வார்கள்.

எத்தனை விதமான பறவைகள்! அவற்றிற்கு எத்தனை விதமான கூடுகள்! இந்த வல்லமை குயிலினத்துக்கு வழங்கப்படவில்லை. அடுத்ததாக குயில்கள் இடும் முட்டைகளை அடைகாக்கும் ஆற்றலும் அவற்றிற்கு அளிக்கப்படவில்லை. கூடே இல்லையாம் எங்கே போய் அடை காப்பதாம்? அதனால், தென்னாசிய நாடுகளில் குயில்கள் காகங்களின் கூடுகளில் முட்டையிடும். இந்தக் களவை அறியாத அப்பாவிக் காகங்கள் தமது முட்டைகளுடன் குயிலின் முட்டைகளையும் சேர்த்து அடைகாக்கும். முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளி வந்தவுடன் எல்லாக் குஞ்சுகளின் 'கீச்சுக் கீச்சு' குரலும் ஒரே மாதிரியாகவே இருக்கும். அதனால் காகம் வெளியே போய் இரை தேடிக் கொண்டு வந்து, வஞ்சகம் இல்லாமல் எல்லாக் குஞ்சுகளுக்கும் ஊட்டி விடும். குயில் குஞ்சுகள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, குரல்கள் தேறித் திரிந்து, இயல்பான குயிலின் குரல் வரத் தொடங்கும். அப்பொழுதுதான் காகத்தின் மண்டைக்குள் ஒரு சிவப்பு 'பல்ப்' 'பளிச் பளிச்' சென்று எரிய ஆரம்பிக்கும். குயில் குஞ்சின் தலையிலே காகம் கொத்தோ கொத்தென்று கொத்தும். குயில் குஞ்சு, "இரு, இரு! நான் வளர்ந்ததும் உனது குஞ்சு வளர்ந்து கட்டும் கூட்டில் முட்டை இட்டுக் காட்டுகிறேன், பார்!'' என்று சபதம் எடுக்குமோ எடுக்காதோ, "இவ்வளவு காலமும் என்னை வளர்த்ததற்குத் தாங்க்யூ மம்மி'' என்று சொல்லுமோ சொல்லாதோ, வெளியே பறந்து போய்விடும்.

உலகத்தில் எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுகளின் வெப்ப தட்ப நிலைமைக்கு ஏற்ப குயிலினங்கள் வெவ்வேறு அமைப்பில் அளவில் நிறத்தில் வாழ்கின்றன. காகங்கள் இல்லாத நாடுகளில், குயில்கள் வெவ்வேறு குருவிகளின் கூடுகளில் முட்டைகளை இடுகின்றனவாம். ஆனால் அந்தந்தக் குருவிகளின் முட்டைகளின் அளவில் நிறத்தில் குயில்களும் முட்டைகளை இடுகின்றன என்பது மேலதிகமான ஒரு சுவாரசியமான தகவல்.

நாட்டுப் பாடல்களிலும் புதுக் கவிதைகளிலும் கூட குயில்களின் பங்கு உண்டு. கோவை கீதாநாராயணன் இணையத்தில் பதிவு செய்த பாடல்களில் சில வரிகள் இதோ:

தென்னமரத் தோப்புக்குள்ளே குயிலே குயிலே
என்னைத் தேடிவந்து சேதி சொன்ன குயிலே குயிலே
ஆத்தோரம் காத்துப் பட்டுப் பறக்குதடி சேல
ஆத்தாடி உன் அழகு தேன் தூவும் சோல

புதுமுகம் ஆக அறிமுகம் ஆனேன்
அறிமுக நாளே உன் அடைக்கலமானேன்
இனி பூஞ்சோல குயில்போல நான் பாடுவேன்
மாமா உன் பேரைச் சொன்னா மரிக்கொழுந்து வாசம்
ஆளான பெண்ணுக்கெல்லாம் காதோரம் கூசும்.

இதோ, இன்னொரு சிறுவர் பாடலின் சில அடிகள். பாடலாசிரியர் பெயர் விபரம் தெரியவில்லை.

இளங்குயிலே இளங்குயிலே! இளம்காலை வாராயோ!
உன் இன்மணிக் குரலெடுத்து ஏழிசையைப் பாடாயோ!
மாங்குயிலே மாங்குயிலே! மாலையிலே வாராயோ!
உன் மகரயாழ்க் குரலெடுத்து மனம்குளிரப் பாடாயோ!
பூங்குயிலே பூங்குயிலே! பூஞ்சோலை வாராயோ!
உன் பொங்குமெழில் குரலெடுத்துப் பூபாளம் பாடாயோ!

மகாகவி பரதியாரின் மிகச் சிறந்த பாடல்களில் 'குயில் பாட்டு'ம் ஒன்று. இப்பாடலைப் பல அறிஞர்கள் ஆய்வு செய்து அரிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள் தமிழறிஞர் கு.ராஜவேலு அவர்கள் டாக்டர் மு.வ.வின் முன்னுரையுடன் வெளியிட்டிருக்கும் 'வான் குயில்' என்ற நூலும் இவற்றில் ஒன்று.

பாரதியாரின் 'காணிநிலம்' என்னும் இன்னொரு பாடலையும் இங்கே குறிப்பிடலாம். அந்தப் பாடலில் இன்ப உணர்வுகளை உண்டாக்கக்கூடிய பலவற்றைப் பராசக்தியிடம் பாரதியார் வேண்டுகிறார். அவையாவன: 'ஒரு காணிநிலம் வேண்டும். அங்கே அழகான தூண்களையு-

தொடர்தல் 84ம் பக்கம்

கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன் எழுதிய
'கரையைத்தேடும் கட்டுமரங்கள்'
கிடைக்குமிடங்கள்:
முருகன் புத்தகசாலை
GTA Square, 5215 Finch Avenue East, Scarborough, Canada. T.P- 416 321 0285
கே.எஸ்.பாலச்சந்திரன்
Tel: 647 829 7371    E-mail: basu44@gmail.com

# கண்ணும் ஆடேல்ல... கையும் ஆடேல்ல...



கௌரி சதானந்தன்



## இடக்கு மடக்கு:

எனது மகள் அப்போது 5ம் வகுப்பிலிருந்தாள். அவள் வகுப்பாசிரியர் புலமைப் பரீட்சைக்காக மாணவர்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஒருநாள் பரீட்சை வைத்தார். பரீட்சைத் தாள்களைத் திருத்திய பின் எமது பார்வைக்காக அவற்றை அனுப்பிவைப்பது அவரது வழமை. எனவே அதன்படி அந்தத் தாள் வந்தது. சுலபமான ஒரு கேள்விக்கு தவறாக பதிலெழுதி மதிப்பெண்ணை இழந்திருந்தாள் மகள்.

**கேள்வி:** "நீர் மேலிருந்து கீழே விழுந்தால் எவ்வாறு அழைக்கப்படும்?"

**பதில்:** "நோயாளி"

எனக்கு வந்த கோபத்தில் என் புத்தி மழுங்கியிருந்தது.

"நீர்வீழ்ச்சி என்று உனக்குத் தெரியாதா?" என்றபடி அவள் காதைத் திருகியதில் அவளது கண்களில் நீர்வீழ்ச்சி.

இதற்குள் திடீரென எனக்கு ஒரு ஞானோதயம்...? அதற்குள் அவளே சொன்னாள்: "அம்மா, இதை ஏன் அவர் கேட்கப்போகிறார்... கஷ்டமாகத்தானே கேட்பார் என்று நான் நினைத்தேன். எனவே "நீர்" (You) மேலிருந்து கீழே விழுந்தால் அவர் "நோயாளிதானே" என்றாள்.

•

## தாய்க்கு மகன் உரைத்த தத்துவம்!

சுட்டிப் பையன் ஒருவன். அவனுக்கு நான்கு வயது.

அவர்கள் வீட்டில் சரஸ்வதி பூஜை செய்தார்கள். நைவேத்தியம் எல்லாம் வைத்து பாமாலைகள், சரஸ்வதி தோத்திரங்கள் எல்லாம் பாடியபின் தாயார் மகனிடம் சொன்னார்:

"போய் அப்புசாமியைக் கும்பிடுங்கோ"

அந்தச் சிறுவன் தாயாரிடம் "ஏன் கும்பிட வேணும்?" என்கிறான்.

"கும்பிட்டால்தான் அப்புசாமி படிப்புத் தரும், விளையாட்டுச் சாமான், கார் எல்லாம் தரும்" என்று அம்மா சொன்னா.

பையன் கும்பிடப் போனான். கும்பிட்டுவிட்டு திரும்பியவன் சந்தேகத்தோடு கேட்டான் ஒரு கேள்வி:

"அம்மா, அந்தச் சாமிக்கு கண்ணும் ஆடேல்ல, கையும் ஆடேல்ல... அது என்னெண்டு தரும்?"

இது தாய்க்கு மகன் உரைத்த தத்துவம்!

இதனால்தான் நம்மில் பலர் கை, கண் எல்லாம் ஆடும் சாமியார்களை நாடுகிறோமோ?

•

## எழுத்துச் சீர்திருத்தம்:

ஆனா, ஆவன்னாவுடன் கானா, காவன்னா, சீனா சீயன்னா படித்துக்கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. பாடம் இப்படியே தொடர்ந்துகொண்டிருந்தது. அந்தந்த எழுத்துக்களுடன் சொற்களும் புரிந்தவண்ணம் படிப்புத் தொடர்ந்தது. ஒருநாள் தானே படித்துக்கொண்டிருந்தவள் கொஞ்சம் சிணுக்கமும் அழுகையுமாக வந்தாள். "என்னது...?" என்ற கேள்விக்கு "நான் 'குஞ்சு' என்று சொல்லும்போது பிழையாக உச்சரிபடுகுது" என்பது அவளது முறைப்பாடு. "சானா, சாவன்னா வரிசையில சூனா(சு) வருகிறது. குஞ்சு என்பது குஞ்su என்றுதானே உச்சரிபடவேணும். குஞ்chu என்று பிழையாக உச்சரிக்க வருகிறதே என்பது அவளது முறைப்பாடு. இதை எழுத்துச் சீர்திருத்தவாதிகள் புரிந்துகொள்வார்களா?

•

## கரைவது எது?

ஆண்டு ஒன்றில் படித்துக்கொண்டிருந்தாள் ஒரு பெண். அவளுக்கு அவளது அக்கா பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். "நான் கேட்கும் கேள்விகளுக்கு சரி பிழை சொல்ல வேண்டும். சரியா?" என்ற படி தொடர்ந்துகொண்டிருந்தது படிப்பு.

"பால் வெள்ளை நிறம். சரியா பிழையா?"

"சரி".

"நாய் குரைக்கும். சரியா பிழையா?"

"சரி".

"ஆடு கத்தும். சரியா பிழையா?"

"சரி".

"காகம் கரையும். சரியா பிழையா?"

"பிழை".

"ஏன் பிழை?"

"உப்புத்தானே கரையும்?"

எதிர்க் கேள்வியுடன் பாடம் சிரிப்புடன் முடிந்தது!

•

## கிழங்கு:

ஆசிரியை முதலாம் வகுப்பில் பாடம் எடுத்துக்கொண்டிருக்கிறார். அன்று கிழங்கு வகைகள் படித்தார்கள். மாணவர்களை கிழங்கு வகைகளை எழுதிக் காட்டுமாறு பணித்தவர், "கிழங்கு கிழங்கு என்று முடிக்கவேண்டாம். உருளை, மரவள்ளி என்று எழுதினால் போதும்" என்று மேலதிக புத்திமதியும் கூறிவிட்டார்.

ஒரு மாணவி எழுதினாள்:

கரட், பீட்றூட், உருளை, பனங், மரவள்ளி, வத்தாளை... இப்படியே தொடர்ந்தது.

ஆசிரியை சிரிக்கத் தொடங்கிவிட்டார்!

kowry.sathananthan@thaiveedu.com

■ ■ ■


# LONDON LIFE

**With strong ratings for claims paying ability & financial strength.**

## YOUR MORTGAGE PROTECTION POLICY

**Before you sign up for the Mortgage life policy you should shop around. The banks offer convenience, but individual insurance sold by life insurance companies offer portability, flexibility and a better deal.**

Freedom 55 Financial — QUADRUS Quadrus Investment Services Ltd.

**Offers Insurance & Banking Solutions**

*To help our clients reach their goals and dreams.*

**Jeganathan Balasundaram (Bala) B. Eng**

FINANCIAL SECURITY AND INVESTMENT REPRESENTATIVE
NATIONAL QUALITY AWARD WINNER
SERVING CANADIANS FOR THE PAST 15 YEARS

Tel: (416) 291-0451, ext. 227
Cell: (416) 518-9489
Fax: (416) 291-3779
Email: bala.balasundaram@freedom55financial.com
Toll Free: 1-877-566-5433
2075 Kennedy Road, Suite 300, Scarborough, ON M1T 3V3



**Representing London Life, Manulife & Sun life**

Freedom 55 Financial and design are trademarks of London Life Insurance Company. Quadrus Investment Services Ltd. and design are trademarks of Quadrus Investment Services Ltd. used with permission by London Life Insurance Company.

| *Questions to Ask Yourself* | *Bank Mortgage Insurance* | *London Life Insurance* |
|---|---|---|
| 1. Who owns the policy? | 1. The bank owns the insurance policy. | 1. Client owns their own Policy. |
| 2. Who controls the policy? | 2. The bank controls all the options. | 2. Insured has control of all the options. |
| 3. Can I guarantee I will always be covered? | 3. Your policy will lapse if your mortgage goes into arrears. | 3. Policy will not lapse if you miss a Mortgage payment. |
| 4. Who is my beneficiary? | 4. Your Beneficiary is the Bank. | 4. You can **name** any Beneficiary you want. |
| 5. What kind of coverage do I have? | 5. Your coverage is decreasing term with level cost. | 5. Level term coverage with fixed premiums. |
| 6. Can I be covered if I change mortgage holders? | 6. Moving the mortgage means reapplying for insurance. | 6. Your covered regardless of which institution you choose. |
| 7. How much insurance do I have? | 7. Face amount of the policy cannot exceed the value of the outstanding mortgage. | 7. Your coverage is determined by your needs and wants. |
| 8. What options do I have if I or my spouse dies? | 8. No option but to pay off the mortgage. | 8. Survivor can invest the money and use returns to pay the mortgage and still keep the capital. |
| 9. Can I convert my insurance to a permanent plan at any time? | 9. Not extendible. | 9. Your policy is renewable and convertible. |
| 10. Am I penalized for casual deposits? | 10. Penalizes casual deposits. | 10. Rewards casual deposits. |
| 11. Who guarantees that I am covered if I die? | 11. Underwriting is done at time of death and research can date back to birth. | 11. Underwriting is done at time of application and before a second premium is paid. |
| 12. Who is more expensive? | 12. Can be very expensive. | 12. We are very competitive. |

# பரிதவிக்கும் கப்பல் அகதிகளும் பட்டம் கொடுக்கும் பத்தி எழுத்தாளர்களும்




நிமால் நாகராஜா

MV Sea Sun – கனடிய தமிழர்கள், ஊடகங்கள், பத்திரிகை பத்தி எழுத்தாளர்கள், வாசகர் கடிதங்கள், கருத்துக் கணிப்புக்கள், இவை யாவற்றினதும் தற்போதைய பேசுபொருள் இந்தப் பெயர்தான். போர் சுமந்த தேசமொன்றிலிருந்து நீங்கி, கௌரவ வாழ்வொன்றுக்காய் கையேந்தி நிற்கும் 491 ஏதிலிகளையும் ஏற்றுக்கொள்வதையிட்டு எழுகின்ற சர்ச்சைகளும், எதிர்ப்புகளும் சற்று எதிர்பார்க்காதது தான். வருடம் தோறும் சுமார் 30,000 அகதிக் கோரிக்கைகளை பரிசீலிக்கின்ற கனடிய தேசத்தில், ஒரேயொரு அகதிக் கப்பல் கனடியர்களின் சகிப்புத் தன்மைக்கு சவால் விடுகிற தென்றால், இவ்வளவு காலமும் இது ஒரு பல்லின குடிவரவாளர் நாடு என்று பறை சாற்றிக் கொண்டிருப்பது பொருத்தமில்லையோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. அகதிகளுக்கான ஜெனீவா தீர்மானத்தை முழு மனதாக ஏற்றுக்கொண்டு, கடந்த 60 ஆண்டு காலமாக பல்வேறு நாட்டு அகதிகளையும் உள்வாங்கிக் கொண்ட இந்த தேசத்தில் சில பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் MV Sea Sun கப்பல் கரைக்கு வர முன்னமே அதிலுள்ள அகதிகளை பல்வேறு பெயர்களால் அடையாளப்படுத்தியது வரவேற்கத்தக்க விடயமில்லை. ஆயினும் கனடிய வரலாற்றுப் பக்கங்களில் இவ்வாறான துன்பமான சம்பவங்கள் இரண்டு கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்தேறியிருக்கின்றன என்பது கசப்பான உண்மை.

அது 1914ம் ஆண்டு மே மாதம். இந்தியாவும், கனடாவும் பிரிட்டிஷ் ஆளுகைகுட்பட்டிருந்த காலம். வன்கூவர் நகரில் அதிகளவு சீக்கிய மக்கள் வசித்துக் கொண்டிருந்த காலம். ஆசிய மக்களுக்கு எதிராக வெள்ளையினத்தவர்களின் மனதில் இனவாதம் தலைதூக்கத் தொடங்கியது. இதன் வெளிப்பாடாக இந்திய எதிர்ப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்திய மக்களின் வாக்குரிமை தடை செய்யப்பட்டது. அவர்கள் உயர்பதவிகளில் அமர்வது மறுக்கப் பட்டது. இந்தக் காலப்பகுதியில் தான் பெரும்பாலும் சீக்கிய மக்களை கொண்ட "Komagata Mary" எனும் கப்பல் வன்கூவர் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தச் செய்தியை "இந்திய இந்துக்கள் எங்கள் நகரை ஆக்ரமிக்க வந்திருக்கிறார்கள்" என ஒரு பத்திரிகை எழுதிற்று. வன்கூவர் நகர பிதா ஆசிய எதிர்ப்பு பேரணி ஒன்றை நடத்தினார். அதன் முடிவில் உரையாற்றிய அப்போதைய பிரபல அரசியல்வாதியான ஸ்டீவன்ஸ் "வன்கூவர் ஒரு வெள்ளையர்களின் நகரம்" என முழக்கமிட்டார். கப்பலை திருப்பியனுப்ப வேண்டும் என போராட்டம் வலுத்தது. கனடிய குடிவரவு அதிகாரிகள் கப்பல் பயணிகளை இறங்குவதற்கு அனுமதி மறுத்தனர். குழந்தைகள், பெண்கள், ஆண்களைக் கொண்ட அந்த கப்பலுக்கு உணவு, தண்ணீர் அனுப்புவது கூட தடை செய்யப்பட்டது. கனடிய காவல் துறையினர் வலுக்கட்டாயமாக கப்பலை திரும்பிச் செல்லுமாறு வலியுறுத்தினர். இரண்டு மாத காலமாக கரையில் அந்தரித்த கப்பல், பல அவமதிப்புகளுக்கு பின் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டது. நான்கு மாத கால இடர்மிகு பயணத்தின் பின் இந்தியாவின் கல்கத்தா நகரை சென்றடைந்த 376 கப்பல் பயணிகளுக்கும், அங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் இடையே எழுந்த பிரச்சனைகளின் போது 20 பயணிகள் சுட்டுக்கொல்லப் பட்டனர். மேலும் பலர் சிறையிலடைக்கப் பட்டனர். மனிதாபிமானமிக்க கனடியர்களின் மனதில் இந்தச் சம்பவம் ஆறாத வடுவாக பதிந்து போனது.

இது நடந்து இருபத்தைந்து வருடங்களுக்கு பின் மனதை உருக்கும் இன்னோர் நிகழ்ச்சியும் நடந்தேறியது. அது 1939ம் ஆண்டு. ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் தனது ஆரிய ஆதிக்க வெறியை அரங்கேற்றிய வருடம். ஜெர்மனியில் யூத எதிர்ப்பு தீவிரமாகிய காலம். யூத மக்கள் 930 பேரை ஏற்றியபடி MS. St. Louis எனும் கப்பல் அமெரிக்க கண்டத்தினை நோக்கி பயணிக்கத் தொடங்கியது. ஹிட்லரின் நாஸிக் கொள்கையை முற்றாக வெறுத்த Gustav Schroder எனும் யூதரல்லாத ஜெர்மானியர் கப்பலை வழிநடாத்திக் கொண்டிருந்தார். கப்பலிலுள்ள யூத மக்களை ஐரோப்பா அல்லாத பாதுகாப்பான தேசம் ஒன்றில் இறக்கி விடுவது தான் அவரது நோக்கம். கப்பல் கியூபா கரையை அடைகிறது. கியூப அதிகாரிகளோ கப்பல் பயணிகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். கப்பல் கப்டன் பல பேச்சுவார்த்தைகளை நடாத்தியும் பலனின்றி போய் விடுகின்றது. கப்பல் கியூபாவிலிருந்து அமெரிக்கா நோக்கி பயணப்படுகின்றது. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தனது கடற்படையை கொண்டு கப்பல் அமெரிக்க கரையை அடைவதை தடுக்கின்றார். மனமுடைந்து போன கப்டனும், பயணிகளும் தங்களது கடைசி நம்பிக்கையாக கனடாவை நோக்கி பயணிக்கின்றனர். கப்பல் கனடாவை நோக்கி வருவதை அறிந்த பல கல்விமான்களும், செல்வாக்குமிக்கவர்களும் கப்பலை அனுமதிக்குமாறு கனடிய அரசை இரந்து கேட்டுக் கொள்கின்றனர். ஆயினும் அப்போதைய பிரதமர் William Lyon Mackenzie Kingம் அவரது அமைச்சரவையும் "வேறு நாட்டு பிரச்சினைகளை நாட்டிற்குள் வரவிடமாட்டோம்" எனச் சொல்லி கப்பலுக்கு அனுமதி மறுக்கின்றனர். கனடிய கரையில் இரு நாட்களாக தரித்து நின்று, கெஞ்சி நின்ற பயணிகள் வேறு வழியில்லாமல் மீண்டும் ஐரோப்பா நோக்கி பயணிக்கத் தொடங்கினர். கப்டன் Schroder இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாட்டு அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 930 யூதர்களையும் நான்கு நாடுகளும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளச் செய்தார். ஆனால் அடுத்த வருடம் ஹிட்லருடைய நாஸிப்படைகள் இங்கிலாந்து தவிர்ந்த மற்றைய மூன்று நாடுகளையும் ஆக்ரமித்துக் கொண்டனர். இந்த மூன்று நாடுகளிலும் தஞ்சமடைந்திருந்த கப்பல் பயணிகளில் 254 பேர் விஷ வாயு கூடங்களில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இதில் பெண்களும், குழந்தைகளும் அடக்கம். யூத படுகொலைகளால் அதிர்ந்து போன உலகம் கண்ணீர் வடித்த போது கனடியர்களின் இதயம் இன்னும் அதிகமாக வலித்தது.

> "வருடம் தோறும் சுமார் 30,000 அகதிக் கோரிக்கைகளை பரிசீலிக்கின்ற கனடிய தேசத்தில், ஒரேயொரு அகதிக் கப்பல் கனடியர்களின் சகிப்புத் தன்மைக்கு சவால் விடுகிறதென்றால்..."



இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில், 1951ம் ஆண்டில் ஏற்பட்ட அகதிகளுக்கான ஜெனீவா உடன்பாட்டில் கனடா தானாக முன்வந்து கையெழுத்திட்டது. அதன் பின்பு அகதிகளை ஏற்றுக்கொள்வதை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய கனடா அதையிட்டு பெருமையும் கொண்டது.

தற்போதைய Sea Sun வருகையிட்டு பல பத்திரிகைகள் மனிதாபிமான ரீதியில் அணுகியிருந்த போதிலும், குறிப்பிடத்தக்களவு எதிர்ப்பு கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன. "மூன்றாம் உலக நாட்டு வியாதிகளுடன் வருகின்ற இந்த ஆசிய அகதிகளால் எமது சுகாதார திட்டங்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகும்" என்று ஒரு பத்தி ஆசிரியர் Toronto Sunஇல் எழுதியிருந்தார். இவருடைய தோளைத்தட்டி, இந்த நாட்டின் சொந்தக்காரர்களான செவ்விந்திய மக்கள் ஆசியாவில் இருந்து தான் வந்தார்கள் என்று சொல்லத் தோன்றுகின்றது. அதே நேரம் தற்போதைய மூன்றாம் உலக நாடுகள் என வருணிக்கப் படும் ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளில் தான் மனித இனம் தோன்றியதும், நாகரீகங்கள் வளர்ச்சியடைந்ததும் என்பது வரலாறு. ஆயிரமாயிரம் ஆண்டுகள் இந்த தேசங்களின் வளங்களைக் கொண்டே மனித குலம் முன்னேறி வந்திருந்தது. இவ்வாறு தனது வளங்களை வாரி வழங்கி மனித குலத்தை உருவாக்கி உலகின் மற்றைய பாகங்களுக்கு பகிர்ந்தளித்த இந்த மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கு பூமியின் சகல வளங்களிலும் உரிமை உண்டு எனும் கருத்தையும் மறுதலிக்க முடியாது.

இந்த நாட்டின் குடியேற்ற விதிகளும், அகதிகளை அங்கீகரிக்கும் நடைமுறைகளும் சட்டங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டவை. இந்த சட்டங்களை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் இங்குள்ள அனைத்து மக்களினதும், வரிப்பணமும், பங்களிப்பும் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கின்றன. கடந்த கால் நூற்றாண்டுகளாக தமிழர்களும் இந்தப் பங்களிப்பை வழங்கி வருவதையும் மறுக்க முடியாது. இப்போதைய கப்பல் அகதிகளை இச்சட்டங்கள் முழுமையாக பாதுகாக்கும், அவர்களுக்குரிய அகதி அந்தஸ்து கோரும் உரிமையை முழுமையாக வழங்கும் என்பதும் உண்மை. ஆதலினால் வலது சாரி என்று சொல்லிக் கொண்டு, இனவாதமாக எழுதும் இந்த பத்திரிகை கட்டுரை ஆசிரியர்களின் அகதி எதிர்ப்பையும், ஆதாரமில்லாத அடையாளப்படுத்தல்களையும் கிழித்து குப்பையில் போடுவதே இப்போது சாலச் சிறந்தது.

nimal.nagaraj@thaiveedu.com

■ ■ ■

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# கோடியில் மீன் அரிவாளுக்குப் பக்கத்தில் கறிவேப்பிலை மரம்

**- பொ. கனகசபாபதி -**

கறிவேப்பிலை மரத்தினைக் கரு வேப்பிலை என்போரும் உண்டு. அதன் உபயோகம் கருதி முன்னைய பெயரும், அதன் இலைகளின் கரும் பச்சை நிறம் காரணமாகப் பின்னைய பெயரும் பாவனையில் உள்ளன. ஆங்கிலத்தில் Murraya koenigii என அழைக்கப்படும் இந்த சிறு மரவகைத் தாவரம் தென் இந்தியாவிற்கே உரித்தானதாக இருந்தாலும் தென்னிந்தியர்கள் எங்கெங்கு புலம் பெயர்ந்தார்களோ அங்கெல்லாம் இதனைக் கையோடு கொண்டு சென்று விட்டனர். அவர்களுடன் மலேசியா சென்றது. பின்னர் தென் ஆபிரிக்கா போய் ஆபிரிக்காவில் பல பாகங்களுக்கும் தென்னிந்தியர்களுடைய விசுவாசியாகப் பின்தொடர்ந்து தோட்டத்துத் தாவரமாய் நின்றது. இப்போது மெல்லக் குளிர்ப் பிரதேசங்களையும் எட்டிப் பார்த்து உள்வீட்டுக்குள்ளேயும் புகுந்து செல்லப் பிள்ளையாகச் சாடிகளில் கம்பீரமாக நிற்கிறது. இது இக்காலத்திய நிலைமை. நான் சொல்வது எனது இளம்பராயத்துக் கதை. அப்போது கறிவேப்பிலை வெறும் வீட்டுக்கோடிக்கை நிற்கும் சிறு மரம். அதன் கீழே காவலாக ஒரு அரிவாள். அதற்குச் செல்லப் பெயர் கறி அரிவாள். கறிவேப்பிலைக் கண்டு வெட்டுப்பட்ட வேரிலிருந்தும் முளைக்கும் (பதிய முறை இனப்பெருக்கம் (Vegetative propagation) விதையில் இருந்தும் முளைக்கும் அதனால் சுலபமாக தமிழர்கள் செல்லும் நாடுகளுக்கு விதைகளைக் கொண்டு சென்று உண்டாக்கும் வாய்ப்பு இருக்கிறது.

பூக்கும் தாவரங்களைப் (Angiosperms) பொதுவாக பூண்டு (Herb) செடி அல்லது புதர் (Shrub) மற்றும் மரம் (Tree) என மூன்று வகையாக வகுப்பார்கள். செடியும் அல்லாமல் பெருமரமும் அல்லாமல் சிறுமரமாக விளங்குவது கறிவேப்பிலை. யாரும் பெரிய மரமாகக் கறிவேப்பிலை மரத்தினைக் காண முடியாது. அதன் ஆயுசும் சில வருடங்கள் என்றமையால் யாரும் பெரு மரமாக அதனைக் காணும் வாய்ப்பிருந்திருக்காது. காரணத்தோடுதான் அதுவும் பெரிதாக வளர்வதில்லை. கைக்கு எட்டினால்தானே கெட்டுக்களை முறிக்க முடியும்.

எமது ஊர் ஒரு விவசாயக் கிராமம். ஓரளவுக்குத் தன்னிறைவான கிராமம் என்பேன். வயலும் தோட்டமும் உள்ளது. நெல்லுக்காக கருமண் உள்ள வயல். காய்கறிக்காக செம்பாடு எனும் தோட்டம். பிறகென்ன குறை? ஆனால் கிராமவாசிகள் எல்லோருக்கும் இந்தப் பாக்கியம் இருப்பதில்லை. இரண்டும் இருக்கும் சாத்தியம் குறைந்த தொகையினருக்கே. அந்தக் குறைந்த தொகையினரில் எனது தந்தையாரும் ஒருத்தர். இவை தவிர அவரிடம் பனம் தோப்பு ஒன்றும், ஒரு புலவும் இருந்தமையால் கிராம வாசிகளில் அவர் கொஞ்சம் பசையுள்ளவராகக் கணிக்கப்பட்டார். எங்கள் வீட்டில் ஒன்றல்ல இரண்டு பசுமாடுகள் இருந்தன. மாறிமாறிக் கன்று போடுவதால் பாலுக்கும் பஞ்சமில்லை; தயிருக்கும் முடையில்லை; மோருக்கும் குறைவில்லை. எங்கள் வீட்டுக்கு மாத்திரமல்ல அயல் வீடுகளுக்கும் தான். ஆனால் தானம் அல்ல.

தன்னிறைவான கிராமம் என்றேன். கிராமத்தில் அரிசி, காய்பிஞ்சு, பால், பழம் என அத்தனையும் இருந்தமையால் மீனுக்கும் உப்புக்கும் தான் கடைகண்ணியை நம்பியிருக்க வேண்டும்.

ஆனால் எல்லாருக்கும் காய்கறிகள் தமது 'தோட்டத்தான்' எனக் கூறும் வசதி இருப்பதில்லை, எல்லாக் காலங்களில் எல்லோருக்கும் கிடைப்பதும் இல்லை. எமது ஊரில் மாகியப் பிட்டியில் ஒரு சந்தை உள்ளது. அது கூடுகின்ற நேரம் நண்பகல் 12:00 மணி. ஆகவே அங்கே போய் காய்கறி வாங்கி வந்து சமையல் செய்வதானால் மதிய உணவை 4:00 மணிக்குத் தான் முடிக்கலாம். விலையைப் பற்றிச் சிந்திக்கிறவர்கள் சந்தைக்குத்தான் போகவேண்டும்.

அப்படி எண்ணாதவர்களுக்குக் கைகொடுப்பவர்கள் செல்லத்துரையும், தெய்வியும். செல்லத்துரை காலை பத்துமணிக்கு வீதி வலம் வருவார். செல்லத்துரை என்பதிலும் பெட்டிக்காரன் என்பது தான் மிகவும் பரிச்சயமான பெயர்.

காலையில் 10 மணியளவில் பெட்டிக்காரன் மீனுடன் வருவார். 'டிங்டிங்' என மணிச் சத்தம் ஊர் வீட்டுப் பெண்மணிகளை வாசல் படலைக்கு வரவைக்கும். அவர்கள் சுட்டிக்காட்டும் மீன்கள் பெட்டிக்குள் இருந்து வெளியேறி பெட்டியின் மேல் தட்டினில் பிரசன்னமாகி வாதம், பிரிதி வாதம் எனப் பேரம் பேசி முடிந்து, ஒருபடியாக கைமாறும். அம்மா சட்டியுள் கைமாறிய மீனுடனும் இன்னொரு வெறும் சட்டியுடனுமாக வீட்டுக் கோடிப்பக்கம் போவார்கள். அங்கே



கறிவேப்பிலை மரத்தடியில் மீன் அரிவாளுடன் ஒரு வாளி தண்ணீரும் அம்மாவுக்காகக் காத்திருக்கும். மீன் துப்பரவாக்கப்பட்டு அறுவை நடக்கும். கழுவும் நீர் அத்தனையும் கறிவேப்பிலை மரத்துக்கு அர்ப்பணம். மீன் கழுவித் துப்பரவாக்கியவுடன் அம்மா உள்ளே வந்து விடுவார். இது மழைபெய்தாலென்ன வெய்யில் காய்ந்தால் என்ன அன்றாடம் நிகழும் நிகழ்ச்சி. அதென்ன பால்சட்டி கழுவும் நீர் முற்றத்து வாழைக்கு உபயம்; மீன்சட்டி கழுவும் நீர் கோடிக்கை கறிவேப்பிலைக்கு சகாயம் என்ற நியதி என அம்மாவிடம் நான் பலமுறை கேட்டதற்கு, விஞ்ஞான ரீதியான விளக்கம் நீண்ட காலத்திற்குப் பின்னர்தான், எனது தேடலின் விளைவாகக் கிடைத்தது. அம்மாவைக் கேட்டபோது அந்தத் தண்ணீர் கறிவேப்பிலைக்கு நல்ல வாசம் தரும் என்ற விளக்கம் மாத்திரம் தந்தார்கள். அம்மா சொன்னதில் உண்மை இருந்ததோ என அப்போது எனக்குப் புரியவில்லை. ஆனால், அருகு வீட்டுக்காரர்கள் அம்மாவிடம் இரண்டு நெட்டு கறிவேப்பிலை கேட்கும்போது அதைத்தான் சொல்லிக் கேட்பார்கள். "என்னவோ ஆச்சிமுத்து உன்ரை கறிவேப்பிலை போட்டுச் சமைச்சால் அதற்கென ஒரு தனி மணம் இருக்குமெண்டு நான் மாத்திரமல்ல அவரும் சென்னவர், ஒரு இரண்டு நெட்டுத்தா என்பார்கள். அம்மா மனம் குளிர்ந்து விடும். "தாராளமாக முறுச்சுக் கொண்டு போங்கோ அக்கா" என்பார்கள்.

பின்னர் தெரிய வந்த உண்மை அதுவல்ல. கறிவேப்பிலைக்கு அமிலத் தன்மையுடைய மண் (PH 7+) உகந்தது. பொதுவாக கிராமப்புற வீடுகளின் கொல்லைப்புற மண் நடுநிலை ஊடகமாகத்தான் இருக்கும். PH 7, மீன்கள் கடல் நீரில் வாழ்கின்றமையால் அவற்றினைக் கழுவும் தண்ணீர் அமிலத் தன்மை பெறுகிறது. அந்த நீரினை கறிவேப்பிலைக்கு ஊற்றுவதால் மண் அமிலத் தன்மை உடையதாகிறது. நம் முன்னோர்கள் அனுபவ இரீதியாகப் பெற்ற விஞ்ஞான அறிவு வியப்புக்குரியது.

கறிவேப்பிலை என்ற பெயரினைக் கேட்டதுமே சமையலில் கறிகள் ஆக்கும் பொழுது நறுமணத்திற்காக சேர்க்கப் படும் இலை என்றே பெரும்பாலோர் எண்ணச் செய்வார்கள். அதில் உள்ள மருத்துவக் குணம் எத்தனை பேருக்குத் தெரியும்? எமது முன்னோர்கள் அனுபவ இரீதியாகப் பெற்ற அறிவின் விளைவாகவே காலம் காலமாக கறிவேப்பிலையை உணவினில் சேர்த்து வந்துள்ளனர்.

தேவைப்படும்போது பயன்படுத்திக் கொண்டு, உணவு தயாராகி சாப்பிடுகையில், கறிவேப்பிலையைப் பலர் தனியாகத் தூக்கி வைத்து விடுவதைக் கண்டிருப்போம். ஏதோ தேவையற்ற பொருள் உணவில் அகப்பட்டு விட்டது போன்ற உணர்வுடன் அவசர அவசரமாக அதனை எடுத்து அருகே வைத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்.

பொதுவாகக் காரியம் ஆகும் வரை காலைப் பிடித்துக் கொண்டு, அவர்களின் காரியங்கள் அனைத்தும் முடிந்ததும், நம்மைப் புறக்கணித்து விடுவோரைப் பார்த்து, கறிவேப்பிலை போன்று பயன்படுத்திக் கொண்டார்களே என்று வேடிக்கையாகவோ, விசனத்துடனோ குறிப்பிடுவதுண்டு.

மணம் தரும் இலைகள் (Aromatic leaves) இருவகையானவை. இலைகளில் காணப்படும் விரைவு ஆவியாகும் நெய் (Volatile Oils); மற்றையது மணம் தரக்கூடிய இலைச்சாறு. முன்னையதுக்கு உதாரணமாக இயூகாலிப்ரஸ் (Eucalyptus) மரத்தினைச் சொல்ல முடியும். ஆஸ்திரேலியாவிலே சிட்னி நகருக்கு அண்மையில் Blue hills என்ற பகுதி உள்ளது. இப்பெயரே காரணப் பெயராகிறது. இயூக்கலிப்பரிஸ் மரங்களின் இலைகளில் இருந்து வெளியேறும், ஆவியாகும் எண்ணெய் வளிமண்டலத்திற்கு வெளிர் நீல நிறத்தினைத் தருகிறது. கறிவேப்பிலையில் இலைச்சாற்றினிலேதான் அதன் தன்மைகள் உள்ளமையால் இலையைத் தாளிதம் முடிந்து நாம் எறிந்து விடாமல் உணவுடன் சேர்த்து உண்பது அனுகூலமானது.

கறிவேப்பிலையில் உள்ள மருத்துவக் குணங்கள் நிறைந்த சாறு, உணவில் முழுவதுமாக இறங்கி உணவுக்குச் சுவை கூட்டுவதுடன் உடலுக்கும் ஜீரணசக்தியை அளித்து பித்தம் வாயு, கபம் போன்றவற்றினையும் போக்குகிறது என்கிறார்கள்.

எந்த உணவானாலும், கடைசியாக அவற்றினைத் தாளிக்கும் தருணத்தில், ஒன்றிரண்டு கறிவேப்பிலைகளை கிள்ளிப் போட்டு இறக்கி வைப்பார்கள்.

மலச் சிக்கலைத் தவிர்த்து தேவையான பசியைத் தூண்டும் வேலையையும் கறிவேப்பிலை செய்கிறது.

கறிவேப்பிலையில் நிறைய உயிர்ச் சத்தும் சுண்ணாம்புச் சத்தும் உள்ளமையால், பதார்த்தங்களில் மிதக்கும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்து விடக் கூடாது. அதனையும் சேர்த்து விழுங்கிவிட வேண்டும்!

வாயின்ருசி வயிற்றுளைச்ச னீடு சுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுங்காண் - தூய
மருவெறு காந்தளங்கை மாதே உலகிற்
கருவேப்பிலை யருந்திக் காண்.

என்ற பாடலால் கறிவேப்பிலையினை உண்டு வர வாயில் சுவையின்மை, வயிற்றுளைச்சல், பித்தம் போன்றவை குணமாகும் என்பது தெரியவருகிறது. ஆயுர்வேத நூல்களில் கறி

தொடர்தல் 84ம் பக்கம்

உங்கள் விழாக்களின் நிழல்ப் படங்களைப் பார்ப்பதற்கு
www.ninaivukal.com

# கோடியில் மீன்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

வேப்பிலையின் உபயோகம் பற்றி மிகவும் பெரும் அளவினிலே சொல்லப்பட்டிருக்கிறது. முழுவதையும் ஏற்பதற்கில்லை முற்றாகவே மறுப்பதற்கும் இல்லை.

எமது தோட்டத்தில் காய்கறிப் பஞ்சம் எற்படும்போது கைகொடுப்பார் தெய்வி. அவர் பெயர் தெய்வானையாம். ஆனால் எப்போதும் அம்மா அவரைத் தெய்வி என்றுதான் அழைப் பார். எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் அவருக்கும் அம்மாவுக்குமிடையே நெருக்க மான தொடர்பு இருந்து வருகிறது. அப்போ அவருக்கு 50 வயது இருக்கலாம். கருமையான உடல் என்றாலும் அவர் முகத்தில் ஒரு காந்தக் கவர்ச்சி இருந்தது. காலிப் பெருங்காய டப்பா என்பார்கள். பெருங்காயம் இல்லாவிட்டாலும் அதனை வைத்திருந்த டப்பி அதன் உடமையை நினைக்க வைக்கும். அந்த மணம் போகவே போகாது. அதே போலத்தான் தெய்வியும். இளவயதில் கறுப்பழகியாக இருந் திருப்பார் என எண்ண வைத்தது. அடர்த்தியான தலைமயிர் நன்றாக வளர்ந்திருந்தது. நரைத்துவிட்டது என்றாலும் முற்றாக இல்லை என்பது இடையிடையே கரிய கோடுகள் தெரிவதால் புலனாகியது. விசாலமான நெற்றி வெறுமையாகக் காட்சி தரும். மேவி வாரிய தலைமயிர் பிற்புறத்திலே முடியாமல் அள்ளு கொண்டையாக அமர்ந்திருக்கும் இப்படியான கொண்டையை அந்தக் காலத்திலே நான் நாதஸ்வர வித்துவான்கள் சிலரிடத்திலும் கண்டிருக்கிறேன். றவுக்கை போடாத மார்பகங்களை சேலையின் தாவணி மறைத்திருக்கும். இரண்டு காதுகளிலும் ஒன்றல்ல ஒரு நான்கைந்து தோடுகள் அணியப்பட்டமையால் காது ஓட்டை பெரிதாகத்தான் தெரியும். வாய் நிறைய வெற்றிலை. அதனால் சொக்கின் ஒரு பகுதி எப்போதும் புடைத்துக் காணப்படும். பேச்சு எப்பொழுதும் அளவோடு தான் இருக்கும். கண்ணியம் மிக்கதாக விளங்கும்.

எமது கதாநாயகி தெய்வி கடகம் நிறைய காய்கறிகளுடன் வருவார். அவர் அதிகாலையில் சங்கானைச் சந்தைக்குச் சென்று அங்கே காய்கறிகளை விலைக்குவாங்கி வருவார். அப்படிப் போகின்ற சில நாட்கள் எங்கள் வீடு வந்து எங்கள் வீட்டிலே மிச்சமாயிருக்கும் எலுமிச்சம் பழம், மற்றும் கறிவேப்பிலையில் சில கெட்டுக்களைப் பெற்றுச் சென்று சங்கானையில் காசாக்கி அம்மாவிடம் கொடுப்பது உண்டு. பொதுவாக அவரது விற்பனை நிலையம் எமது வீட்டு முற்றம். சுற்றுப் புறத்துப் பெண்கள் யாபேரும் வந்து வாங்கிக் கொண்டு போவார்கள். அம்மா குசினிக்குள் இருந்தால் நான்தான் அறிவித்தல் கொடுப்பேன். “அம்மா காய்கறிக்காற அம்மா வந்து விட்டார்” என்பேன். எப்படிச் செய்தி பரவுகிறதோ கடகட என பெண்கள் வந்து விடுவார்கள். அம்மாவுக்குக் கொஞ்சம் சலுகை இருக்கும் என்பது ஊரறிந்த விசயம். அம்மாவுக்கும் தெய்வானைக்குமிடையே ஏற்பட்ட உறவு நீண்டகாலத்து உறவு. மிகவும் நெருக்கமான உறவு. அம்மாவை ஒரு நாள் நான் கேட்டேவிட்டேன். அம்மா அதற்கான காரணம் சொன்னார்கள். அப்போ எனக்கு அரைகுறையாகத்தான் விளங்கியது. அவளின்ரை புருஷன் கதிரவேலு அவளைக் கறிவேப்பிலையாகப் பாவித்துவிட்டான் என்று அம்மா ஏதேதோ சொன்னார். இடையிடையே உனக்கு இதெல்லாம் விளங்காது என்றார். இப்போ அவாவினது புருஷன் எங்கே என்று கேட்டேன். இறந்து விட்டார் என்றார் அம்மா. அப்படி என்றால் ஏதாவது தொழில் செய்துதானே வயிற்றைக் கழுவ வேண்டும் - இந்தத் தொழிலைச் செய்கிறார் என எண்ணினேன். சில வருடங்களின் பின்னர் முழுக் கதையும் எனக்கு விளங்கிற்று.

அதாவது தெய்வானையும் கதிரவேலுவும் காதலித்துத் தான் திருமணம் செய்தார்கள். கதிரவேலு சும்மா செல்லப்படாது, ஆள் கொஞ்சம் கவர்ச்சிகரமான தோற்றம். தெய்வானைக்கு மட்டும் என்ன குறை? கட்டழகி. கறுப்பழகி. தெய்வானை கர்பவதியாகி பேற்றுக் காலம் ஆகவே அவருக்கு உதவியாக அவரது சகோதரி வள்ளியம்மையை தாயார் கொண்டு வந்து தெய்வானை வீட்டில் விட்டுப் போய்விட்டார். அக்காவும் தங்கச்சியும் நல்ல உறவுடையவர்களாக இருந்தனர். இருவருக்கும் வயதிலும் வித்தியாசம் இருந்தது. தாயன்புடன் சகோதரியைத் தெய்வானை பராமரித்து வந்தார். தெய்வானைக்கு ஆண்மகவு பிறந்தது. துடக்கும் கழித்தாய்விட்டது. எனவே இனி வள்ளியம்மையின் உதவி தேவையில்லை என எண்ணிய தாயார் வந்து வள்ளியம்மையை அழைத்துச் சென்று விட்டார். தெய்வானையின் குடும்ப வாழ்க்கை குழந்தையுடன் இனிதே ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு மாதம் கழித்து ஒரு நாள் தெய்வானையின் தாய் மகள் வள்ளியம்மையுடன் தெய்வானை வீடு வந்தார்கள். அழுது வீங்கிய கண்கள் ஏதோ பிரச்சினை என்பதைக் காட்டின. என்ன விசயம் எனக் கேட்ட தெய்வானை முன்னர் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார் தாயார். வள்ளியம்மை நிலத்தைப் பார்த்தபடி நின்றார். “நாங்கள் மோசம் போய்விட்டோம்” என்றார் தாயார். “என்னம்மா சொன்னாத்தானே தெரியும்” என்றார் தெய்வானை. அம்மா சொன்னது நிலைகுலைய வைத்தது. தெய்வானை சிறிது நேரம் மௌனமாக இருந்தார். ஏதோ தீர்மானத்துக்கு வந்தவராக “அம்மா நீ இவளை விட்டு விட்டுக் கவலைப்படாமல் வீட்டிற்குப் போ. எல்லாம் சுமுகமாக முடியும்” என்று கூறித் தாயாரை அனுப்பி விட்டார். சகோதரியை அதே வாஞ்சையுடன் வீட்டினுள் அழைத்துச் சென்றார்.

கணவன் செல்லத்துரை வீடு வந்தார். வள்ளியம்மையைக் கண்டதும் திகைப்புடன் பார்த்தார். “உங்கள் மனைவி வந்துவிட்டாள்” என தெய்வானை கூறியதும் திகைத்து நின்றார். அவள் சிறு குழந்தை. உங்கள் மதி எங்கே போனது என்றதற்குப் பின் வேறு ஒன்றும் பேசவில்லை. மனதில் உள்ள திட்டம் ஒருவருக்குமே விளங்கவில்லை. அமைதியாக இரவு கழிந்தது. தெய்வானை தனது திட்டத்தினைச் செய்கையில் காட்டிவிட்டார்.

மறுநாள் காலை தெய்வானையும் குழந்தையும் எங்கள் அம்மாவிடம் தஞ்சம். எங்கள் தோப்பினில் ஒரு குடிசை போட்டு அங்கே வாழ்வதற்கு உத்தரவு கேட்டார். கணவன் முதல் ஊர் உலகம் எல்லாமே கேட்டும் தெய்வானை மனம் மாறவில்லை. அம்மா உத்தரவு கொடுத்தார்கள். குடிசை வாழ்க்கை. வாழ்க்கைக்கு ஆதாரம் வேண்டுமே. அதற்காகத் தான் தொடங்கியது காய்கறி வியாபாரம். தெய்வானையின் வாழ்க்கை ஒரு தவ வாழ்க்கையாக அமைந்தது. தனது கணவனிடமோ தனது சகோதரியிடமோ குரோதம் காட்டவில்லை. யாரும் கேட்டால் அது என்தலை விதி. அவர்களை நோவானேன் என தத்துவம் பேசுவார். தங்கையை எங்காவது கண்டால் மட்டும் பேசுவார். சுகம் விசாரிப்பார் அதே வாஞ்சையுடன். ஆனால் கணவனுடன் ஒரு பேச்சு வார்த்தையும் இல்லை. அவர்கள் வீட்டுப் பக்கமும் செல்வதில்லை. வள்ளியம்மைக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் அவளது குடும்ப வாழ்க்கை ஐந்து வருடங்கூட ஓடவில்லை. திடீரென ஒரு நாள் ஏதோ நெஞ்சு வலி எனப் படுத்த கதிரவேலு எழும்பவேயில்லை.

செய்தியறிந்த தெய்வானை மீண்டும் அந்த வீட்டினில் அடி எடுத்து வைத்தார். எல்லாக் காரியங்களும் நடந்து முடிந்தன. சகோதரியினதும், பிள்ளையினதும் வாழ்க்கை? அங்கேயே அவர்களுடன் தங்குவது என முடிவு எடுத்தார்கள். ஏன்? அவள் குழந்தை. அவளுக்கு ஒரு துணை வேணும். என்னைத் தவிர யார் அதனைக் கொடுப்பார்கள் எனக் கேட்டவர்களுக்கு அதே தாயன்போடு சொன்னார். செய்தும் காட்டி விட்டார். இருபத்தி ஐந்து வருடங்கள் ஓடி விட்டன. இரண்டு ஆண்பிள்ளைகளும் தொழில் பார்க்கிறார்கள். எத்தனை தரம் அவர்கள் கெஞ்சிக் கேட்டும் தெய்வானை தனது வியாபாரத்தினை விடுவதாக இல்லை. இந்தக் கைகளும் கால்களும் இருக்கும் வரை நான் வேலை செய்து கொண்டே இருப்பேன் என்கிறார் அந்த அற்புத ஜீவன்.

இந்தக் கறிவேப்பிலை என்றும் மணம் பரப்பியபடியே தான் வாழ்கிறது.



kanagasabapathy.p@thaiveedu.com

# குயிலே குயிலே, கூவும்...

80ம் பக்கத் தொடர்ச்சி...

டைய தூய வெள்ளைநிறத்தில் ஒரு மாளிகை வேண்டும். அங்கே ஒரு கேணியும் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களும் வேண்டும். முத்துச்சுடர் போலே நிலாவொளி முன்பு வர வேண்டும்.’

அடுத்த அடியில் ‘‘கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் பட வேண்டும்’’ என்கிறார். இதையடுத்துத் தொடர்ந்து இவ்வாறு கேட்கிறார். ‘மனம் மகிழ நல்ல இளம் தென்றல் வீச வேண்டும். பாட்டில் கலந்திட ஒரு பத்தினிப் பெண் வேண்டும். நல்ல கவிதைகளைக் கொண்டு தர வேண்டும். உன் காவல் வேண்டும். பாட்டுத் திறத்தாலே இந்தப் பாரினையே ஆள வேண்டும்.’

பலவிதமான இன்ப உணர்வுகளைப் பராசக்தியிடம் வேண்டிய பாரதியார், நடுவில் ஏன், ‘‘கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் பட வேண்டும்’’ என்று கேட்டார்?

இந்த அடிக்குப் பல அறிஞர்கள் தத்தம் கருத்துக்களையும் விளக்கங்களையும் கூறியிருக்கிறார்கள். ‘‘தொடர்ந்து தித்திப்பான பண்டங்களையே உட்கொண்டால் திகட்டும். அதனுடன் கொஞ்சம் காரம் அல்லது ஒரு சிட்டிகை உப்பு என்று ஏதாவது மாற்றுச் சுவையைச் சேர்த்தால் தித்திப்புக் குறைந்து மனதுக்குகந்த ஒரு புதிய சுவை ஏற்படும். அதனால்தான், ‘கூவும்’ என்பதை தவிர்த்துக் ‘கத்தும்’ என்ற அவலச் சுவையைச் சேர்த்தார். அதற்கும் ‘சற்று’, அதாவது சிறிதளவு என்று ஒரு பிரமாணம் சொல்லியிருக்கிறார். அத்துடன் அந்தக் கத்தும் குயிலோசை ‘காதில் விழ வேண்டும்’ என்று சொல்லாமல் (கொஞ்சமாய்) ‘காதில் படவேணும்’ என்றும் கூறியிருக்கிறார்,’’ இதுவும் பல அறிஞர்களின் கருத்து.

பெண்களின் இனிமையான குரல் வளத்திற்கு குயிலின் கூவலை உவமையாகக் கூறுவது வழக்கம். அந்த இனிமையான கூவல் பெண் குயிலின் கூவல் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே ஆண் குயிலின் கூவல்தான் மனதை மயக்கும் இனிய உணர்வுகளை உண்டாக்குகிறது. குயில்களின் இனப் பெருக்கத்திற்கு உகந்த பருவமாகிய வசந்தத்தில், பெண் குயில்களைக் கவர்வதற்காக ஆண் குயில்கள் அத்தகைய இனிய ஓசையை எழுப்பும். ஆண் குயிலின் ‘கூவூ...!’ என்ற இனிய குரலுடன் பெண் குயிலின் ‘கிக் கிக்கிக்’ என்ற கூவலை ‘கத்தல்’ என்று சில நூல்கள் கூறுகின்றன. இங்கே ‘கத்தல்’ என்பது அவலச் சுவையல்ல என்றும், பெண்குயிலின் இயல்பான குரலிசை என்றும் கருதுவார் உளர். மேலே கூறப்பட்ட காணி நிலம் வேண்டும் என்பதைத் தொடர்ந்து வரும் மங்களகரமான சூழ்நிலையில், ஆண் குயிலின் அழைப்புக் கூவலைக் கேட்டு மயங்கும் பெண் குயிலின் முனகல் ஒலி பின்னணியில் பரவ வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாக இருக்குமோ? இப்படியும் சிலர் சிந்திக்கிறார்கள்.

இன்றைய எமது சூழ்நிலையில், கவிஞர் காசி ஆனந்தன் என்றோ குயிலைக் கேட்ட சில அடிகளைக் கேட்போமா?

‘‘ஆளப் பிறந்தவர்கள் நாடு சமைத்தோம்! - எமை
ஆட்டிப் படைத்தவர்க்குப் பாடை சமைத்தோம்!
ஈழத் தமிழ்மனைக்குப் பாலம் அமைத்தோம்! - கவி
எண்ணம் பலித்ததென்று பாடுகுயிலே!’’

uthayanan@thaiveedu.com

■ ■ ■

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
● 2005 ஆண்டு JANUARY க்குப்பின் EI பெற்றவர்கள் ✓
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்
INSTRUCTORS
★ PUSHPA ★ SP
MORE THAN 20 YEARS OF TEACHING EXPERIENCE
CERTIFICATE COURSES
Buy One Get One Free
Windows, Key Boarding, Data Entry, Word, Excel, Power Point
Access, Outlook, Quick Books, Simply Accounting, Accpac
Certificate Will Be Issued On Successful Completion
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208 ( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)



Thinking of Buying, Selling or Leasing !!

New or Re-Sale of Homes or Condos !!

Find out the Market Value of your Property !!

Tammy Surendran
Broker
416 - 410 - 9301
416 - 321 - 6969
tammy.surendran@gmail.com

Please Call

HOMELIFE
HIGHER STANDARDS

Home Life GTA Realty Inc., Brokerage
1711 McCowan Road, Suite 206
Toronto, ON. M1S 3Y3

மகாகவி பாரதியின் நினைவுநாள் செப்ரெம்பர் மாதம் 11ந்திகதியாகும். அவரது கவிதைகள் பற்றிய இந்த சுவையான நிகழ்வுக்குறிப்பு வெளிவருவது பொருத்தமானது என நம்புகிறோம்.

# பேசப்படாத பாரதி கவிதை

## வாத்தியார் 13 வீட்டிலிருந்து வன்கூவருக்கு...

K.S. பாலச்சந்திரன்

என்னுடைய கலைவாழ்க்கையில் எதிர்கொண்ட பலவிதமான அனுபவங்களை பகிர்ந்துகொள்வதுதான் இந்தகட்டுரைத்தொடரின் நோக்கம். சிரிப்பானவையாகவே அனுபவங்கள் எல்லாம் அமையும் என்றில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இது அப்படி ஒரு விதிவிலக்கான அனுபவம்.

என்பயணத்தின்போது அமெரிக்காவில் நகரங்களின் பெயர்கள் பல புதினமானவையாக எனக்கு தெரிந்தன. டெக்சாஸ் மாநிலத்தில் ஒரு நகரத்தின் பெயர் "பெயரில்லாதது" (Nameless). அரிசோனாவில் ஒரு நகரத்தில் இருப்பவர்களை "எங்கே இருக்கிறீர்கள்" என்று கேட்டால் "ஏன்" (Why) என்று அவர்கள் பதிலுக்கு கேட்டால் ஆச்சர்யப்படாதீர்கள். அதுதான் நகரத்தின் பெயர். 'முறிந்த அம்பு', 'தவளைப்பாய்ச்சல்', 'உச்சக்கட்டம்' இப்படி எத்தனை, எத்தனை விசித்திரமான பெயர்களுடன் அமெரிக்கநகரங்கள் இருக்கின்றன.

இந்தவரிசையில் 'எருமை' என்பதே ஒரு நகரத்தின் பெயராக இருக்கும்போது கூடவே என்ன எண்ணம் மனதில் வரும் என்று ஒரு முறை நினைத்துக்கொள்ளுங்கள். சேற்றுக்குள் அமுங்கிப்போய், கறுப்பாக, சுறுசுறுப்பு இல்லாததாக - இந்த நினைவுகள் வருவதை தவிர்க்கமுடியவில்லை.

முட்டாள்தனமாக இருந்தாலும் இந்த எண்ணங்களுடனேதான் நான் Buffalo என்ற அமெரிக்க நகரத்திற்கு நிகழ்ச்சிக்காக பயணமானேன். அங்கு சென்று இறங்கியபோது, அந்த நகரம் பிரகாசத்தை இழந்ததொன்றாகவே எனக்குப்பட்டது. 1900களில், ஏராளமான கோதுமை ஆலைகளையும், உலகிலேயே பெரிய எஃகு உற்பத்தித் தொழிலையும் கொண்டிருந்த நகரம், 20ம் நூற்றாண்டில் தொடக்கத்தில் இருந்து அவற்றையெல்லாம் இழந்து போய் விட்டது. தொழிற்சாலைகள் சீனாவரை போய்விட்டன. கூடவே மக்களும் இடம்பெயர்ந்து போய் விட்டார்கள். இந்த நகரத்தின் தற்போதைய சனத்தொகை, 1890ல் இருந்த அளவிற்கு குறைந்துபோய் விட்டது என்று ஒரு கணிப்புக் கூறுகிறது. அதாவது 120 ஆண்டுகளுக்கு பின்னால் போய்விட்டது.

எது எவ்வாறிருப்பினும், எங்களைப்பொறுத்த வரையில் கனடாவின் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அப்பால் இங்கிருந்தே கண்ணுக்கு தெரியும் ஒரேயொரு அமெரிக்கநகரம் என்ற வகையிலே Buffalo தனிக்கவர்ச்சி உடையதுதான்.

என்னை நிகழ்ச்சிக்கு அழைத்தவர் பத்மா ஜெகன் என்ற சமூகசேவையாளர். கணவர் டொக்டர் ஜெகன் இருவருமாக என்னை அன்புடன் கவனித்துக்கொண்டார்கள். கிறிஸ்மஸ் காலம் என்றதினால் நான் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலும், கிறிஸ்துவ மதசார்பான பிரசங்கங்கள், கிறிஸ்மஸ் விருந்து என்றெல்லாம் ஆரம்பத்தில் நடந்தன.

மார்கழி மாதமென்றதினால் அம்மாதத்தில் பிறந்த பாரதியின் ஞாபகம் வந்தது. அவருடைய கவிதைகளில் சிலவற்றையாவது என்நிகழ்ச்சிக்காக வந்திருந்த சிறுகூட்டத்தாரோடு (ஏறக்குறைய 10 குடும்பத்தினர்) பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

பாரதி தன் 'காற்று' என்ற வசன கவிதையிலே Buffalo (எருமைதான்) பற்றி சொல்லியிருக்கிறார் என்று சொல்ல நினைத்தேன்.

"மழை பெய்கிறது. ஊர் முழுதும் ஈரமாகிவிட்டது. தமிழ் மக்கள் எருமைகளைப்போல எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்..." என்று சொன்னால் என்ன பதில் கிடைத்திருக்கும் என்று தெரிந்ததினால், அதை சொல்லாமல் நிறுத்திக்கொண்டேன்.

அதற்குப் பதிலாக பாரதி இந்துமதத்தெய்வங்களைப்பற்றி மட்டும் பாடவில்லை என்று சொல்லி நிறுத்தினேன். எல்லோருமே நான் பாரதி பாடிய கிறிஸ்துநாதரைப்பற்றிய கவிதை ஏதாவது சொல்லப்போகிறேன் என்று நினைத்-ஏன் நான் வித்தியமாசமாக சொல்லக்கூடாதென்று நினைத்தேன். ஆந்தநேரத்தில் பாரதி பாடிய அதிகம் அறியப்படாத கவிதை ஞாபகத்திற்கு வந்தது.

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி அண்டங்கள்  
எல்லாத்திசையினுமோர் எல்லையில்லா  
வெளிவானிலே  
நில்லாது சுழன்றோட நியமங்கள் செய்தருள்  
நாயகன்  
சொல்லாலும் மனதாலும் தொடரொணாத  
பெருஞ்சோதி  
அல்லா அல்லா அல்லா...

(20.6.1920இல் பாரதி கடயத்தில் இருந்தபோது சில இஸ்லாமியர்கள் பாரதியை அழைத்து பொட்டல்புதூரில் இஸ்லாம் மார்க்கம் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தக் கூறினார்கள்.

"பாரதிபாடிய கவிதைகள் பலவற்றை அறிந்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம். ஆனால் பாரதி அல்லாவைப்பற்றியும் பாடியிருக்கிறார் என்பது எங்களுக்கு இதுநாள்வரை தெரியாது.



தார்கள். அங்கிருந்த கிறிஸ்மஸ் சூழல் அப்படி. கிறிஸ்து பற்றி பாரதி பாடிய கவிதையும் எனக்கு ஞாபகமாக இருந்தது.

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்  
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்  
நேச மா மரிய மக்தலேனா  
நேரிலே இந்த செய்தியைக் கண்டாள்  
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்  
தேவர் வந்து நமக்குட் புகுந்தே  
நாசமின்றி நமை நித்தம் காப்பார்,  
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்.

என்று வருகிறது அந்தப்பாரதி கவிதையில்.

அப்போதுதான் பாரதியார் அல்லா, அல்லா என்ற பாடலைப் பாடினார் - என்ற குறிப்பை அண்மையில் இணையத்தில் வாசித்தேன்.)

சொல்லிமுடிக்க எல்லோரும் அமைதியாகவிருந்தார்கள். பின்வரிசையில் இருந்த இளம் தம்பதியினர் சற்று உணர்ச்சிவயப்பட்டவர்களாய் காணப்பட்டனர். எனது நிகழ்ச்சி முடிந்ததும், முடியாததுமாக என்னிடம் வந்தார்கள். தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். கணவன், மனைவி இருவரும் மருத்துவர்கள். இலங்கையின் கிழக்குப் பகுதியைச்சேர்ந்த இஸ்லாமியர்கள்.

நீங்கள் சொல்லியபோது நாங்கள் அடைந்த சந்தோசத்துக்கு அளவேயில்லை." என்று சொல்லி பரிசுப்பொருட்கள் தந்து என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

அவர்களை பாரதியின் சில கவிதைவரிகளால் மகிழ்வுறச்செய்ததே எனக்கு பெரிய பரிசு கிடைத்தது போலப்பட்டது.



ksbala@thaiveedu.com


தமிழ் மக்கள் மத்தியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்
வீடுகள் வியாபார நிலையங்களுக்குத் தேவையான கதவுகள் ஜன்னல்களை
தரமாகவும், மலிவாகவும் அனுபவம் வாய்ந்தவர்களின் கைவண்ணத்திலும் பெற்றுக்கொள்ள



ENERGY STAR PARTNER
Viewtech
Windows & Home Improvements
Tel : 416-367-2721 Fax : 416-713-7176
2721 Markham Road, Unit 34, Scarborough, ON. M1X 1L5


Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Email: rajah@formulahonda.com
NEW CARS
2011 Honda
Odyssey
2010 Honda
Civic
2010 Honda
Accord
2010 HONDA PILOT Cash purchase only $5000 DISCOUNT
2011 HONDA PILOT Cash purchase only $2000 DISCOUNT
HONDA CIVIC Cash purchase only $3000 DISCOUNT ( On selected Models)
HONDA ACCORD Cash purchase only $3000 DISCOUNT ( On selected Models)
CRV Cash purchase only $3000 OFF On selected Models
RICHLINE Cash purchase only On selected Models $5000 DISCOUNT
USED CARS
2008 HONDA CR-V EX
2008 HONDA Accord EX-L
2006 HONDA Odyssey EX-L
2008 HONDA CR-V LX
2006 HONDA Odyssey EX
2007 HONDA CR-V EX
2010 HONDA Civic LX SR
2008 HONDA Accord LX
2007 HONDA Accord EXL
2006 Honda CR-V SE
2006 HONDA Accord SE
2006 HONDA Accord SE
2008 HONDA Civic LX
2008 HONDA Civic EX-L
2008 HONDA Civic LX
2007 HONDA Accord SE
2005 HONDA CR-V EX
2008 HONDA Civic DX-G
2008 HONDA Civic LX
2007 HONDA Civic EX
2007 HONDA Accord DXG
2005 ACURA RSX Premium
2008 HONDA Fit Sport
2007 HONDA Civic LX
2006 HONDA Civic EX
2009 HONDA Civic DX-A
2008 HONDA Civic DX
2007 HONDA Civic DX-G
2006 HONDA Civic Si
2006 HONDA Civic LX
SPECIAL FINANCING UPTO 72 MONTHS


from the firm foundations of creative photos
la photographie est un art
Karuna Photography
digimedia Creations Photography
• Wedding Photography
• Complete Online Workflow
• Online Slideshows
• DVD Slideshows
• Custom Designed Digital Albums
• Parent Albums/ iPhone Galleries
• Online Digital Proofs and Online albums Proofs
• E-Com Site
• Canvas and Metal Printing
facebook
www.facebook.com/digimediaphoto
elegant memorable real
www.digimediaphoto.com
416.467.4952


STEP INTO THE LIMELIGHT
EXCLUSIVE PRICING
மிக விரைவில் MISSISSAUGA (SQUARE ONE)
இல் அமையவிருக்கும் LUXURY CONDO வில்
முதலீடு செய்யுங்கள்
DANIELS PLATINUM PRODUCERS CLUB
PERA NATHAN
416-721-6563
LIMELIGHTSCONDOS.COM
BUY YOUR UNITS BEFORE VIP EVENT
STARTING FROM $190,000
REGISTER NOW AND RECEIVE AN INVITATION TO BUY IT AT SPECIAL PRICE !
WWW.LIMELIGHTSCONDOS.COM
MISSISSAUGAஇல் NUMBER 1 CONDO SELLER
PERA NATHAN, BROKER
COLDWELL BANKER TERREQUITY REALTY
CELL: 416-721-6563
PHONE: 416-495-4072
E-MAIL: N_PERA@ROGERS.COM
COLDWELL BANKER
TERREQUITY REALTY
REAL ESTATE BROKERAGE


சுவை—தரம்—புத்துணர்வு
Hattan Tips
Ceylon Black Tea
Hattan Tips Tea
416-548-8020
Quality & taste....
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


இறுவெட்டு வெளியீடு
வல்வை
பாரதியின்
வல்வை பாரதியின்
முற்றத்து
மல்லிகை
மெட்டுக்கள், பாடல்கள்
வல்வை பாரதி
பின்னணி இசை : ஸ்ரீபன் ராஜ்
உதவி : S.V. வர்மன் (கனடா)
இவர்களின் குரல்வழியே உருவாக்கப்பட்டது
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய
கலாச்சார மண்டபம்
635 Middlefield Rd. , Scarborough
SAT
SEP 11
6 PM
கலை நிகழ்ச்சிகளுடன்
கூடிய
வெளியீட்டு விழா
தொடர்புகளுக்கு : 416-797-7268, 514-462-2175

## நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்:

# டைத்திறம் - டையோனிசஸ் கடவுள் வழிபாடு

டையோனிசஸ் வழிபாடு, டைத்திறம் எனச் சொல்லப்படுவது இருவகைப்படும்.

- பனிகாலத்தில் நடைபெறுவது.
- இலைதளிர் காலத்தில் நடைபெறுவது.

பனிகாலத்து வழிபாட்டில், இலிங்க உருவத்தை - டையோனிசஸ் கடவுளின் உருவத்தை ஊர்வலமாக எடுத்துச்செல்கையில் களியாட்டக் குழுவினர் டையோனிசஸ் கடவுளுக்குத் துதிப் பாடல் இசைப்பர், இத்துதிப் பாடல்களுக்கிடையே, ஊர்வலத்திற்குத் தலைமை தாங்குபவர் பார்வையாளர்களைப் பார்த்து கொச்சையான வார்த்தைகளைத் (இழிதகவான வார்த்தைகள்) தானே அல்லது பாடுவோருடன் சேர்ந்து பேசுவார். இப்பேச்சுகளுக்கு எவ்விதத் தயாரிப்பும் இருக்கமாட்டாது. இதற்குப் பார்வையாளர்களிடமிருந்தும் சில பதில்கள் அதே விதமாகக் கிடைக்கும். இதுவே காலகதியில் இன்பியல் (Comedy) நாடகம் உருவாகக் காலாயிற்று.

இலைதளிர் காலத்து விழா வழிபாடு மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படும். இவ்விழாவில் முன்னைய பருவமான பனிக் காலத்தில் தயாரித்துச் சேமித்து வைத்திருந்த மதுவை (வைன்) மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி, பகிர்ந்து குடித்து, மகிழ்ந்து வரவிருக்கும் கோடைகாலம் சிறப்புற அமையவேண்டி டைத்திறம் எனப்படும் ஒருவகைப்பாடலுடன் செய்யும் வழிபாடாகும். இப்பாடலுடனான வழிபாடு பிறிஜியா (Phyrigia) விலிருந்து கிரேக்க நாட்டிற்கு வந்ததாகவும், இப்பாடல்கள் பிறிஜியப் பண்ணிசையில் அமைந்திருந்ததாகவும், இதற்குப் பிறிஜியப் புல்லாங்குழல் இசைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அரிஸ்ரோட்டில் கூறுகிறார்.


டைத்திறம் வழிபாடு, கோறஸ் குழுவினரால் பாடப்படும் பாடலுடன் சேர்ந்த ஆடலுமாகும். இது டையோனிசஸ் கடவுளின் வாழ்க்கை வரலாற்றை ஒப்புப்போல நையாண்டியும், கோமாளித்தளமும் கலந்து வெளிப்படுத்தும் இவ்வழிபாட்டுக்கு உயிர் கொடுக்கும் முகமாக நடிகர் ஒருவர், டையோனிசசுடைய வாழ்வில் சம்பந்தப்பட்டவர் போல வேடமணிந்து காணப்படுவார். இவ்வழிபாடு புகை நிறைந்த வட்ட வடிவமான பீடத்தில், கதை சொல்லும் முறையில் இல்லாமல், உண்மைக் கதை நிகழ்வது போலச் செய்யப்படும். பார்வையாளர்களும் இதனுடன் ஒன்றித்துத் தாங்களும் அந்நிகழ்வில் பங்குபற்றுவதான உணர்வைக் கொண்டவர்களாகக் காணப்படுவர். இந்நிகழ்வில் நடிப்பவர்களைக் கவரும் வண்ணம் இப்பாத்திரங்களைப் புனிதத்தன்மை கொண்டதாகப் பேணி வந்தனர்.

டைத்திறம் வழிபாட்டின் பாடலும் ஆடலும் டையோனிசஸ் கடவுளின் மாமப் பிறப்பு, அவர் நைஸா மலையில் பெற்ற கல்வி, இந்தியாவைக் கைப்பற்றியது, திறேஸ், தீபஸ் ஆகியவர்களுடனான முரண்பாடு, இதன் பயனாய் நக்சோஸ் சென்றமை, ஆரியட்னேயைத் திருமணம் செய்தமை ஆகிய கதைகளை உள்ளடக்கியிருந்தது. ஆனால் இவ்வழிபாட்டை டையோனிசஸின் பிறப்பை மட்டுமே கூறுவதாக அமைத்திருந்தார்கள்.

டைத்திறம் என அழைக்கப்படும் டையோனிச

**தொடர் - 6**

கடவுள் வழிபாட்டு விழாக்களில் பாடப்படும் பாடல்கள் ஒரு நாட்டார் பாடலாக இருந்தென அரிஸ்ரோட்டர் கூறுகிறார். அரிஸ்ரோட்டில் டைத்திறம் காலத்தவர் அல்ல என்பதும் அவர் காலத்தில் டைத்திறம் வழிபாடு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



கிரேக்க நாட்டிற்கு, ஆரியன் எனப்படும் யாழிசை வல்லாளனே கொறின்ஸிலிருந்து டைத்திறம் வழிபாட்டை அறிமுகப்படுத்தினார். இவர் வெஸ்பெஸ்சைச் சேர்ந்தவராயிருந்த போதும் நீண்ட காலமாக கொறின்ஸ் இல் வசித்து வந்ததமையால் இவர் கொறின்ஸ் கலாச்சாரங்களுக்கும், சமய வழிபாட்டு முறைகளுக்கும் ஆட்பட்டிருந்தார். எனவே இவர் கொறின்ஸ் நாட்டு வழிபாட்டு முறையை கிரேக்கத்தில் புகுத்தி அதைச் செழுமைப்படுத்தியுள்ளார். ஆனால் இக்கூற்றை புறோக்ளஸ் (Proclus) என்பார் மறுத்துள்ளார்.

ஆரியன் கிரேக்கத்தில் புகுத்திய டைத்திறம் வழிபாட்டின் வட்டவடிவமான பலிபீடத்தைச் சுற்றி நின்று பாடுதலும் அதன் ஒழுங்கு முறைகளும் சூரியனுக்கு நீண்டகாலங்களுக்கு முன்னரே நிலவியதாகச் சொல்லப்படுகிறது. டைத்திறம் வழிபாட்டின் பாடல்களின் இசையமைப்பை மெருகூட்டி, யாழையும், புல்லாங்குழலையும் பின்னணி இசைக்குப் பயன்படுத்தியுள்ளார். இவ்வழிபாட்டில் நடனமாடுவோர் தொகையை 50 ஆகவும் நிறுவியுள்ளார். நடனமாடுவோர் ஒன்று விட்டொருவர் ஆடுவதற்கு இயல்பாக கவிதை நடையை எதிர்ச்சந்தம் சார்ந்ததாக அல்லது மீளிசைக் குரியதாக மாற்றியதாகவும் கூறப்படுகிறது. பாடல்கள் மக்கள் மனதில் அழியா நிலையில் வைக்கும் முகமாக உணர்ச்சி வசப்படுத்தும் யாழ், புல்லாங்குழல் ஆகியவற்றைப் பாடல்களின் பின்னணி இசைக்குப் பயன்படுத்தியுள்ளார்.

கோரஸ் பாடல்களிடையே வசனகவிதை நடையைப் புகுத்தியுள்ளார். துன்பியல் நாடகங்களின் கருமூல வடிவங்கள் டைத்திறம் வழிபாட்டின் தலைவனால் சொல்லப்படும் வசனகவிதைகளில் காணக்கூடியதாயுள்ளதாக அரிஸ்ரோட்டில் கூறுகிறார்.

## தெஸ்பிஸ் (Thespis)

கிரேக்க துன்பியல் நாடகத் தந்தை எனப் பலரால் அழைக்கப்படும் தெஸ்பிஸ் என்பார் பென்ரலிக்கஸ் மலைச்சாரலில் அமைந்திருந்த ஐக்காரியா எனும் கிராமத்தில் பிறந்தவர். அழகான மலைகளும் குன்றுகளும் திறந்த பெருவெளியும், அடர்ந்த காடுகளும் கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளும் நிறைந்த இவ்விடமே டையோனிசஸ் வழிபாட்டின் மத்திய இடமாகத் திகழ்ந்தது. ஐக்காறியாவின் புராண உருவகமாகக் கருதப்படும் ஐக்காறஸ் என்பவனே டையோனிசஸ் வழிபாட்டை அற்றிக்காவில் வரவேற்றவனாவான்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற இவ்வட்டாரத்திலேயே துன்பியல் நாடகத் தந்தை என வாண்ணிக்கப்படும் தெஸ்பிஸ் கி.மு. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்து வளர்ந்தார்.

- ஞானம் லேம்பட் -

இவருடைய பெயர் மற்றைய அற்றிகா பெயர்கள் போலன்றி மிகக் குறுகியதாக இருப்பதால் இவரது பெயர் தெஸ்பிசியஸ் (Thespesios) அதாவது முன்னறிந்து பேசுபவர் அல்லது தெஸ்பியோய்டல் (Thespioidos) அதாவது முன்னறிந்து பாடுபவர் என இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

டைத்திறம் என்ற வழிபாட்டுமுறையில் கோறஸ் குழுவினால் பாடப்பட்ட பாடல்களுக்கிடையே வசனங்களைப் புகுத்தியவரும் அவ்வசனங்களைப் பேச 'நடிகன்' என்ற ஒரு பாத்திரத்தைப் படைத்தவரும் இவரே.

தெஸ்பிஸ் 'நடிகன்' என்ற பாத்திரத்தைப் உருவாக்கியது மட்டுமல்லாமல் தானே அப் பாத்திரத்தை ஏற்று நடித்தும் உள்ளார். மட்டுமல்லாமல் ஒரு நாடகத்தில் பல பாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ளார். இவ்வேட மாற்றங்களுக்காக ஆடையணிகலன்களை மாற்றியுள்ளார். சில வருடங்களின் பின்னர் முகத்திற்கு வெள்ளைப் பூச்சு அல்லது ஒரு வகைக் கீரையின் சாயத்தை பூசி நடித்துள்ளார். இம்மாற்றங்களைத் தொடர்ந்து முகமூடியை உபயோகித்து பாத்திர மாற்றங்களைச் செய்துள்ளார்.

ஆடை மாற்றம், முகமூடிமாற்றம் என்பன மிக விரைவாகச் செய்ய வேண்டி, நாடக மேடையின் பின்னே சிறு அறை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த அறை பின்னர் காட்சிகள் வரையப்பட்ட தோன்றாகக் காணப்பட்டது. இதுவே பின்னர் மேடையின் பின் கட்டப்படும் திரைச்சீலையின் பிறப்பிடமாயிற்று.

தெஸ்பிஸ் துன்பியல் நாடகத்தை அறிமுகப் படுத்திய போது உருவாக்கப்பட்ட 'நடிகன்' என்ற பாத்திரம் மேடையில் தோன்றி அங்கு நடைபெறவிருக்கும் நாடகத்தின் கருவை முதலில் அறிவிக்கும். இதனைத் தொடர்ந்து கோறஸ் குழுவினர் பாடல்களைப் பாடுவர். இதனைத் தொடர்ந்து அந்த நடிகர் தோன்றுவார்.

டையோனிசஸ் வழிபாட்டுடன் கட்டுப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட துன்பியல் நாடகம் கட்டுடைக்கப்பட்டு பல மாறுதல்களுடன் நாடகக் கலையாக மாறுபட்ட வடிவில் உருவாக்கம் கொடுப்பட்டதும் இவராலேயே.

உசாத்துணை நூல்கள்:
Ancient Art and Ritual – Jane Harrison.
Thespis: Ritual, Myth and Drama in the Ancient Near East – T.H. Gaster.
Dithyrumb, Tragedy and Comedy – Sir Arthur Pickard.
Poet – Aristotel.
Golden Bough – Fracer.
Greek Tragedy – H.D.F. Kitto.
The origin of Tragedy – William Ridgway.
The origin of Early form of Greek Tragedy – Gerald F. Else.

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


# காலம் அழியேல்

செப்டம்பர் மாதம் உலகெங்கிலும் பாரதியை கொண்டாடும் மாதமாக கணிக்கப்பட்டுள்ளது. எனவே நானும், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய 'ஆத்தி சூடியில்' குறிப்பிட்ட 'காலம் அழியேல்' என்ற வாசகத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அன்மையில் ஒரு திருமண வீட்டிற்கு எனக்கு அழைப்பு வந்தது. 10.00 மணிக்கு திருமணம் என்று இருந்தது நானும் அழைப்பு தந்த நண்பரை கௌரவித்து குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கு சென்றிருந்தேன். ஆனால் திருமணம் பல மணித்தியாலம் காலம் தாழ்த்தி நடந்தது. அங்கு வந்திருந்தவர்களை அவர் வேலை-வெட்டி இல்லாத 'சோம்பேரிகள்' என்று எண்ணிவிட்டார் போலும்.

"பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது" போல் ஒன்றரை மணித்தியாலம் பிந்தி வந்த நண்பரை பார்த்து ஏன் பிந்தினாய் என்ற போது அவர் சிரித்துக் கொண்டு சொன்னார் இது 'யப்னா டைம்' தெரியாதா? எனக்குத் தெரியும் பிந்தித்தான் நடக்கும் என்று இந்த நிலையில் 'யப்னா மனிதன்' முன்னேறுவது எப்படி?

எம்மவர்கள் நாள்நேரம் பார்த்து திருமணம் நடத்துபவர்கள். அதற்காக பெரும் தொகை கூட செலவிடுவார்கள். ஆனால் இறுதியில் நேரம் பிந்தி நடத்துவார்கள். இதை பிரஸ்தாபித்த போது, ஒரு நண்பர் எனக்கு ஞாபகப் படுத்தினார் இப்போதெல்லாம் கூறையை (சேலை) மடியில் வைத்துக்கொண்டு தாலியை கட்டுகிறார்கள் என்று. இப்படி பல திருமணங்கள் நடப்பதனால் விருந்தாளிகளும் காலம் தாழ்த்திவருகிறர்கள். மற்ற இனத்தவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு திருமணத்தை நடத்த முடியுமானால் ஏன் எம்மவர்க்கு முடிவதில்லை.

ஒருவரை அவமதிப்பதற்கு மிகச் சிறந்த வழி அவரை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்திப்பதாக கூறிவிட்டு நேரம் தாழ்த்தி செல்வதுதான். இங்கு அவர்கள் சொல்லாமல் சொல்லும் விடயங்கள் பலப்பல. 'நீ ஒரு வேலை வெட்டி இல்லாத வெட்டிச் சோறு சாப்பிடுபவன்' என்று சொல்லாமல்சொல்லிவிடுவார்கள்.

> **"பிரதம விருந்தினர் என்றால் 'லேட்டாக' தான் வருவார். இல்லை, லேட்டாக வருவபர் தான் பிரதம விருந்தினர்"**

"நான் பிந்திப்போனால் என்ன? அவர் சும்மா இருப்பவர் தானே?" என்று அவர்கள் கருதுவதால் தான் அப்படிச் சொய்கிறார்கள். ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் சந்திப்பதாகச் சொல்லி பின் நேரம் தாழ்த்திவருவாரானால் உடனே அங்கிருந்து விலகிச் சென்று உங்கள் வேலையைக் கவணிப்பது தான் கௌரவம். உதாரணத்திற்கு ஒரு திருமண வீட்டிற்கு நேரம் குறித்து அழைத்துவிட்டு நேரம் தாழ்த்தி திருமணம் நடந்தால், அங்கு திருமணம் முடிந்தவுடன் பந்திக்கு நில்லாமல் வெளியேறுவது தான் கௌரவம். ஔவைப்பாட்டி கூட

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்
- தம் மனையில்
உண்ணாமை கோடிபெறும்.

என்று கூறியது ஞாபகத்திற்கு வருகிறது. மேலும் உங்களை மதியாதார் முத்தம் மதித்தொருகால் மதியாமை கோடி முத்தம் பெறும் என்ற வாசகமும் ஞாபகத்திற்கு வருகிறது.

'காலம் அழிக்கும்' கொடுமை பல பொது நிகழ்ச்சிகளிலும் இடம் பெறுவதை காணக்கூடியதாயுள்ளது. அன்மையில் ஒரு நிகழ்ச்சியிற்கு சென்றிருந்தேன். நிகழ்ச்சி ஆரம்பிக்க நேரம் செல்வதை அவதானித்த நான் விழா அமைப்பளரிடம் ஏன் காலம் தாழ்த்துகிறார்கள் என கேட்டதற்கு "பிரதம விருந்தினர் இன்னும் வரவில்லை" என்று பதில் தந்தார். அப்போ அருகில் நின்ற ஒருவர் "இந்த ஆள் இப்படித்தான் எப்பவும் 'லேட்டாக' வருவார்" என்றார். ஏன் தான் இந்த லேட் பிரதம விருந்தினர்களை அழைக்கிறார்களோ என்று சலித்துக் கொண்டேன்.

பிரதம விருந்தினர் காலம் தாழ்த்தி வருவதைப் பற்றி குறிப்பிடுகையில் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. வவுனியாவில் சிவராத்திரி தினம் ஒரு பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் முக்கிய பேச்சாளராக வணக்கத்துக்குரிய ஆத்மஜோதி முத்தையா அவர்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் நாவலப் பிட்டியிலிருந்து உத்தரதேவி புகைவண்டியில் வருவதனால், 8.00 மணிக்கு பேசுவதாயிருந்தது சாதரணமாக 7.15இற்கு புகைவண்டி வந்துவிடும். ஆனால் அன்று இரண்டு மணித்தியாலம் பிந்தி இரவு 9.15இற்கு வந்தது. இறுதியில் அவர் பேசுகையில் நகைச் சுவையாக குறிப்பிட்டார் "இன்று உத்தர தேவியின் உதவியால் பெரிய மனிதன் ஆகிவிட்டேன்" என்று எல்லாரும் புரியாமல் விழித்தார்கள். அப்போ சொன்னார், "நான் நிகழ்ச்சிகளுக்கு நேரத்தோடு செல்வதை விரும்புபவன். சிலர், தாம் பிந்தி வந்தால் தான் மற்றவர்கள் தங்களை முக்கியமானவர்களாக

## குமார் புனிதவேல் பக்கம்

எண்ணுவதாக, பிந்தி நிகழ்ச்சிக்கு செல்வார் கள். நான் அப்படி இல்லை. புகைவண்டி பிந்தியதால் பிந்திவிட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று.

இப்படி எப்போதும் பிந்தி வருபவர்களை நாங்கள் ஒதுக்கி வைப்பதவசியம். அத்துடன் எம்மை மதித்து நேரத்திற்கு வராதவரை, மதித்து நாம் இருக்கக் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

இந்த விடயம் பற்றி எழுதுவதாக எனது நண்பரிடம் கூறியவேளை அவர் ஒரு நல்ல நகைச்சுவை கூறினார். அதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன். அவர் ஒரு திருமண வீட்டிற்கு சென்றதாகவும் அங்கு மணமகள், படப்பிடிப்புக்காரர் எல்லாரும் ஆயத்தமாய் இருந்தார்கள் மணமகளின் தயார் அலங்காரம் செய்பவருடைய வீட்டிற்கு போனவர் வழியில் வாகண நெருக்கடியில் அகப்பட்டு பிந்துகிறது என்றார்கள் எனச் சொன்னார்.

எது எப்படி இருப்பினும் பாரதியின் வாக்கை மனதில் கொண்டு 'காலத்தை அழிக்காமல்' வாழ பழகிக்கொள்வோம். இது நன்மை தரும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்காது என்று நம்புகிறேன்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■



# Thinking of Buying or Selling!!

**KINGSTON & EGLINTON**




3+1 Bedrooms,3 washrooms

**CONLINS & ELLESMERE**




3 Bedrooms, 2 washrooms

**BIRCHMOUNT & ST.CLAIR**




3+1 Bedrooms, 2 washrooms

**SHEPPARD & BRIMLEY**




2+1 Bedrooms, 2 washrooms

**CONLINS & ELLESMERE**




4+1 Bedrooms, 4 washrooms

**CENTANIAL & LAWRENCE**




4+2 Bedrooms, 4 washrooms

**MARKHAM & EGLINTON**




3 Bedrooms, 3 washrooms

**NEILSON & MCLEVIN**




3+1 Bedrooms, 3 washrooms

- Sell your House for Top $$$$$ within shorter period
- Consistently Award Winners
- Top Negotiators
- Call us for Free Home Evaluation
- Buyers OR Sellers get Incentives
- We approach with correct marketing tools
- Friendly Service provided.



**Sakthi Sivasubramaniam**
Sales Representative
**416.624.5044**



**Siva Shanmuganathan**
Broker
**416.545.7482**



**Raja VS Rajagopal**
Sales Representative
**416.727.8647**



**Joy H.Selvanayagam**
Sales Representative
**416.358.6928**

Apex : 416-297-0707

HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife/Future Realty Inc.,

**Brokerage***

205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8

**B: 905.201.9977 F: 905.201.9229**

MLS R

## சகலவிதமான வீட்டுக்கடன் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும்

## Re-Financing / Debth Consolidation

## Self Employed, New Immigrant, Pre Approval


நீங்களும் அதிஸ்டசாலி ஆகலாம்
1st பரிசு
2nd பரிசு
3rd பரிசு
நலம் நாடுவதும் அதுவே
Kathir
Call:416 856 6900
$ 196,000 Midland/Lawrence
$ 121,900 Midland/Lawrence
$ 152,900 Mccowan/Sheppard
$ 154,900 Midland/Lawrence
$ 189,900 Mccowan/ Eglinton
$ 134,900 Mccowan/ Eglinton
$ 167.900 Midland/Eglinton
$ 199.990 Birchmount/Ellesmere
$ 250,000 Birchmount/Finch
$ 289,900 Finch/ Warden
$ 304,500 Kennedy/ Eglinton
$ 329,900 Mccowan/ Eglinton
$ 330,000 Kennedy/ Lawrence
$ 339,900 Kennedy/ Lawrence
$ 230,000 Sheppard/Meadow
$ 230,000 Sheppard/Meadow
$ 239,000 Birchmt/Ellesmere
$ 249,900 Sheppard/Meadow
$ 345,000 Manse/ Lawrence
$ 350,000 Sheppard/Markham
$ 395,000 Conlins/Ellesmere
$ 439,000 Bur Oak/9th line
$ 469,900 Bur Oak/Markham
HomeLife/GTA Realty Inc.
Independently owned and operated
Cell.: 416 856 6900
Bus.: 416 321 6969
Kathir S Kathirgamanathan P. Eng.
Sales Representative

# நீங்கள் அதன்மேல் நிற்கிறீர்கள்

- அ. முத்துலிங்கம் -

நான் அப்பொழுது ஆப்பிரிக்க நாடு ஒன்றில் வசித்தேன். ஒரு டச்சுக்கார தாவரவியல் நிபுணர் என் வீட்டுக்கு வருகை தந்திருந்தார். தாவரவியல் சம்பந்தமான அறிக்கை ஒன்று தயாரிப்பதற்காக அவர் உலகவங்கியின் சார்பில் அந்த நாட்டுக்கு வந்திருந்தார். என்னுடைய வீடு ஒரு குன்றின் சரிவில் இருந்தது. ஒரு பக்கம் பள்ளத்தாக்கு, மறுபக்கம் குன்று. எங்கள் வீட்டு விருந்துக்கு வந்திருந்த டச்சுக்காரர் பேச்சின் நடுவே கிடுகிடுவென்று வெளியே போய் குன்றிலே ஏறத்தொடங்கினார். எனக்கு பயம் பிடித்தது. ஏனென்றால் பயிற்சியில்லாவிட்டால் அவர் உருண்டு பள்ளத்தில் விழும் ஆபத்து இருந்தது. மிகவும் தேர்ந்த மலை ஏறியின் லாவகத்தோடு அவர் ஒரு மலைச் செடியை நோக்கி முன்னேறினார். பத்து நிமிடங்களில் சில பூக்களைக் கொய்துகொண்டு சேமமாகத் திரும்பினார். நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியே விட்டேன்.

அவர் கையிலே வைத்திருந்த பூவைப் பார்த்தேன், அது ஓர்கிட் வகையை சேர்ந்தது. என்ன விசேஷம், எதற்காக அப்படி ஓடினார் என்று கேட்டபோது அவர் அது ஓர் அபூர்வமான ஓர்கிட் என்றார். வேரோடு பறித்துவந்த அந்தச் செடியின் பூ பார்ப்பதற்கு சிறுத்தையின் புள்ளிகள் போல பொட்டுபொட்டாக இருந்தது. மஞ்சள் நிறத்தில் மண் நிறப் பொட்டுகள். இந்த ஓர்கிட் வகை நிலத்தில் வளர்வது இல்லை மரத்தின் கிளைகளில் வளர்வது. அங்கே கொத்து கொத்தாகத் தொங்கியதை பறித்து வந்திருக்கிறார். அவர் அதை தன்னுடைய நாட்டுக்கு எடுத்துப் போவதற்காக பத்திரப்படுத்தினார்.

அத்துடன் விசயம் முடிந்துவிடவில்லை. அவருடன் காரில் எங்கே போனாலும் திடீரென்று நிறுத்துக்கள் நிறுத்துங்கள் என்று சத்தம் போடுவார். எங்கோ மலையில் தூரத்தில் ஒரு மரத்தில் பூக்களைக் கண்டுவிடுவார். ஒரு குரங்கு தாவுவதுபோல நிமிடத்தில் பாய்ந்து ஏறி பூக்களை பறித்துகொண்டு வருவார். அவர் தன் நாட்டுக்கு திரும்பியபோது பதினாலு வகையான ஓர்கிட் பூவகைகளை எடுத்துச் சென்றார். அவற்றிலே சில மிக அபூர்வமானவை, உலகில் வேறு எங்கும் கிடைக்காதவை. அவற்றை தன் நாட்டிலே விற்றால் விமான டிக்கட்டுக்காக தான் செலவழித்த காசில் இரண்டு மடங்கு திரும்ப தனக்கு கிடைக்கும் என்றார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் அவற்றை வீட்டிலே வளர்த்து வருவதாகவும் நிறைய நண்பர்களும், ஓர்கிட் நிபுணர்களும் வந்து பார்த்துப் போவதாகவும் எழுதியிருந்தார்.


எனக்கு விவேக சிந்தாமணிப் பாடல் ஞாபகத்துக்கு வந்தது.

'தண்டாமரையினுடன் பிறந்து தண்டேனுகரா
மண்டுகம்
வண்டோ கானகத்திடையினிருந்து வந்து கமல
மதுவுண்ணும்.'

தாமரைக் குளத்தில் தாமரை மலருடன் வாழும் தவளைக்கு தாமரையில் தேன் இருப்பது தெரியாது. எங்கேயோ தூரத்து காட்டில் இருக்கும் வண்டு வந்து தேனை அருந்தி செல்லும். பக்கத்தில் இருந்த எனக்கு பூக்களின் அருமை தெரியவில்லை. நான் நிபுணரிடம் கேட்டேன் எப்படி உங்களுக்கு இவ்வளவு தூரத்திலும் பூக்கள் தெரிந்தன என்று. அவர் சொன்னார் வேறு ஒன்றுமில்லை, கண்களைப் பெரிதாக்க வேண்டும் என்று.

உலகத்தில் எங்கே பார்த்தாலும் அழகு கொட்டிக் கிடக்கிறது. ஆனால் அவசரமான எங்கள் கண்கள் அவற்றை பார்க்கத் தவறிவிடுகின்றன. நிறைபனிக் காலத்தில் கூட சூரியன் மெள்ள எட்டிப் பார்க்கும்போது கிரணங்கள் பனியில் விழுந்து பல வண்ணங்களாகச் சிதறி மேலெழும். மொட்டை மரங்கள்கூட கொத்து கொத்தாக பனிக்கட்டிகளை வெள்ளைப் பூக்களைப்போல கொட்டும். இவற்றை நாம் பார்ப்பதே இல்லை.

சமீபத்தில் பொஸ்டன் நூலகத்துக்கு போயிருந்தேன். நூறு வருடங்களுக்கு முன்னர் எழுப்பப்பட்ட இந்த பிரம்மாண்டமான கட்டிடத்தில் 8 மில்லியன் புத்தகங்கள் இருப்பதாகச் சொன்னார் எங்கள் வழிகாட்டி. நான் போன சமயம் நூலகத்தில் நூற்றுக்கு குறைவான வாசகர்களே இருந்தார்கள். பெரிய ஆராய்ச்சிகளை அந்த நூலகத்தில் உட்கார்ந்து ஒருவரும் செய்வதாகத் தெரியவில்லை. நீண்ட நீண்ட மேசைகளும் நாற்காலிகளும் வாசகர்களுக்காக காத்து வெறுமையாக இருந்தன. இணையத் தொடர்பு வசதிகள் கிடைப்பதால் எந்த ஆராய்ச்சியையும் வீட்டில் இருந்தபடியே செய்துவிட முடிகிறது. இன்னும் 20 வருடங்களில் நூலகங்கள் மாபெரும் காப்பகங்களாக மாறினாலும் ஆச்சரியப்பட முடியாது. நூலகத்தை சுற்றி நடந்து ஓர் இடத்தில் தற்செயலாக நிமிர்ந்து பார்த்த போது கூரையில் அற்புதமான வர்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. பல்வேறுவிதமான கடவுளர்களின் படங்கள். நம்பமுடியாத வர்ணக்கலவையில் ஒளி விளையாடும் அழகு. அதை வரைந்த ஓவியர் புகழ் பெற்றவர்,




பெயர் ஜோன் சிங்கர் என்று சொன்னார்கள். 30 வருடங்கள் அவர் கூரையின் கீழ் படுத்திருந்தபடி வரைந்த சித்திரங்கள். இன்னும் சில முற்றுப்பெறவில்லை. தற்செயலாக நான் தலை நிமிர்ந்து பார்க்காவிடில் அந்த அற்புதம் கண்ணில் பட்டிருக்கப் போவதில்லை. நான் அந்த இடத்தை விட்டு அகன்றேன். சித்திரம் மறுபடியும் தற்செயலாக அண்ணாந்து பார்க்கப்போகும் ஒருவருக்காக காத்திருந்தது.

ஓவியம் மாத்திரமில்லை, இசையும் அப்படித்தான். பெரிய நிறுவனங்களையோ அரசு அலுவலகங்களையோ தொலைபேசியில் அழைத்துவிட்டு தொடர்புக்கு காத்திருக்கும் போது பீதோவனுடைய இசைக்கோவையில் ஒன்றோ, மோசார்ட்டின் ஒன்றோ காதில் ஒலிக்கும். ஆனால் எமக்கு இருக்கும் அவசரத்திலும் படபடப்பிலும் நாங்கள் இசையை அனுபவிக்க மறந்துவிடுகிறோம்.

சமீபத்தில் வாசிங்டன் மெட்ரோ நிலையத்தில் ஒரு குளிர்கால காலையில் நடந்த உண்மைச் சம்பவத்தைப்பற்றி படித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. ஒரு நடுத்தர வயது மனிதர் ஸ்டேசன் வாசலில் 45 நிமிட நேரம் வயலின் வாசித்தார். அந்த நேரத்தில் போவதும் வருவதுமாக 2000 பேர் அவரைக் கடந்தார்கள். முதல் நாலு நிமிடம் ஒருவருமே வயலின்காரரை கவனிக்கவில்லை. ஒரு மனுசி நடந்தவாறே சில சில்லறைகளை எறிந்துவிட்டு போனார். பத்து நிமிடம் சென்றது. மூன்று வயது சிறுவன் அவருடைய வாசிப்பால் ஈர்க்கப்பட்டு அந்த இடத்தில் நின்றான், தாய் அவனை இழுத்துக் கொண்டு போனார். அந்த 2000 பேரில் ஆறு பேர்கள் மாத்திரமே சற்று நின்று இசையை ரசித்தனர். இருபதுபேர் அவசரமாக கடந்து போகும்போது காசுகளை விட்டெறிந்தனர். அன்று வயலின்காரர் சேகரித்த தொகை 32 டொலர். மனிதர் வயலினை மூடிவைத்து புறப்பட்டபோது ஒருவரும் கைதட்டவில்லை. பாராட்டவில்லை. நன்றி சொல்லவில்லை. வந்தமாதிரியே மனிதர் சனக்கூட்டத்தில் மறைந்துபோனார்.

அந்த வயலின்காரரின் பெயர் ஜோஷுவா பெல், உலகப் புகழ்பெற்ற இசைக்கலைஞர். அவர் வாசித்தது பாக் படைத்த நுட்பமானதும் சிக்கலானதுமான ஓர் இசைக்கோவை. அவருடைய வயலினின் பெறுமதி 35 லட்சம் டொலர்கள். இரண்டு நாட்கள் முன்பு பொஸ்டனில் பிரபலமான ஓர் அரங்கத்தில் அவர் வாசித்தபோது அரங்கம் நிரம்பி டிக்கட்டுகள் கிடைக்கவில்லை. டிக்கட்டின் விலை நூறு டொலர். வாசிங்டன் போஸ்ட் பத்திரிகை மக்களின் உண்மையான இசை அறிவையும் ரசனையையும் அறிவதற்காக நடாத்திய பரிசோதனைதான் மேலே சொன்ன சம்பவம்.

என்னுடைய டச்சுக்கார நண்பர் சொன்னதுபோல கண்களை அகலமாகத் திறந்து வைத்தால் மட்டும் போதாது. காதுகளையும் திறந்து வைக்கவேண்டும்.

சோமாலியாவில் நான் சந்தித்த மக்களிடையே காணப்பட்ட ஒரு வழக்கம் புதுமையானது. 'ஓர் ஆப்பிரிக்கர் இறக்கும்போது அவருடன் ஒரு வரலாறும் இறந்துவிடுகிறது' என்பது பழமொழி. சோமாலியர்கள் சிறுவயதிலேயே, எழுதப் படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, தங்கள் இனக்குழு வரலாற்றை வாய்மொழியாக பாடமாக்க வேண்டும். இந்த வரலாறு பிரதானமாக அவர்கள் குடும்ப வரலாறாகவும், கொஞ்சம் குழுவின் வரலாறாகவும் இருக்கும். தகப்பன், பாட்டன், முப்பாட்டன் என்று வரலாறு பின்னோக்கி செல்லும். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் திருமணப் பேச்சு ஆரம்பிக்கும்போது இருபக்க வரலாற்றையும் சொல்லிக்கொண்டே போவார்கள். சில தலைமுறைகளைத் தாண்டி அந்த வரலாறு ஒரு புள்ளியில் இணையும். அப்போது இரண்டு பக்கத்தினரும் திருமணத்துக்கு சம்மதிப்பார்கள். ஆயிரம் வருடங்களாக தொடர்ந்த இந்த வழக்கம் இப்போது அழிந்துகொண்டு வருகிறது. சோமாலிய மொழிக்கு எழுத்துரு கிடையாது. நூறு வருடங்களுக்கு முன்னர்தான் ஒஸ்மான் என்பவர் எழுத்துருவை உருவாக்கினார். ஆகவே எழுத்தும் அவர்களுக்கு பழக்கமாகவில்லை. வாய்மொழி வரலாறையும் கைவிட்டு விட்டார்கள். ஆயிரம் வருடங்களாக காப்பாற்றி வந்த பண்பாடு அவர்கள் கண்முன் அழிந்த பின்னர்தான் அவர்களுக்கு விழிப்பு ஏற்பட்டது. அந்த வழக்கம் இருந்தபோது அதன் பெருமையை அவர்கள் உணரவில்லை. ஒன்று கைவிட்டுப்போன பின்னர்தான் அதன் அருமை தெரிகிறது என்று சோமாலிய நண்பர் சொன்னார். கண்முன்னே தெரிவதை நாங்கள் பலசமயம் காண்பதில்லை.

தொடர்தல் 96ம் பக்கம்

காதல் வாழ்க்கை - 21

# இரவில் வரவேண்டாம்

- வி. கந்தவனம் -

நிலம் - மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி.
இடம் - தினைப்புனம்.

தினைப்புனத்தைக் காவல் செய்துகொண்டு நின்றாள் அந்தப் பருவ மங்கை. அவள் எதிரிலே தோன்றினான் ஒரு கட்டிளங் காளை.



கண்கள் பேசின. உள்ளங்கள் இணைந்து கொண்டன.

சந்திப்புகள் தொடர்ந்தன. காதல் வளர்ந்தது.

அன்றொருநாள் அவளைக் காணவேண்டிப் பகற் பொழுதிலே, வழக்கமாகச் சந்திக்கும் இடத்திலே அவன் ஆவலோடு காத்திருந்தான்.

அவளைக் காணவில்லை. ஏன் வரவில்லை? அவளுக்கு என்ன நேர்ந்தது? அவன் மனம் துடித்தது.

தலைவியின் தோழி வந்து 'தினை முற்றி விட்டதால் புனம் காக்க வேண்டியதில்லை என்று பெற்றோர் வீட்டில் அவளை இருக்கச் சொல்லிவிட்டனர். அதனால் இனி நீ அவளைப் பகலில் பார்க்க முடியாது' என்றாள்.

அதற்கு அவன் 'இரவில் சந்திக்க முடியுமோ' என்றான்.

அதுவும் முடியாது என்னும் வகையில் தோழி அளித்த பதில் இது:

'தலைவியின் தாயோ தன் கண்ணிலும் மேலாக மகள்மீது அன்பு கொண்டவள். தந்தையும் அவளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பவன். அவள் எங்காவது நடந்து போனாற்கூட, 'சின்ன மகளே, உன் சிறிய அடிகள் சிவக்கும் வண்ணம் எவ்விடம் செல்கிறாய்?' என்று கேட்பவன்.

'யாமோ, பிரிவு என்பதே இல்லாமல் இசைவானதும் குற்றமற்றதுமான நட்பினால், ஒருயிரும் ஈர் உடலுமான பறவைபோல அன்புடையவராக இருக்கின்றோம்.

'தினைப்புனம் காக்கும் மகளிர் ஓயாது சத்தமிட்டுத் துரத்துகையில் கிளிகளும் தமது இனத்தைக் கூவி அழைக்கும். பலா மரத்தின் பெரிய கொப்புகளில் அணில்கள் ஆடிக்கொண்டிருக்கும். பெரும் பயன்களாக விளங்கும் பலாப் பழங்களைக் கொள்வதற்குக் குறவர் குடிசை அமைத்திருப்பர். வேங்கை மரங்கள் தேன் மிகுந்த பூக்களைச் சொரிந்து குடிசைக் கூரையை மறைத்திருக்கும்.

'பூக்கள் மறைத்த குடிசைத் தோற்றத்தைப் புலி என்று நினைத்து புள்ளிமுக யானை அஞ்சி விரைந்து செல்லும். அதன் வேகத்தில் மழைவளம் மிகுந்த பக்கத்து மலைச் சாரல்களில் வளர்ந்துள்ள முங்கில்கள் முறிந்து சிதையும்.

'அவ்விதமான நல்ல மலைநாட்டுக்கு உரியவனே, இரவிலே நீ வருவதாயின் மெல்லிய இயல்புகளையுடைய அவள் உனக்கு வரும் ஆபத்துக்களை எண்ணி வருந்தி உயிர் வாழ்ந்திராள்.'

யாயே, கண்ணினும் கடும் காதலளே
எந்தையும் நிலனுரப் பெறா அன், 'சீரடி சிவப்ப
எவன் இல குறுமகள் இயங்குதி' என்னும்.
யாமே, பிரிவு இன்று இணைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே!

ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்
கிளிவிளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயம் கொண்மார்,
குறவர் ஊன்றிய குரம்பை புதைய,
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீ இய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும்
நல்வரை நாட! நீ வரின்,
மெல்லியல் ஓரும் தான் வாழலளே!

அகநானூறு 12.

யாய் - தாய், துவரா நட்பு – கசப்பில்லாத நட்பு, வெளில் - அணில், விழுக்கோட் பலவு – பெரிய காய்களையுடைய பலா மரம், குரம்பை – குடிசை, தேம் - தேன், புலி செத்து – புலி என்று நினைத்து, கழை - மூங்கில், ஓரும் மெல்லியல் - தீங்குகளை நினைந்து வருந்தும் மென்மை மனம் படைத்த தலைவி (துயர் பொறுக்க மாட்டாதவள்).

இப் பாடலில் உள்ளுறையாக அமைந்துள்ள பொருளைக் கவனித்தல் வேண்டும். தலைவியின் பெற்றோர் அவள்மீது அன்புடையவராக இருப்பதால் அவள் விருப்பத்துக்கு மாறாக நடக்கமாட்டார்கள். அப்படி இருக்க, அஞ்சக் கூடாத குடிசைக்கு அஞ்சும் யானைபோல நீ வீணாக அவள் பெற்றோருக்கு அஞ்சுகின்றாய். யானை முங்கில்களை நாசம் செய்வது போல மூங்கிலை ஒத்த தோள்களையுடைய மெல்லியளாகிய உன் தலைவிக்கு நீ பிரிவுத் துன்பத்தை விளைவிக்கின்றாய். எங்களுக்கும் கவலையை அளிக்கின்றாய். நீ இரவில் வருவதை அவள் விரும்பவில்லை.

இவ்விதம் தோழி கூறுவதனால், 'களவாக வந்து சந்திப்பதை விடுத்து ஊர் அறிய உன் காதலியைத் திருமணம் செய்து கொண்டு முறையாகக் குடும்பத்தை நடத்து' என்று தலைவனுக்கு அவள் குறிப்பாக உணர்த்துகின்றாள் என்பது பொருள்.



kandavanam.v@thaiveedu.com

# நீங்கள் அதன்மேல்...

95ம் பக்கத் தொடர்ச்சி...

நான் பாகிஸ்தானில் வேலை பார்த்தபோது நியூயோர்க்கிலிருந்து ஓர் அதிகாரி பாகிஸ்தானுக்கு வந்தார். இவர் என்னிலும் இரண்டு படிகள் மேலே உயரதிகாரத்தில் இருந்தார். பாகிஸ்தானுக்கு புறப்படும் முன்னரே இவர் அமெரிக்காவிலிருந்து எனக்கு டெலக்ஸ் மேல் டெலக்ஸாக அனுப்பிக்கொண்டிருந்தார். அவருடைய ஆசை பாகிஸ்தானையும் ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் கைபர் கணவாயை பார்க்கவேண்டும் என்பது. அது ஒரு நீண்ட பயணம். காரிலே ஏறியதுதொடங்கி அதிகாரி பேசிக்கொண்டே இருந்தார். தன் குரலை தானே கேட்கும் விருப்பம் கொண்ட ஆட்களில் இவரும் ஒருவர்.

அவருடைய மனைவிபோல தோற்றமளித்த பெண்ணொருவர் அவருடன் வந்திருந்தார். உங்கள் மனைவியா என்றெல்லாம் கேட்கக் கூடாது. நானும் கேட்கவில்லை. அறிமுகப் படுத்தும்போது அவருடைய பெயரை சொன்னார். அந்தப் பெண் அதிக காசு கொடுத்து நவநாகரிகமான தலையலங்காரம் செய்திருந்தார். அது பாகிஸ்தானில் பயன்படாது. காரில் வரும்போது ஒரு பஸ்மினா சால்வையினால் தோள்களையும் தலைமுடியையும் மறைத்திருந்தார். நீண்ட நேரம் தண்ணீரில் ஊறவைத்ததுபோல அவர் சருமம் புள்ளி புள்ளியாக சுருங்கியிருந்தது. அதிகாரிக்கு இருந்த ஆர்வம் அந்தப் பெண்ணுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. காரில் ஏறின கணம் தொட்டு அவர் ஒரு மலிவு நாவலை பிரித்து கண்ணுக்கு கிட்டவைத்து படித்தபடியே இருந்தார். வெளியே காட்சிகள் ஓடின. இவர் கண்கள் எழுத்துமேலே ஓடின. அதிகாரி இடைநிறுத்தாமல் பேசி அது ஒரு முடிவுக்கு வந்ததும் அப்படியே சாய்ந்து மெல்லிய நியூயோர்க் குறட்டை ஒலி கேட்க வாயை சிறிது திறந்து வைத்து தூங்க ஆரம்பித்தார். நான் அவரை தொந்திரவு செய்யவில்லை. ஜெட் தொய்வாக இருக்கலாம் என்று அப்படியே விட்டுவிட்டேன். மேலும் ஒரு பெரிய அதிகாரி உறங்கும்போது இரண்டு அடுக்குகள் கீழே உள்ள ஊழியர் என்ன செய்யவேண்டும்.

வெளியே காட்சிகள் வேகமாக மாறிக்கொண்டு வந்தன. மலைச்சிகரங்களின் அழகு சூரியனின் கிரணங்கள் விழும் கோணத்துக்கு ஏற்றபடி கணத்துக்கு கணம் புதிதாக தோற்றம் கொண்டன. வெள்ளித்தகடுகள் போல ஒருக்கால் ஜொலிக்கும். அடுத்த கணம் தீப்பிழம்பு போல மாறி கண்ணைப் பறிக்கும். எளிய ஏழை மக்கள் உடம்பை போர்த்திக்கொண்டு ஆடு களை ஓட்டியவாறே சென்றார்கள். அந்த பெரிய காட்சி அவர்களை ஒன்றுமே செய்ய வில்லை.

அதிகாரி காரைவிட்டு கீழே இறங்கியபோது ஒரு முழு மணி நேரம் காரிலேயே உறங்கி யிருந்தார். சுற்றிவர நீலம் பச்சை வெள்ளை என்று மலைகள் சூழ்ந்திருந்தன. கீழே பார்த்தால் அதல பாதாளம். நூல்போல வளைந்து வளைந்து ஓடிய ஒடுக்கமான பாதை கண்ணுக்கெட்டிய தூரம் சென்றது. இந்த ஒடுக்கமான பாதையிலா இரண்டாயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்னர் மாவீரன் அலெக்சாந்தர் தன் படைகளுடன் இந்தியாவுக்குள் நுழைந்தான். நம்பவே முடியாத காட்சி. அந்தப் பெண் காரைவிட்டு இறங்கவில்லை. அதிகாரியின் முகம் இரண்டு மணிநேரத்துக்கு முன்னர் காரில் ஏறியபோது எப்படி இருந்ததோ அப்படியே இருந்தது.

'கைபர் கணவாய் எங்கே?' என்றார். நான் 'நீங்கள் அதன்மேல் நிற்கிறீர்கள்' என்றேன்.



muththulingam.a@thaiveedu.com

# வீடு, வியாபாரம், காணி

## வாங்க விற்க அழையுங்கள்!

## 416- 490-7653




**NEED MORE HOMES FOR BUYERS**
**selling commission only 1.25%**
Save 9900/-*
**sell your home**
**with less commission**

CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07


## Pat Pushpakanthan

Real Estate BROKER

Century 21


Brokerage*
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
Dir 416-894-1187

email: rpushpakanthan@trebnet.com




EXPERIENCE!
COMMITMENT!
RESULTS!

Central scarborough




3 bm Home

9th Line Hwy 7



4bm,4 wsrm 2 garage




Scarborough
3 bm det home
ttc, school, mall
**$269 900**

**For lease auto Garage**
**markham/steeles**



For Sale/ Investment
Fully Occupied,Industrial/Multi Unit/Automobile Repair Legal Zoning/Newer 6 Units
Free standing bldg for sale

Mccowan/denison




Executive 4 Bedroom washroom

Salem/taunton



Detached newer home
4bm/ 3 wsrm 349k

9 th line/



Detached home 3bm/ 3 wsrm
424000.00

Scarborough





3 bm/ home


Sheppard/
Victoria park
1, 2 bm brand
new for sale



Now Selling....Toronto
Be the First.. Yorkville




Brimly /denison



Detached home 3 bm
Fin bsmnt, excellent home

Richmond hill



Detached home 4bm/ 4 wsrm
3500 sq ft 699K


Mccowan/Steeles



3 bm/ bsmnt fin , sep
entrance rentable ,ttc


**Businesas for sale**
2 Cafetaria fr sale from 39k
3 Restaurant for sale from 20k
2 Variety store from 41k
2 dollar store from 129K
4 Hair Salon from 23K
MOTEL, Farm and more

V.Park/ St.clair




2 bm/ 2 wsrm

Bayview/ St.John




3 bm/ 3 wsrm by
arista home

Ajax/Taunton




Newer 4 bm/ 3
wm home

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

***K.S.* பாலச்சந்திரன்**

## ஆழத்து முத்துகள் 32

# - க. பாலேந்திரா - ஒரு நாடக இயக்கம்

தமிழ் நாடகம் உலகத் தரத்திற்கு உயர-வேண்டும் என்றும், தொடர்ந்த நாடக மேடை-யேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்ற ரீதியிலும் கடந்த 37 வருடங்களாகத் தொடர்ச்சியாக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றங்கள் செய்து வரும் ஒரு நாடக இயக்கம் க. பாலேந்திரா அவர்-களைப் பதிவு செய்வது பெரும் மகிழ்ச்சி-யைத் தருகிறது.

தன் கல்வி சார்ந்த பொறியியல் துறையில் முழு நேரத் தொழில் செய்துகொண்டு, எந்த அமைப்புகளிடமிருந்தும் நன்கொடை பெற்றுக் கொள்ளாமல், நாடகமே மூச்சாக இயங்கி, இத்தனை வருட காலம் இடைவிடாது நாட-கங்களை நிகழ்த்துவது உலகத் தமிழ் நாடக அரங்கில் நான் அறிந்தவரை இவர் ஒருவராகத் தான் இருக்க முடியும்.

க. பாலேந்திரா
நெறிப்படுத்திய நாடகங்கள்
இலங்கையில் (1-23) புலத்தில் (24-62)

| | | |
|---|---|---|
| 01 | இவர்களுக்கு வேடிக்கை | 1974 |
| 02 | கிரகங்கள் மாறுகின்றன | 1974 |
| 03 | தூரத்து இடி முழக்கம் | 1976 |
| 04 | மழை | 1976 |
| 05 | பலி | 1978 |
| 06 | நட்சத்திரவாசி | 1978 |
| 07 | ஒரு யுகத்தின் விம்மல் | 1978 |
| 08 | கண்ணாடி வார்ப்புகள் | 1978 |
| 09 | பசி | 1978 |
| 10 | புதிய உலகம் பழைய இருவர் | 1978 |
| 11 | ஒரு பாலை வீடு | 1979 |
| 12 | இடைவெளி | 1979 |
| 13 | யுகதர்மம் | 1979 |
| 14 | நாற்காலிக்காரர் | 1979 |
| 15 | முகமில்லாத மனிதர்கள் | 1980 |
| 16 | திக்கு தெரியாத காட்டில் | 1980 |
| 17 | இயக்க விதி -3 | 1980 |
| 18 | சுவரொட்டிகள் | 1980 |
| 19 | சம்பந்தம் | 1980 |
| 20 | அரையும் குறையும் | 1981 |
| 21 | மூன்று பண்டிதர்களும் காலம்-சென்ற ஒரு சிங்கமும் | 1981 |
| 22 | துக்ளக் | 1982 |
| 23 | மரபு | 1982 |
| 24 | வார்த்தையில்லா நாடகம் | 1983 |
| 25 | பார்வையாளர்கள் | 1985 |
| 26 | எரிகின்ற எங்கள் தேசம் | 1986 |
| 27 | வேடரை உச்சிய-வெள்ளைப்புறாக்கள் | 1991 |
| 28 | பாரத தர்மம் | 1991 |
| 29 | பிரத்தியேகக்காட்சி | 1991 |
| 30 | தரிசனம் | 1991 |
| 31 | தப்பி வந்த தாடி ஆடு | 1992 |
| 32 | துன்பக் கேணியிலே | 1992 |
| 33 | நம்மைப் பிடித்த பிசாசுகள் | 1993 |
| 34 | இரு துயரங்கள் | 1993 |
| 35 | ஐயா இலெக்சன் கேட்கிறார் | 1994 |
| 36 | போகிற வழிக்கு ஒன்று | 1994 |
| 37 | மலைகளை-அகற்றிய மூடக்கிழவன் | 1996 |
| 38 | ஆற்றைக் கடத்தல் | 1996 |
| 39 | எப்போ வருவாரோ | 1997 |
| 40 | அயலார் தீர்ப்பு | 1997 |
| 41 | அவசரக்காரர்கள் | 1997 |
| 42 | மெய்ச்சுடரே | 1997 |
| 43 | பெயர்வு | 1998 |
| 44 | ஒரு பயணத்தின் கதை | 1998 |
| 45 | பரமார்த்த குருவும் சீடர்களும் | 1999 |
| 46 | பார்வைக் கோளாறு | 2000 |
| 47 | காத்திருப்பு | 2001 |
| 48 | வேருக்குள் பெய்யும் மழை | 2002 |
| 49 | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு | 2003 |
| 50 | அவன்.அவள் | 2003 |
| 51 | திக்கற்ற ஓலம் | 2003 |
| 52 | பெருங்கதையாடல் | 2004 |
| 53 | அரசனின் புத்தாடை | 2004 |
| 54 | சர்ச்சை | 2006 |
| 55 | மலைகள் வழிமறித்தால் | 2006 |
| 56 | பாவி? | 2007 |
| 57 | எல்லாம் தெரிந்தவர்கள் | 2008 |
| 58 | மரணத்துள் வாழ்வு | 2009 |
| 59 | படிக்க ஒரு பாடம் | 2009 |
| 60 | ஒற்றுமை | 2010 |
| 61 | இது ஒரு நாடகம் | 2010 |
| 62 | தர்மம் | 2010 |

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலேந்திராவிற்கு அங்கு வருடா வருடம் நிகழ்ந்து வரும் சுதேசிய விழா நாட-கங்களே ஆரம்ப அனுபவங்களாக இருந்தன. ஆயினும், 1972 கட்டுப்பெத்தை பல்கலைக் களகத்தில் பயிலும் நாட்களில், பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான நுட்பம் சஞ்சிகையின் ஆசிரியராகவும், சங்கத் தலைவ-ராகவும் இருந்தபோது கலைஞர்கள், அறிஞர் களுடன் ஏற்பட்ட தொடர்புகள் ஒரு சீரிய நாடகக் கலைப் பயணத்துக்கு அடிகோலின.

இவரை, முதன் முதல் அறியச் செய்தது இவர் பிரதான பாத்திரம் ஏற்று நடித்த சுகைர் ஹமீட் அவர்களின் 'ஏணிப்படிகள்' என்ற நாடகமாகும். அப்போதைய அரசியல் கூட்டணிகளின் எதிர் பார்ப்புகளையும், ஏமாற்றங்களையும் குறியீட்டு முறையில் வெளிப்படுத்தியது. 01.07.1973ல் இராமகிருஷ்ண மண்டபத்தில் மேடையேறிய இந்நாடகம் 74ல் யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மாநாட்டிலும் மேடையேற்றப்பட்டது குறிப்-பிடத்தக்கது.

74ல் தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் அலெக்சி அபுசோவின் 'பிச்சை வேண்டாம்', மற்றும் 'கந்தன்கருணை' போன்ற நாடகங்-களில் பங்குகொண்ட இவர் கலைவிழா நாடகங்களாக 'இவர்களுக்கு வேடிக்கை', 'கிரகங்கள் மாறுகின்றன', 'தூரத்து இடிமுழக்கம்' போன்றவற்றின் பிரதிகளை ஆக்கி நெறியாள்-கையும் செய்திருந்தார். ஆயினும் 27.10.1976ல் கொழும்பு லயனல்வென்ற் அரங்கில் மேடை-யேறிய இந்திரா பார்த்தசாரதியின் 'மழை' நாடகமே இவர் முதன்முதல் தயாரித்து நெறியாள்கை செய்த நாடகமாகும். இதில் இவரும் ஆனந்தராணி அவர்களும் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்திருந்தனர்.

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும், உலகில் ஈழத்தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் மேடையேறிய இந் நாடகம் அண்மையில் 22.07.2010 அன்று கூத்துப்பட்டறை, மூன்றாம் அரங்கு ஆதரவில் சென்னையில் மேடை-யேறியது நினைவு கொள்ளத்தக்கது. இம் மேடையேற்றத்திலும் பாலேந்திரா. ஆனந்தராணி ஆகியோர் அதேபாத்திரங்களை ஏற்று நடித் தமை அவர்களது கலைவாழ்வின் அர்ப்ப-ணிப்பைச் சிறப்பாகச் சொல்லும்.

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், இலக்கிய மன்றங்கள் போன்றவற்றிற்காக நாடகங்களை மேடையேற்றி வந்த இவர், தொடர்ந்து நாடக இயக்கத்துக்கு ஒரு அமைப்புத் தேவையெனக் கருதி தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தை 1978இல் ஆரம்பித்தார். இதன் மூலமாக ஈழத்து, தமிழகத்து, மற்றும் இந்தியப் பிறமொழி நாடகாசிரியர்கள், மேலும் பல நல்ல மேற்குலக நாடகாசிரியர்களின் நாடகங்களையும் நேர்த்தியாக மேடையேற்றி வருகிறார்.

குறிப்பாக ஈழத்து நாடகாசிரியர்கள் குழந்தை ம.சண்முகலிங்கம், மாவை நித்தியானந்தன், சி.சிவசேகரம், சி.மௌனகுரு, தர்மு சிவராம், சேரன், செழியன், ச.வாசுதேவன் ஆகியோரின் நாடகங்களையும், தமிழக நாடகாசிரியர்கள் இந்திரா பார்த்தசாரதியின் 'மழை', 'பசி', ந.முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்', 'சுவ-ரொட்டிகள்' ஞான ராஜசேகரனின் 'மரபு' அம்பையின் 'ஆற்றைக்கடத்தல்', மற்றும் பாதல் சர்க்காரின் 'ஏவம் இந்திரஜித்', மோகன் ராகேஷின் 'அரையும் குறையும்', கிரிஷ் கர்னாட்டின் 'துக்ளக்', ரஞ்சித்ராய் சௌத்திரி-யின் 'பாரத தர்மம்' போன்ற நாடகங்களை தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் மூல-மாகத் தயாரித்து நெறிப்படுத்தியுள்ளார்.

இது தவிர, மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல் நாடகங்களாக டென்னசி வில்லியம்சின் 'கண்ணாடி வார்ப்புகள்', பிரெக்டின் 'யுகதர்மம்', கார்சியா லோர்காவின் 'ஒரு பாலை வீடு', செக்கோவின் 'சம்பந்தம்', வஸ்லோ காவலின் 'பிரத்தியேகக் காட்சி + தரிசனம்', பெக்கற்றின் 'எப்போ வருவாரோ' ஏரியல் டோப்மனின் 'மரணத்துள் வாழ்வு', இயூன் ஐயனஸ்கோவின் 'இடைவெளி', ஹரோல் பின்டரின் 'போகிற வழிக்கு ஒன்று' என்பவற்றை பாலேந்திரா தயாரித்து நெறியாள்கை செய்துள்ளார்.

பாலேந்திராவின் நாடகங்களில், மனித குலத்தின் பொது அவலங்களைச் சொல்லும் பிரெக்டின் 'யுகதர்மம்' என்ற நாடகம் யாழ்.கண்ணனின் இசையில் மிளிர்ந்த புதுமையான பாடல்க-ளுடனும் மற்றும் கூத்துவகை ஆட்டத்துடனும் கூடியது. இந்நாடகம் 79 - 80இல் இலங்கையில் மட்டும் 30 தடவைகள் மேடையேறியது. 'இயக்கவிதி – 3', 'துக்ளக்' ஆகிய நாடகங்கள் இலங்கை அரசின் தணிக்கைக்கு உள்ளாகின. 'கண்ணாடி வர்ப்புகள்' நாடகம் ஆறு நாடகங்-கள் என்ற நூல் அச்சுச் செலவிற்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பகல், இரவுக் காட்சிகளாக சிறப்பான காட்சி அமைப்புடன் மேடையேறியது. 'மழை', 'அரையும் குறையும்', 'கண்ணாடி வார்ப்புகள்' இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது மட்டுமல்லாமல் 'கண்ணாடி



வார்ப்புகள்' நாடகம் இலங்கை ரூபவாகினித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

83 ஆடிக்கலவரத்தின் பின்னர் இங்கிலாந்தில் குடியேறிய இவர் அந்நியச் சூழலில் வாழும் எமது சிறுவர்கள் தமது சுய அடையாளத்தை இனம் காணவும், தன்னம்பிக்கையுடன் ஒரு பலமான அத்திவாரத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் மொழியைச் சரளமாகப் பேசிப் பயிலவும் சிறுவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி, தொடர்ச்சியாக சிறுவர் நாடகங்களை மேடையேற்றி வருகிறார். சி.மௌனகுருவின் 'வேடரை உச்சிய வெள்ளைப்புறாக்கள்' முதல் இவ்வருட நாடகவிழாவில் மேடை-யேறிய மாவையின் 'இது ஒரு நாடகம்' என்று சிறுவர் நாடகங்கள் தொடர்கின்றன.

பிரெக்ற் என்ற பிறமொழி நாடகாசிரியரை 'யுகதர்மம்' மூலம் தமிழுக்கு அறிமுகம் செய்-தது போல் பல தரமான பிறமொழி நாடகங் களை எமக்கு அனுபவமாக அறியத்தந்தார். எனினும் பாலேந்திரா சுயமொழி நாடகங்க-ளையே அதிகமாக மேடையேற்றினார். மேலும் ஈழத்தவரின் போர்ச் சூழல் குறித்த 'எரிகின்ற தேசம்', 'பாரத தர்மம்', 'துன்பக் கேணியிலே', 'பெயர்வு', 'போகிற வழிக்கு ஒன்று', 'மரணத்துள் வாழ்வு' போன்றன பார்வை-யாளர்களை நெருடிய நாடகங்களாகும்.

இவரது தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் நாடக விழாக்கள் இலங்கை, இலண்டன், நோர்வே, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்-லாந்து, அவுஸ்திரேலியா மற்றும் அண்மையில் இந்தியாவிலும் இடம் பெற்றுள்ளன.

கொள்கை என்று எந்தக் குழுவுடனும் இணையாமல் சுதந்திரமாகவும், நேர்மையா-கவும், தனித்துவமாகவும் இயங்கி, எந்நாளும் நாடகத்துக்கான தேடலை யாசித்து நிற்கின்ற இந்தக் கலைஞனின் சக்தி அதீதமானது.

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

பாலேந்திராவின் ஆரம்ப நாடகமான 'ஏணிப் படிகள்'இலிருந்து ரெம்பாலான நாடகங்களை நேரிடையாகவும், பல சிறுவர் நாடகங்களை வீடியோவிலும் பார்த்தவன் என்ற ரீதியில் ஒரு குறிப்பைச் சுருக்கமாகச் சொல்லமுடியும். "இவரது நாடகங்கள் எனது மனவெளியில் என்றும் ஜீவிதமாக இருப்பவை".

பாலேந்திராவின் நாடகங்களில் பார்வையா-ளர்களுக்கும் நடிகர்களுக்குமான உறவு பலமாக இருந்து கொண்டிருக்கும். எப்போதும் ஒரு உயிர்நிலை பேணப்படும். ஒரு கணம் சரிந்தாலே வீழ்ந்து போகக் கூடிய "மழை" என்ற நாடகத்துடன் இரு மணி நேரமாக எங்களைக் கட்டிப்போட்டு வைப்பதை உதார-ணமாகக் குறிப்பிடலாம். 'கண்ணாடி வார்புகள்' - டொம், மழை – அண்ணன் பாத்திரங்கள் இவரது நடிப்புக்குப் புகழ் சேர்த்தவை. ஆயினும் 'பசி'யில் இவரது நடிப்பு அபாரமாக இருக்கும். இவரது நாடகங்களில் இசை, ஒளி என்பன முக்கிய பாத்திரங்களாக அமையும். 'முகமில்லாத மனிதர்கள்', 'யுகதர்மம்' மற்றும் அனைத்துச் சிறுவர் நாடகங்களிலும் இசையும், பாடல்களும் நிறைந்து காணப்படும். 'கண்ணாடி வார்ப்புகள்' நாடகத்தின் பிற்பகுதியில் இவர் கையாண்ட ஒளி அமைப்பும், இளையோடிய இசையும் பார்வையாளர்களை அவ்விரு நாடகப்பாத்திரங்களின் உலகிற்கு அழைத்துச் சென்றதை மறக்கமுடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயத்துடன் மனித அவலங்களைச் சொல்கிற, எமது வாழ்க்கை அனுபவங்களோடு ஒட்டியதான இவரது நாடகத் தெரிவுகள் பிரசித்தமானவை.

இவ்வாறு நாடகக் கலையின் சகல பக்கங்-களிலும் ஆற்றல் பதித்த இந்த மாபெரும் கலைஞன் "நாடகம் என்பது கூட்டு முயற்சி. தனது துணைவியார் ஆனந்தராணி மற்றும் சக நடிகர்கள், இசைக் கலைஞர்கள், காட்சி அமைப்பு உதவியாளர்கள், நாடக ஆசிரியர்கள் என்பவர்களால் தான் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் இயங்கமுடிகிறது" என்று சொல்லும் எளிமையான மனிதர். பழகுவதற்கு மென்மையானவர்.

பாலேந்திரா, அவரது நாடகங்கள், அவர் சார்ந்த கலைஞர்கள் என்று ஒரு புத்தகமே எழுதலாம். இப்பக்கத்தில் இவை மட்டுமே எனக்குச் சாத்தியமாயிற்று.



sriskandan@thaiveedu.com

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE Higher Standards

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**






**Asking 2.5million**
Well Maintained Corner Location In Downtown Lindsay,
All Brick With 20 Apartments
And 5 Main Floor Comm/Retail Tenants

**1.3 million**
Space Banquet hall ,coin laundry and
7 office units, Scarborough



**Asking 370,000**
Restaurant space with zoning
New Delhi Dr ,markham



**Asking 229,000**
Restaurant in rockwood
50,000 monthly sales



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி

உங்களதும் உங்கள் குடும்பத்தினதும் பாதுகாப்பான
எதிர்காலத்திற்கு காப்புறுதி அவசியமானது

உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்



**Thana Manickavasagar**
*Broker*



| Age | $200 000 | | $300 000 | | $500 000 | |
|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F |
| 30 | $20 | $17 | $28 | $23 | $42 | $31 |
| 40 | $31 | $23 | $43 | $32 | $65 | $49 |
| 50 | $75 | $53 | $110 | $76 | $171 | $116 |

20 ஆண்டுகளுக்குக் கட்டுப்பணம் மாறாது

Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start form $25
RESP - Start form $25

**Cell: 416-728-5772**
Business: 416-519-3896

thana7@gmail.com
www.thana.ca



# மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்

## Wanless/Hurontario




**$449,900**

Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms

**Warden/407**




**$299,900**
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms

**Veterans/Touchette (Barrie)**




**$279,000**
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms

**The Gore/Ebenezer**




**$699,900**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**The Gore/Ebenezer**




**$535,000**
Detached Bangalow

**The Gore/Ebenezer**




**$399,000**
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**The Gore Rd/Ebenezer**





**$397,000**
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**The Gore Rd/ Hwy 7**





**$1,100,000**
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms

**Brisdale/Sandalwood**




**$370,000**
Detached 2-Storey

**Bovaird/Worthington**




**$428,000**
Detached 2-Storey

**Cottrelle /Gore**




**$469,000**
Detached 2-Storey

**The Gore/Ebenezer**





**$680,000**
Detached 2-Storey

**Bellamy / Lawrence**




**$358,000**
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms

**Markham Rd/14th Ave**




**$393,000**
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Markham/14th Ave**





**$421,000**
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms

**Hwy 10/Bovaird**




**$272,750**
Semi-Detached 2 Storey

**Vankirk / Mayfield**




**$363,500**
Detached 2-Storey

-digi Media-

நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.

**Call before you list, See the Difference!!!**

**TOP PRODUCER - 2009**
Top 5% Sales Person in Canada 2009




# Ruby Thambiah

Sales Representative

Dir: **416-999-5337**

Tel: 905-201-9977
Fax: 905-201-9229

rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future**

**Realty Inc. Brokerage**
Independently Owned and Operated

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

## ஆழத்து முத்துகள் 33

# கலைஞர் ஏ. ரகுநாதன்

எனக்கு ரகுநாதன் அவர்களை நினைக்கும் போதும், காணும்போதும் பாரதியின் பாடல் வரிகள் ஞாபகத்திற்கு வருவதை தவிர்க்க முடிவதில்லை.

மனதில் உறுதி வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்

இந்த வரிகளுக்கு அவர் மிகப்பொருத்த-மானவர். எந்த சூழ்நிலையிலும் கலங்காத மனஉறுதியுடையவர். பிறருக்கு நல்லதையே என்றும் நினைப்பவர். அவருக்கு நெருங்கிய பொருள் என்றால் நாடகம், திரைப்படம் என்பவைதான். அவை அவர் கைவசப்பட்டு பலஆண்டுகள் ஆகின்றன.

1966ம் ஆண்டு – நான் கொழும்பில் காலடி எடுத்துவைத்தபுதிதில், 'கடமையின் எல்லை' என்ற இலங்கைத் தமிழ்த்திரைப்படம் வெள்ள-வத்தை றொக்சி திரையரங்கில் காண்பிக்கப்பட்டது. நான் பார்த்த முதலாவது இலங்கைத் தமிழ்த்திரைப்படம் இதுதான். இதில் நடித்த இருவர் எனக்கு தெரிந்தவர்கள். ஒருவர் பொனி றோபேர்ட்ஸ் என்ற கராத்தே வீரர். அடுத்தவர் எனது காரியாலயத்திற்கு அருகிலிருந்த ஒரு தேநீர்ச்சாலையில் காசாளராகவிருந்த ஜி.நிர்மலா. இவர்களுக்காகவே இந்தத் திரைப்படத்தைப் பார்க்கப்போனேன். இந்தத் திரைப்படத்தில் முக்கியபாத்திரமொன்றில் நடித்த ஏ. ரகுநாதன் அவர்களை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்து டச்சுக்கோட்டையின் சூழலில் குதிரைச்சவாரி செய்யும் காட்சிகள் என் ஞாபகத்தில் இருக்கின்றன.

கொழும்பில் 'நிழல்' நாடக விழா நடைபெற்ற போதுதான், முதன்முறையாக ரகுநாதன் அவர்-களின் நாடகத்தின் மீதான மோகத்தை உணர்ந்து கொண்டேன். தனது "நிழல்" நாடக மன்றத்தின் மூலமாக 1968ம் ஆண்டு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் ஏழு நாட்கள் இலவச-மாக நிழல் நாடக விழா நடத்தியவர் பின்னர் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் அதே விழாவை ஐந்து நாட்கள் நடாத்தி சாதனை படைத்திருந்தார்.

ஒரு நடுத்தர வருமானமுள்ள அரசாங்க ஊழியர். தன்னுடைய நாடகங்களையே மேடை-யேற்றியிருந்தாலும் பரவாயில்லை. அதில் தப்பொன்றுமில்லை. ஆனால், அவர் செய்தது தான் என்னை மிகவும் ஆச்சர்யப்படவைத்தது. அந்நாட்களில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்-திலும் பிரபலமாக விளங்கிய நாடகமன்றங்-களை அழைத்து, மாறுபட்ட சுவையளிக்கும் சிறந்த நாடகங்களை நாளுக்கொன்றாக இலவசமாக ரசிகர்களை பார்க்கவைத்தார். என்னைப்போன்றவர்களுக்கு அது வரப்பிர-சாதமாக அமைந்தது.

சானா சண்முகநாதன் இயக்கிய சரித்திர நாடகமான 'சாணக்கியன்', சுஹேர் ஹமீட்டின் இயக்கத்தில் துப்பறியும் நாடகமான 'அவளைக் கொன்றவள் நீ', கே.எம்.வாசகரின் சமூகநாடக-மான 'பார்வதி பரமசிவம்' நடிகவேள் லடிஸ் வீரமணி இயக்கி நடித்த: 'சலோமியின் சபதம்' யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் 'ஆராவமுதா அசடா' - ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்.

நான் நாடகத்துறையில் கால்வைக்க, ஏ.ரகு-நாதனின் நிழல் நாடகவிழா முக்கியமான காரணமாகியது. மேற்குறிப்பிட்ட நாடகங்களும், கலைஞர்களின் நடிப்புத்திறனும், அவர்களுக்கு அவையிலிருந்து கிடைத்த உற்சாகமான வரவேற்பும் என்னை கலைத்துறைக்குள் உந்தித்தள்ளின. நானும் மேடை நடிகனானேன்.

மலேசியாவில் 1935ம் ஆண்டு மே மாதத்தில் கிமாஸ் என்ற இடத்தில் பிறந்த ரகுநாதன் பின்னர் மானிப்பாயில் வாழ்ந்தவர். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் படிக்கும்போது அங்கு ஆசிரியராகவிருந்த எஸ்ரி.சாரி அவர்களினால் நாடகத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டார். (நான் இலங்கை வானொலிக்கென எழுதிய "கிராமத்துக்கனவுகள்" தொடர்நாடகத்தில் நண்பன் ரி.ராஜகோபாலின் விருப்பத்தின்படி, எஸ்.ரி.சாரி ஆசிரியரை மனதில் வைத்தே ஒரு பாத்திரத்தை உருவாக்கி, கலைஞர் ராம்தாஸை நடிக்கவைத்தது ஞாபகத்திற்கு வருகிறது)

மூத்த கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்கள் 1947 முதல் அதாவது தன் கல்லூரிக்காலத்தில் இருந்தே, நாடக மேடையைத் தன் வாழ்விட-மாக்கிக் கொண்டவர். மானிப்பாய் இந்துக்-கல்லூரியில் கல்விபயின்ற பின்னர், அரசசேவை யில் இணைந்து அனுராதபுரம், கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் பணியாற்றியவர்.

ஈழத்தின் நாடகத்தந்தை கலையரசு சொர்ண-லிங்கம் அவர்களின் பாட்டறையில் வளர்ந்த கலைஞர்களில் இவரும் ஒருவர். கலையரசுவின் சிறந்த மாணவனாக விளங்கிய ஏ.ரகுநாதன், கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இயக்கிய பல நாடகங்களில் நடித்து பாராட்டுக்கள் பெற்றவர்.

கலையரசுவின் அடியொற்றி பின்னர் பல இதிகாசநாடகங்களை மேடையேற்றியவர். இவர் கொழும்பு இராணுவத் தலைமை அலுவல-கத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றும் போதுதான் ஒரு ரயில் பயணத்தின்போது இவரைச் சந்தித்தேன். தனது இதிகாசநாடகம் ஒன்றில் நடிக்கும்படி எனக்கு அழைப்பு விடுத்-தார். நான் நடித்த முதலாவது இதிகாச-நாடகம் அதுவேயாகும். பி.எஸ்.ராமையா எழுதிய 'தேரோட்டி மகன்'.

'தேரோட்டி மகன்' நாடகத்தில் முக்கியபாத்-திரத்தில் கர்ணனாக அவர் நடிக்க, குழந்தை சண்முகலிங்கம் (அர்ச்சுனன்), பிரான்சிஸ் ஜெனம் (குந்தி), சிவபாலன்(துரியோதனன்),



ரி.ராஜேஸ்வரன் (சாத்தகேசி) ஆகிய சிறந்த நடிகர்களோடு என்னையும் கிருஷ்ணன் பாத்திரத்தில் நடிக்கவைத்தவர். என்னால் மறக்கப்படமுடியாத ஒரு நாடகம்.

ஏராளமான மேடை நாடகங்களிலும், இலங்கை வானொலியில் 'சானா' அவர்களின் தயாரிப்பில் பல வானொலி நாடகங்களிலும் நடித்தவர். நான் முன்னரே குறிப்பிட்ட 1963ல் தயாரிக்கப் பட்டு 1966ல் வெளியான சரித்திரத் திரைப் படமான 'கடமையின் எல்லை' மூலம் ஈழத்துத் திரைப்படத் துறையில் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டவர் ஏ.ரகுநாதன்.

இலங்கையில் தயாரான தமிழ்ப்படங்களில் தரமானது என்று குறிப்பிட்டுக்கூறக்கூடிய 'நிர்மலா' திரைப்படத்தை 1968ல் தயாரித்த-தோடு அதில் கதாநாயகியின் அண்ணனாகவும் நடித்திருந்தார்.

'நிர்மலா' திரைப்படத்தை அவர் தயாரிக்க முற்பட்டதுபற்றி, தம்பிஜயா தேவதாஸ் எழுதிய 'இலங்கைசினிமாவின் கதை' என்ற நூல் சுவையாக கூறுகிறது.

எப்பொழுதுமே திறமையானவர்கள் எங்கிருந்-தாலும், அவர்களை இனம் கண்டு, தானா-கச்சென்று அழைத்து வாய்ப்புக்கொடுத்து தூக்கிவிடும் அவரது நல்லெண்ணத்திற்கு 'நிர்மலா' திரைப்படம் நல்ல உதாரணம்.

நிர்மலா படத்தை இயக்குவதற்காக நவாலி-யைச்சேர்ந்தவரும், 'சபாஷ் தம்பி', நாம் மூவர்', 'உயிர்மேல் ஆசை', 'யாருக்காக அழுதான்', 'அரச கட்டளை' போன்ற தென்னிந்தியப் படங்களுக்கு உதவிஎடிட்டராக பணியாற்றிய எம். அருமைநாயகம் இலங்கைக்கு அழைக்கப் பட்டார். இவரும் ரகுநாதனும் சேர்ந்து நிர்மலா படத்தை உருவாக்கினார்கள். கலையரசு சொர்ணலிங்கத்தின் இன்னுமொரு மாணவரான நவாலியூர் நடேசன், துறையூர் மூர்த்தியின் மூலக்கதையை வைத்துக்கொண்டு நிர்மலா-வுக்கான கதை வசனங்களை எழுதினார்.

கலைஞர்கள் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டார்கள். மட்டக்களப்பு ஆரையம் பதியைச் சேர்ந்த த. தங்கவடிவேல் சிறந்த மேடை நடிகர். இவரே நிர்மலா திரைப்படத்தில் கதாநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையைச்சேர்ந்தவர் பரீதா தாஜுதீன் (சந்திரகலா). லடிஸ் வீரமணியின் 'சலோமியின் சபதம்' நாடகம் இவருக்குப் புகழ் தேடிக்கொடுத்தது. இவரே நிர்மலா படத்தில் கதாநாயகியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர்களோடு கண்டியைச்சேர்ந்த விஸ்வநாத-ராஜா, யாழ்ப்பாணத்திலிருந்து ஐசாக் செல்வரத்தினம், பிரான்சிஸ் ஜெனம், மலை யகத்தை சேர்ந்த சிலோன்சின்னையா போன்-றோர் நடிகர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கவிஞர் முருகையனும், கவிஞர் சில்லையூர் செல்வராஜனும் பாடல்களை எழுதினார்கள். திருகோணமலையைச்சேர்ந்த ரீ.பத்மநாதன் இசையமைத்தார். இத்திரைப்படத்தில் இடம் பெற்ற புகழ்பெற்ற பாடலான "கண்மணி ஆடவா" அக்காலத்தில் இலங்கைவானொலி-யில் அடிக்கடி ஒலித்தது. பேர்டினனட் லோபப்ஸ் என்பவர் இப்பாடலைப் பாடியவர் மன்னாரைச்சேர்ந்த எம்.ஏ.கபூர் ஒளிப்பதிவையும், சுண்டிக்குளி சோமசேகரன் ஒலிப்பதிவையும் கவனித்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் அப்பொழுதே ஆயிரம் தடவைக்கு மேல் மேடையேறிவிட்ட நாடக-மான அமரர் வீ.வீ. வைரமுத்துவின் 'அரிச்-சந்திர மயானகாண்டம்' 'நிர்மலா' மூலமே முதன் முதலாகத் திரைக்கு வந்தது.

தொடர்ந்து வி.பி.கணேசனின் 'புதியகாற்று' திரைப்படத்திலும், 1978ல் திரையிடப்பட்ட ஈழத்தில் முதன் முதலில் தயாரான சினி-மாஸ்கோப் திரைப்படமான 'தெய்வம்தந்தவீடு' படத்தில் கதாநாயகனாக நாதஸ்வரவித்வா னாக நடித்திருந்தார். 1980ல் திரையிடப்பட்ட 'நெஞ்சுக்குநீதி' திரைப்படத்தில் தென்னிந்திய திரைப்பட நடிகர் ஸ்ரீகாந்த்துடன் இணைந்து நடித்திருந்தார்.

திரைப்பட ஆர்வம் காரணமாகத் தன் தொழி-லையே ராஜினாமா செய்தவர் கலைஞர் ஏ. ரகுநாதன். 1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் ரகுநாதனையும் பாதித்தது. இந்தியா சென்றவர், அங்கேயும் திரைப்படக் கலைஞர்-கள் பலரோடு நெருக்கமாகப் பழகிவந்தார்.

இந்தியாவிலிருந்து பிரான்ஸ் நாட்டுக்கு வந்து தற்போது அங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார். புலம்பெயர்ந்த தேசங்களிலுள்ள கலைஞர்கள் பலரோடும் தொடர்புகளைப் பேணி வரும் கலைஞர் ஏ.ரகுநாதன், சின்னத் திரைக்கான படங்களைத் தயாரிப்பதிலும், நடிப்பதிலும், இயக்குவதிலும் ஈடுபட்டுவருகிறார்.

ஐரோப்பாவில் தயாரிக்கப்பட்ட எஸ்.கே. ராஜனின் 'இன்னும் ஒரு பெண்' இரா-குண பாலனின் 'முகத்தார் வீடு' வில்லுப்பாட்டு ராஜனின் 'நினைவு முகம்' ராசநாயகம் அவர் களின் 'மௌனம்' மற்றும் 'தயவுடன் வழி விடுங்கள்' போன்ற சின்னத்திரைத் திரைப்-படங்களை நெறியாள்கை செய்து நடித்தும் இருந்ததோடு பாரிஸ்டர் யோசேப் அவர்கள் தயாரித்து அஜீவன் அவர்கள் இயக்கிய 'அழியாத கவிதை' என்னும் திரைப்படத்தில் நடித்திருக்கின்றார். இவற்றில் கலைஞர் பரா அவர்களின் நெறியாள்கையில் உருவான 'பேரன் பேத்தி' இவருக்கு பெரும் புகழைத் தேடிக்கொடுத்த குறும்படமாகும்

கலைஞர் ஏ.ரகுநாதன் புலம்பெயர்நாடுகளில் உருவாகும் கலைப்படைப்புகளில் தொடர்ந்தும் உற்சாகமாக பங்களித்து, வளரும் கலைஞர்-களுக்கு ஆர்வம் அளிப்பதில் அக்கறையுடன் செயல்பட்டுவருகிறார். நாடு நாடாகச்சென்று அங்குள்ள நல்ல கலைஞர்களை இனம்கண்டு, அவர்களின் குறுந்திரைப்படங்களில் நடிப்ப-தோடு அவற்றை மற்றைய நாடுகளிலும் அறிமுகம்செய்துவைக்கும் கலைத்தூதுவராக களைப்பின்றி செயல்பட்டுவருபவர்.


இலங்கையில் 'நிழல்' என்னும் கலைப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து சிறிது காலம் நடாத்திய ரகுநாதன் அவர்கள் பாரிசில் இருந்து வெளியான 'பாரிஸ் முரசு' பத்திரிகைக்-கும் சில காலம் ஆசிரியராக இருந்திருக்-கின்றார். திரைக்கதைகளை அமைப்பதில் வல்லவரான இவர் தனது கலைத்துறை

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

அனுபவங்களை 'தமிழன்' பத்திரிகையில் 'ஒரு ஒப்பனை இல்லாத முகம்' என்னும் தலைப்பில் எழுதியிருந்ததோடு 'எனக்காகப் பூக்கும்' நாவலையும் எழுதியிருக்கின்றார்.

கலைத்துறையில் எப்பொழுதும் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கும் திரு.ரகுநாதன் அவர்கள் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இத்துறை-யில் இருக்கின்றார். தன் கலை வாழ்க்கையில் பல சோதனைகளையும், பல இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றார். அப்படியிருந்தும் பல நாடுகளில் வாழும் கலைஞர்களையும் இணைத்து தரமான படைப்புக்கள் வரவேண்டுமென்ற கனவுடன் வாழ்பவர். அதற்கான முயற்சியில் தளராமல் ஈடுபட்டுவரும் அவர் இதற்காகவே பல ஐரோப்பியநாடுகளுக்கும், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டதை நான் அறிவேன்.

நல்லதை நல்லதென்று தயங்காமல், பாசாங்-கின்றி சொல்லி தட்டிக்கொடுத்து வளர்த்து விடும் அவரது நற்பண்பினால் பயன்பெற்ற ஏராளமான கலைஞர்களில் நானும் ஒருவன் என்ற பெருமிதத்துடன், செப்ரெம்பர் மாதம் 25ந்திகதி பிரான்ஸ்நாட்டில், பாரிஸ் மாநகரில் நடக்கவிருக்கும் அவரது பவளவிழா கோலா-கலமாக நடக்கவேண்டுமென்று என்சார்பிலும், 'தாய்வீடு' பத்திரிகை சார்பிலும் வாழ்த்துவ-தோடு, இவ்விழாவை ஏற்பாடுசெய்துள்ள உலகத்தமிழ் கலையகத்திற்கு எங்கள் நன்றி-களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்-களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்-வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

# மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

மருத்துவப் பரிசோதனை எதுவும் இல்லாத காப்புறுதித் திட்டங்களைப் பெற்றுக் கொண்டால் பணம் கிடைக்குமா? இப்படியான திட்டங்களை நம்ப முடியுமா? இப்படிப் பலரும் சிந்திப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

### எதற்காக நாம் மருத்துவ பரிசோதனை இல்லாது காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்ய வேண்டும்?

எல்லா காப்புறுதி நிறுவனங்களிலும் மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி திட்டங்களை பெற்றுக் கொள்ள முடியுமா? இப்படியான காப்புறுதி திட்டங்களை பெற்றுக் கொண்டவர் இறந்தவுடன் பணம் கிடைக்குமா? அல்லது இரண்டு வருடங்களுக்கு பின்பு தான் பணம் கிடைக்குமா? இப்படிப் பல கேள்விகள் எங்கள் மத்தியில் எழுகின்றன.

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி என்பது பொதுவாக ஆயுட்காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது தேவைப்படும் மருத்துவப் பரிசோதனைகள் எதுவும் செய்யாமல் விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் கேள்விகளுக்குப் பதில்களை பூர்த்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் காப்புறுதித் திட்டமாகும்.

ஒருவர் சாதரணமான மருத்துவ பரிசோதனைகளுடன் கூடிய காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று கருதினால் மட்டுமே மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதித் திட்டத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மருத்துவப் பரிசோதனைகள் இல்லாத காப்புறுதிகள் சாதாரணமான காப்புறுதித் திட்டங்களை விட கட்டணம் அதிகமாகக் காணப்படும். காரணம் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் ஒருவரின் வயது அவரின் உடல் ஆரோக்கியம் காப்புறுதிக்கான தொகை போன்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு கணிக்கப்படும். அத்துடன் எந்த வகையான ஆயுட் காப்புறுதித் திட்டம் என்பதைப் பொறுத்துப் மாதாந்தக் கட்டணம் மாறுபடும்.

### காப்புறுதியின் மாதாந்த கட்டுப் பணத்தை தீர்மானிக்கும் முக்கியமான விடயங்கள்:

- காப்புறுதி பெறுபவரின் வயது.
- ஆண் அல்லது பெண்ணா என்னும் வேறுபாடு.
- புகைப்பிடிப்பவாரா அல்லது புகைபிடிக்காதவாரா.
- நோய்கள் ஏதவாது ஏற்பட்டுள்ளதா? ஆரோக்கியமணவாரா?
- உடல் பருமன் (எடை) மற்றும் உயரம்
- அவரின் குடும்பத்தினரின் ஆரோக்கியம் (தாய், தந்தை, சகோதரர்கள் மட்டும் கருத்தில் கொள்ளப்படுவர்கள்)
- தற்போதுள்ள உடல் ஆரோக்கியம் மற்றும் கடந்த காலத்தில் ஏற்பட்ட நோய்கள் மருத்துவ சிகிச்சைகள் போன்ற விடயங்கள்.
- ஏதாவது குற்றவியல் சம்பந்தமான செயற்பாடுகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தில் உள்ள குற்றச்சாட்டுகள்.

இப்படிபட்ட விடயங்கள் பலவும் உங்கள் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணத்தை தீர்மானிக்கும்

### மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதித்திட்டங்களில் எவ்வளவு தொகைக்குக் காப்புறுதியினைப் பெறமுடியும்:

மருத்துவ பரிசோதனையுடன் கூடிய காப்புறுதி ஒவ்வொருவரும் விரும்பிய தொகைக்கு பெற்றுக் கொள்ள முடியும். மருத்துவ பரிசோதனை இல்லாத ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் நிறுவனத்திற்கு நிறுவனம் அவர்கள் குறிப்பிட்ட தொகை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். அநேகமான காப்புறுதி நிறுவனங்களில் ஆகக்கூடிய தொகையாக $50,000 அல்லது $100,000 வரை காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ள முடியும். அதிகளவு தொகை தேவைப்பட்டால் இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களில் இரண்டு அல்லது மூன்று காப்புறுதித் திட்டங்களைப் பெற்றுக் கொள்முடியுமா என்பதனைக் காப்புறுதி நிறுவனம் தீர்மானிக்கும்.

### அதிகமான காப்புறுதி நிறுவனங்களின் மருத்துவ பரிசோதனையும் அந்தந்தக் காப்புறுதிக்கான விண்ணப்பத்தில் கேட்கப்படும் கேள்விகளும்.

- நீங்கள் தற்போது ஒரு வைத்திய சாலையில் அல்லது நோயாளிகளுக்கான வதிவிடத்தில் வசிக்கின்றீர்களா என்பது. அல்லது நீங்கள் நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக அல்லது ஒரு சக்கரம் பொருந்திய நாற்காலியில் (Wheel Chair) இருக்கின்றீர்களா? என்பது. இந்தக் கேள்விக்கு ஆம் என்று பதில் அளித்தால் காப்புறுதிக்கு விண்ணப்பிக்க முடியாது.

> “சாதரணமான மருத்துவ பரிசோதனைகளுடன் கூடிய காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று கருதினால்மட்டுமே ஒருவர், மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதித்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.”

ளலாம். மேலும் சில காப்புறுதி நிறுவனங்களில் தவணைக் காப்புறுதித் திட்டங்கள் மருத்துவ பரிசோதனைகள் இல்லாமல் $150,000 வரை பெற்றுக் கொள்ள முடியும். காப்புறுதியின் தொகை கூடும் போது அதற்கான மருத்துவக் கேள்விகளும் அதிகமாகக் காணப்படும்.

### எத்தனை வயதுக்குட்பட்டவர்கள் இந்த திட்டத்தை பெற முடியும்?

பொதுவாக எல்லா நிறுவனங்களும் 80 வயது வரை மட்டும் ஆயுட்காப்புறுதி திட்டங்கள் கொடுப்பார்கள். சில நிறுவனங்களில் 85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் ஆயுட்காப்புறுதி செய்யக்கூடியதாக இருக்கின்றது. காப்புறுதித் திட்டமானது ஆயுட் காலம் வரை நீடிக்கும்.

### நோய்கள் உள்ளவர்களும் மருத்துவப் பரிசோதனை இல்லாத ஆயுட்காப்புறுதி பெற முடியுமா?

எல்லோரும் மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதித் திட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாது. காரணம், காப்புறுதி நிறுவனங்களின் ஒவ்வொரு காப்புறுதித் திட்டத்திற்குமான விண்ணப்பப் படிவத்திலும் சிற்சில நிபந்தனைகள், மருத்துவக் கேள்விகள் போன்றன காணப்படும். அதற்கு சரியான பதில்கள் உண்மையான தகவல்களைக் பெற்றுக் கொண்ட பின்பு தான் நீங்கள் மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ள

மாரடைப்பு, புற்றுநோய், சிறுநீரகம் சம்பந்தமான நோய், ஈரல் சம்பந்தமான நோய்கள் கடந்த இரண்டு வருடங்களுக்குள் அல்லது மூன்று வருடங்களுக்குள் (நிறுவனங்களைப் பொறுத்து) உங்களுக்கு வந்திருந்தால் மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி பெறமுடியாது.

- Hart Failure.
- Alzheimer’s Disease (Dementia).
- Cancer.
- Leukemia.
- Chronic Kidney Disease.
- Hart Attack.
- Angina.
- Stroke.

போன்ற நோய்கள் கடந்த இரண்டு வருடங்களுக்குள் ஏற்பட்டிருந்தால் அல்லது இவை சம்பந்தமான மருத்துவமனையில் இருந்திருந்தால் அல்லது சிகிச்சை செய்திருந்தால் காப்புறுதி எதுவுமே பெற்றுக் கொள்ள முடியாது. ஆனாலும் சில திட்டங்கள், சில நிறுவனங்களில் இந்த நோய்கள் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. அந்த திட்டங்கள் பெற்றுக் கொண்டு முதல் இரண்டு வருடங்களுக்குள் மரணம் ஏற்பட்டால் காப்புறுதியின் தொகையினைப் பெற்றுக்கொள்ள முடியாது மாறாக காப்புறுதிக்காக மாதாந்தம் கட்டிய பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

காப்புறுதிக்கான விண்ணப்பப்படிவங்களில் உள்ள கேள்விகளில் மிக முக்கியானது. கடந்த இரண்டு வருடங்களுக்குள் நீங்கள் காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்து நிராகரிக்கப்பட்டுள்ளதா? அல்லது உங்கள் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதா? (அதாவது சாதாரணமான கட்டணத்தைவிட அதிகமான கட்டணத்தை அறவிடப்பட்டுள்ளதா) என்பது.

இந்தக் கேள்விக்கு ஆம் என்று பதில் இருந்தால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அல்லது நீங்கள் இரண்டு வருடங்களுக்கு பின்பு பலன் கிடைக்கும் காப்புறுதி மட்டும் பெறமுடியும். (மருத்துவ பரிசோதனைகள் இல்லாமல்)

### மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள்:

- விண்ணப்பப்படிவதில் உள்ள கேள்விகளுக்கு உண்மையான, மற்றும் சரியான பதில்கள் வழங்கப்பட வேண்டும்.
- உங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்கள் பற்றிய சரியான தகவல்களை தெரிந்திருக்க வேண்டும்.
- வேறு நிறுவனங்களில் இதற்கு முன்பு காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்திருந்தால் அந்தத் திட்டத்திற்கு என்ன நடந்தது போன்ற சரியான தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும்.

சரியான உண்மையான தகவல்களுடன் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு காப்புறுதித் திட்டமும், காப்புறுதி பெற்றவர் இறந்தவுடன் பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இரண்டு வருடங்களின் பின்பு காப்புறுதிப்பணம் கிடைக்கும் திட்டங்களில் மட்டும் காப்புறுதி பெற்று இரண்டு வருடங்களுக்கு பின்பு மரணம் ஏற்பட்டால் மட்டுமே காப்புறுதிப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி திட்டம் பெற்றுக் கொள்ளும் போது உடனடியாக அமுலாகும் திட்டமா அல்லது இரண்டு வருடங்களுக்கு பின்பு மட்டும் அமுலாகும் திட்டமா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் 50,000 வரை மருத்துவ பரிசோதனைகள் எதுவும் இன்றி உடனடியாக அமுலாகக் கூடிய காப்புறுதி பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பத்தை சரியான தகவல்களுடன் பூர்த்தி செய்தால் உங்கள் முதல் மாதத்திற்கான கட்டுப்பணம் கட்டிய நாளில் இருந்து காப்புறுதி அமுலாகும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table MDRT The Premier Association of Financial Professionals
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
Canada Life



# நீங்கள் அதிஷ்டசாலி

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

## நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

- கொடிய நோய்களால் ஏற்படும் வருமான இழப்பை தவிர்ப்பதற்கான காப்புறுதி.
- புற்றுநோய் (Cancer), மாரடைப்பு (Heart attack), பாரிசவாதம் (Stroke) போன்ற 25 விதமான கொடிய நோய்களுக்கு காப்புறுதி.
- ஆரோக்கியமாணவர்களுக்கு அதிகுறைந்த கட்டணத்தில் அதிகூடிய பாதுகாப்பு.
- 1 மில்லியன் டொலருக்கு ஆயுட்காப்புறுதி :

**10 year term life - age 30 non - smoker - male**

**1 000,000.00 - $41.40**

**100,000.00 - $11.25**

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009**

# சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · LILAND INSURANCE INC.

**Million dollar advice from #1 advisor**
















கன்னியாகுமரி



இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**நடா G நடராஜா**

ரொறன்ரோவில் வீடு விற்பனை முகவராகக் கடமையாற்றும் இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

